JL
Rm 211, N15
NN
161196

RECEIVED BY THE REGISTRAR OF BOOKS
2 NOV 1915
MADRAS.

சத்திய தூதன்.

NOVEMBER, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. **நவம்பர்மீ, 1915.**

NEWS AND NOTES.

வர்த்தமானக் குறிப்புசள்

இந்து சர்வகலாசாலை.—காசி பட்டணத்தில் ஒரு புது சர்வகலாசாலை ஏற்படுக்கப்போகின்றது என்று ஸ்தாபிக்கப்பட உத்தரவாயிற்று.

நாஷனல் காங்கிரேஸ். — இவ்வருஷத்தின் காங்கிரெஸ் பம்பாயிற் கூடும். அங்கேதான் அது முப்பது வருஷத்துக்கு முன்பு ஆரம்பித்தது.

ஹார்டிஞ்சு கவர்னர் ஜெனரல். — இப்பிரபுவை இன்னொரு வருஷம் இங்கிருக்க விடும்படி அனேகர் பிரயாசப்படுகிறார்கள். அவர் இருப்பதுதான்றே.

கவர்னாவர்கள்.—நமது கவர்னரவர்கள் தமது பத்தினியாருடன் சென்ற மீ மத்தியில் சென்னைக்கு வந்துவிட்டார். இப்பொழுது பட்டணத்தில் 5 மாதம் "சீசன்" இருக்கும். இந்திய ராஜாக்களும் இங்கு வந்திறங்குவார்கள்.

ஆண்களும் பெண்களும்.—தற்காலம் யுத்த காரணத்தினாலே, ஆண்களில் போர் புரியத்தக்கவர் எல்லாரும் யுத்தத்துக்குப் போயிருக்கிற காரணத்தால், அவர்களுக்குப் பதில் பெண்கள் உத்தியோகம் செய்துவருகிறார்கள். இது ஸ்வராஜ்யந்தான்.

செடிகளின் உணர்ச்சி. — தாவரங்களுக்கும் உயிர்ப்பிராணிகளுக்குப் போல உணர்ச்சி யறிவு உண்டென்று போஸ் என்னும் பங்காள சாஸ்திரி ரூபித்திருக்கிறார். அவ்வுணர்ச்சியினாலே அவற்றிற்கு தக்கமும், நோவும், களைப்பும், தவிப்பும், உற்சாகமும், சந்தோஷமும் உண்டாகிறதாம்.

ஹோம் ரூல். — இப்பொழுது இந்தியாவுக்கு ஹோம் ரூல் (சுயராஜ்) வரவேண்டுமென்று ஆன்னி பெசன்ட் அம்மாளும் வேறு சிலரும் முயற்சி எடுத்து வருகிறார்கள். சுயராஜ் என்றால், இப்பொழுதிருக்கிற அங்கிலேயர் அரசாட்சி நீங்கி, இங்கிலாந்திற் போல, ஒரு பார்லிமெண்டு சபையைக்கொண்டு இத்தேசத்தை ஆளவேண்டுமென்பதே. இது முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டதுபோல், எவ்வளவும் கூடாதகாரியம். இத்தேசம் தன்னையே ஆண்டுகொள்ளும் சக்தி யுடையதாயின், துலுக்கருக்கும் ஜரோப்பியருக்கும் அது இத்தனை ஆயிர வருஷங்களாய் இராயாப்போன காரணம் என்ன? இந்தியாவிற்குத் தன்னை ஆண்டுகொள்ளும் திராணி இன்னும் வரவில்லை. இத்தேசத்திற் பல நிறத்தாரும், பல ஜாதியாரும், பல மதஸ்தருமுண்டு. ஜக்கியங் கிடையாது. ஆறு கோடி பஞ்சமருண்டு. பிராமணர் இவ்வெளியோரை முன்வர விடுவார்களா? இதனையும் அவ்வாறு செய்யக்காணுமே! அன்றி, இத்தேசம் கல்வியிலே மற்றெல்லாத் தேசங்களிலும் மக்க இழிந்ததாயிற்றே. பெண்கள் ஸ்திதி யென்ன? இப்பெருங் குறைகள் எல்லாம் நீங்கி, அனைத்தும் ஒரு ஜனமாஞல்தான் ஹோம் ரூல் சாத்தியப்படும். ஆனுல் இதற்கு இன்னும் இரண்டொரு தூற்றாண்டு செல்லும்.

யுத்த விவரம்.—யுத்தம் அதிகமாகப் பரவிவிட்டது. போர்த்துகல், ஸ்பெயின் முதலிய ஐந்தாறு சிறு தேசங்கள் தவிர யூரோப்புக்கண்டம் முழுவதும் போர்க்களமாக மாறிவிட்டது. யுத்தத்தில் மடிவோருக்குக் கணக்குவழக்குக் கிடையாது. பார் டெனெல் என்னும் ஜலசந்தி யுத்தத்தில்மட்டும் அங்கிலேயரில் ஏறக்குறைய ஒரு லட்சம் போர் வீரர் கொல்லுண்டும் காயப்பட்டும் போனார்களாம். இவர்களில் ஆபீசர்மாத்திரம் 4,200 பேர்; இங்கிலாந்தில் பிறந்த உயர்குலப் பாலியர் இவ்வாறு சண்டைக்கும் மரணத்துக்கும் இரையாகிறார்கள். இது அங்கிலேய உயிர்ச்சேதமென்றால், மற்ற ஜர்மன், ஆஸ்திரியா, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலியா தேசங்களின் வீரர் மாண்ட கணக்கைக் கேட்பானேன்? ஆனுல் இரண்டு பெருத்த பேதங்கள் உண்டு. இங்கிலாந்து முதலிய ராஜ்யங்களிலிருந்து லட்சக்கணக்கான புதுப் போர்வீரர்கள் சேர்ந்துவர, ஜர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் கிழவரும் பிள்ளைகளும்தவிர, புது வீரர்களே கிடையாது. அவர்கள் தளகர்த்தர் புதுவீரர் வந்தாலொழியச் சண்டை சீராய் நடவாதென்கிறார்களாம். இரண்டாவது, எதிரிகள் கொஞ்சம் கொஞ்சமாய்த் தரைத்துண்டு தம் காட்டுமுகமாகத் திரும்புகிறார்கள். அன்றி, ஜர்மனியிலே தனதானியப் பஞ்சமும் பற்பல பதார்த்தங்கள் பஞ்சமும் கொடுமைசெய்யத் தொடங்கியாயிற்று. இப்படியெல்லா மிருந்தாலும், அவர்கள் செய்துவருகிற அக்கிரமத்திற்கு அளவில்லை. முன்போலவே ஏழைக் குடித்தனக்காரரைக் கொன்றும், வதைத்தும் வருகிறார்கள். தங்களைக் கடவுளின் படையாட்கள் என்று பாவித்துக்கொள்ளுகிறார்கள். இதுநிற்க, பல்கேரியாவும், சர்வியாவும் சண்டைக் காரம்பித்துவிட்டன. ஒருவேளை, கிரீசும், ருமேனியாவும் விரைவில் சேருமென்பதற்கு ஐயமில்லை. ஜர்மன்கள் வால்தவத்தில் தோற்றவர்தாமும், மீழே விழுந்தும் மீசையிலே மண் படவில்லை என்றவன் கதைபோலிருக்கிறது. வைராக்கியம் மாத்திரம் சாதித்தால் போதுமா? வட்டுச் சுளைக்காய் கறிக்குதவுமா? பொல்லாப்புக் கழுத்துக்கெட்டினுல்தான் புத்திவந்து சமாதானம் காடுவார்கள்போலும். பெல்ஜியம் தேசத்து 80 லட்சம்பேரில் ஏராளமானவர்கள் பட்டினி கிடக்கிறார்கள். இதெல்லாம் ஜர்மன்களின் கொடும்பாதகம். தங்களான ஒரு தர்ம ஸ்திரீயைச் சுட்டுப்போட்டார்கள். லண்டனிலிருந்து மாதந்தோறும் 15 லட்சம்ரூ. உணவுகள் பெல்ஜியத்துக்கு அனுப்பப்படுகிறது. இதுதான் இவ்வுலகத்தின் கடைசி யுத்தம் என்ற அனேகர் எண்ணுகிறார்கள். இனிவரும் சமாதானத்துக்குப் பின்பு சச்சரவு நேரிடாது. எதாவது தேசத்துக்குத் தேசம் அதிருப்தி உண்டானுல், பொதுப்பஞ்சாயத்தில் பேசித் தீர்த்துக்கொள்வார்கள். சர்வ ராஜ்யங்களும் அப் பஞ்சாயத்தின் தீர்ப்புக் குடன்படவேண்டும்.

நவம்பர்மீ பஞ்சாங்கம்—

வாரம்.	நவம்பர்மீ = ஐப்பசி—கார்த்திகை. ⊙ பௌர்ணமி, 21உ ● அமாவாசை, 7உ					ஐப்பசி—கார்த்திகை.				
ஞாயி...	...	7	14	21	28	...	22	29	6	13
திங்க...	1	8	15	22	29	16	23	30	7	14
செவ்...	2	9	16	23	30	17	24	1	8	15
புதன்...	3	10	17	24	...	18	25	2	9	...
லீயா...	4	11	18	25	...	19	26	3	10	...
வெள்...	5	12	19	26	...	20	27	4	11	...
சனி ...	6	13	20	27	...	21	28	5	12	...

THE RELIGIONS OF INDIA

இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

இந்துதேசத்திற்கு முதல் ஆங்கில மிஷனெரி **உல்லியம் கேரி** என்னும் மகானே. இவர் 1793–ம் ஞ நவம்பர்மீ 13உ கல்குத்தாவில் வந்திறங்கினர். கம்பெனிவேலை செய்யாத எந்த ஐரோப்பியராவது விசேஷித்த சீட்டில்லாமல் கம்பெனி அதிகாரத்துக்குள்பட்ட பூமியில் கால் வைக்கப்படாதென்பது சட்டம். டென்மார்க்குதேசக் கப்பல் ஒன்றில் வந்த கேரி நீலத்தொட்டிவேலை செய்ய வராகப் பேரெழுதிக்கொண்டு, கல்குத்தாவுக்கு 150 மைலுக் கப்பாலுள்ள மதனுபட்டி என்கிற இடத்தில் மாசம் ஒன்றுக்கு ரூபாய் 75 சம்பளத்தில் நீலத்தொட்டி ருப்பரின்டென்டென்டு துரையாக வேலையமர்ந்து அங்கே ஆறுவருஷம் கழித்தார். இங்கிலாந்து தேசத்திலிருந்து மிஷனெரி ஊழியம் செய்ய ஆசைகொண்டு புறப்பட்டு இந்துதேசத்துக்கு வந்த முதல் மிஷனெரிக்குக் கிடைத்த பதவி இதுதான்! மார்ஷ்மன், உவார்ட் என்பவர்கள் அப்பால் அவரோடு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் மூவரும் 1810–ம் ஆண்டில் கல்குத்தாவுக்கு 15 மைலுக்கு வடக்கே **சோம்பூர்** என்ற இடத்தில் டென்மார்க்கு ராஜாங்கத்தாருடைய பூமியில் குடியேறினார்கள். கம்பெனி அதிகாரம் இங்கே செல்ல மாட்டாதாகையால் இப்படிச் செய்தார்கள். இவ்விடத்தில் இவர்கள் மூவரும் ஒரே சிந்தையாய், தங்கள் சுகம் பெலன், ஆஸ்திபாஸ்தி, சொத்து சுதந்தரம், பெண்ஜாதி பிள்ளைகள் முதலிய யாவற்றையும் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து இந்துதேசத்தின் இரட்சிப்புக்காக இரவுபகலாய் உழைத்தார்கள். 36 பாஷைகளில் வேதமாகப் பாகங்களைப் பாஷாந்தரம் செய்து அச்சிட்டார்கள். கலாசாலை ஸ்தாபித்து தேசிகரைப் பயிற்றுவித்தார்கள். பெண் பாடசாலை ஏற்படுத்திப் பெண்கள் கல்வியிருந்தி செய்தார்கள். சமாசாரப் பத்திரிகை இயற்றி, அதின் வாயிலாய் இந்துமத துர் அப்பியாசங்களைக் கண்டித்தார்கள். உடன்கட்டையேறுதல் என்ற குரூர வழக்கத்தை ராஜாங்கத்தாரே நிறுத்தி வீடும் படி முயற்சித்தார்கள். சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் வேதாகம மொழிபெயர்ப்பு அச்சடிப்புக்காகவும் ஏராளமான சொத்துப்பணங்களைச் செலவுசெய்தார்கள். "தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர் பார்; தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்யப்பார்" என்ற சட்டத்தை நியமித்துக் கொண்ட இம்மகான்கள் தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்யப் பார்த்ததுமாத்திரமல்ல, மெய்யாகவே செய்து முடித்தார்களென்று சொல்லத்தகும். இவர்கள் ஜீவிய விருத்தாந்தத்தைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் படிப்பது நன்று.

1813–ல் கம்பெனிக்காரருடைய அதிகாரப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டபோது, மிஷனெரிமாருக்கு விரோதமான சட்டங்கள் நீக்கப்படவே, மிஷன்களும் மிஷனெரிமாரும் ஒருவர்பின் ஒருவராய் இந்தேசத்தில் வந்திறங்கினர்கள். கீழேகண்ட ஜாபிதாவைக் கவனித்தால் தேசமுழுவதும் மிஷனெரி எல்லைக்கற்கள் போடுவதற்காக கிறிஸ்துவுக்கென்று எவரெவர் எப்போதெப்போது, எங்கெங்கே முளையடித்தார்களென்று தெரியவரும்.

1793	பங்காளத்தில் இங்கிலீஷ் பாப்திஸ்து மிஷன், **உல்லியம் கேரி.**
1806	திருவாங்கூரில் வண்டன் மிஷன், **ரிங்கல்டாப் ரிஷி.**
1812	பம்பாயில் அமெரிக்கன் மிஷன்.
1813	பர்மாவில் அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன், **ஜட்சன்.**
1814	சென்னையில் சர்ச்சு மிஷன்.
1816	தென் இந்தியாவில் **உவெஸ்லியன்** மிஷன்.
1816	காசியில் இங்கிலீஷ் பாப்திஸ்து மிஷன்.
1816	வடமலையாள ராஜ்யத்தில் சர்ச்சு மிஷன்.
1818	டில்லியில் இங்கிலீஷ் பாப்திஸ்து மிஷன்.
1820	திருநெல்வேலியில் சர்ச்சு மிஷன், **ரேனியுஸ் ஐயர்.**
1822	ஒரிஸ்ஸாவில்பொது பாப்திஸ்து மிஷன்.
1825	எஸ். பி. ஜி. சங்கம் தென் இந்தியா மிஷன்களே கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்திகங்களுக்காரிடமிருந்து ஏற்படுத்தப்பட்டது.
1830	கல்குத்தாவில் ஸ்காட்லந்து சபைச் சங்கம், **டாக்டர் டப்.**
1830	கான்பூரில், எஸ். பி. ஜி. மிஷன்.
1834	மதுரையில் அமெரிக்கன் மிஷன்.

ரஷியாவின் முக்கிய கோவில்.

1834	ஊடியானாவில் அமெரிக்கன் பிரஸ்பிற்றீரியன் மிஷன்.
1834	மலையாளத்தில் பாசல் ஜர்மன் மிஷன்.
1835	தெலுங்கு அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன்.
1836	அஸ்ஸாமில் அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன்.
1837	சென்னையில் இங்கிலீஷ் பாடசாலை, **அண்டர்ஸன்.**
1841	குஜராத்தில் ஸ்காட்ஸ் பிரஸ்பிற்றீரியன் மிஷன்.
1841	வங்காளத்தின் வடகிழக்கு பாகத்தில் **உவெல்ஷ்** மிஷன்.
1841	தெலுங்குநாட்டில் சர்ச்சு மிஷன்.
1842	செக்கந்தராபாத்தில் எஸ். பி. ஜி. மிஷன்.
1842	குண்டூரில் அமெரிக்கன் லூதரன் மிஷன்.
1844	நாக்பூரில் பிரீ சர்ச் மிஷன்.
1846	ரஞ்சியில் காஸ்னர் ஜர்மன் மிஷன்.
1852	ஜெனரல் வேதாகம வைத்திய மிஷன்.
1854	டில்லியில் எஸ். பி. ஜி. மிஷன்.
1854	பெஷாவரில் சர்ச்சு மிஷன்.
1655	அமெரிக்கன் ஆர்க்காட் மிஷன், **ஸ்கடர் ஐயர்.**
1855	திருநெல்வேலியில் அமெரிக்கன் ஐக்கிய பிரஸ்பிற்றீரியன் மிஷன்.
1856	பரேலியில் மெதடிஸ்ட் எப்பிஸ்கோப்பல் மிஷன்.

மேற்கண்ட ஜாபிதாவைக் கவனித்தால் சற்காலத்தில் இந்துதேசத்தில் விஸ்தாரமான வேலை நடப்பிக்கும் மிஷன்கள் அனைத்திற்கும் அஸ்திபாரம் 1857–க்கு முன்னமே போடப்பட்டதென்று விளங்குகிறது. மிஷனெரிமாரின் அக்காலத்தில் சுருக்கம். நடைபெற்ற வேலைப் சொற்பம். தோற்சியும் கொஞ்சம்.

இருவித விசேஷித்த வேலை இக்காலத்தில் ஆரம்பமானது. ஒன்று ஜெனரல் மிஷன் வேலை. 1822–ல் கல்குத்தாவில் சர்ச்சு மிஷனேக்கோர்த்த கூக் மியெம்மாள் அங்குள்ள ஸ்திரீகள் வீடுகளுட் சென்று அந்தர்ப்புர வேலையைப் ஆரம்பித்தார்கள். அந்தர்ப்புர வேலையை முதல் முதல் ஆரம்பித்தது இந்த மாதுசிரோமணியே.

மற்றது கலாசாலை வேலை. இதுவும் கல்குத்தாவிலேயே 1830–ல் ஆரம்பமானது. ஸ்கோத்லாந்து சபை மிஷன் டப் சாஸ்திரியார் புறமதப் பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் பள்ளிக்கூடம் போட்டார். மிஷன் கல்லூரிகள், கலாசாலைகள் எற்பட்டது இதன் பின்னரே. டப் சாஸ்திரியாரின் சுயவேறுபாடும், அன்பும் ஆச்சரியமானது. அவரது ஜெபத்தினாலும் பிரயாசத்தினாலும் உயர்குலத்தோரான பலர் கல்குத்தாவில் அக்காலத்தில் கிறிஸ்தவர்களானார்கள்.

காரியத்தை உற்றுராயுமிடத்து 1858–ல்தான் இந்தியாவில் கிறிஸ்துமார்க்க பிரபல்யம் ஆரம்பமானதென்று சொல்லத்தகும். எப்பாப் கலகத்தோடு நல்ல காலம் பிறந்தது. கலங்க்காரர் கிறிஸ்தவர்களைத் துன்பப் படுத்தினபடியால், கிறிஸ்தவர்களுடைய உத்தமம், மனஉறுதி, விசுவாசம் இவ்வளவென்று விளங்க வதுவாயிற்று. மேலும் இத்தேசத்தாருக்குக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தக்கபடி அறிவியாமலிருப்பது தப்பிதம் என்று பிரிட்டிஷ் அதிகாரிகளுடைய மனதில் இப்போதுதான் பட்டது. ஆகவே முன்னில்லாத ஊக்கமும், தைரியமும், உற்சாகமும் ஒவ்வொரு மிஷனெரி கங்கத்திலும் காணப்பட்டது. மேலும் எப்பாய்க் கலகத்தோடு கம்பெனிக்காரருடைய அதிகாரமும் முடிவடைந்தது. விக்டோரியா மஹாராணியார் தினம் பரம்செய்து சகல மதஸ்தர்களும் சமமென்றி வசிக்க, வணங்க, வேலைசெய்ய இடம்பெற்றார்கள். ஆகவே பழைய மிஷன்களனைத்தும் பலன் கொண்டெழும்பின. சில புது மிஷன்களும் வந்தன.

1860	ராஜபுதனத்தில் பிரீ சர்ச்சு மிஷன்.
1874	கோதாவரி ஜில்லாவில் கனடியன் பாப்திஸ்து மிஷன்.
1874	இங்கிலீஷ் பிரன்ட்ஸ் மிஷன்.
1877	டில்லியில் கேம்பிரிட்ஜ் மிஷன்.
1880	கல்குத்தாவில் ஆக்ஸ்வோர்ட் மிஷன்.
1889	பம்பாயில் அலையன்ஸ் மிஷன்.

இன்னும் அநேக மிஷன்களும் கடந்த இருபது முப்பது வருஷங்களுக்குள் எழும்பி தேசத்தில் பற்பல பாகங்களில் சுவிசேஷ பிரபல்யவேலை நடப்பித்துவருகின்றன.

சகல மிஷன்களுக்கும் பொதுவாய் வேலைசெய்யும் சங்கங்களும் பலவுள. எப்பாய் கலகத்துக்குஸ்தோத்திர ஞாபக ஸ்தம்பமாக 1857–ல் கிறிஸ்தவ புஸ்தக சங்கம் எற்பட்டது. சென்னை மிமோரியல் ஹாலும் அச்சமயத்தில் அதே நோக்கமாகவே கட்டப்பட்டது. வாலிபர் கிறிஸ்தவ ஐக்கியம் சங்கம், வாலிப ஸ்திரீகள் கிறிஸ்தவ ஐக்கியசங்கம், பக்திவிருத்தி சங்கம், ஒய்வுநாட் பள்ளிக்கூட ஐக்கிய முதலிய பொது சங்கங்களும் எல்லாவற்றிற்கும் மேலாக வேதாகம சங்கமும் சகலவித மிஷன்களுக்கும் அதுகூலமாகவும், உதவியாகவும், சுவிசேஷ பிரபல்ய வேலைக்கு வலக்கைபோலும் நின்று கிறந்த ஊழியம் செய்து வருகின்றன.

இந்து தேசத்தை இயேசு மகாராஜாவுக்கு ஆதீனமாக்குவதற்கு அவர் கொடியின்கீழ் போர் செய்யும் சைன்யங்களும், பட்டாளங்களும் போர்வீரரும் நூற்றுக்கணக்காய் உளர். 122 சங்கங்களும் 4614 புறதேச மிஷனெரிமாரும், 35,767 சுதேச ஊழியருமாக இருந்ததாக 1910–ல் கணக்கிட்டிருக்கிறார்கள். இவர்களில் 278 பேர் 313 வைத்தியசாலைகளில் சேர்ந்திருப்பதையும் சொல்கிறவர்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சுவிசேஷ பிரபல்யத்திற்குக் காரணம் ஐரோப்பிய அமெரிக்க மிஷன்களின் அரிய பிரயாசமே. நூறு வருஷக் காலமாய் லக்ஷக்கணக்கான ரூபாய்களே இவர்கள் செலவு செய்து, அருமையான உயிர்களைப் பலி கொடுத்துக் கிறிஸ்துசபையை இத்தேசத்தில் நாட்டியிருக்கிறார்கள். இச்சங்கங்களுக்கும் தேசத்தாருக்கும் இந்தியா பட்டிருக்கும் கடன் இவ்வளவுவென்றல்ல. அவர்களுடைய பரோபகாரகுணமை நன்குமதித்து, உள்ளக்களிவுடன் அவர்களே எண்ணி, அவர்கள் உழப்பைப் பாராட்டுவது நமது கடமை.

இவ்வளவு காலம் அரும்பிராயசத்துடன் ஆங்கில மிஷனெரிமார் உழைத்த உழைப்பின் பலனாக ஜனத்தொகையில் சுமார் நூற்றுக்கொருவர் வீதம் கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் வேலையைக் கண்ணுரைக்கண்டு அகமகிழ்ந்து சும்மாயிருப்பதல்ல, இத்தேசத்தின் ரக்ஷிப்புக்காக நம்மையும் கையளிப்பதுநம் கடமையன்யரோ? இருபதாம் நூற்றாண்டாவது இந்தியா மிஷனெரி காலமாகவேண்டாமா?

கடவுள் தாமே அருள்புரிவாராக!

(இன்னும் வரும்.)

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

118. வேலைசெய்யு மாளுகளும்–வெளியிலோ டப்பலரும்
காலியலு மாலையிலும்–கால்பிடிக்கப் பாவையரும்
119. வீடிதைத் தருவதற்கும்–விசிறவு மான்கள்வைத்தான்
சேடியர்களாம்பலரைத்–தேடியமர்த்திவைத்தான்
120. நாட்டியக் காரரையும்–நடனம்செய் பெண்களையும்
கூட்டியே வைத்தானே–குமாளிவ னப்போது
121. வாத்தியக் காரரையும்–வஞ்சிய ரனேகரையும்
தாத்திரிப் பாடகரைத்–தாயனும்சேகரித்தான்
122. பரிமளப் புஷ்பங்கள்–படுக்கையின் மேல்மணக்க
தரிய ரருகிருந்து–சல்லாபம் செய்துவந்தான்
123. பன்னீரும் சந்தனமும்–பரிமள வாடைகளும்
சின்னளாய் வீட்டுக்குள்ளே–நெற்பா யிருந்ததுவே
124. கைபிடிக்கத் தாதிகளும்–கால்பிடிக்க மாதர்களும்
வையகத்தி லவனுக்கு–மட்டில்லே யென்றறிவீர்
125. நாலுவகை போஜனமும்–நன்றாய்ப் புசித்து வந்தான்
சாலவும் டம்பிகமும்–தாரணியில் வாழ்ந்து வந்தான்
126. வேடிக்கைப் பேச்சுகளும்–வெகுவான கேளிக்கையும்
ஆடலும் பாடல்களும்–அனேகத்த மனுபவித்தான்
127. மதியைக் கெடுக்கும்பல–மதுபான வர்க்கங்களும்
அதிகக் களிப்பாக–ஐய்ய னனுபவித்தான்
128. ஆங்காலந்தன்னில்–அனேகரு கேசரென்றும்
சாங்காலம் வந்தால்–தனிமையெனுஞ் சொல்லுக்கொப்ப
129. நேசரும்தோழர்களும்–நெருங்கி விருந்தருந்தி
பாச முடனிருந்தார்–பாரும் பலகாளாய்
130. வந்தவர்க்கும் போனவர்க்கும்–வளமாக அன்னமிட்டு
சந்தோஷ மாயிருந்தான்–சம்போக் கான வன்
131. காசுபண மழித்தான்–கண்டபொருள் தானமழித்தான்
தாசிகளும் வேசிகளும்–தாராளக் கிண்ணர்கள்
132. ஐய்யனே எனபாரும்–அரசனே என்பாரும்
வையகத்தி லவனே–வாழ்த்திப் புகழ்வாரும்
133. மன்னவனே யென்பாரும்–மதிமுக னென்பாரும்
பன்னரு மாஸ்தியுள்ள–பார்த்திப னென்பாரும்
134. தின்று குடித்துமிகத்–தியிர்கொண்டோ ரெத்தனையோ
அன்று மடிந்தவர்கள்–அப்பா ஓராயிரமே
135. கண்டவ செல்வாரும்–கனபணங் கொண்டோர்
கொண்டார்
எண்டிசை ராயனென்று–எத்திப் பணம் பறித்தார்.
136. காரியர்க்கும் நாடகர்க்கும்–நன்றாய்த் திருப்தி செய்ய
வாரி யிறைத்துவிட்டான்–வத்தனைத்து மையய்யோ
137. முகஸ்துதி பேசிப்பலர்–முழுது மபகரித்தார்.
அகத்திலுள் ளழியர்கள்–அஞ்சா தபகரித்தார்
138. கெட்ட கிநேகிதர்கள்–கேகமதி லேநிறைத்து
ஒட்டார மாய்ப்பணத்தை–ஒயா தபகரித்தார்

(இன்னும் வரும்.)

சத்திய தூதன்

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 1 anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையோப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒத்தைக்கு 4 அணு; அனா அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒத்தைக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஸனரியல் ஹாலிலுள்ள டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery. Madras—1915.

RECEIVED UNDER THE REGISTRATION OF NEWSPAPERS ACT
8 - DEC 1915
MADRAS

சத்திய தூதன்.

DECEMBER, 1915. PRICE, 1 PIE.—விலை, க பை. டிசெம்பர்மீ, 1915.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

தைரியம் யாது?—போர்போன லார்ட் ஜார்ஜ் என்னும் அங்கிலேய மந்திரி பொறுமையே வீரிய மெனச் சாதிக்கிறார்.

பீரங்கிக் குண்டின் பிரையோ. — வெடிதீர்ந்த ஒரு குண்டு ஒரு நிமிஷத்திற்கு 20 மைல் பாய்கின்றதாம். இத்தனை வீரவாய்ப் பாய்கிற குண்டினல் எத்தனை உயிர்ச்சேதம் உண்டாகும்!

செருப்புகள்.—இங்கிலாந்தில் ஒரு பட்டணத்தில்மட்டும் ஒரு சப்பாத்து ஷாப்பிலே தினம் 60,000 செருப்புகள் தைக்கப்படுகின்றனவாம். இவை போர்வீரர்ப் பாதங்களைக் காக்கும்பொருட்டே.

ஜார்ஜ் சக்கரவர்த்தி.—நமது அன்புள்ள சக்கரவர்த்தியவர்கள் பிரான்ஸில் சேனைசோதனை செய்துவருகையில், குதிரை மிரண்டுவிழித் தாமும் விழுந்து காயப்பட்டும், விரைவிலே சவுக்கியமடைந்து, இங்கிலாந்துக்குத் திரும்பி வந்திருக்கிறாரும். பேராபத்து நேரிடாமல் அவர் உயிர் தப்பினது தெய்வக் கடாட்சம்.

யுத்தச்செலவு.—இந்தத் தொகைகள் மனதாற் கிரகிக்கப்படாதவை: சேனைகளின் **பிரதிதினச்** செலவாவது: பிரான்ஸ் 3½ கோடி ரூபாய்; ரஷ்யா 3 கோடி ரூபாய்; இங்கிலாந்து 6½ கோடி ரூபாய். இந்தத் தொகைகளே 1½ வருஷத்து நாட்களால் பெருகினுல் இதுவரையும் செலவான மொத்தத் திரவியம் ஒருவாறு தெரியவரும்.

பீப்பில்ஸ் பாங்கு—சென்னைப் பிரஜைகள் தோட்டமாகிய பீப்பில்ஸ் பாங்கிலே இந்த வருஷம் டிஸெம்பர் என்கிற திங்கள் ஜயந்தி வாரத்திலே விசேஷமான உற்சவங்கள் நடக்கும். பலவிதமான வேடிக்கைகளும் வினோத காட்சிகளும் நடைபெறும். இவ்வருஷம் இதனல் கிடைக்கிற பணமெல்லாம் யுத்தச்செலவு நிதிக்குக் கொடுத்துவிடப்படும்.

பல்கேரியா. — இப்பொழுது ஜர்மனியைச் சேர்ந்துவிட்ட இந்தச் சின்ன ராஜ்யத்தின் விஷயங்களாவன: நிலப்பரப்பு 43,300 சதுர மைல்; ஜனத்தொகை 4½ கோடி; அதிலே 3 லட்சம் துருக்கர் வசிக்கிறார்கள். சேனையிலே 3,000 உத்தியோகஸ்தரும் 36,000 படைவீரரும் இருந்தாலும், மொத்தத் தொகை 2 கோடியே 80 லட்சம் போர் வீராம்.

கவர்னர்களுக்கு.—நமது கவர்னர் லார்ட் பெண்ட்லண்டவர்களும் அவர் பத்தினியாரும் சென்ற மாதம் சென்னை வந்து சேர்ந்தார்கள். யுத்த சேவைக்காக அதிகமான திரவியம் சேகரித்து வருகிறார்கள். அன்றி, இங்கிருந்து சண்டைக்குப் போயிருக்கிற இந்திய போர்வீரர்களுக்குத் தூணிமணிகளும், கம்பிளிச்சட்டைகளும் தடவைக்குத் தடவை அனுப்பிவருகிறார்கள். காயப்பட்டவர்களுக்கென்று ஒரு கப்பலையும் தயார்செய்து, அதைப் பல யாத்திரை செய்வித்துச் சகல சௌகரியமும் பராமரித்துவருகிறார்கள். இதனல் இந்த ராஜதானியிலே தர்ம லட்சணமும், ஈகைக் குணமும், பரோபகார நிஷ்டையும் அதிகமாக உண்டாயிருக்கிறது.

டோபுரியும் ராஜ்யங்களின் ஜனத்தொகை முதலியன.—ஜர்மனி 6½ கோடி ஜனம், ஆஸ்திரியா 5 கோடி, துருக்கி 2½ கோடி, பிறதேச குடிகள் 1½ கோடி, ஆக மொத்தம் 15½ கோடிபேர். கிரேய்ட் பிரிட்டன் 4½ கோடி, பிரான்ஸ் 4 கோடி, ருஷியா 18 கோடி, ஐப்பான் 6 கோடி, பெல்ஜியம் 8 கோடி, சர்வியா 3 கோடி, இத்தலி 3½ கோடி; ஆக மொத்த ஜனத்தொகை 37 கோடி. இவ் ராஜ்யங்களின் பிறதேசக் குடிகளின் மொத்தம் 80 கோடி. யுத்தத்தின் கடைசிப்பயனுக்கு இந்தத் தாரதம்மியமே போதும். ஜர்மனி உடனே சமாதானத்துக்கு வராவிட்டால் அதன் பிற்கால அபஜெயம் போராபத்தாய் முடியும். அடுத்துவருகிற குளிர்காலத்து மத்தியிலே அதற்கபாயம் அதன் கழுத்தைக் கிட்டுமென ஒரு பெரிய ஜர்மனே கூறுகிறார்.

யுத்தவிஷயங்கள்.—யுத்தம் நின்று சமாதானம் ஏற்படுகிறதைக் காணேம். ஜர்மானியர் அனேகமாய்த் தோற்றும், மடிந்தும், காயப்பட்டும், தொகை குறைந்தும், தேசத்தில் பட்டினிகிடந்தும் வந்தாலும், நாளதுவரையிலும் வைராக்கியஞ் சாதித்துச் சண்டையிட்டு வருகிறார்கள். கூட பல்கேரியா நாட்டாரையும் சேர்த்துக்கொண்டார்கள். கூடிய சிக்கிரத்தில், கிரீசும், ருமேனியாவும், சண்டையிற் சேரும்போல் தோன்றுகிறது. நாலேந்து பெரு ராஜ்யங்கள் கலிர யுரோப்புக் கண்டமுழுவதும் அமர்க்களமாய்விட்டது. இத்தனேப் பெரிய போர் உலகத்தில் எந்நாளும் நடந்தது கிடையாது. இங்கிலாந்திலிருந்து அனேக லட்சமானபேர்கள் போருக்குப் போயிருக்கிறார்கள். 1½ லட்சம்மந்திரீகள் ஆண்களேவேலை பார்த்துவருகிறார்கள். காலேஜ்களிலிருந்தும், ஆப்பீசுகளிலிருந்தும் ஏராளமான வாலிபர் போர்க்களஞ் சென்றிருக்கிறார்கள். சேனைக்கு ஒரு வினச்செலவுமட்டும் வரக்குறைய 67 கோடி ரூபாய். தனகர்த்தர், லார்ட் கிச்சினர் பிரபு, தூர்க்கிதேசம் போயிருக்கிறார். நம்முடைய சைனியங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. ஜர்மன் சைனியங்கள் குறைந்துகொண்டு வருகின்றன. நாம் முன்செல்லுகிறோம். அவர்கள் பின்னுக்குப் போகிறார்கள். நமது கப்பல்கள் தொகை பெருகிவருகின்றன. அவர்கள் கப்பல்களைக் கண்ணுற் காண்பதரிது. அவர்கள் சப்மெரின்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டன. அவர்கள் தன கர்த்தர்கள் தைரியமிழந்து இன்னும் ஏராளமான போர்வீரர் வேண்டுமென்று பிரலாபிக்கிறார்கள். சீக்கிரத்தில் முடிவுகாண்போமென்று நம்புகிறோம்.

டிசெம்பர்மீ பஞ்சாங்கம்—

வாரம்.	டிசெம்பர்மீ = கார்த்திகை—மார்கழி. ⊙ பௌர்ணமி, 21உ ● அமாவாசை, 6உ					கார்த்திகை—மார்கழி.			
ஞாயி...	...	5	12	19	26	... 20	27	4	11
திங்க...	...	6	13	20	27	... 21	28	5	12
செவ்...	...	7	14	21	28	... 22	29	6	13
புதன்...	1	8	15	22	29	16	23	30	7	14
லியா...	2	9	16	23	30	17	24	1	8	15
வெள்...	3	10	17	24	31	18	25	2	9	16
சனி ...	4	11	18	25	...	19	26	3	10	...

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதினேந்தாவது கதை.

பணத்தின் ஆசையினல் பிணம்ஆன தூயின் கதை.

ஒரு தேசத்தில் ஒரு தூை அதிக செல்வாக் குடையவராக ஏராளமான திரவியத்தைச் சேர்த்து வைத்து இருந்தார். ஆனலும் அவர் தன் ஆசை தை முத்திசெய்து கொஞ்சநேரம் அவ்விடம் நின்று வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டுத் தன் அரண்மனைக் குப் போவார். இது அவருடைய தினசரி வழக்க மாக இருந்தது.

ஆனல் தூைசானிக்கு இந்த விஷயம் அதிக மனவருத்தத்தைக் கொடுத்துவந்தது. அவள் அதிக பக்தியுள்ளவள்; தூையின் ஆசை எப்படி பணத்தின் மேல் இருந்ததோ அப்படியே தூைசானியுடைய எண்ணமெல்லாம் கடவுள்பேரில் இருந்தது. தூை சானி ஒய்வுநாள் அதிகாலேயில் கோவிலுக்குப் போ வாள், கடவுளைத் தியானிப்பாள். தூையோ பணத் தண்டைபோய்க் காலத்தைக் கழிப்பார். இப்படி யாக இவர்கள் இருவரும் காலத்தைக் கழித்தார்கள். இப்படியே ஒருதடவை ஒரு ஒய்வுநாள் அதிகாலே முடிந்து அரண்மனைக்குள் வந்தாள். சாப்பிடும்படி தூையைத் தேடினுள். தூை அகப்படவில்லே. உடனே வேலைக்காரரை அனுப்பி தூையின் சிநே கிதர் வீடுகளில் போய்த் தேடிக் கூட்டிவரும்படி அனுப்பினுள். தூையோ அகப்படவில்லே. 5 மணி நேரமாக தூை யெங்கும் தென்படவில்லே. தூை சானிக்கோ அதிக கவலையாகிவிட்டது. கடைசி யாக, புதிதாகக்கட்டின பணக்கட்டிடத்தைப் பார்த் தார்கள். சாவியும் இல்லே, உடனே வேலைக்காரரைக் கொண்டு கட்டிடத்தை உடைத்துப் பார்க்கும்படி உத்தரவுகொடுத்தாள். அப்படியே வேலைக்காரர் அதை உடைத்தார்கள். தூை உள்ளே செத்துக் கிடக்கிறார்! உடனே தூைசானி பார்த்து அழுது தன்னுடைய அருமை தூையின் கதி இன்னதாச்சு



மலையாற்றுப் பாலம்.

யெல்லாம் அந்தத் திரவியத்தின்மேல் வைத்திருந்த படியால், அவர் ஒரு யோசனைசெய்து, அதாவது, தன்னுடைய அரண்மனைப்பக்கத்தில் தன் திர வியத்தைப் போட்டுவைக்கும்படி ஒரு அழகான கட்டிடம் கட்டினர். அந்தக் கட்டிடத்தை அதிக பலமாகவும் அழகாகவும் யாரும் இறக்க முடியா மலும் உள்ளே காற்று போகாதபடியாக கட்டி முடித்து, அதற்குள் ஒரு மூலையில் தன் திரவியங் களையெல்லாம் குவித்துவிட்டார். அதுமாத்திர மல்ல அவர் ஒரு கெட்ட வழக்கத்தையும் செய்து வந்தார். அதாவது, அவர் தினந்தோறும் காலேயில் அரண்மனேயில் நித்திரைசெய்து விழித்தவுடன் நேராக இந்தக் கட்டிடத்தை வந்து தன் கையிலுள்ள சாவியால் அதைத் திறந்து உள்ளேபோய் பணத் யில் தூை யெழுந்ததும் நேரேபோய்க் கட்டிடத் தைத் திறந்து மூலையில் குவித்திருந்த பணத்தைப் போய் முத்தம்செய்தார். இவர் அவசரமாக உள் ளே போகும்போது கதவைச் சரியாய்த் திறந்து வைக்காமல் ஆத்திரமாய் விட்டுப்போனதினுல் அந்தக் கதவு திடீரென்று சாத்திக்கொண்டது. சூட்சப்பூட்டும் பூட்டிக்கொண்டது. தூையோ உள்ளே அகப்பட்டுக்கொண்டார். உள்ளே காற் றுக் கிடையாது. இருட்டறைமாதிரியா யிருந்த படியினல் தூை உள்ளே திட்டுமுட்டு உண் டாகிக் கொஞ்சநேரத்துக்குள்ளாகப் பிணமாகி விட்டார். இந்தச் சங்கதி யாருக்கும் தெரியாதி ருந்தது. தூைசானியோ வழக்கம்போல் கோவி லுக்குப் போய்விட்டாள். கோவில் ஆராதனையும் தேயென்று அவருக்கு அதிகமாகப் புலம்பி துக் கம் கொண்டாடினுள்.

இதினல் நாமும் ஒரு நல்ல படிப்பினே கற்றுக் கொள்ளலாம். அதாவது இக்காலத்திலும் அனேக செல்வாக்குடையவர்கள் தங்களுடைய மூழுக்கவலே யையும் தங்களுடைய ஆஸ்தியில்தான் வைத்திருக் கிறார்கள். சிலர் தங்கள் பணத்துக்கு ஒரு அபாயம் திடீரென்று நேரிட்டுவிட்டால் ஒரு எக்கம் எங்கி, உயிரை மாய்த்துக்கொள்ளுகிறார்கள். இன்னும் சிலருக்கு அதனல் பைத்தியம் அதிவிடுகிறது.

இப்படியாகக் கொஞ்சக்காலம் நம்முடைய கை யில் இருந்து மாறிப்போகிற இந்த அற்ப ஆதாயத் தின்மேல் தங்கள் மூழுக்கவலேயும் வைத்து அனேக விதமான ஆபத்தை அடைத்துகொள்ளுகிறார்கள்.

இதினல் நமக்கு தெய்வ சர்பம்தான் கிடைக்கும். அந்த தூைசானியைப்போல் நீரும் அந்த மேலான நன்மையை நாடித் தேடி அதின்மேல் வாஞ்சை யாய் இருப்பீரானல், பரத்தில் நமக்கு அழியாத நிதியும் பேரின்ப பாக்கியமும் கிடைக்கும்.

உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம், கட வுளின் சித்தத்தின்படி செய்கிறவனே என்றென் றைக்கும் நிலைத்திருப்பான். 1 யோவா. 2. 17.

G. D.

THE RELIGIONS OF INDIA

இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

மிஷனரிவேலையின் பலாபலன்கள்.

கடந்த இரண்டொரு நூற்றாண்டுகளாக அநேக மிஷனரி சங்கங்கள் ஏற்பட்டு இத்தேசத்தில் சுவி சேஷ பிரசங்கவேலே நடப்பித்திருப்பதாக மூன்ன அத்தியாயத்தில் சொன்னேமே. இவற்றால் உண் டாயிருக்கும் பலாபலன்கள் யாவையென்று இனி விசாரிப்போம்.

1. **ஐந்துமதக் கொளகையிலேயே காணப்ப டும் பல பேதங்கள் கிறிஸ்துமார்க்கத்தினலுண் டானவை யென்பதற்குச் சந்தேகமில்லே.** இந்து மதஸ்தர் முற்காலத்தில் வாதிக்கிறதற்கும், தற்காலத் தில் வாதிக்கிறதற்கும் வித்தியாசமுண்டு. இது எவ் வளவுதூரம் மிஷன்களினல் உண்டான பலனென் றும், எவ்வளவுதூரம் ஆங்கிலவித்தியாப்பியாசத்தினு லும் சாஸ்திர நூல்களினலு முண்டானதென்றும் சொல்ல கூடவில்லே. ஆகிலும் இங்கிலாந்துதேசத் திலிருந்து தோன்றின அறிவும் சாஸ்திர நூல்களும் கிறிஸ்து மதோபதேசத்தினலே சாமேற்றப்பட் டிருப்பதால், கடந்த இருபது வருஷ காலத்துக்குள் இந்துமதத்தில் தோன்றியிருக்கும் மாறுதல்களுக்குக் கிறிஸ்துமார்க்கமே மூலகாரணமென்று சுக்தேக மறச் சொல்லலாம். தற்கால இந்துமதக் குருக்கள் பலர் இயேசுபெருமானது சன்மார்க்க போதனே யையே பிரேஷ்ட மாதிரியாகக் கையாடவேண்டு மென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துமார்க்க நீதிநெறிகளே மெச்சிக்கொள்ளுகிறார்கள். கிறிஸ் தமதப் போதனேகளே இந்துக்களே உட்கொண்டு, அதற்கேற்றபடி தங்கள் சொந்த மதானுசாரங்களே அர்த்தப்படுத்திக் காட்ட விரும்புகிறார்கள். இந்து மத தேவர்களேப்பற்றிச் சொல்லிய இழிவான சரித் திரங்களேத் தோற்றத்தின்படி அர்த்தப்படுத்தாமல், உவமையலங்காரமாக ஞானர்த்தப்படுத்தவேண்டு மென்கிறார்கள். இந்து தேசாசார முறைகளில் தொன்றுதொட்டு சகஜமாய் நடந்தேறிவரும் தன் மார்க்க ஆசாரங்களேக் கண்டித்துத் தள்ளவேண்டு மென்ற வாஞ்சை நாளடைவில் விருத்தியாகிறதை யும் காண்கிறோம். கற்றோர் பலர் சிலவிவாகம், பல வந்த விதவத்வம், கோவில் தாசிகள்முதலிய தீமை களே நீக்கும்படி முயற்சிக்கிறார்கள். மைசூர் இராஜ் யத்தில் கோவில் தாசிகளேப்பற்றிய எற்பாடு முற்றி லும் ஒழிந்துபோக கோரிக்கை இருக்கிறது. சர்க் கார் அதிகாரத்துக்குட்பட்ட கோவில்களில் இவர் கள் காலஞ்சிக்கக் கூடாதென்று சட்டம் பிறப்பித் திருக்கிறார்கள். இவையெல்லாம் கிறிஸ்துமார்க் கத்தின் உத்தம திருஷ்டாந்தத்திலிருந்து இக்துக்கள் படித்த பாடங்கள்தானே. இந்துமார்க்கத்தில் இத் தனே மாறுதல்கள் தோன்றினபோதிலும், அதிகத் தெளிவுபெற்ற இந்துக்கள்முதலாய் ஐம்பது வரு வந்துக்குமுன் இருந்ததைப்பார்க்கிலும் இப்போது கிறிஸ்துமார்க்கத்தை ஏற்றுக்கொள்வதற்கு என்னள வாகிலும் சமீபித்திருக்கிறார்கள் என்று சொல்ல வதுவில்லே. தங்கள் சொந்த மதத்தை அதிக ஜாக் கிரதையோடு ஆராய்ச்செய்து, வேதாகமத்தில் தென்படும் சன்மார்க்க போதனைகளேத் தங்கள் மதத்தோடு சேர்த்துக்கொள்ளப் பார்க்கிறார்களே யொழிய வேறல்ல. பூர்வகாலமுதல் இந்துமார்க் கத்தின் தன்மை இதுவே. காரிய மிப்படியிருந்த போதிலும் தேவனுடைய வசனம் வெறுமையாய்த் திரும்பமாட்டாதாகையால், இந்துமதத்துக்குட் பிர வேசித்திருக்கும் கிறிஸ்துமார்க்க சத்தியங்கள், இத் தேசத்து ஜனங்கள் ஏகமாய் ராட்சகரை ஏற்றுக் கொள்வதற்கு வழியை ஆயத்தப்படித்தும் முன்னு தன் என்று சொல்லலாமே.

2. மேற்றிசைக் கல்வி கற்றவர்களுக்குள் கிறிஸ் தமார்க்க பலாபலன் எவ்வளவு என்று கவனித் தோமே. ஈனஜாதியென் றெண்ணப்படுகிறவர் களும், கல்லாதவர்களுமான ஜனக்கள் மத்தியில் கிறிஸ்துமார்க்க அபிவிர்த்தியைக் கவனித்தாலோ, காரியம் முற்றிலும் விபரீதமாய்த் தென்படும். ஈ ளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளர்ந் தோங்கும் திருச்சபை இவ்வித தாழ்ந்த ஜனங்கள் மத்தியிலேயே பலமாய் ஸ்தாபிக்கப்பட்டுவருகிறது. அக்காலத்தில்போலவே இக்காலத்திலும் அருள்நா தர் அபிர்வசனத்தை சந்தோஷமாய்க் கட்கிறவர் கள் சாதாரண ஜனங்களே.

இந்துதேசத்திலுள்ள 38,76,203 கிறிஸ்தவர்க ளில் 35,74,770 பேர் சுதேசிகள். இவர்களில் 13,93,720 பேர் ரோமான் சபையார். 7,28,291 பேர் சுரியானிக் கிறிஸ்தவர்கள். 14,52,733 பேர் மற்ற சீர்திருத்த சபையைச் சேர்ந்தவர்கள். மொத்த ஜனத்தொகையில் சுமார் எண்பதிலொரு வன் கிறிஸ்தவன்.

மேற்காட்டிய கிறிஸ்தவர்களனேவரும் இத்தேசத் தில் எங்கெங்கே அகப்படுவோர்களென்று பார்ப் போம். மொத்த கிறிஸ்தவர்களில் மூனதில் இரண்டு பங்குப்பேர் சென்னே இராஜதானியிலும் அதோடுசேர்ந்த மற்றராசு நாடுகளிலுமே விளங்கின னர். சுதேச கிறிஸ்தவர்களில் பாதிக்குமேல் தமிழ், மலேயாளம் பேசுகிறவர்களே. சென்னே இராஜதானியிலுள்ள குண்டூர் ஜில்லாவில் 14 பே ருக்கு ஒருவனும், திருநெல்வேலியில் 12 பேருக்கு ஒருவனும் கிறிஸ்தவன். திருவாங்கூர் ராஜ்யத்தி லோ, ஜனத்தொகையில் காலவாசிப்பேர் கிறிஸ்த வர்கள்.

பத்து வருஷத்துக் கோர்முறை காளிஷ்மாரி கணக்கெடுக்கிறோர்களே. இத் தச வருஷங்களில் கிறிஸ்தவர்கள் வீருத்தியைச் சற்று கவனித்தால், வேதெந்த மதஸ்தரைப்பார்க்கிலும் ஜனசங்கைக்கு ஜனசங்கை கிறிஸ்தவர்கள் மிகுந்த விருத்தியடைந் தவர்களிருக்கிறார்கள் என்று விளங்கும்.

1872-ல் கிறிஸ்தவர்கள் தொகை 15,06,098; 1881-ல் 18,62,634. அதாவது 100-க்கு 22 வீதாசாரம் விருத்தி. அப்பால் 1891-ல் கிறிஸ்த வர்கள் தொகை 22,84,380 ஆனது. பெருக்கம் 100-க்கு 33 வீதம். அப்பால் 1901 ஜனசங்கை யில் இவர்கள் தொகை 100-க்கு 30 வீதம் பெ ருக 29,23,241 ஆகிவிட்டது. 1911-ம் ஆண்டு மார்ச்சுமீ எடுத்த கணக்கின்படி, இப்போது திரும் பவும் 100-க்கு 32½ வீதம் கிறிஸ்தவர்கள் விருத்திய டைந்திருக்கிறார்கள். இந்தக் கடைசி ஜனசங்கைக் கணக்கின்படி இந்தியாவின் முக்கிய மதங்களில் பெருக்கத்தை இங்கே காட்டுவோம்:—

ஜைனர்	100—க்கு	6 குறைவு.
இந்துக்கள்	,,	5 ஜாஸ்தி.
மகம்மதியர்	,,	6½ ,,
புத்தர்	,,	13 ,,
ஆவேச வணக்கக்காரர்	,,	20 ,,
கிறிஸ்தவர்கள்	,,	32½ ,,

(இன்னும் வரும்.)

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி)

139. கணிகைக ளோவியனின்—கனத்தை யபகரித் தார்
பணத்தை யபகரித்தார்—பலத்தை யபகரித் தார்

140. காசு பணமெல்லாம்—காற்குய்ப் பறந்தபின் னர்
தேச மதிலேபஞ்சம்—சேதமுற வந்ததுகாண்

141. சொத்து சுதந்தரத்தை—சொகுசாக வாண்டபி வன்
விற்றுப் பிழைக்கபிப்போ—விரும்பினுன் கே ளுமிங்கு

142. வீட்டை விற்பேனென்முன்—வேண்டிய பொருளேயெல்லாம்
காட்டிநான் விற்றிடுவேன்—களிப்பாக வங்கு மென்முன்

143. சும்மா யெடுத்துக்கொள்ள—தன்மார்க்கர் காத் திருந்தார்
எம்மாத்தி ரம்மிலக்கும்—எடுத்துக்கொள் ளா திருந்தார்

144. என்னசெய்வான் டம்பன்—எமாந்து காலவி லக்கு
பின்னர் கொடுத்துக்கொஞ்சம்—பிழைத்தா னையூரில்

145. விற்றூலு மேயெவரும்—விரும்பாதோர் போல் காட்டி
சுற்றிக்கொண் டார்பொருளே—துஷ்டமகன் கையினின்று

146. வாங்காது விட்டிருந்த—மற்ற பொருளேயவன் போங்காக வேயேலம்—போட்டுச்செலவழித் தான்

147. உண்ணுங் கலங்களேயும்—உடுக்குந் துணிக ளேயும்
புண்ணிய வானனிவன்—போட்டானே யேல மதில்

148. பெட்டிப் பேழைகளேயும்—பேதையவ னேலமில்
விட்டுப் பணம்பெற்றில்—லிதமாக காட்கழித் தான்

149. சம்பத்துக ளெல்லாம்போய்—தரித்திரம் வந்த பின்னர்
வம்புசெய்யப் பஞ்சமுற்றான் — வந்ததுகா ணென்னசெய்வான்

150. கையிலோர் காசுமில்லே—கடன்கொடுக்க யா ருமில்லே
பையிலே வக்கில்லே—பையன் விழிவிழித் தான்

151. தினமு மவனுடை—தின்று பிழைத்தவர்கள் தனிமையாய் விட்டார்கள்—தத்தளித்தா னே சிறுவன்

152. கண்டுங் காணுதவர்போல்—கடந்துபோ வர்க வனே
அண்டா ரொருவருமே—அகன்றுவிட்டா ரப் போது

153. பிச்சை யெடுத்தாலும்—பிடியன்னம் போடார் கள்
மெச்சா திவனேப்பலர்—விரட்டித் தரத்தவர் கள்

154. கண்டவர் சிரித்துப்பரி—காசுகள் செய்தார் கள்
பெண்களுங்கூடப்—பேதையென்றுசொல் வார்கள்

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணு கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுப்பட அரைக்கு 4 அணு; அதை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு அரைக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் செயற்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியன் ஹாஸ்பிடேஷந்த டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.

Registered No. M. 442.

சத்திய தூதன்.

JANUARY, 1916. PRICE, 1 PIE.—விலை, 1 பை. ஜனுவரிமீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

நமது சக்கரவர்த்தி.—மகா கௌரவமான ஜார்ஜ் சக்கரவர்த்தி இப்பொழுது சுவக்கியமாயிருந்தாலும் தடியூன்றித்தான் நடக்கிறார். வெகு சீக்கிரத்தில் தெய்வகிருபையால் இதவும் நிவர்த்தியாகிவிடும்.

பிரிட்டிஷ் கைதிகள். — 25,000 இங்கிலீஷ் காரர் ஜர்மனியிலே யுத்தக் கைதிகளாகப் பிடிபட்டுக் கிடக்கிறார்கள். ஜர்மன் கைதிகளின் தொகையோ ஏராளமாயிருக்கிறது; லட்சக்கணக்கா யிருக்க வேண்டும்.

கட்டழகி.—அமெரிக்காவிலே யாவரிலும் கட்டழகியென்று மதிக்கப்பட்டு, 15,000 ரூ. பரிசு பெற்றவள் ஐஸ்டில் ஜான்ஸ்டன் என்னும் ஓர் மாது. அவளோ அழகைவிட அறிவையே அதிகமாய் மதிப்பவளாம்.

ஹிந்து சர்வகலாசாலை — காசியிலே ஹிந்துக்களுக்கென்று பிரத்தியேகமான ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிக்க அனுமதி பிறந்தாயிற்று. சேர்த்த பணம் போதாமையால் இன்னும் திரவியம் சேகரித்து வருகிறார்கள். அதிலே மார்க்கதர்மமும் கற்பிக்கப்படலாம்.

பிஷப் வால்ஸர். — மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு ஒரு புது பிஷப் வால்ஸர் பிரதமகுரு கல்கத்தாவில் அபிஷேகஞ் செய்யப்பட்டார். அவர் பேர் உவால்ஸர். அவர் சென்னைக்கு விஜயஞ் செய்து, இப்பொழுது பாளையங்கோட்டை போய்ச் சேர்ந்திருக்கிறார்.

யுத்தந்நிற் பிரபுக்கள். — பார்லிமெண்டு சபையில் பிரபுக்கள் வகுப்பிலிருந்து 187 பிரபுக்கள் போர்க்களத்துக்குப் போயிருக்கிறார்கள். இவர்கள் தவிர, வேறே 29 பிரபுக்களும் 434 பிரபுப்புத்திரரும் அப்படியே போயிருக்கிறார்கள். இந்திய அரசரும் லெர் அமர் புரிகிறார்கள். இந்தியாவிலிருந்து ஒருகோடி சிப்பாயிகள் அனுப்பப்படவேண்டும்.

உயர்தரப் பெண்பாடசாலை. — கவர்ன்மெண்டார் பீ. ஏ. பரிட்சைக்கு வரிக்கத்தக்க பெண்கள் பாடசாலை ஒன்று சமுத்திரக் கரையோரத்தில் மயிலாப்பூருக்குச் சமீபத்தில் கட்டியிருக்கிறார்கள். கீழ்ப்பாக்கத்திலும் கிறிஸ்து தர்மமும் பயில்விக்கிற இதுபோன்ற ஒரு உயர்தரப் பாடசாலை நடந்தேறிவருகிறது. இவற்றுல் பெண்கள் கல்வி அதிக விர்த்தியடையுமென்பதற்குச் சந்தேகமில்லை.

பிரிட்டிஷ் கோஷ் செலவு — தினம் ஒன்றுக்கு பிரிட்டிஷ் சேனைக்கு 50 லட்சம் ரூ. செலவாகிறது. இது நாளாவர்த்தியில் அதிகரித்துக்கொண்டே வரும். இங்கிலாந்துபோன்ற இன்னும் எழு ராஜ்யங்கள் போர்புரிகிறதால், அதகளுக்கும் ஏராளமான செலவு பிடிக்கிறதே. இந்தப் பிரமாண்ட திரவிய விரயத்தால் உலகமே முழுகிப்போகும் போற் றோன்றுகிறது.

அலுமினியப் பாத்திரங்கள். — இப்பொழுது இந்தியாவிலே எங்கே பார்த்தாலும் அலுமினிய பாத்திரங்கள் விழங்கப்படுகின்றன. இதகளுக்குக் கலாய் பூசவேண்டியதில்லை. செம்பு, பித்தளைப் பாத்திரங்களுக்கு அடிக்கடி கலாய் பூசவேண்டும். அலுமினியம் என்பது பல லோகங்கள் கலந்த ஓர் பதார்த்தம். இது மிக்க லேசும், வினாவில் அனல் பிடிக்கிறதும், சுத்தமுமாயிருக்கிறது. ஒரு டன் அலுமினியத்தின் விலை 87 பவுன் அல்லது ரூ. 1,365. இத்தேசத்தில் தற்காலம் வருஷத்துக்கு 80,000 டன் அலுமினிய பாத்திரங்கள் செலவாகிறது. இது சீக்கிரத்தில் 70 லட்சத்துக்கு ஏறுமென்று உத்தேகிக்கப்படுகின்றது.

பண்டாப்பிகங்கள்.—சென்னையிலே ஒரு பண்டாப்பீஸ் காரியதரிசி முருகேச செட்டி எனபவன் வெகுகாலமாய் மேற்படிப் பண்டப் பணங்களையும் ரசீதகளையும் திருடிக்கொண்டு, 34,000 ரூ. செலவானபின்பு, திருடர் கொள்ளையிட்டு விட்டார்க ளென்று சொல்லியும், பிடிபட்டு, கோர்ட்டாரால் 5 வருஷக் கடுஞ்சிறைக் காளாளுன். டைரெக்டர்கள் மேற்படிப் பண்டக்காரியங்களேப் பயபக்தியாய்ப் பார்க்கவில்லையென வெளிப்பட்டது. இப்படி அதகை பண்டகளுக்கும், நிதிகளுக்கும் ஒரு கெடுதி நேரிகிறபடியால், சர்க்கார் இப்பண்டகளே மகா விழிப்புடன் விசாரித்து, கணக்குகளையும் சொத்துக்களையும் பரிசோதித்து வருகிறதுமன்றி, பணங்கட்டி கிறவர்களேமாத்திரம் அதிகாரஸ்தராக அமர்த்த வேண்டும்.

யுத்த வாலாவு.—யுத்தம் ஓய்கிறது காணேம்; முன்போலவே தீவிரமாய் கடக்கிறதும் தவிர, இன்னும் அதிகமாயும் பரவிவிட்டது. லட்சக் கணக்கான சைனியங்கள் தினந்தோறும் மாண்டு வருகின்றன. இங்கிலாந்தின் கல்விகற்ற உயர் குல வாலிபர் எத்தனேயோ ஆயிரமானேர் யுத்த களத்தில் வீழ்ந்திறந்து போயிருக்கிறார்கள். இப் படியே பிரான்சு, ஜர்மனி, ரஷ்யா, இத்தாலி, ஆஸ்திரியா முதலான தேசங்களிலும், வருகிற எப் பிரல்மாதம்கூடச் சமாதானம் ஏற்படுமென்கிற நம்பிக்கை யிடையாது. சமாதானப் பிரபுவாய் அவதரித்த எம்பெருமான் இயேசுகாதருக்கு ராஜ்யங்களும், பிரஜைகளும் அனேகமாய் அடங்கி அருள்புரிந்து ஒழுகும்வகையும் பூமியில் சமாதானம் கிடையாது; போர் முழங்கவும், யுத்தக் கொடூரங்களும், அபாய மரணங்களும், அக்கினிப்பிரவேசங்களும், பொருட்சேதமுமே பெருகும். ராஜ்யங்களிலே திரவியமில்லாக் குறையால் கடன் மலேபோல் குவிந்துவிடுகிறது. குடிகள் பஞ்சத்தி லகப்பட்டுத் தவிக்கிறார்கள். ஜர்மனியிலே இது விசேஷம். இதற்கெல்லாம் ஜர்மன் சக்கரவர்த்தி காரணஸ்தனுயிருந்தாலும், இதைத் தெய்வதண்டனே என்றே நிசிக்கவேண்டும். நிற்க்வ ராஜ்யங்கள் என்று சொல்லப்படுகிற இந்த யுத்தகாடுகளிலும் மற்ற ராஜ்யங்களிலும் தெய்வய மென்

ஜனுவரிமீ பஞ்சாங்கம்—

வாரம்.	ஜனுவரிமீ = மாகழி—தை. ● அமாவாசை, 5உ. ⊙ பௌர்ணமி, 20உ.						மார்கழி—வரு.					
ஞாயி ...	...	2	9	16	23	30	...	18	25	1	8	15
திங்க ...	...	3	10	17	24	31	...	19	26	2	9	16
செவ் ...	...	4	11	18	25	...	...	20	27	3	10	...
புதன் ...	...	5	12	19	26	...	...	21	28	4	11	...
வியா ...	...	6	13	20	27	...	...	22	29	5	12	...
வெள் ...	...	7	14	21	28	...	...	23	30	6	13	...
சனி ...	1	8	15	22	29	...	17	24	31	7	14	...

கிறதே யில்லை. கிறிஸ்தவ நாகரீகத்தைப் பெற்றுக்கொண்டு கிறிஸ்தவ பக்தியைக் கைவிட்டிருக்கிறார்கள். நூற்றிலே எழுபத்தைந்துபேருக்கு ஆலயந் தொழுவது சாலவும் நன்றென்கிற ஐதீகமும் அநுசாரமும் கிடையாது. குடிவெறி விசேஷம், இதனுடன் சம்பந்தப்பட்ட பற்பல துன்மார்க்கங்கட்கும் சிற்றின்பங்கட்கும் கணக்குவழக்கில்லை. இப்படிப்பட்ட துன்மார்க்கர் தண்டிக்கப்பட்டு புத்தியடையவும், சன்மார்க்கருடைய பக்தி விருத்தியடையவுமே இப்பெரும் யுத்தம் உண்டாயிருக்கிறதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. நிலத்தில் விழுந்து, புதைந்து அழுகிய விதையினின்று அலங்காரமான ஆலமரம் விளைகிறதுபோலவே இப்பொழுது இக்கொடிய யுத்தத்திலழிந்து ஒழிந்து போகிற கேட்டிலிருந்து சன்மார்க்கம் நிறைந்த புது ராஜ்யங்களும், புதுப் பக்தர்களும் உண்டாவார்கள்.

இதைவிடப் பிரமாண்டமானதும் என்றும் ஒழியாததுமான ஒரு போர் உண்டு. அது ஆதிதொடுத்து நன்மைக்கும் தீமைக்கும் பிரபஞ்சத்தில் நடக்கிற போர். உலகத்தில் நடக்கிற சகல சண்டைகளுக்கும் இதுவே காரணம். தீமை உள்ளவரையும் இந்த யுத்தம் நடந்தேவரும். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இப்போர் நடக்கின்றது. அநேகர் தீமையால் தோற்கப்பட்டுப் போகிறார்கள். நன்மைச் சொரூபியாய் உலகத்தில் அவதரித்த இயேசுகிறிஸ்துவை வாஸ்தவத்தில் அண்டினபேர் யாவரும் இப்போரில் ஜெயமடைந்து சமாதானம் அனுபவிப்பார்கள்.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதினாறாவது கதை.

வெங்காயக் கதை.

ஒரு கிராமத்தில் ஒரு சமுசாரி கொஞ்சம் செல்வாக்குள்ளவனாக ஜீவித்துவந்தான். அவனுக்கு நன்செய் புன்செய் நிலங்கள் கொஞ்சம் உண்டு. அவனும் அவன் மனைவியும் வேலையில் அதிக உற்சாகமுள்ளவர்கள். ஆனதினால் தங்கள் நிலங்களை நன்றாய்ப் பண்படுத்தி எப்பொழுதும் அதில் ஏதாவது ஒரு தானியத்தை விதைத்து அதின் பலனை எடுப்பார்கள். முக்கியமாக வெங்காயம் அதிகமாய்ப் பயிர் செய்வார்கள். இவர்கள் இப்படி சந்தோஷமாகப் பயிர்வேலை செய்து ஜீவிக்கும் சமயத்தில் திடீரென்று அந்தச் சமுசாரிக்கு ஜுரம் கண்டு அதிகக் கஷ்டப்பட்டான். அப்பொழுது அவன் அருமை மனைவி வியாகுலப்பட்டு அங்கும் இங்கும் ஓடி வைத்தியர்களைக் கூப்பிட்டு மருந்துகளைக் கொடுத்தாள். ஆனாலும் வியாதி சுகப்படாமல் 4 நாளைக்குள்ளாக சமுசாரி இறந்துபோய்விட்டான். அவன் மனைவிக்கோ இருந்த கவலையும் துக்கமும் சொல்லமுடியாது. அவள் மனக்கொதிப்பை யாராலும் அமர்த்த முடியவில்லை. அவள் இனஜனத்தார் யாவரும் வந்து அழுது துக்கம் கொண்டாடிப் பிரேதத்தை அடக்கம் செய்துவிட்டார்கள்.

அடுத்தநாள் மனைவி புருஷனை நினைத்து நினைத்து ஒப்பாரிவைத்து அழுகிறாள். அப்போது சில இனஜனத்தாரும் வந்து கழுத்தைக் கட்டிக்கொண்டழுகிறார்கள். அதோடுகூட இன்னும் ஒரு அன்னிய பெண்பிள்ளையும் விதைவெங்காயம் குவித்திருந்த மூலையிற் போய் உட்கார்ந்துகொண்டு அதிக கூச்சலாய் ஒப்பாரிவைத்து அழுகிறாள்; அவள் அழுகிறது மாத்திரமல்ல, மற்றவர்கள் கண்மறைவாகத் தன் இடதுகையினால் மூலையிற் கிடந்த வெங்காயத்தை வாரிவாரி மடியை நிரப்புகிறாள். இந்தத் திருட்டு வேலை செய்கிறதைப் புருஷனை இழந்த மனைவி பார்த்துக்கொண்டாள். ஆனாலும் அவளை திடீரென்று சண்டியாமல் தான் அழுதுகொண்டே தன் ஒப்பாரியோடே சொல்லி அழுகிறாள்: என்னம்மா பொன்னம்மா அது விதைக்குவைத்த வெங்காயம் என்று அழுதாள். அதற்குள்ளாக வெங்காயத்தை

பேர்போன நியாகரா நீர்வீழ்ச்சி.

வாரினவள் தன் ஒப்பாரியோடே சேர்த்து அழுகிறாள்: என்னம்மா பொன்னம்மா நான் எங்கெங்கே போனாலும் என் இடதுகையும் உலாவிவரும் என்று சொல்லி அழுதாள். இந்தச் சங்கதிகளை மற்றவர்களும் கண்டுகொண்டார்கள். அதற்குள்ளாக ஒரு பெண்பிள்ளை ஓடிவந்து மடியில் வைத்திருந்த வெங்காயத்தையெல்லாம் பிடுங்கிக்கொண்டு அவளுக்குக் கொஞ்சம் உதையும் கொடுத்து வெளியே துரத்திவிட்டார்கள். இதை நாம் கவனிக்கும்போது இந்த அன்னிய பெண்பிள்ளை இந்த அற்ப ஆதாயத்தைத் திருடி யெடுக்கும்படி, அழுகிறவர்களுடனே கூடச் சேர்ந்து அழுது தனக்கு ஆகவேண்டிய காரியத்தைச் செய்து முடிக்கிறாளே. இப்படித்தான் அனேகர் இக்காலத்திலும் தகாத காரியங்களைச் செய்கிறார்கள்.

கோவில் உற்சவங்களுக்கு மற்றவர்களைப்போல் ஒழுங்காய் சாமிகும்பிடப் போவதுபோல் போகிறார்கள். கும்பல் அதிகமாக விருந்தால் அதில் வெங்காயத்தைத் திருடினவளைப்போல பெண்கள் காதில் கழுத்தில் இருக்கிற நகைகளை அறுத்துக் கொள்ளுகிறார்கள்; இன்னும் அனேகர் துன்மார்க்கமான காரியங்களைச் செய்துவிடுகிறார்கள்; இன்னும் அனேகர் பொறுப்பான உத்தியோகங்களைச் செய்கிறார்கள். எஜமான் அவர்களை நம்பி அவர்கள் கையில் ஒப்புவிக்கிறார். அவர்களோ எஜமானுக்கு விரோதமாக நம்பிக்கைத்துரோகம் செய்து கெட்டுப்போகிறார்கள். இன்னும் அனேகர் நல்ல சம்பளத்தைப் பெற்று வேலைசெய்கிறார்கள்; ஆனாலும் உண்மையான வேலை செய்கிறதில்லை; கூலிக்குமார் அடிக்கிறவர்களைப்போலச் செய்கிறார்கள்.

கடவுள் நல்லார் பொல்லார் அனேகருக்குத் திரளான திரவியத்தைக் கொடுத்திருக்கிறார்; சிலர் நல்வழியில் செலவு செய்கிறார்கள், சிலர் அதைத் துன்மார்க்கமாய்ச் செலவு செய்கிறார்கள்; அவர்களும் கடவுளுக்குக் கணக்கு கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இன்னும் அனேக ஜனங்கள் தங்களை உண்டாக்கின மெய்க்கடவுளை விசுவாசியாமல் தங்கள் கைகளினால் உண்டுபண்ணிய உருவங்களைத் தெய்வமென்று நம்பி மோசம்போகிறார்கள். இது மண்குதிரையிலேறி ஆற்றைக் கடந்துபோகப்போகிறதுபோலிருக்கிறது. அறிந்தும்அதின்படி செய்யாதவன் அனேக அடிகளால் அடிக்கப்படுவான் என்று வேதம் சொல்லுகிறது. தன்னைப் பெற்ற தகப்பனைத் தள்ளிவிட்டு அன்னிய மனிதனைத் தகப்பன் என்று சொன்னால் தன்னைப் பெற்ற தகப்பனுக்கு எவ்வளவு விசனம் உண்டாகும்? மேற்கண்ட விஷயங்களுக்கு நாம் மீறி நடப்போமேயானால் சாவுவீட்டில் வந்து அழுது வெங்காயம் திருடி அடியும் உதையும் பட்டுத் துரத்தப்பட்டவளைப்போல் இருப்போம். அப்படி நாம் நடந்துகொள்ளாதபடி கர்த்தருடைய சகாயத்தைத் தேடி இந்தப் புதிய 1916-ம் வருஷத் துவக்கத்திலே நாம் குணப்பட்டவர்களும் நம்முடைய நிலைமையை உணர்ந்தவர்களுமாய்க் கடவுளுடைய திருப்பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கப் பிரயாசப்படுவோமாக.

G. D.

THE RELIGIONS OF INDIA

இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

சுதேச கிறிஸ்தவர்களைத் தனியே கணக்கிட்டால், 100-க்கு 35 வீதம் பெருகியிருக்கிறார்கள். இதிலும் சூரியானிச் சபை, ரோமான் சபை, சுதேச கிறிஸ்தவர்களைத் தவிர, புரொட்டெஸ்டான்டு சபைகளைச்சேர்ந்த சுதேச கிறிஸ்தவர்களை எடுத்துக் கணக்கிட்டால் இவர்கள் தொகை 100-க்கு 38 வீதம் விருத்தியடைந்திருக்கிறதெனத் தெரியவரும். கடந்த 40 வருஷங்களில் சுதேச கிறிஸ்தவர்கள் தொகை 100-க்கு 288 ஆக, அதாவது ஒன்று மூன்றாகப் பெருகியிருக்கிறது.

மேலும் இவ்விருத்தி முக்கியமாய்க் காணப்பட்டிருப்பது கிறிஸ்தவர்கள் தற்காலம் பெருத்திருக்கும் சென்னை, திருவாங்கூர் முதலிய தக்ஷணபாகங்களில் அல்ல, உத்தர இராஜதானிகளிலேயேயெனத் தெரிவதால், தேவாசீர்வாதத்தினால், அருள்நாதர் திருநாமம் புதிது புதிதான ஜாதிகளுக்குள்ளும், நாடுகளிலேயும் வியாபித்து வருகிறதெனக் காண்கிறோம். சில முக்கிய பிரிவுகளில் 100-க்கு என்ன வீதாசாரப்படி பெருகியிருக்கிறதென்று காட்டுவோம்.

பம்பாய் இராஜதானி	100-க்கு	11	வீதம்	ஜாஸ்தி
சென்னை இராஜதானி	,,	16	,,	,,
வங்காளம்	,,	28	,,	,,
பர்மா	,,	42	,,	,,
கீழ்வங்காளம்	,,	61	,,	,,
ஐக்கிய மாகாணங்கள்	,,	75	,,	,,
நிஜாம் ராஜ்யம்	,,	136	,,	,,
மத்தியமாகாணங்கள்	,,	169	,,	,,
பஞ்சாப் மாகாணம்	,,	200	,,	,,

தேசத்தின் பல பாகங்களிலும் தாழ்ந்த வகுப்பாரான ஜனங்களுக்குள் பலத்த அசைவு காணப்படுகிறது. திருவாங்கூர், சோட்டா நாகப்பூர், தெலுங்குநாடு, ஐக்கிய மாகாணங்கள் இவற்றில் ஆயிரக்கணக்கானவர்கள் கடந்த பத்து வருஷக்காலத்தில் கிறிஸ்தவர்களாகி யிருக்கிறார்கள். இன்னும் ஏராளமானவர்கள் வராமலிருப்பதற்கு ஓர் முக்கியகாரணம் பணக்குறைவே. சுதேச ஊழியரைப் பயிற்றுவிக்கவும், ஆதரிக்கவும் பணம் தேவை.

தாழ்ந்த ஜாதிகளிலிருந்து கிறிஸ்துவின் மாட்சிமையான ஒளியினிடம் கொண்டுவரப்பட்டிருக்கும் ஜனங்களிடத்தில் கிறிஸ்துமார்க்கம் செய்திருக்கும் வேலை அதிசயிக்கப்படத்தக்கதே. ஒருவர் சொல்லியிருக்கிறபடி இந்தக் கிறிஸ்தவர்கள் உலகத்துக்குத் திருஷ்டாந்தமாயிருக்கிறார்கள். இவ்விரண்டு சமயங்களுக்குமுள்ள பேதத்தை நன்கு விளக்குகிறவர்கள் இவர்களே. இந்துமார்க்கத்தினால் இவர்களுக்குக் கிடைத்த பலன் அடிமைத்தனமும், அவமானமும், இழிவுமே. கிறிஸ்துமார்க்கத்தினாலேயோ, சுயாதீனமும், நாகரீகமும், மேன்மையும் உண்டாயிருக்கிறது. மரத்தின் தன்மையைக் கனியினால் அறியலாமல்லவோ? இவ்விரண்டு மார்க்கங்களின் தாரதம்மியத்தைக் கண்டுகொள்வதற்கு இத்திருஷ்டாந்தம் போதாதா? இத்தேசத்தவர்கள் மனதிலும் இது எவ்வளவுகாலம் படாமற்போகும்! ஜாதிப்பிசாசினால் பீடிக்கப்பட்டிருக்கும் இத்தேசத்தில் கிறிஸ்துமார்க்கத்தின் சிரேஷ்ட தன்மை எவ்வாறு விளங்கக்கூடும்? கவைக்குதவாதவர்களென்று இந்துமார்க்கம் தள்ளினவர்களைக் கிறிஸ்துமார்க்கம் சேர்த்து அவர்களைப் பிராமணருக்கும், படித்தவர்கட்கும் சமமாக்கிவிடுகிறதினால் அல்லவோ?

3. மேலும் சுதேச சபை சுய ஆதரவு, சுய ஆளுகை முதலிய விஷயங்களில் நாளடைவில் விருத்தியடைவது சந்தோஷமானகாரியம். தென் இந்தியாவிலே இத்தேர்ச்சி விசேஷமாய்க் காணப்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் சர்ச்சு மிஷனைச்சேர்ந்த சபைகள் தங்களை மேல்பார்க்கும் நாற்பது குருமார் சம்பளத்திற்கு மூன்றத்தனை பணம் நன்கொடை அளிக்கின்றன. 1906-ம் வருஷ ரிப்போர்ட்டை பார்க்குங்கால் 1875-ம் வருஷத்திற்கும் 1905-ம் வருஷத்திற்கு மிடையிலுள்ள 30 வருஷங்களில் சபையின் தொகையும் கிறிஸ்தவர்களிருக்கும் கிராமங்களும் அரைவாசியும், ஞானஸ்நானம் பெற்றவர்கள் தொகை முக்கால்வாசியும் பெருகியிருக்க, இராப்போஜனக்காரர் தொகை இருமடங்கும், சபைகாணிக்கை மும்மடங்கும் பெருகியிருக்கிறதாகக் கண்டிருக்கிறது. 1892-ல் சீமை சி. எம். எஸ். சங்கக் கமிற்றியிலிருந்து பொது கிராண்ட்டுக்கு ரூ. 26,000 வந்திருக்க, 1910-ல் வருஷத்தில் ரூபா 193 மட்டும் வந்தது. இந்த மிஷனில் மாத்திரமல்ல, மற்றும் பல மிஷன்களிலும் சபையாரை சுய ஆளுகையில் பழக்குவதற்காக சுதேச ஆலோசனைசங்கம் முதலிய ஏற்பாடும் சித்தியாய் நடைபெற்று வருகின்றன. மதுரை அமெரிக்கன் மிஷனில் இவ்வித ஏற்பாடு இரண்டொரு வருஷங்களுக்குமுன் ஏற்பட்டு, காரியாதிகள் செவ்வையாய் நடைபெற்றுவருகிறதாகத் தோன்றுகிறது.

(இன்னும் வரும்.)

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

155. வயிறுப் பசித்திடுவோன்—வாசல்களில் நின்றிடுவோன்
மயக்க மடைந்துமனம்—வாடிப்பெரு மூச்சிடுவான்
156. வயிற்றை நிரப்பவவன்—வழியென்ன செய்தான்கேள்
தியக்க முடன்வேலை—தேடினா னங்குமிங்கும்
157. வேலைக் கொடுப்பவர்கள் — வெவ்வேறு போக்குச்சொல்லி
பாலனஞ் செய்யாமல்—பறக்கடித்து விட்டார்கள்
158. போடாக் குடிகாரா—போதங்கெட்ட மானிடனே
மூடனுக்கு வேலைதர—முடியாது என்பார்சிலர்
159. வேசிகளை நேசித்து—வீண்காலம் போக்குகிற
நீசருக்கு வேலைதர—நேராது என்பார்சிலர்
160. தந்தைசொல்லைக் கேளாமல்—தாரணியிலேயலையும்
கந்தலே, வேலையில்லை—கடுகேப்போ வென்பார்சிலர்
161. என்று பலவசைகள் — எத்தனையோ நூறுஜனம்
நன்று நினைக்காது—நவின்றன ரேசிலரோ
162. தந்தைசொல்லைக் கேளாதான் —தாரணியில் வேலைகொள்ளும்
எங்கள்சொல்லைக் கேட்பானோ—ஏகிவிடு என்பார்சிலர்
163. ஊரெங்கு மிவனுக்கு—உற்றதுணை யாருமில்லை
பாரிலிவ னென்னசெய்வான்—பாருங்க ளிங்கொருவன்
164. தானம் தருமம்தயை—தாட்சணிய முள்ளகுடி
யானவனை யண்டியவன்—அழுது யிறைஞ்சிடுவான்
165. பசிக்குதையா வெனக்கு—படையுங்க ளென்னமென்பான்
விசனப் படுமெனக்கு—வேலையொன்று தாருமென்றான்
166. வேலையேதுந் தாருமையா—வெகுசுருக் காயதனைக்
காலமெல்லாம் செய்வேனென்—கசிவு உதிருயட்டும்
167. காலினா விட்டதனை — கையாலே செய்திடுவேன்
சாலவுந் தங்களுக்குச் — சந்தோஷங் காட்டிடுவேன்
168. என்ற வுடனவனும்—இரங்கியே டம்பனுக்கு
நன்று உரைத்ததென்ன—நயந்துநான் சொல்லிடுவேன்
169. பொருளெலாந் தோற்றுவிட்டிப் — போது புலம்புகிறாய்
திருடக்கூடா தென்றோ—தேடுகிறாய் வேலை ஒன்றை
170. நன்றுதா னப்பா—நானென்ன வேலைதந்துன்
குன்றின உள்ளத்தின்—குறைதீர்க்கப் போகின்றேன்

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணுவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணு கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணுவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

திருவருஷக் ரகயொப்பம் முன்னதாகவே அனுபவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு மாதத்துக்கு 4 அணு; அரை அணு தபாற்செலவுட்பட அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு மாதத்துக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் செய்தித் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல ஹாஸ்பிடல் டிராக்ட் டிபோ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1915.

Registered No. M. 442.



சத்திய தூதன்.

FEBRUARY, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. பேப்ருவரிமீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

சிறந்த பரோபகாரி.—கார்னகி என்ற பேர் பெற்ற ஜனோபகாரி ஒருவர் பெல்ஜியத்திலே ஆபத்திலிருக்கிறவர்கள் ஒவ்வொருத்தனுக்கும் 30 ரூ. வீழுக்காடாக 20 லட்சம் ரூ. அளித்திருக்கிறார். மது அரசர்களும் அனேகமாய் தர்மஞ்செய்து வருகிறார்கள்.

வயோதிப தரு.—சென்றமீ ஒரு கிறிஸ்தவ வயோதிப குரு இறந்தபோனர். அவருக்கு வயது 97. இது வெகுவும் அசாதாரணமான ஆயுசு. இவர் பேர் மோசே உவில்லியம்ஸ். தெலுங்கர்; கடப்பை ஜில்லா தாத்பத்திரி என்னும் ஊரிலே வெகுகால மாக வசித்து தெய்வ ஊழியஞ்செய்து, பரோபகாரியாய் விளங்கிவந்தவர். பாலியத்தில் சன்மார்க்கம் வயோதிபத்தில் சவுக்கியமாய் முடியும்.

நேரப்புக் குச்சீகள்.—இதுகள் இங்கிலாந்தில், 1827—வருஷத்தில் ஒரு சொற்ப வைத்தியனுல் கண்டு பிடிக்கப்பட்டன. 50 குச்சிகொண்ட ஒரு பெட்டி அணு ரூபாய்க்கு விற்றது. இப்பொழுது உலகமெல்லாம் பரவி, சொற்பவிலைக்கு விற்கப்படுகிறது. அறுபது வருஷத்துக்கு முன்பு சென்னிலேயே சகல ஜனங்களும் சக்கிமுக்கிக் கல் வைத்து செம்புஞ்சியிலே நெருப்பு பெரு கஷ்டமாய் உண்டாக்குவார்கள்.

இந்திய கிறிஸ்தவ மஹாசபை.—இந்த மஹாசபை சென்ற வருஷத்தில் அலகாபாத்தில் கூடினது. கிறிஸ்தவர்கள் யாவருக்கும் (இத்தேசத்தில் 40 லட்சம் கிறிஸ்தவர்களுண்டு) பொதுவான ஓர் பத்திரிகையும், பொதுவான ஓர் திருச்சபையும் உண்டாயிருக்க வேண்டுமென்றும், கிறிஸ்தவர்கள் கல்விமுயற்சியோடு கூடக் கைத்தொழில்களும் கற்றுப் பிழைத்தால்தான் வீர்த்தியடைவார்களென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யுத்தத்தினுற்தூ நிரவியம்.—யுத்த செலவுக்காக வரானமான நிரவியங்கள் இத்தேசத்திலும் சேர்க்கப்பட்டு வருகின்றன. விசேஷமாய் நமது கவர்னரவர்களும் அவர் பத்தினியார் லேடி பெண்டல்லண்டும் இவ்விஷயத்தில் வெகு முயற்சி எடுத்துவருகிறார்கள். கவர்ன்மெண்ட் ஹௌஸிலே வைத்த விளேத காட்சியாபாரத்தில்மட்டும் 28,000 ரூ. சேகரமாயிற்று. ஆஸ்பத்திரிக் கப்பலுக்குச் செலவுமாத்திரம் மாதம் அனைலட்சம்போல் வேண்டியிருக்கிறது. இவ்வருஷம் இதற்காகப் பீப்பில்ஸ்பார்க்கிலே ஒரு விளேத காட்சி ஏற்படுத்தினார்கள். அது டிசம்பர்மீ 24உ தொடங்கிச் சென்ற ஜனுவரிமீ 16உமட்டும் நடக்கப்பெற்றது. லட்சா லட்சமான பேர்கள் உள் ளூரா வெளியூர்களிலிருந்து வந்து ஆளுக்குக் கால் ரூ. கொடுத்து உள்ளேபோய் சகல காட்சிகளையும் தீரக் கண்டு மனமகிழ்ச்சியும், அறிவு வுணர்ச்சியும், அனுபவ வீர்த்தியுமடைந்தார்கள். இந்தக் காட்சியினுலே எவ்வளவோ பணங் கிடைத்திருக்கும். அத்தனையும் யுத்தச் செலவுக்கே. இந்திய போர்வீரருக்குக் குளிரைத் தாங்கத்தக்க கம்பளி உடைகள், குல்லாக்கள் முதலியன செய்யப்பட்டும் அனுப்பப்பட்டும் வருகின்றன.

யுத்த வாலாறு.—ஜர்மனி ஆஸ்திரியாவின் தர்க்கதி இப்பொழுதுதான் புறத்தியாருக்குக் கொஞ்சம் தெரியவருகிறது. வியென்னுவிலே கசாயக் காரர் (இறைச்சி விற்போர்) நாய்க்கறி விற்க ஆரம்பித்துவிட்டார்கள். பர்லின் நகரத்தில் 50,000 பேர் கலகஞ்செய்து, பட்டினி கிடக்கிறார்களென்ற முறையிட்டும், குண்டு சுடப்பெற்றார்கள். ஜர்மனியிலே ஏற்றுமதி இறக்குமதி இல்லாதவண்ணம், இங்கிலீஷ் கப்பல்கள் அதன் சமுத்திரக் கரையைக் காவல் காத்துக்கொண்டிருக்கின்றன. வடக்கே இருந்த அவர்கள் சப்மெரின்கள் (கடல் நீழ்ச் செல்லும் படகுகள்) எல்லாம் அழிக்கப்பட்டன; ஆனுல் இன்னுஞ் சில மத்தியதரைக் கடலில் ஒளித்திருக்கின்றன. இவற்றுள் ஒன்று பி and ஒ மெய்ல் ஸ்டீமர் "பெர்ஷியா"வைச் சுட்டு மூழ்குவித்தது. இந்தியரும் ஐரோப்பியருமான ஏராளமானபேர் அநியாயமாய் மாண்டார்கள். இது புகலிய அக்கிரமம். இந்தியாவுக்கு வரவேண்டிய 20,000 மெய்ல் பைகள் அக்கப்பலுடன் கடலிலிறக்கிவிட்டன. இதுநிற்க, தெய்வதண்டனை ஜர்மனியின்பேரில் வருகிறதாகக் காண்கிறது. சக்கரவர்த்திக்கு அபாயமான வியாதி கண்டிருக்கிறது; தொண்டைப்புண் என்கிறார்கள். இதனுல் அவர் தகப்பனர் மரணத்துக் கினையானர். கைசரின் பந்துக்கள் யாவரும் பர்லின் நகரத்திற்குப் போயிருக்கிறார்கள். கிரீஸ் ராணியாகிய அவர் தங்கையும் அவ்விடம் சென்றிருக்கிறள். இதுநிற்க, ஜர்மனியின் 1½ கோடி சேனை இப்பொழுது முக்காற் கோடியாகச் சுருங்கிவிட்டது. தேசத்திலே முக்கியமான தொழில்களை யெல்லாம் பெண்களே செய்ய நேரிட்டிருக்கிறது. இங்கிலாந்திலேயிருந்த 32 ஆயிரம் ஜர்மன்களில் 26 ஆயிரம் பேர் ரையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கிலாந்திலும் சேனையை அதிகரிக்கப் பிரயத்தனஞ்செய்து வருகிறார்கள். 18, 41—இவ்வயதுக் குட்பட்ட கலியாணஞ்செய்யாத தனிப்புருஷர், பிள்ளைகளில்லாத தாமிழந்தவர்கள் யாவரும் அவசியம் போர்வீரராகவேண்டுமென்று பார்லிமெந்திலே சட்டம் பிறந்தாயிற்று. இப்பொழுது மூன்று முக்கியமான ராஜவல்தானங்கள் உண்டு. மேற்கே, பெல்ஜியம் எல்லை; கிழக்கே ஜர்மன் எல்லை; தெற்கே கிரீஸ் எல்லை. இந்த எல்லையில் தான் சரியான சண்டை நடக்கும்போலிருக்கிறது. மூன்றும் வருஷத்தில், அதாவது, இந்த 1916—ம் வருஷத்திற்குள்ளே இந்தப் பெரும்போர் முடிந்து, ஜர்மன் கர்வமடங்கி, உலகத்திலே சமாதானம் நிலை பெறும். தனித்தனிப் புருஷராலும், ஜாதிஜனமாயினும், பேராசையும் கர்வமும் பேரழிவாக முடியவேண்டும். இது கடவுள் விதித்த தர்மம். அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.

பேப்ருவரிமீ பஞ்சாங்கம்—

வாரம்.	பேப்ருவரிமீ = தை—மாசி. ● அமாவாசை, 3உ. ⊙ பௌர்ணமி, 18உ.					தை—மாசி.			
ஞாயி...	...	6	13	20	27	...	24	1	8	15
திங்க...	...	7	14	21	28	...	25	2	9	16
செவ்...	1	8	15	22	29	19	26	3	10	17
புதன்...	2	9	16	23	...	20	27	4	11	...
வியா...	3	10	17	24	...	21	28	5	12	...
வெள்...	4	11	18	25	...	22	29	6	13	...
சனி ...	5	12	19	26	...	23	30	7	14	...

Vol. XXIX. No. 4.

புஸ்தகம் உகூ. நே. ச.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதினேழாவது கதை.

தன் புருஷன் சாகும்போது தானும் உடனே சாவேனென்று ஒரு பெண் தன் புருஷனுக்குச் சொல்லிக்கொண்டிருந்த கதை.

ஒரு மனிதன் ஒரு நல்ல பெண்ணைக் கலியாணம் செய்தான். அவர்கள் தங்கள் ஜீவியத்தில் அதிக ஐக்கியமாக ஜீவித்துவந்தார்கள். ஆனால் பெண்சாதி புருஷனைப்பார்த்து எப்போதும் ஒரு வார்த்தை சொல்வாள்; அதாவது, என் புருஷனே, நாம் எப்போதும் உலகத்தில் ஜீவித்திருக்க மாட்டோம், மரணம் வந்து நம்மை பிரித்துவிடும்; ஆனால் நீர் முந்திச் சாகிறதாகயிருந்தால் அன்றையத்தினமே நானும் என் உயிரை மாய்த்துக்கொள்ளுவேன் என்று அடிக்கடி தன் புருஷனிடத்தில் சொல்லிவந்தாள். இதைப் புருஷன் தன் மனதில் யோசனை செய்து இவள் இப்படி எப்பொழுதும் சொல்லவேண்டியது என்ன, நம்முடையபேரில் இருக்கப்பட்ட அன்பினால்தான் இப்படிச் சொல்லுகிறாள். ஆனாலும் இவளை நாம் சோதனை செய்ய வேணும்; அதாவது இவள் சொல்வது பொய்யா? மெய்யாவென்று கண்டுபிடிக்க வேணுமென்று தன் மனதில் எண்ணிக்கொண்டு, ஒரு நல்ல வைத்தியனிடம் போய், தன் பெண்சாதி சொல்லுகிற காரியத்தை அவனுக்கு விவரமாய்ச் சொல்லி, தான் வியாதியாய் இருக்கிறதாகவும் வைத்தியர் வந்து சில நாள் மருந்து கொடுக்கிறதாகவும் அதிக கஷ்டமாக இருக்கிறதாகவும் இரவு 10-மணிக்கு மரித்துவிட்டதாகவும் துணி முகத்தில் போட்டு மூடிவிட்டுப் போகவும் செய்யும்படி சொல்லி வைத்துவிட்டான்.

அப்படியே சிலநாளைக்குப் பிற்பாடு தான் அதிக நோவாக இருக்கிறதாக வைத்தியருக்கு ஆளனுப்பினார்கள். வைத்தியரும் வந்து பார்த்து ஒரு மருந்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். இப்படி 4 நாளாக வைத்தியர் வந்து மருந்து கொடுத்தார்; கடைசியாய் அன்றையத்தினம் வியாதி அதிக மும்முரமாய் இருக்கிறதென்றும், நாளை இரவு தப்பினால் பிழைத்துக்கொள்வார். ஆகையினால் கண்டிப்பாய்ப் பாருங்கள் என்று சொல்லிப்போய், அடுத்தநாள் வைத்தியர் வந்து அங்கே உட்கார்ந்துகொண்டு இன்று இரவு முழுதும் நான் இங்கே தான் இருப்பேன்; அல்லது நீங்கள் அதிகமாய்ப் பயப்படுவீர்கள் என்று சொல்லி வியாதிக்காரனிடத்திலே யிருந்து மருந்து கொடுத்துக்கொண்டே இருந்தார். அவனுக்கு இரவு எட்டு மணிக்கு இழுப்பு உண்டாச்சுது; பத்துமணிக்கு இழுப்பு நின்றது; உயிரும் போய்விட்டது என்று வைத்தியர் முகத்தில் துணிபோட்டுவிட்டு இறந்துபோனவனுடைய மனைவிக்கும் நல்ல ஆறுதல் சொன்னான். நானும் கூடிய மட்டும் பார்த்தேன் அது உனக்குக் கொடுத்து வைக்கவில்லை. நீ கவலைப்படாதேயென்று ஆறுதல் சொல்லிவிட்டு தான் வீட்டுக்குப் போய்விட்டான்.

வீட்டில் இருந்தவர்கள் எல்லாரும் கொஞ்சம் நேரம் பிரேதத்தண்டை யிருந்து அழுதுவிட்டு வெளியே போய்விட்டார்கள். தன் பெண்சாதிமாத்திரம் பிரேதத்தண்டை இருந்து அழுதுகொண்டு இருந்தாள். அப்போது அவளுக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று; அதாவது இந்தப் பிரேதத்தைக் காலையில் அடக்கம் செய்தபிறகு சொந்தக்காரர் வந்து இருக்கிற பணம் நகை சொத்துகள் எல்லாம் எடுத்துக்கொள்வார்கள். அப்போது நமக்கு கொடுப்பார்களோ? என்னமோ தெரியுதில்லை; ஆகையினால் இப்போ எல்லாரும் வெளியே போய்விட்டார்கள். இதுதான் நல்ல சமயம் என்று யோசித்து கட்டு பெட்டியில் இருக்கிற பணத்தையும் நகைகளையும் எடுத்து ஒளித்து வைத்துக்கொள்ளலாம் என்று நினைத்து, தன் புருஷன் செத்துக்கிடக்கிற கட்டிலில் ஏறி அவனுக்குமேல் தூக்கியிருந்த கட்டுபெட்டியை அவிழ்க்கப் போனாள். அப்போது 2 இஞ்சுதூரம் எட்டவில்லை. உடனே அங்கும் இங்கும் பார்த்தாள் யாரும் இல்லை. செத்துக்கிடக்கிற சவத்தின்மேல் ஏறி நின்றுகொண்டு பெட்டியை அவிழ்த்துவிட்டாள். உடனே மாய்மாலம்பண்ணி செத்துக்கிடந்த புருஷன் எழுந்து தன் பெண்சாதியின் கையைப் பிடித்துக்கொண்டான். இதுதானா உன் அன்பு, மாய்மால அன்பை எனக்குக் காட்டி சொல்லிவந்தாய் அல்லவா, என்னோடு சாவேன் என்று சொல்லி சொல்லி இப்போது செத்துக்கிடக்கிற என்னை மிதித்துக்கொண்டு அந்தப் பணப்பெட்டியை அவிழ்க்கிறாயே யென்று சொல்லி, அவள் இனிமேல் வீண் வார்த்தைகள் பேசாதபடி வாயை மூடிவிட்டான்.

G. D.

லண்டன் லாக்காலேஜ் போஜன அறை.

THE RELIGIONS OF INDIA

இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

4. இதைப்பார்க்கிலும் சந்தோஷகாமான விஷயம் இன்னொன்றுண்டு. அதாவது சுதேச சபையில் காணப்படும் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சையே. பல மிஷன்கள் சம்பந்தமாய் சிறு சுவிசேஷ பிரபல்ய சங்கங்கள் ஸ்தாபகமாயிருக்கின்றன. இவை சுதேசிகளுடைய பொருள் சகாயத்தினால் பிரசங்கிமாரை ஆதரித்து தங்கள் மேற்பார்வைக்குட்பட்ட ஏதாவதோர் இடத்தில் சுவிசேஷவேலை நடப்பிக்கின்றன. மதுரை அமெரிக்கன் மிஷனைச்சேர்ந்த சுதேச சுவிசேஷ பிரபல்ய சங்கமானது மதுரை ஜில்லாவின் வடபாகத்திலுள்ள கொங்கைநாட்டிற்கு சில ஊழியரை அனுப்பி, அவ்விடத்தில் சுவிசேஷ ஊழியம் நடத்திவருகிறது. அங்கு கொஞ்சம் சபையும் சேர்ந்திருக்கிறது. தெலுங்கு பாப்திஸ்து மிஷனைச்சேர்ந்த சுதேச மிஷனெரி சங்கமானது தென் ஆப்பிரிக்காவில் கூலிவேலை செய்யப்போயிருக்கும் தெலுங்கருக்கு உபதேசிக்க ஒரு பிரசங்கியாரை அனுப்பியிருக்கிறது. யாழ்ப்பாணத்து மாணவர் மிஷனெரி சங்கம் மதுரை ஜில்லா கீழ்பாகத்திலுள்ள தொண்டிநாட்டில் வித்தியாவேலையும் பிரசங்கவேலையும் செய்துவருகிறது. இன்னும் இவ்வாறே ஊழியம் நடப்பிக்கும் சங்கங்கள் பலவுள.

இவை யாவற்றிலும் பெரிது "திருநெல்வேலி இந்திய மிஷனெரி சங்கம்." இச்சங்கம் 1903-ல் பாளையங்கோட்டையில் ஸ்தாபகமானது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இங்கிலாந்து சபை சுதேச கிறிஸ்தவர்கள் யாவரும் இவ்வூழியத்திற்குப் பொருளுதவி புரிந்து நடத்திவருகிறார்கள். இச்சங்கத்தார் சுவிசேஷ ஊழியம் நடப்பித்துவரும் இடம் தெலுங்குதேசத்தில் நிஜாம் ராஜ்யம் உவாரங்கல் ஜில்லா மானுக்கோட்டைத் தாலுகா. இச்சங்கத்தின் சம்பந்தமாய் ஐந்து ஊழியர் அவ்விடத்திற்கு மிஷனெரிமாராக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவர்களனைவரும் அங்கு போனபின் தெலுங்கு கற்றிருக்கிறார்கள். இவர்களில் இருவர் குருப்பட்டம் பெற்றவர்கள். கடந்த ஆறு வருஷப் பணிவிடையின் பலனாக முப்பத்தேழு கிராமங்களில் 1300-க்கு மேலான சபையை தேவன் அநுக்ரகஞ் செய்திருக்கிறார். இச்சங்கத்திற்கு 1910-ல் வரவு ரூபா 12,097. போர்டிங் ஆண் பாடசாலை, பெண் பாடசாலை, உபதேசிமார் பயிற்சிசாலை, தச்சுவேலை பயிற்றுவிக்கும் பாடசாலை முதலியவை இம்மிஷன் ஆதரவுபெற்று நடந்துவருகிறது. ஆறு வருஷங்களுக்குமுன் ரக்ஷாபெருமானின் நாமம்முதலாய் அறிவிக்கப்பட்டிராத இப்பாகத்தில் இப்போது 5 தமிழ் மிஷனெரிமாரும், 22 தெலுங்கு ஊழியரும், 1300 சபையாருமிருப்பது தேவகிருபையே.

மேற்காட்டிய சங்கங்களுக்குச் சற்று வித்தியாசமான பெரிய சங்கமொன்றும் சுதேசிகளால் நடைபெற்று வருகிறது. இதற்கு **இந்திய நாஷனல் மிஷனெரி சங்கம்** என்று பேர். இது 1806-ம் வருஷத்தில் ஸ்தாபனம் பெற்றது. இச்சங்கம் ஒரே மிஷனை அல்லது சபைப்பிரிவைச் சேர்ந்திராமல், சகல சபைப்பிரிவோடும் கலந்து வேலை நடப்பிக்கும் நோக்கமாய் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின் சகல மாகாணங்களிலும் இதற்குக் கிளைச்சங்கங்களுண்டு. பஞ்சாப் இராஜதானியிலுள்ள மாண்ட்காமரி ஜில்லாவில் இச்சங்கத்தின் முதல் மிஷன் வேலை செய்கிறது. இது இங்கிலாந்து திருச்சபை சம்பந்தமானது. மேலும் இச்சங்கத்தார் பிரஸ்பிற்றீரியன் சபை சம்பந்தமாக வட இந்தியாவில் நக்கூர் தாலுகாவிலும், தென் இந்தியா ஐக்கிய சபை சம்பந்தமாக சேலம் ஜில்லா ஓமலூரிலும், திருவாங்கூர் சீர்திருத்த சூரியானிச்சபைச் சம்பந்தமாக வட கன்னடத்திலும் ஊழியம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இச்சங்கங்களுக்காக தேவனுக்கே துதி. இந்துதேச சுதேச சபையில் ஞான ஜீவனிருக்கிறதென்பதற்கு இவை அத்தாட்சி. கடந்த நூறு வருஷக்காலமாய் சீர்மை தேசத்திலிருந்து வந்த மிஷனெரிமாரின் ஊழியம் வியர்த்தமாய்ப் போகவில்லை என்பதற்கு இம்மிஷனெரி சங்கங்களே போந்த ரூபகாரம். கிறிஸ்துமார்க்கம் வெள்ளைக்காரர் மார்க்கம் என்ற வசைச்சொல்லுக்கு இதுவே தகுந்த கண்டனம். இச்சங்கங்கள் தேவாசீர்வாதம்பெற்று நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய் வளர்ந்தோங்கி இன்னும் சவிஸ்தாரமான வேலைசெய்ய கடவுள் அநுக்கிரகிப்பாராக!

தமிழ்நாட்டாருக்கு இவ்விஷயத்தில் விசேஷித்த கடமையுமுண்டு. சுத்த சுவிசேஷம் முதல் முதல் தமிழ் நாட்டிற்கே வந்தது. வேதாகமம் முதல்முதல் தமிழ்பாஷையிலேயே திருப்பப்பட்டது. பூர்வ சூரியானிச்சபை ஒன்று நீங்கலாக, சுதேச கிறிஸ்தவர்கள் ஜாஸ்தியாயிருப்பது தமிழ்நாட்டிலேயே. காரியம் இவ்வாறிருக்க, தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த பொறுப்பு உண்டல்லவா? தெலுங்குநாடு, கன்னடம் இவைகளில் சுவிசேஷம் பிரபலமாக்குவதற்கு தமிழ்நாட்டாரே உத்தரவாதிகளல்லவா? அதிக சலாக்கியம் அதிக உத்தரவாதம். "நான் உன்னை ஆசீர்வதிப்பேன், நீ ஆசீர்வாதமாயிரு!" என்பது தேவவாக்கு.

இன்னும் நடக்கவேண்டிய வேலை

தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ராஜ்யம்விருத்தியடையத்தக்கதாக ஜீவகாலமெல்லாம் பிரயத்தனம்செய்து, பொருளையும் உயிரையும் செலவிட்ட செஸில்ரோட்ஸ் என்ற பிரபு மரணப்படுக்கையிலிருக்கும்போது, "நடந்திருப்பது எவ்வளவு கொஞ்சம்! **நடக்கவேண்டியது எவ்வளவு அதிகம்!**" என்று புலம்பினாராம். இந்துதேசத்தில் சுவிசேஷ ராஜ்யத்தின் விருத்தியை நினைத்தும் நாம் அவ்வாறே புலம்பவேண்டியதிருக்கிறது. இவ்வளவுகாலமும் நடந்திருக்கும் வேலை எவ்வளவு கொஞ்சம்! இன்னும் நடக்கவேண்டிய வேலை எவ்வளவு அதிகம்!

இந்துதேசத்தின் ஜனத்தொகையில் நூற்றுக்கொருவன் கிறிஸ்தவன் என்று சொன்னோமே. நூற்றுக்கொருவன் கிறிஸ்தவன் என்பது பெரிய காரியந்தான். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர் இன்னும் கிறிஸ்துசபைக்கு வெளியே இருக்கிறார்களென்பதையும் மறந்துபோகாதிருப்போமாக. இந்தியாவின் ஜனத்தொகையை நிமிஷத்துக்கு இருபதுபேர் வீதம் இராப்பகலாய் எண்ணினால், முப்பது வருஷம் செல்லும் என்று பார்த்தோம். கிறிஸ்தவர்களெல்லாரையும் எண்ணுவதற்கு நாலுமாசம் பதினைந்துநாள் போதும்!

இவ்வத்தியாயத்தில் காட்டியிருக்கும் இந்துதேச படத்தைப் பார்த்தால், ஒவ்வோர் மாகாணத்திலும் ஜனத்தொகை இவ்வளவென்றும், கிறிஸ்தவர்கள் இத்தனைபேர் என்றும், ஜனத்தொகையில் கிறிஸ்தவர்கள் வீதாசாரம் பதினாயிரத்திற்கு இத்தனை என்றும் குறித்திருக்கிறது. பிரிட்டிஷ் நேர் அதிகாரத்துக்குட்பட்ட மாகாணங்களில் சென்னை, பர்மா, பம்பாய் தவிர மற்றவைகளில் வீதாசாரம் கொஞ்சம் என்று கவனிக்கலாம். சிற்றரசு நாடுகளிலோ, திருவாங்கூர்தவிர, மற்றவைகளின் சீர் நிர்ப்பந்தமே. குவாலியர்நாட்டில் முப்பது லக்ஷம் ஜனங்களுக்கு 635 பேர்மாத்திரம் கிறிஸ்தவர்கள். இன்னும் இருபது லக்ஷம் ஜனங்கள் எப்போதாவது கிறிஸ்துவின் சுவிசேஷ செய்தியைக் கேட்டதில்லை என்று அங்கிருக்கும் ஓர் மிஷனெரி எழுதுகிறார். ராஜபுதனத்தில் ஜைசல்மர், பண்டி, தாங்க், ஜலவார், பன்ஸ்வாரா, பர்த்தாப்கார், டங்கர்பூர், டோல்பூர், காராலி முதலிய பிரிவுகளிலும் ஒரு கிறிஸ்தவனுமில்லை.

(இன்னும் வரும்.)

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

171. மேலான யாதுமொரு—வேலையொன்றுமென்னிடமோர்
காலமு மில்லையப்பா—கட்டழகா சொல்லிடக்கேன்

172. பன்றிக ளாறேழெட்டு—பாரி லெனக்குண்டு
சென்றதனை மேய்த்தால்—சேதமற வேபிழைப்பாய்

173. வழிவே றில்லையப்பா—மண்மீதி லுன்தனக்கு
இழிவான வேலையென்றால் — இப்போதே சொல்லப்பா

174. என்றுகுடி யானவனும்—இரங்கியே சொன்னவுடன்
வென்றேனெ னநினைத்து—மேன்மகனுமென்னசொன்னான்

175. ஐயா எஜமானே—அண்டினேன் யாவரையும்
கைவிடா தாதரிக்கும்—காருண்ய ராஜனே

176. நன்றியுட னுந்தயவை—நாளு நினைத்தும்முடன்
பன்றிகளை மேய்த்திடுவேன்—பத்திரமா கத்தினமும்

177. பஞ்சத்தில் நான்பிழைத்து—பத்திரமாய் வாழ்ந்திடவே
தஞ்சம்நீர் தானெனக்கு — சரணம் சரணமய்யா

178. என்றுசொல்லி டம்பனவன் — இருந்தான் வணக்கமுடன்
பன்றிகளையு மெஜமான்—பத்திரமா யொப்புவித்து

179. எனமதைப் பத்திரமாய் — எந்நாளு மேய்த்துவந்து
பானம்பண் ணிப்பிழையேன் — பாக்கியமாயென்வீட்டில்

180. வெருட்டித் துரத்தாதே—வெய்யிலிலே ஓட்டாதே
திருட்டுமோசங்களொன்றும்—செய்யாதே டாமகனே

181. பன்றி கொழுத்தாக்கால் — பார்த்து மகிழ்ந்திடுவேன்
நன்றாக உன்தனைநான்—நன்மைசெய்து காத்திடுவேன்

182. பன்றி யிளைத்தாக்கால் — பங்கங்கள் செய்து உன்னை
தண்டித்து ஓட்டிடுவேன் — தப்பாது இந்த மொழி

183. தவிடதைப் பன்றிகளும்—தாராளம் தின்னவிடு
தவிர்த்திட வைக்காதே—தம்பீ தருமமல்ல.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணாவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணா கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணாவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depot, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷச் சுலையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு அணாவுக்கு 4 அணு; அரை அரை தபாலுக்கு 10 பிரதிவீதமும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு அணாவுக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் இயலுமைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலிலுள்ள டிராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916.

Registered No. M. 442.

சத்திய தூதன்.

MARCH, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

புகைக்கோர் உபயோகம்.—புகை நமது கண்ணையும் சுகத்தையும் கெடுக்கிற வஸ்து. அது தழையாத இடமில்லை. இப்பொழுது அதை ஒரு வாயுவாக மாற்றி யந்திரங்களே ஓட்டும் கருவியாக ஒரு வித்வான் ஒருபாயஞ் செய்திருக்கிறார்.

யுத்தத்தின் பதினுறாம் கெடுதியில் ஒன்று.—யுத்தம் முடிந்தபின்பு ஐரோப்பாவிலே கலியாணம் பண்ணத்தக்க ஆண்களில்லாத 10 லட்சம் மாதர்கள் இருப்பார்களாம். புருஷர் யுத்தகளத்தில் மாண்டமையால் உண்டாயிருக்கிற கைப்பெண்களுக்கோ கணக்கு வழக்குக் கிடையாது.

ஸ்திரீகள் கலாசாலை.—பூனாவிலே ஸ்திரீகளுக்குமாத்திரமாக ஒரு கலாசாலை ஸ்தாபிக்கும்படி வித்வான் கார்வே முதலானவர்கள் முயன்றுவருகிறார்கள். அதிலே உத்தியோகஸ்தரும், மாணாக்கருமான சகலரும் பெண்பாலரா யிருப்பார்கள். இதற்கு ஒருகோடி ரூ. வேண்டியிருக்கும்.

ஹிந்துக் கலாசாலை.—இப்பொழுது ஹிந்துக் கலாசாலை காசியில் ஸ்தாபகமாயிற்று. அதன் முக்கிய கட்டடத்திற்கு லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் மூலைக்கல் வைத்தார்களாம். அதிலே பல கலைகளுடன், சனதன தர்மமும் கற்பிக்கப்படும். இதனுல் பக்தி விர்த்தியாகுமென்று எண்ணப்படுகிறது.

நமது சக்ரவர்த்தி.—நமதரசர் இப்பொழுது தெய்வகடாட்சத்தால் பூரண சுகமடைந்திருக்கிறார். ஐரோப்பிய சேனைகளுக்கும் இந்திய சேனைகளுக்கும் உற்சாகமான செய்தி அனுப்பிவருகிறார். ஜர்மன் சக்ரவர்த்தியின் இளையகுமாரன் காயப்பட்டிருக்கிறார். ஆஸ்திரியாச் சக்ரவர்த்தி மரணபடுக்கையிலிருக்கிறாராம்; இவருக்கு வயது 87.

பெண் பி. ஏ. களுக்கு இனும் சம்பளம்.—வருஷந்தோறும் ஒரு பெண் பி. ஏ. க்கு கவர்ன்மெண்டார் இங்கிலாந்துக்குப் போய் இன்னும் கல்வி பயிலும்பொருட்டு மூன்றுவருஷம் வரைக்கும் வருஷத்துக்கு ரூ. 3,000 இனும் சம்பளம் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். இதனுல் உயர்தரப் பெண்கல்வி அதிக விர்த்தியடையும்.

யுத்தச்செலவு.—யுத்தத்தில் அமிழ்ந்தியிருக்கும் ஏழு ராஜ்யத்தாருக்கும் தினம் 1 கோடி 12 லட்சம் பவுண் செலவாகிறதாம். இது ரூபாயில் 15 கோடி 60 லட்சமாம். இத்தொகையை எண்களால் எழுதுவது கஷ்டமாயினும், தினத்திற்கு இத்தனையாயின் இந்த ஒன்றரைவருஷத்துக் காலத்தில் செலவான பாவதம்போன்ற திரவியத்தை மனதால் நிரூபித்தல் அரிது.

தேசம், அரசு முதலானவையில்லாத ஜனம்.—இம்மாதிரி ஜனம் ஒருகோடியே 12 லட்சம்பேர் தங்கள் பரம்பரை மதத்தையே அநுசரித்துவந்தும், இருக்க ஒரே நாடெகரமின்றி, உலகமுழுவதும் தெறியிருக்கிறார்கள். இவர்களதான் யூதர் என்பவர்கள். இவர்கள் குலத்திலேதான் எம்பெருமான் இயேசுகிறிஸ்து பிறந்தார். ஆனுல் அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை. இந்த யுத்த முடிவிலே அவர்கள் பூர்வநாடாகிய பலெஸ்தீன் தேசம் அவர்களுக்குத் திரும்பக் கிடைக்குமென்று அனேகர் எதிர்பார்க்கிறார்கள்.

யுத்த கஷ்டங்கள்.—நாகரீகமடைந்திருக்கிற இந்தியருக்குத் தேவையான அனேக பொருள்கள் ஐரோப்பாவிலிருந்து வந்துகொண்டிருப்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். யுத்த காரணத்தால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகிற கொஞ்சம் தவிர மற்றத் தேசத்துச் சரக்குகளெல்லாம் முற்றிலும் நின்றுவிட்டன. இதனுல் இத்தேசத்தாருக்குப் பெருத்த சங்கடம் உண்டாயிருக்கிறது. ஒரே உதாரணம்: காகிதம் மெத்த அவசியமான சரக்கு. இது இப்பொழுது கிடைப்பது வெகு அருமையாய்விட்டது. முன்பு 2 அணுவுக்கு ஒரு பவுண் கிடைத்தது. சற்காலம் 4 அணுவுக்குக் கூட கிடைப்பதரிது. இதுபோலவே, கண்ணுடிச் சாமான்கள், யந்திரங்கள், இரும்புச் சரக்குகள் முதலிய அனந்தம் பூச்சியமாகி வருகின்றன.

யுத்த விவரங்கள்.—ஜர்மனியின் முற்றுகை நாளுக்குநாள் குறுகிவருகிறது. ஜர்மன் சைனியங்கள் அனேகமாய்க் குறைந்தவருகின்றன. அங்கிலேயர் முதலானோர்ச் சேனைகளோ அதிகமாய் அதிகரித்து வருகின்றன. ஒரு இந்திய ஜோயர் ஜூன்மீ 10, 17ஆக் குள்ளே யுத்தம் நின்று சமாதானம் செய்யப்படுமென்று முன்னுரை செய்திருக்கிறார். வருகிற உஷ்ணரம்பத்தில் பயங்கரமான ஜெயாபஜெயங்கள் நேரிடப்போகிறதாம். இந்தியாவுக்கு ஒருவிதமான சுயஅரசு கிடைக்கும்போலிருக்கிறது. ஜர்மன் அக்கிரமம் முன்போலவே இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. நிர்த்தோஷிகளான கப்பல்களேயும், பட்டணங்களேயும், ஆண்கள் பெண்களேயும் நாசப்படுத்தி வருகிறார்கள். எதிரிகளே மட்டுமல்ல, சண்டையிடாத அமெரிக்கர் முதலானவர்களேயும் காலத்துக்குக் காலம் ஹிம்சை செய்துவருகிறார்கள். இதனுல் இன்னும் இரண்டு மூன்று ராஜ்யங்களும் யுத்தத்துக்குச் சன்னத்தராயிருக்கிறார்கள். இங்கிலாந்திலே 30 லட்சம் புதுச் சேனை பயிற்சியடைந்து வருகிறது. அன்றி, ஏராளமான பட்டணங்களிலே குண்டு மருந்தும், குண்டுகளும், பாணங்களும், பலவித பீரங்களும் வெகு விரைவாய்ச் செய்யப்படுகின்றன. நிசமென்று ஜர்மனிக்குள் பிரவேசிப்பார்களோலக் காணப்படுகின்றது. ரஷியர்கள் திருக்கியரின் முக்கிய கோட்டையாகிய எர்சரூமைப் பிடித்துக்கொண்டார். இது பெருத்த ஜெயம். 2 லட்சம் துருக்கிய சேனை நாசமாய்ப் போய்விட்டது. இனி கான்ஸ்டாண்டினோபிலுக்கு வழி திறந்துவிட்டதென்று எண்ணப்படுகிறது.

மார்ச்சுமீ பஞ்சாங்கம்—

வாரம்.	மார்ச்சுமீ = மாசி—பங்குனி. ● அமாவாசை, 4உ ⊙ பௌர்ணமி, 19உ						மாசி—பங்குனி.						
ஞாயி ...	...	5	12	19	26	...	22	29	7	14			
திங்க ...	...	6	13	20	27	...	23	1	8	15			
செவ் ...	...	7	14	21	28	...	24	2	9	16			
புதன் ...	1	8	15	22	29	18	25	3	10	17			
வியா ...	2	9	16	23	30	19	26	4	11	18			
வெள் ...	3	10	17	24	31	20	27	5	12	19			
சனி ...	4	11	18	25	...	21	28	6	13	...			

Vol. XXIX. No. 5.

புஸ்தகம் உக. தொ. ஒ.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

பதினெட்டாவது கதை.

புலிவேட்டையாடும் விதங்கள்.

மலையாள தேசத்தில் வயநாடு என்ற தாலுகாவில் புலிவேட்டையாடும் விதத்தைப்பற்றிக் கொஞ்சம் கவனிக்கலாம். புலிவேட்டையாடும் விதங்கள் பலவகை உண்டு; தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு என்றாற்போல் வேட்டையாடுதலும் பலமாதிரியாக இருக்கிறது. ஆனால் மேற்கண்ட தாலுகாவில் புலிவேட்டையாடும் விதம் எப்படியென்றால், குத்து செடிகளும் பெரிய மரங்களும் அடர்ந்த காடுகளில் ஆடுமாடுகள் போய் புல் மேய்ந்துகொண்டிருக்கும்பொழுது புலிகள் அந்தக் கூட்டத்தில் விழுந்து ஒரு மாட்டை அடித்து இரத்தத்தைமாத்திரம் குடித்துவிட்டு மற்றபாகத்தை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடும். இரண்டொன் பொறுத்து, திரும்ப அந்த மாமிசத்தைச் சாப்பிடும்படியாக அவ்விடத்திற்கு வருகிறதுண்டு. இந்த சம்பவங்கள் அந்தக் காடுகளில் வசிக்கும் மலைவாசிகளுக்கு நன்றாய்த் தெரியும். மேலும் அவர்களுக்கு வேட்டையாடுவதென்றால் ஒரு கலியாணவீட்டில் இருக்கும் சந்தோஷம்போல் அன்றையதினத்தைக் கொண்டாடுவார்கள்.

மேலும் இந்த மலைவாசிகள் காடுகளைச் சுற்றித் திரியும்போது எங்கேயாவது அப்படி ஒரு மாடு புலியால் அடிபட்டு செத்துக்கிடந்தால் பத்துப்பேர் சேர்ந்து புலிபிடிக்கும் பெரிய கயிறுவலையைக் கொண்டுவந்து அந்த அடிபட்டுக்கிடக்கிற மாட்டைச் சுற்றி ஏறக்குறைய கல்லால் சுற்றளவு அந்த வலையைத் தரைகளில்சுற்றிவர போட்டுவிட்டு இராவிலே பக்கத்தில் இருக்கும் மரங்களில் ஏறிக்கொண்டு புலி வருகிறதைப் பார்த்துக்கொண்டேயிருப்பார்கள். புலி வந்து அந்த இறைச்சியைச் சாப்பிடும்போது திடீரென்று நாலுபக்கம் மரங்களில் இருக்கப்பட்ட மனிதர்கள் கீழேயிறங்கி சுற்றிவர தரையில் போட்டுயிருந்த வலையை ஒரு ஆள் உயரத்துக்கு அதாவது தரையிலிருந்து ஒருசாண் உயரம் கொம்பை நட்டு அந்த வலையைத் தரையிலிருந்து மேற்கொம்பு மட்டும் நன்றாய்க் கட்டிவிடுவார்கள். திரும்பவும் அவர்கள் மரங்களில் ஏறிக்கொண்டு புலியைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டு இந்தச் சங்கதி மற்ற ஜனங்களுக்குத் தெரிவிக்கும்படியாக தங்கள் கைகளில் இருக்கும் ஒருவித கருவியால் எக்காளம் ஊதுவார்கள்; அதாவது மில்லுகளில் சங்குஊதி மனிதர்களை யெழுப்புவதுபோல் அவர்கள் தங்கள் ஆயுதத்தினால் எக்காளம் ஊதுவார்கள். இந்தச் சத்தம் சுற்றிவர 5 மைல் தூரமட்டும் கேட்கும். இந்தச் சத்தம் கேட்டவுடன் புலி அகப்பட்டிருக்கிறது என்று பல குன்றுகளிலும் இருக்கப்பட்ட மலைவாசிகள் உடனே யெழுந்து தங்களுக்கு வேண்டிய உடைகளையும் ஆயுதங்களையும் தயார்செய்து வைத்துவிட்டு பொழுதுவிடிந்ததும் அந்தச் சத்தம் தொனிக்கும் திசைகண்டு போய் அவ்விடம் சேர்வார்கள். நாலுபக்கமும் இருக்கப்பட்ட மலைவாசிகள் வந்ததும் ஒரு பஞ்சாங்கம் கூடுவார்கள்; அதாவது அந்தப் புலியை வேட்டையாடுமுன் சாமியிடத்தில் வரம் கேட்பார்கள்.

எப்படியென்றால் முதலாவது கேள்வி: இந்த புலிராஜா நம்மிடத்தில் அகப்படுவாரா அகப்படமாட்டாரா, இரண்டாவது எந்நாளில் வேட்டையாடலாம், மூன்றாவது எந்நேரத்தில் வேட்டை துவக்கலாம், அதனால் புலி பயப்பட்டுத் திரும்பவும் சுற்றி ஓடுகிறது, மேலே இதரும்படி பார்த்தால் ஆகாயமும் பூமியும் ஒன்றுபோல் காணப்படுகிறது. திரும்பவும் அடுத்தபக்கம் போகிறது, அங்கேயும் 10 ஈட்டி ஒன்றுபோல் விழுகிறது. சில ஈட்டிகளை தன் முன்கால்களினால் அடித்தும் ஒடிக்கிறது. 4 ஈட்டி ஒடிந்தால் திரும்பகூட பத்து ஈட்டி வந்து விழுகிறது. அடுத்தபக்கம் ஓடுகிறது, இப்படியாக 4 மணி நேரமாக அங்கும் இங்கும் ஓடி களைத்துப்போய்விடுகிறது. இன்னும் அங்கும் இங்கும் ஓடிப்பார்க்கிறது. ஒரு ஈட்டி கொஞ்சம் குத்துவிழுந்ததும் தொடுபிடியாக, 10-20-ஈட்டி மேல்விழுந்து குத்திவிடுகிறது. அப்படியே புலி விழுந்துவிடும். இந்தமாதிரி வேட்டைகளில் சிலது தவறிப்போய்விடுகிறதும் உண்டு; சிலரைக் காயப்படுத்துகிறதும் உண்டு, சிலரைக் கொன்றுவிடுகிறதும் உண்டு. இப்படிப் பலமா



நியூயார்க் நகரத்தின் ஓர் வீதி.

ஷ்டிரியாக நடந்துவருகிறது. ஆனாலும் இதில் நாம் ஒரு காரியம் முக்கியமாக கவனிக்கவேண்டியது. எதுவென்றால், சாமி ஆடி வரம் சொல்லுகிறது மிகவும் விசேஷித்தது. நம்முடைய தேசத்தில் இந்த வழக்கம் அநேகமாக நீக்கப்பட்டுவருகிறது. முன் காலத்தில் ஒரு அற்பகாரியத்துக்கும் சாமி ஆடி வரம் கேட்டுத்தான் செய்வார்கள்.

ஒரு நாள்பார்க்கவோ அல்லது ஒரு மங்களகாரியம் நடத்தவோ ஒரு உத்தியோகத்துக்குப் போகவோ ஒரு வர்த்தகம்செய்யவோ ஒரு பொருளை விற்கவோ அல்லது வாங்கவோ ஒரு பிசாசைத் துரத்தவோ பொங்கலிடவோ பிள்ளைவரம் கேட்கவோ: இப்படியாக எதுவிஷயத்துக்கும் சாமி ஆடி வரம் கேட்கிறது உண்டு. தற்காலத்தில் உண்டாயிருக்கும் அறிவினால் மேற்படி சாமி ஆடி சொல்லும் வரங்கள் பலனற்றவைகள் என்று கண்டு அநேகர் அதை முற்றுமாகத் தள்ளிவிடுகிறார்கள். அதுமாத்திரமல்ல. அநேக பக்திமான்கள் தங்களுக்குத் தேவையான நன்மைகளைப் பரமபிதாவிடத்தில் நேராய்க் கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். கடவுள் சொல்லியிருக்கிறபிரகாரம் கேட்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும், தட்டுகிறவர்களுக்குத் திறக்கப்படும், தேடுகிறவர்கள் கண்டடைவார்கள். இதை வாசிக்கும் நாம் எல்லாரும் நம்மைப்போலொத்த மண்ணான மனிதரிடத்தில் வரம் கேட்காமல் நம்மை ஆதரிக்கிற பரமபிதாவிடத்தில் நேராய்க் கேட்க விரும்புவோமாக.

G. D.

THE RELIGIONS OF INDIA

இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

மத்திய இந்தியாவில், ஓர்ச்சா பன்னா, டத்தியா, க்ஷற்றர்பூர், க்ஷர்க்காரி, பீஜபார், தேவாஸ், அஜைகர் என்ற ஜமீன்களில் ஒன்றரை, இரண்டு, மூன்று லக்ஷம் ஜனங்கள் இருந்தபோதிலும், ஒரு கிறிஸ்தவனாவது, கிறிஸ்தவ பிரசங்கியாவது இல்லை. மத்திய மாகாணங்கள் கீழ்ப்பட்ட சுதேச அரசர் நாடுகளில் சுமார் இருபது லக்ஷம் ஜனங்களுக்கு 576 கிறிஸ்தவர்கள்மாத்திரம் உளர். அதாவது 2,500–க்கு ஒன்று! கங்கர், கவார்டா, ராய்கர், சரங்கர், பம்ரா, சான்பூர், பட்னா, கலஹாந்தி இவற்றில் சுவிசேஷ பிரசங்கிமார் கிடைக்கவே கிடையாது.

பஞ்சாப் இராஜதானியைச்சேர்ந்த சிற்றரசு நாடுகளில் நாற்பத்தைந்து லக்ஷம் ஜனத்துக்கு 285 பேர் மாத்திரம் கிறிஸ்தவர்கள். 35 ஜமீன் பூமிகளில் சுவிசேஷ ஊழியமே நடைபெற்றதில்லை. ஐக்கிய மாகாணங்களில் $2\frac{1}{2}$ லக்ஷம் ஜனமுள்ள தேரி கர்வால் இராஜ்யத்தில் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பார் எவருமில்லை. வங்காளம், சோட்டா நாக்பூர் பிரிவிலுள்ள ஸர்கூஜா, ஜய்ப்பூர், உடாய்ப்பூர், கெரேயா, க்ஷங்பங்கர் என்னும் ஜமீன்களில் சுமார் ஆறு லக்ஷம் ஜனங்களிருந்தாலும், சுவிசேஷவேலைக்கு அடைபட்ட நாடுகளாயிருக்கின்றன.

நிஜாம் அரசாட்சிசெய்யும் ஐதராபாத் இராஜ்யத்தில் சுமார் இருநூற்றைம்பதுபேருக் கொருவன்மாத்திரம் கிறிஸ்தவன். பீடர், சீர்பூர், தாண்டர், நாந்தர், பீர், பர்பானி, ஒஸ்மனபாத் ஜில்லாக்களில் மிச்சமான பாகங்களில் இன்னம் கிறிஸ்துமார்க்கம் பிரசங்கிக்கப்படவில்லை.

சுதேச அரசாட்சிக்குட்பட்ட நாடுகள் ஸ்திதியைக் கவனித்தோம். மிஷனெரிவேலை செய்வதற்கு யாதொரு அப்பியந்தரமும் இல்லாதிருக்கும் பிரிட்டிஷ் இலாகாவில்கூட இன்னும் பல பாகங்களிலும் சுவிசேஷம் செல்லவில்லை. பம்பாய் இராஜதானியில் அரை லக்ஷம் ஜனமுள்ள முப்பத்து மூன்று தாலுக்காக்களில் மார்க்கம் போதிக்கப்படவில்லை. ஐக்கிய மாகாணங்களிலுள்ள லக்ஷம் கிராமங்களுள் 50,000 கிராமங்களில் வருஷக்கணக்காய்ப் பிரசங்கம் நடந்ததில்லை என்று ஓர் மிஷனெரி குரு எழுதுகிறார். ஜனப்பெருக்கம் நிறைந்த வங்காளத்தில் மொத்தம் ஒரு கோடியே முப்பத்தைந்து லக்ஷம் ஜனமுள்ள முப்பது தாலுக்காக்களில் ஒரு கிறிஸ்தவனாவது, கிறிஸ்தவ ஊழியனாவது இல்லை. வங்காளத்தில்மாத்திரம் இன்னும் இயேசு பெருமானின் இன்ப நாமம் கேள்வியுறாத நாலு கோடி ஜனம் உண்டென்று கணக்கிட்டிருக்கிறது.

ஆகச்சே இந்துதேசம் முழுவதையும் கவனித்தால், இன்னும் சுவிசேஷ வேலை ஜாஸ்தியாய் நடைபெறவேண்டிய பாகங்கள் எவையெனின், சுதேச அரசாட்சி நாடுகளும், வங்காளமும், ஐக்கிய மாகாணங்களுமெனக் காணலாம். தேசமுழுவதிலும் கணக்குப் பார்க்கின், இன்னும் பத்துக்கோடி ஜனங்களுக்கு சுவிசேஷம் செல்ல வழியில்லை என்று தெரிகிறது. அதாவது நம் சுயதேசத்தவரில் இன்னம் பத்துக்கோடிப்பேர் தங்கள் ஜீவகாலத்தில் ரக்ஷண்யவழியை அறிய ஏதுவில்லை. இவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க யார் போவார்?

இந்தத் தேசம் நம் சொந்த தேசம். இந்த ஜனம் நம் சொந்த ஜனம். நமது எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமான இவர்களுக்காகவும் நம் இரட்சகர் மரித்தாரே! இவ்விஸ்தார தேசத்தவரை ஜெகஜோதியாகிய ரக்ஷாபெருமான் திருப்பாதத்தண்டை சேர்ப்பதற்கு அவசியம் தேவை எவை?

இன்னும் மிஷனெரிவேலை நடைபெறாத பாகங்களை ஊடுறுத்துச் சென்று சிலுவைக்கொடியை நாட்ட சுவிசேஷர்களும், மிஷனெரிமாரும் தேவை!

தற்காலம் ஊழியம் நடப்பிக்கும் ஐரோப்பிய மிஷனெரி சங்கங்களுக் கெட்டாத தூரத்தில் வசிக்கும் 10 கோடி ஜனங்களுக்கும் பிரசங்கிக்க மனுஷரும் பணமும் தேவை!

ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மிஷன்களில் ஊழியஞ்செய்ய சுயவெறுப்புள்ள ஆவிக்குரிய உபதேசிமார், உபாத்திமார் தேவை!

சுதேச சபையை சுய ஆதரவு, சுய ஆளுகை, சுய விருத்திக்கு வழிநடத்த திறமையும் ஆவிக்குரிய வல்லமையும் பொருந்திய படிப்பாளிகளான குருமார் தேவை!

இன்னும் அரிவரிதெரியாத நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு ஜனத்தின் மனக்கண்ணைத் தெளிவிப்பதற்கு ஆசிரியர் தேவை!

இருள் நிறைந்த அந்தர்ப்புரங்களுக்குட் பிரவேசித்து அங்கு ஞானஒளியை நாட்ட வேதாகம ஸ்திரீகள் தேவை!

"நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள்" என்று எஜமான் சொல்லுகிறார். "எங்களுக்கு வந்து உதவிசெய்யுங்கள்" என்று $31\frac{1}{2}$ கோடி ஜனம் கூக்குரலிடுகிறது. இந்தியா ரட்சிக்கப்படுவதற்கு நாம் என்ன செய்யலாம்?

1. ஜெபி.—அதிகமாய் ஜெபிக்கிறவர்களே, அதிகமாய் உதவி செய்கிறவர்களென்று ஓர் சுலோகம் உண்டு. ரஞ்சி மிஷனை ஸ்தாபித்த காஸ்னர் போதகர் ஜெபத்தில் நிபுணர். வைத்தியசாலைச் சுவர்களை ஜெபத்தினால் எடுப்பித்தார். மிஷன் ஸ்தானங்களை ஜெபத்தினால் ஸ்தாபித்தார். மிஷனெரிமார் விசுவாசத்தை ஜெபத்தினால் ஊன்றக் கட்டினார். ஐசுவரியவான்கள் இருதயங்களையும், பொக்கிஷங்களையும் ஜெபத்தினால் திறந்தார் என்று அவரைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஊக்கமான ஜெபம் மிகுந்த பலனுள்ளது.

கருணைநாதரான இயேசுகிறிஸ்து நிரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள்மேல் மனதுருகி என்ன செய்தார்? தம்முடைய சீஷர்களை நோக்கிப் பார்த்து, "அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார். இந்தியாதேசத்தின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்று கருணைகொள்ளும் ஆண்டவர் இன்றும் தமது சீஷராகிய நம்மையே நோக்கிப் பார்க்கிறார். தமிழ்பேசும் சுதேச கிறிஸ்தவர்களாகிய நம்மையே விசேஷமாய் நோக்கிப்பார்த்து, "வேண்டிக்கொள்ளுங்கள்" என்கிறார்.

எதற்காக வேண்டிக்கொள்ளவேண்டும்? இந்து தேசத்திற்காக வேண்டிக்கொள்ளுவோமாக. இதின் நிர்ப்பந்த நிலைமையைப் பார்த்து கர்த்தர் இரங்கும்படி ஜெபிப்போமாக. இங்கிருக்கும் சுதேச சபைக்காகப் பிரார்த்திப்போமாக. தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற யாவரும் உத்தம கிறிஸ்தவர்களாய் இந்துதேச ரக்ஷணைக்காக ஜெபித்து, உழைத்துப் பிழைக்கும்படியாய் மன்றாடுவோமாக. விசேஷமாய் தமிழ் சபைக்காக வேண்டிக்கொள்ளுவோமாக. தமிழ்நாட்டுச் சபை தன் விசேஷித்த உத்தரவாதத்தை உணரும்படியாக ஊக்கமாய்ப் பிரார்த்தனை செய்வோமாக. சகல மிஷனெரி சங்கங்களுக்காகவும் விண்ணப்பம் பண்ணுவோமாக. எல்லாவற்றிலும் முக்கியமாய் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றி இன்னும் கேள்விப்படாத பத்துக்கோடி ஜனங்களுக்கு சுவிசேஷம் செல்லும்படியான வாசல் திறக்கப்படக் கெஞ்சுவோமாக. "தேவனே, எங்கள் தேசத்தை ரட்சியும்! எங்கள் தேசத்தை உயிர்ப்பியும்" என்ற மன்றாட்டு இதை வாசிக்கும் ஒவ்வொருவருடைய இருதயத்திலிருந்தும் தினந்தோறும் தேவ சந்நிதிக்கு எழுந்தருளுவதாக. ஜெபமே ஜெயம்.

(இன்னும் வரும்.)

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

184. ஒப்புக்கொள் பன்றிகளை—ஓட்டிப்போய் மேயவிடு
தப்பாமல் சாயரட்சை—சந்தோஷ மாய்வாடா

185. கொடுத்திடுங் கூழதனைக்—குடித்துசுகமுடனே
படுத்து உறங்கிடுவாய்—பாக்கியமாய் என்வளவில்

186. என்றானெஜமானும்—எகினன் தன்பணிக்கு
சென்றானே டம்பனவன்—தேம்பி யழுதுக்கொண்டு

187. கையிலோர் கோலெடுத்தான்—கடும்வெய்யில்நடந்தான்
பையவே காட்டுக்குப்—பன்றிகளையோட்டி சென்றான்

188. தண்ணீர் குடிக்கவைத்தான்—தவிடதைத் தின்கவைத்தான்
கண்ணீர் சொரிந்துமவன்—காலத்தை யேகழித்தான்

189. சிரசு கவிழ்ந்தவனாய்—தினமு மெலிந்துடலம்
மரத்தி னடிகளிலே—மல்லாந்து தான்படுப்பான்

190. வார்த்துவருங் கூழவனின்—வயிற்றுக்கு மெட்டவில்லை
போர்த்துக் கொள்ளுவதற்கும்—போர்த்துகிற் கிட்டவில்லை

191. இருளிக ளின்தவிட்டை—இச்சித்தா னென்றாலும்
தருவதற் காருமில்லை—தவித்துப் பசித்திருந்தான்

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினால் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணை கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna ostage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு அணை; அரை அணை தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு ரூபாய்க்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலிய வேண்டுகோள் நிமித்தமாக தபாற்கூலியுடன் சென்னை மிஸோரியல் ஹாலிலுள்ள மானேஜர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916.

சத்திய தூதன்.

APRIL, 1916. PRICE, 1 PIE.—விலை 1 பை. ஏப்பிரல்மீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

ஹைதராபாத் சமஸ்தானம். — நிஜாம் அரசாட்சிக் குட்பட்ட இந்தப் பெரும் ராஜ்யத்தில் ஒருகோடி, 33 லட்சம், 74 ஆயிரம், 676 பேருண்டு. வருஷ வரும்படி 2½ கோடி ரூ. இந்தச் சமஸ்தானத்தில் ஜமீன்கள் கிடையாது. ஒவ்வொரு குடியானவனும் தன்தன் நிலத்து வரியைத் தானே சோய்க் கட்டவேண்டும்.

ஐக்கிய வேதசான்றோர் பாடசாலை — பெங்களூரிலே இப்பெரும்பெயர்கொண்ட ஒரு வேதசான்றோர் பாடசாலையுண்டு. அதிலே பதினெருமாணாக்கர் மாத்திரமுண்டு; அவர்களிலும் ஒருவன் கூட பீ. ஏ. பரீட்சை கொடுத்தவனன்று. உயர்தரக் கல்விகற்ற இந்திய கிறிஸ்தவர்கள் தெய்வ ஊழியம் செய்ய விரும்பாத காரணங்கள் இன்னவையென்று அதிகாரிகள் முயன்று அறிந்து கொள்வதவியம்.

லார்ட் ஹார்டிஞ். — நமது கவர்னர்ஜெனரல வர்கள் இம்மாதம் இங்கிலாந்துக்குப் போய்விடுகிறார்கள். அவருக்குப் பம்பாய்க் கலாசாலை தத்துவ வித்தகன், (LL. D.) என்னும் உயர்தரப்பட்டம் வகித்திருக்கிறது. இந்தியர்களுக்காக 6 வருஷம் பெருங்கஷ்டத்துடன் உழைத்துவிட்டு, தாரமிழந்த புத்திரர்களை ரணக்களத்திற் கொள்ளை கொடுத்தும் தெய்வ சித்தத்துக்கு அமைந்தவராய்த் தம் ஜனன தேசம் செல்கின்றார். அவருக்குக் கடவுளின் ஆசீர்வாதம் பூர்த்தியாய்க் கிடைப்பதாக.

பிரிட்டிஷ் ராஜ்ய வருமானம்.—யுத்தச்செலவு ஏராளமாய் அதிகரித்தும், நமது ராஜ்யத்தின் வரும்படி 1 கோடியே 80 லட்சத்துப் பவுன் வீர்த்தியடைந்திருக்கிறது. இதை 15-ஆல் பெருக்கினால் இத்தனை ரூபாயென் றறிந்துகொள்ளலாம். இங்கிலாவிலே, ஏற்றமதி இறக்குமதிகளுக்கும், கள்ளு, சாராய முதலியவற்றிற்கும், வைகைள் உணவாகிய உப்புக்கும்கூட, அதிக வரி ஏற்றியிருக்கிறார்கள். உப்பை விட்டுவிட்டு, சுருட்டு, பட்டு முதலியவற்றின் வரிகளே அதிகரிப்பித்தால் மெத்த உத்தமமாயிருக்கும்.

கம்பியில்லா டெலிப்போன். — தற்காலம் (telephone) தூரப்பேச்சு யந்திரத்தினுலே ஒருவர் வெகுதூரத்திலிருக்கிற இன்னொருவரோடு சவுக்கியமாய்ச் சம்பாஷிக்கலாம். இது சென்னைபுரிவாசிகள் யாவருக்கும் தெரிந்த காரியம். ஆனல் இந்த யந்திரங்கள் எல்லாம் தெருவில் போட்டிருக்கிற கம்பிகளினுலே சப்திக்கின்றன. இதுநிற்க, ஒரு அமெரிக்கர் கம்பியில்லாமலே பேசும்படிக்கான ஒரு நூதன யந்திரத்தை உண்பண்ணியிருக்கிறார். தற்காலம் இதுவும், கம்பியில்லா டெலிகிராப்பைப் போல, உலகமெங்கும் பரவிவருகிறது.

ஒய்வுநாள். — கடவுள் பிரபஞ்சத்தை ஆறு தினத்திற் படைத்து ஏழாம்நாள் ஒய்ந்திருந்தார் என்று பைபிலில் கூறியிருக்கிறது. கிறிஸ்தவர்களும் அதேவித்மாய் ஞாயிற்றுக் கிழமையில் யாதொரு தொழிலுஞ் செய்யாமல், கோவிலுக்கு இரண்டொருமுறை போய்ப் பின்பு ஒய்ந்திருப்பது அவர்கள் கடமை. உலகமெங்கும் இப்படி நடந்துவந்தால் சுகமும் செல்வமும் தெய்வபக்தியும் சன்மார்க்கமும் தீர்க்காயுசும் பூர்த்தியாகும். ஒய்வுநாளைக் கைக்கொள்பவருக்கு வாழ்நாள் வீண்நாளாகா. நாஸ்திகன் ஒருவன் ஒய்வுநாளை அழித்துவிட்டால் கிறிஸ்து மதத்தையும் அழித்துவிடலாமென்றுனும்.

பாடசாலைகளும் வைத்திய சோதனையும்.—சென்னை ராஜதானியிலுள்ள மாணக்கர்களை வைத்தியர்கள் வருஷந்தோறும் சோதனை செய்யவேண்டுமென்று இப்பொழுது உத்தரவு பிறந்திருக்கிறது. இது உத்தம சிர்திருத்தம்; ஏனென்றால், பாடசாலைச் சட்டங்களினுலே அனேக மாணக்கர்கள் கண் பஞ்சடைத்தும், கைகால் பழுதாகியும், சுகசக்திகள் இழந்தும், பற்பல வியாதிகளுக் குட்பட்டும், ஆயுசு குறுகியும், புத்தி மந்தமடைந்தும் போகிறது யாவருக்கும் தெரிந்தவிஷயம். சிறுவர் 6 மணிநேரம் செருக்கமான அறைகளில் தூர்க்காற்றை சுவாசித்துக்கிடப்பது குரூர வற்பாடு. உபாத்தியாயர்கள் ஆரம்பத்தில் சோம்பலாய்க் காலங்கழித்து, பரீட்சை அடுத்துவருகிற சமயத்தில் மாணக்கரை மிதமிஞ்சிப் படிக்கக் கட்டாயம் பண்ணுகிறதினுல் பல கெடுதிகள் நேரிடுகின்றன. இத்தியாதி காரணங்களினுல்தான் இந்தியர்கள் இனம்பருவத்திற் பிழைவராதி, 50 பிராயத்திற்குள்ளே இறந்துபோகிறார்கள். தக்க வைத்திய சோதனையினுலே இவ்வித ஆபத்துக்கள் எல்லாம் வற்கனவே நிவர்த்தியாகும்.

யுத்த வரலாறு.—ரஷ்யர் எர்சரும் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு, கொன்ஸ்தாந்தினேபிலே நோக்கிப் பிரயாணஞ் செய்கிறார்கள். துருக்கியர் சமாதானத்துக்கு வேண்டிவருகிறார்கள். ஜர்மானியர் பாரிஸ்நகரத்தைப் பிடிக்கவேண்டி, எல்லையிலிருக்கிறவர்டன் பட்டணத்தைப் பிடிக்க 22 நாளாகக் கடும்போர் செய்தும், 3 லட்சம் வீரரை இழந்ததமன்றி, நின்ற நிலையிலேயே மேலேமுற்று இஞ்சின்ற குரங்கைப்போல எக்முற்றும் கிடக்கிறார்கள். தம் நாட்டிலே பற்பல பஞ்சம் பெருகி வருகிறது. வெகு சீக்கிரத்திலே, பஞ்சபாண்டவர் போன்ற, ஐந்து மனேகரான ராஜ்யத்தாரும் தங்கள் ராணுவங்களைக் கூட்டி ஜர்மன் எல்லைச் சேனையை மேற்கிலும், கிழக்கிலும் உடைத்து ஊடறுத்துப் பாய்ந்து, பரலினைப் பிடிக்கப் பிரதப் பிரயத்தனஞ் செய்துவருகிறார்கள். ஜர்மன் சைனியங்கள் வெருவாய்க் குறைந்தும், மடிந்தும், மாண்டும், தளகர்த்தர் கொல்லுண்டும், போர்வீரர் மனஞ் சைதந்தும், தேகம் சொந்தும் இடங்கிறார்கள். ருமேனியாவும் கிரீசும் அவர்களுக்கு விரோதமாய்ப் படையெடுக்க ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வருஷத்திற்குள்ளே யுத்தம் முடியும்போல் காணுகிறது.

ஏப்பிரல்மீ பஞ்சாங்கம்.—

வாரம்.	ஏப்பிரல்மீ = பங்குனி—சித்திரை. ● அமாவாசை, 2உ ⊙ பௌர்ணமி, 18உ						பங்குனி—சித்திரை.					
ஞாயி ...	2	9	16	23	30	..	21	28	5	12	19	
திங்க ...	3	10	17	24	...	...	22	29	6	13	...	
செவ் ...	4	11	18	25	...	...	23	30	7	14	...	
புதன் ...	5	12	19	26	...	...	24	1	8	15	...	
லீயா ...	6	13	20	27	...	...	25	2	9	16	...	
வெள் ...	7	14	21	28	...	...	26	3	10	17	..	
சனி ...	1	8	15	22	29	..	20	27	4	11	18	...

Vol. XXIX. No. 6.

29-3-16
11

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

பத்தொன்பதாவது கதை.

பொங்கல் கதை.

ஒரு கிராமத்தில் வாந்திபேதி அதிக மும்முரமாய் நடந்தது. அதில் அநேகம் ஜனங்கள் இறந்து போய்விட்டார்கள். ஆகையினுல் அவ்வூரிலுள்ள குருக்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அம்மைக்குப் பொங்கலிட்டு இந்த வாதை நீங்கும்படி கேட்டுக் கொள்ளவேணும் என்று வீட்டுக்கு 4 அணுவாக வரிசேர்த்து வசூல்செய்து அந்தத் தொகையைக் கொண்டு, அதற்கு ஆடு வாழைப்பழம் பூ. தேங்காய் கற்பூரம் சாம்பிராணி இன்னும் அதற்குத் தேவையான சாதனங்கள் எல்லாம் வாங்கி கிராமத்துக்கு வெளியே பந்தல்போட்டு, பீடம் வகித்து, அம்மன் சாமிகளை மஞ்சள்பூசி ஸ்நானம்செய்வித்து, அவைகளின் முன்னுல் இந்த சாதனங்களையெல்லாம் படைப்பித்து, இரவு 8 மணிக்கு ஆடு வெட்டி சமையல்பண்ணி அதிக வாசனையோடு படைத்து மேளதாளங்களுடன் சாமிகள் ஆடி வரம் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் இரண்டு மனிதர்கள் வெளிகிராமத்தில் இருந்து புறப்பட்டு அதிக பசியாக வருகிருர்கள். அப்போது அதில் ஒருவன் சொன்னுன், இதோ முன்னுல் தெரிகிற கிராமத்தில் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு அந்த ஊரிலேயே இரவு தங்கிவிட்டுப் போகலாம் என்று பேசிக்கொண்டு வந்தார்கள். அதற்குள்ளாக மற்றவன் சொல்வான்: சிநேகிதனே, அப்படியல்ல, அதோ நமக்கு ஒரு பெரிய வெளிச்சம் காணப்படுகிறது மேளதாளமும் சத்தம் கேட்கிறது, அவ்விடத்தில் அம்மைக்குப் பொங்கலிட்டு வரம் கேட்கிறது போல் தெரிகிறது. ஆகையினுல் நாம் கிராமத்துக்குள் போனுல், அங்கே வீடுகள் எல்லாம் அடைத்துவிட்டு இவ்விடம் வந்திருப்பார்கள். ஆகையினுல் நான் ஒரு யோசனை செய்கிறேன். அதாவது நான் அவ்விடம் போனதும் அம்மை முன்பாகக் குதித்துக் குதித்து ஆடி வரம் சொல்லுவேன். அப்போது அம்மை கோபத்தோடு பொங்கலில் இன்னும் குறை உண்டு. இது எனக்கு வேண்டாம் என்று சொல்லி அங்கேயிருக்கிற பழம் தேங்காயெல்லாம் வாரிவாரி வெளியே இறைப்பேன். அப்போது நீயும் பந்தலுக்கு வடபாகத்தில் உன் கையை உயர்த்திக்கொண்டு நில்லு; அப்போது உனக்கு நேராக 4 சீப்பு வாழைப்பழமும் 5, 6 தேங்காயும் வாரிப்போடுவேன்; நீ அவைகளை யெடுத்துத் துணியில் கட்டிக்கொண்டு கிராமத்துக்கு வடக்கே நடந்துபோ நான் கூடவந்து சேர்ந்துகொள்வேன் என்று சொல்லிவைத்துக்கொண்டு வழியிலே காணப்பட்ட ஒரு வேப்பமரத்தில் ஏறி அதிலிருந்த இலைகளைப் பிடுங்கித் தன் திரேகமுழுவதும் வைத்துக் கட்டிக்கொண்டு கையிலும் கொஞ்சம் வேப்பம் இலையும் 1 பிரம்பையும் வைத்துக்கொண்டு வந்தான். இவ்விடத்தில் வந்ததும் ஜனங்களை விலக்கிக் கொண்டு அம்மை முன்பாகப் போய் ஒரு கூச்சல்போட்டுக் குதித்து ஆடினுன். ஜனங்களுக்குப் பிரமிப்பாய்விட்டது. உடனே ஜனங்கள் விழுந்து விழுந்து கும்பிட்டு, சாமி இந்த வாந்திபேதியை நீக்கவேணுமென்று அழுகையோடு கேட்டார்கள். அப்போது அந்த மனிதன் கொஞ்சநேரம் ஆடி அதிகக் கோபத்தோடு கூச்சலிட்டுச் சொன்னது: நீங்கள் பெரிய தப்பு செய்திருக்கிறீர்கள், அம்மையை நினைக்கிறதில்லை. இப்போது நினைத்தீர்கள்; ஆனுலும் நீங்கள் அம்மைக்குப் போதுமானபடி படைத்துப் பொங்கலிடவில்லை. ஆகையினுல் இந்தப் பொங்கல் எனக்குத் தேவையில்லை. இன்றைக்குப் பத்தாம்நாள் 4 கடா வெட்டி 4 மரக்கால் அரிசி சமைத்து நாலுவிதப் படைப்பும் படைத்தாயானுல் உங்கள் கிராமத்தில் வாந்திபேதி நீங்கும்; மற்றப்படி எல்லாரும் சாவார்கள் என்று கோபத்தோடு சொல்லி அங்கேயிருந்த தேங்காய் பழங்கள் எல்லாவற்றையும் வாரிவாரி வெளியே இறைத்தான். அப்போது, பின்னுல் கைதூக்கிக்கொண்டு நின்ற தன் மனிதனுக்கு நேராகவும் வாரிப்போட்டான். அவன் மடி நிரம்பினதும் அவனுக்குச் சொல்லியபடி வடக்குமுகமே திரும்பிப் போகிருன். அப்படியே இவன் எல்லாம் வாரிப் போட்டுவிட்டு ஒரு கூச்சல்போட்டு நான் போகிறேன் போகிறேன் மறு பொங்கல் இட்டால் பிழைப்பீர்கள், மற்றப்படி சாவீர்கள் என்று சொல்லி ஆடிக்கொண்டே ஊருக்கு வடக்குமுகமாய்ப் போய்விட்டான். கொஞ்சதூரம் போய் அவனைக் கண்டு பிடித்துக்கொண்டு ஒரு இடத்தில் இருவரும் உட்கார்ந்து பழமூட்டையை அவிழ்த்து வயிறு கொள்ளுமட்டும் சாப்பிட்டுவிட்டு மீதியை மற்ற ஒரு கிராமத்தில் போய் விற்றுவிட்டார்கள். இதினுல் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம். ஒரு வித்வான் பாடுகிருர்: பொங்கலிட்டு ஆடு கோழி சிங்காரமாய் வெட்டினுலும் உன் தங்கமான சாமியெல்லாம் ஏ பாவி அதைத் தின்கவந்து கூடுமோ சொல். இன்னும் ஒரு பக்தன் சொல்லுகிருர்: படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தம்மை வணங்க. கடவுள் நம்மைப்பார்த்து, மகனே! மகளே! உன் இருதயத்தைமாத்திரம் எனக்குத் தா என்கிருர்.

G. D.



பீஜிதீவில் உஷ்ண ஊற்று.

THE RELIGIONS OF INDIA

இந்துதேச சமயங்கள்

(தொடர்ச்சி.)

2. கொடை.—யூதன் ஒவ்வொருவனும் மூன்று காரியங்களுக்காகக் காணிக்கை செலுத்தவேண்டியவனுயிருந்தான். (1) தேவாலயத்தில் படைக்க வேண்டிய பலிகளுக்காக; (2) ஆசாரியர் பிழைப்புக்காக; (3) ஏழைகள் பராமரிப்புக்காக. இவற்றில் ஒன்றைச் செலுத்தினுல் மற்றதை நிறுத்திக் கொள்ளலாமென்றில்லை. மூன்றிற்காகவும் யூதன் பணம் செலவிடவேண்டியவனே, தங்கள் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒன்றை யூதர் இவ்வாறு செலவிட்டார்கள்.

கிறிஸ்தவர்களும் மூன்றுவிதமான காணிக்கை செலுத்தவேண்டியவர்களாயிருக்கிருர்கள். கிறிஸ்தவர்களும் யூதனைப்போல தங்கள் ஆத்தும மேய்ப்பரான குருமார், உபாத்திமார் ஆதரவுக்காகக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள். யூதனைப்போலவே, தங்களிலுள்ள ஏழைகளையும், அநாத விதவைகள் பிள்ளைகளையும் பராமரிக்கவேண்டியவர்களாயிருக்கிருர்கள். ஆனுல் தேவாலயப் பலிவகைகளுக்குப்பதிலாக, சுவிசேஷ ராஜ்யத்தின் விருத்திக்காகக் கொடுக்கவேண்டியவர்களா யிருக்கிருர்கள். இதுவே கர்த்தருக்குச் சுகந்த வாசனையான பலி என்று பரி. பவுல் சொல்லுகிருர். பிலி. 4. 18.

தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள் இம்மூன்றையும் ஒன்றுபோல செய்துவருகிருர்களா? தர்மஞ்செய்ய முந்திக்கொள்ளுகிறதுபோல, சுய ஆதரவுக்கும் உற்சாகமாய்க் கொடுக்கிருர்களா? தர்மத்திற்கும், சபை தாபரிப்புக்கும் கொடுப்பதுபோல சுவிசேஷ பிரபல்யத்திற்கும் நன்கொடை செலுத்துகிருர்களா? சுவிசேஷம் இன்னும் செல்லாத நாடுகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக நம் தேசத்தவர் அங்கங்கே போயிருக்கிருர்கள். தங்கள் இனத்தையும் ஜனத்தையும் விட்டு, சரீர கஷ்ட நஷ்டங்களைச் சந்தோஷமாய் அநுபவித்து, சுவிசேஷக் கொடியைச் சத்துருவின் பாளயத்தில் நிறுத்தப் போயிருக்கிருர்களே! அவர்கள் தங்கள் உயிரையும் அருமையென்று பாராமல் கிறிஸ்துவுக்காக முன்னணியத்திற்குச் சென்றிருக்கும்போது, அவர்கள் செய்துவரும் வேலையைத் தாங்கும்படி பொருள் சகாயமாவது செய்யவேண்டாமா?

ஐரோப்பியர் உலகத்தின் நான்கு திக்குகளினின்றும் தங்கள் பொருளை இத்தேசத்தின் இரட்சிப்புக்காகத் தாராளமாய்க் கொட்டுகிருர்கள். அவர்கள் பணத்தினுல் கட்டப்பட்டிருக்கும் ஆலயங்கள் எத்தனை! பாடசாலைகள் எத்தனை! கற்பிக்கப்பட்டவர்கள் எத்தனை ஆயிரம்! உபகாரம்பெற்று பிழைக்கிறவர்கள் எவ்வளவு ஏராளம்! புறதேசத்தார் இவ்வளவு நமக்காகச் செய்யும்போது நாம் சும்மா இருந்து பார்த்துக்கொண்டிருப்போமா? இது நமது தேசமல்லவா? ஆண்டவர் நமக்காகவும் தமதாருயிரைக் கொடுக்கவில்லையோ? அப்படியானுல் நமது சக்திக்கேற்றபடி நமது சொந்தத்தேசத்தின் இரட்சிப்புக்காக நாம் கைதிறந்து கொடுக்கவேண்டாமோ? நாம் எவ்வளவு கொடுக்கிறேமோ அவ்வளவே நமது தேசத்தின்மீது அபிமானம் கொள்ளுகிறவர்களாவோம்.

3. உழை.—ஜெபமும் பணமும் அவசியந்தான். ஆனுல் வேலை மகா அவசியம். இந்துதேசத்திற்காக ஜெபிக்கிறவர்கள் வேண்டும். கொடுக்கிறவர்கள் வேண்டும். ஆனுல் அதிலும் முக்கியமாய் இந்துதேசத்தைக் கர்த்தருடைய பாதத்தில் சேர்ப்பதற்குத் தாங்களே போய் உழைக்கிறவர்கள் அவசியம் தேவை. ஜெபிக்கிறவர்கள் அநேகர் தங்கள் சொந்தநாட்டை விட்டுப் போய் ஊழியம் செய்யப் பயப்படுகிறவர்களா யிருக்கிருர்கள். ஒரே ஜில்லாவுக்குள்ளேயே கஷ்டமான பாகத்திற்கும், சொந்த ஊருக்குத் தூரமான இடத்திற்கும், தண்ணீர்க்கஷ்டம், வீட்டுக்கஷ்டம் உள்ள கிராமங்களுக்கும்போக மனமற்றிருக்கிருர்கள். பட்டணக்கரைகளில் வேலை வேண்டுமென்றும், சுகத்துக்குப் பிரதிகூலமான தாலுக்காக்களில் வேலை வேண்டாமென்றும் சொல்லுகிறவர்கள் அநேகர்.

இத்தாலியா தேசத்திற்குச் சுயாதீனத்தைக் கொடுத்த காரிபால்டி என்பவர் தம் தேசத்தை இரட்சிக்கும்படி புறப்பட்டார். தேசத்தின் வாலிபரைப் பார்த்து, "வாலிபரே, என்னுேடு நீங்கள் வருவதானுல், ஏதேனும் சுகம் கிடைக்கும் என்று எண்ணுதிருங்கள். குளிர், பசி, பட்டினி, கந்தையே உங்கள் பங்காயிருக்கும். தன் தேசத்தை நேசிக்கிறவன் என் பின்னே செல்லட்டும்!" என்ருர். ஆயிரக்கணக்கான வாலிபர், தேசத்திலுள்ள பல சூரர்களும் வீரர்களுமானவர்கள் காரிபால்டி பின் சென்ருர்கள். தங்கள் உயிரைக் கொடுத்தார்கள். தங்கள் அருமையான தேசத்தை இரட்சித்தார்கள்.

இந்தியாவை இரட்சிக்கும்படி இயேசு தளகர்த்தர் சொல்லுகிருர். உஷ்ணமான பாழ் வனந்தரங்களிலும், குளிரான மலங்காடுகளிலும், குளிர்ஜுரமும், விஷஜுரமும், மலைஜுரமும் உண்டாகும் சதுப்பு நிலங்களிலும், நல்ல தண்ணீர் கிடையாத உவர் நிலங்களிலும், யானை, புலி, சிங்கம் வசிக்கும் புதரடர்ந்த காடுகளிலும், நரமாம்ச பட்சணிகள் பிழைக்கும் காரிருள் அடவிகளிலும் கிறிஸ்து செல்கின்ருர். அவர் பின்னே சென்று ஆத்துமாக்களை இரட்சிக்க யார் போவார்?

விண் கிரீடம் பெறப் போருக்கு
கிறிஸ்தேசு செல்கின்ருர்
அவரின் வெற்றிக் கொடிக்குக்
கீழாகப் போவோன் யார்?
தன் கஷ்ட பாத்ரம் குடித்து
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின்செல்வோன் யார்?

"இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்" என்று யார் சொல்வார்?

முற்றிற்று.

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

192. நாளடவி லேகனலி–நலிந்து மெலிந்ததற்கோ
வேளவன் தவிடதை–வேண்டுமெட்டுந் தின்றதற்கோ
193. எஜமா னுடனவனும்–எதிர்த்து மொழிந்ததற்கோ
விசனமுட னவனை–வேலைவிட்டு நீக்கினனே
194. சிந்தைவைத்துப் பன்றிகளை–தினந்தினம் பாராமல்
மந்தபுத்தி யானதற்கோ–மன்னனும் தள்ளிவிட்டான்
195. என்னசெய்வான் டம்பன்–ஏதுசெய்வா னிப்போது
மன்னவன் மகனுடைய–மந்தபுத்தி நீங்கிற்று
196. புத்தி தெளிந்தவனும்–புகலிடங் காணேனே
சத்திய மாகவேநான்–சாற்றரும் பெரும்பாவி
197. மூத்தோர்சொல் வார்த்தைகளை–மூடனுன் கேளாமல்
தாத்திரி மீதிலிப்போ–தரித்திர னுனேனே
198. என்னத்தைச் செய்திடுவேன் – எங்கே பிழைத்திடுவேன்
பன்னகவாய்த்தவளைப்–பாடெனக்குண்டாச் சுதல்லோ
199. என்றகப்ப ஞர்வீடு–எத்தனையோ விஸ்தாரம்
தின்புறு மகனெனக்குத்–தூங்கிட வுந்தாவி
200. சிந்தையொன்று மில்லாமல்–சீருடனே யென்னுடைய
தந்தைமனை யிலிருந்தேன்–தன்னந் தனியானேன்
201. எந்தையுட வீட்டில்–எத்தனையோ கூலிஜனம்
சிந்திவிடு மன்னம்–தின்னக் கிடைக்கலையே
202. வயாரப் போஜனம்–வயிராறத் தின்னவன்னம்
ஓயா திருந்துமிங்கே–ஒண்டி யிருக்கலாச்சே
203. புலம்பி யழுதுநெஞ்சம்–புண்ணுகு தென்ன செய்வேன்
தலமிதை விட்டின்னே–தந்தையில்ல மேகிடுவேன்
204. வெட்கமதை விட்டெந்தன் – மேலானத் தந்தைமனை
கிட்டியே சேர்ந்துநான்–கிளப்புவே னெந்தையற்கு
205. எந்தையே உம்முடைய–ஏழைமகன் சொல்மொழியை
சிந்தை யுடன்கேட்டு–செய்திடுவீ ரோர்தயவை
206. மூடனு னேயுமக்கு–முன்பாக வும்பரம
கடவுள்முன் பாகவுமே–கன்மங்கள் தான்புரிந்தேன்
207. உம்முடைய பிள்ளையென்று–ஓர்காலு மெண்ணுதீர்
உம்மனையி லுட்களிலே–ஒருவனு னென்றெண்ணி
208. காப்பாற்ற வேண்டுகிறேன்–காருண்யத் தந்தையரே
கூப்பாட்டைக் கேளுமெனக்–கும்பிடுவே னென்றுசொல்லி
209. எழுந்தா னதிவிரைவாய் – ஏகப் புறப்பட்டவன்
அழுகை யுடனேதன்–அம்மான் வழிநடந்தான்
210. சோர்ந்துவழி யில்வீழ்வான்–தொய்ந்திடுவான் பசியால்
சார்ந்திடுவான் மரத்தில்–சலித்துத் திரும்பக்கொஞ்சம்
211. எட்டி யடிகள்வைத்து–எத்திக்கும் பாராமல்
மட்டி மகனவனும்–மடமடன் றேநடந்தான்
212. தண்ணீர்க் கிடைக்காமல் – தாகத்தி னுல்தவித்து
புண்ணுக நொந்துமனம் – போவான் வழிநடந்து
213. கண்ணீ ருதிர்த்திடுவான்–கால்நோக வேநடந்து
மண்ணில் வருத்தமுற – வாஞ்ஞைக்கி தானமுவான்
214. பெற்றமனம் பித்து – பிள்ளை மனங் கல்லென்னும்
உற்ற முதுமொழியும் – உண்மை யெனக் கொள்வோமே
215. காருண்யத் தந்தையற்–பக்கால மிழந்திருந்த
சீரழிந்த யிம்மகனைத்–தேடுவா னென்னேரம்
216. அங்குமிங்கும் பார்த்து–அங்கலாய்த் தேங்கிடுவான்
எங்கு வருவானென்றே–ஏக்கம் பிடித்திடுவான்
217. கண்ணீர் சொரிந்திடுவான்–கையை முறித்துப்பல
எண்ணங்கள் கொண்டுதினம்–ஏமார்ந் தயர்ந்திடுவான்
218. அழுதகண் ணீராய்ப்பல–ஆண்டுகள் தான்கழிய
விழுந்து தடுமாறி–வீதிவழி யோர்தினத்தில்
219. கந்தைத் துணியோடும்–கரிக்கோலத் தோடும்நிற்
பந்த நரனொருவன்–பாட்டைவரக் கண்டவனும்
220. எந்தன்மகன் தானுஎன்–னருமைக் கண்மணியோ
கந்தைத் துணிக்கட்டி–கால்நடையில் வாரானே
221. மைந்தனே நீதானே–மரகதமே நீதானே
சிந்தை கலங்கிமிக–சீரழிந்து வாராயோ
222. என்றுசொல்லி வேகமுடன்–எட்டிநடந் தோடிவந்து
நின்றங்கு பார்க்கையிலே–நிச்சயமாய் மைந்தனென்று
223. கண்டறிந் தாவலொடு–கழுத்தைக் கட்டியணைத்து
கொண்டழுது முத்தமிட்டுக் –கொண்டேகி னன்மனைக்கு
224. நாற்றமதைப் பாராமல்–நல்ல மனதுடனே
ஏற்றுத் தகப்பனவன்–ஏகினு னில்லமதில்
225. அப்போதக் கெட்டமகன் – அப்பனையும் நோக்கியென்ன
செப்புவான் தந்தையரே–செய்மொழி யொன்றைக்கேளும்
226. பரத்துக் கடாதபெரும்–பாவிநா னேனே
சிரசா முமக்குமுன்னும்–சீர்கேடு தான்புரிந்தேன்
227. ஐயாவும் கோபத்துக்கும்–ஆண்டவனின் சாபத்துக்கும்
மெய்யாக வாளானேன்–மேன்மகனு னல்லயினி
228. ஆதலா லேயினிமேல்–அல்லநா னும்பிள்ளை
மேதினியிலும்முடைய–வேலையாளே நிஜமே
229. என்றே யழுதுகெஞ்சி–இரங்கினுன் தந்தையரும்
நின்று மனமுருகி–நீதிசெய்தா னப்போது

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினால் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணாவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணா கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணாவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாப் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 annas Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, R. T. & B. S. Depôt, Memorial Hall, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையெப்பம் முன்னதாகவே அனுபவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு தரத்துக்கு 4 அணா; அல்லது அணா அணா தபாதுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு தரத்துக்கு ரூ. 1-0-0.

பதிரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் தயவுசெய்து தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல ஹாலுக்கெதிர ட்ராக்ட் டிப்போ மானேஜர் அவர்கட்கு தெரிவிக்கவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916.

Registered No. M. 442.

RECEIVED 11 MAY 1916 MADRAS

சத்திய தூதன்.

MAY, 1916. PRICE, 1 PIE.—விலை, 1 பை. மேமீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

விதேஷ விண்ணப்பம்.—லண்டனிலே ஆயிரம் குருமார் கூடி யுத்த நிர்ப்பந்த நிவர்த்திக்காகக் கடவுளைக் கருத்தாய் வேண்டிக்கொண்டார்களாம்.

கிறிஸ்தவ முயற்சி. — சமயோ என்னும் நீலி லுள்ள கிறிஸ்தவர்கள் பிறருதவி சற்றுமில்லாமல், தாங்களே போய்ப் பிரசங்கம்பண்ணி, வேறு ஐந்து நீவாசைக் கிறிஸ்துமார்க்கத்துக்குத் திருப்பியிருக் கிறார்களாம்.

பனமா வாய்க்கால். — இந்தப் பிரமாண்ட மான வாய்க்காலிலே இன்னும் சில குறைகள் இருப்பதால் அதன் ஓரத்தில் ஒரு ரெயில்வே அல்லது இருப்புப்பாதை போடப்போகிறார்கள். வாய்க் காலும் கப்பல் யாத்திரைக்குத் திறந்தாயிற்று.

நேட்டைப் பெண்கள். — உலகத்தின் அதிக நெட்டைப்பெண்கள் இங்கிலாந்தில்தானுண்டு. அதற்கு இரண்டாவது அமெரிக்கப் பெண்கள், அப் புறம் பிரெஞ்சுப் பெண்கள். இவர்கள் பார்வையில் இந்திய பெண்கள் குட்டையென்றே தீர்க்கவேண்டும்.

ராஜ உதாரத்துவம்.—நமதரசர் யுத்தச்செலவுக்காக 15 லட்சம் ரூ. தென்தரணி கொடுத்தருளினர். இது பெருங்கொடை, ஏறக்குறைய ஒரு வருஷ ரொம்படிக்குச் சரியாம். இதற்ற்க, ஜர்மன் கைசர் பிரசைகாரனும் விடுகிறானாம். எப்படியெனில், அவருடைய திரவியமெல்லாம் இங்கிலாந்து முதலிய ராஜ்யங்களின் பாங்கில் போட்டிருக்கிறது. சட்டப்படி அதுகளெல்லாம் இப்பொழுது எடுத்தக்கொள்ளப்பட்டன.

ஏழைத்து வாசையாற்றவர்.—அதாவது, படிக்கத் தெரியாதவர்கள்; தம்பெயரை எழுதத் தெரியாதவர்கள். ஜர்மனி, நார்வே, ஸ்வீடன், சுவிட்சர்லந்து இத்தேசங்களிலே 100-இலே ஒருவன்தான் படிக்கத் தெரியாதவன்; பிரான்சில் 5 பேர்; பிரிட்டிஷ் ராஜ்யத்தில் 6; அமெரிக்காவில் 10; ஆஸ்திரியா வில் 31; இத்தாலியாவில் 44; ரஷியாவிலும், லங்கையிலும் 78; இந்தியாவிலோ 92 பேர். கல்வி விஷயத்தில் இந்தியாதான் உலகத்தில் கடைசித்தேசம். இந்த ஏற்றத்தை நீக்க இந்தியர் யாவரும் பிரயாசப்படவேண்டும்.

காதேப் பஞ்சம். — காதிதம் பெரும்பாலும் ஒருவித மரப்பட்டையிலிருந்து உண்டாக்கப்படுகிறது. இந்த மரம் ஸ்வீடன் தேசத்திலே அதிகமுண்டு. இப்பொழுது இத்தேசம் இந்த மரவற்றை மதியை நிறுத்திவிட்டதால், இங்கிலாந்திலே காகிதப்பஞ்சம் தொடங்கியிருக்கிறது. அனேக பத்திரிகைகளும் நிறுத்தப்பட்டன. இந்தப் பஞ்சம் இந்தியாவுக்கும் எட்டியிருக்கிறது. இங்கே இப்போது காகிதவிலை இரட்டித்துவிட்டது. இந்நாட்டிலே மூங்கிலிலிருந்து கோர்த்தியான காகிதம் உண்டுபண்ணலாமென்று சிலர் எண்ணுகிறார்கள். காகிதத்துக்காக மாத்திரமல்ல, வேறனேக சாமான்களுக்கு இந்தியாவிலேயே கைத்தொழில், யந்திரத் தொழிலேற்பாடுகள் ஆரம்பித்து, லாபம் சம்பாதிக்கத்து உசிதகாலம். வியாபாரத்தை ஜப்பான் விளாவ்ப் பிடித்துக்கொள்ளுகிறது நமக்கு வெட்கமல்லவா? ஜப்பான் நமது சமைக்கு ஒருவருஷத்துக் கப்புக்கிற சரக்குகள் 30 கோடி ரூ. பொறுமானதாம்.

புது கவர்னர் ஜெனரல்.—ஐந்தாவது வருஷம் கவர்னர் ஜெனரலாயிருந்து, இங்கியர்களுடைய அன்பைபும் விஸ்வாசத்தையும் கவர்ந்துகொண்ட லார்ட் ஹார்டிஞ் அவர்கள் இங்கிலாந்துக்குப் போக, லார்ட் கெம்ஸ்பர்ட் அவர்கள் புது கவர்னர் ஜெனரலாக வந்திருக்கிறார் இவர் முந்தி ஆஸ்திரேலாவிலே கவர்னராக இருந்து அனுபோகம் பெற்றவர். அவர் பம்பாயிலே இறங்கின உடனே பிரஜைகளால் அதிமாக உபசரிக்கப்பட்டு, டில்லிக்கும் கல்கத்தாவுக்கும் போய் இப்பொழுது பிம்லாவில் இருக்கிறார். லார்ட் ஹார்டிஞ் போலவே புது வைஸ்ராயும் (ராஜ பிரதிநிதி) இங்கியாவின் அபிவர்த்திக்காக முயற்சி எடுப்பதாக வாக்களித்திருக்கிறார். அவருக்குப் பத்தினியாரும் நாலு பெண்மக்களுமுண்டு. லார்ட் ஹார்டிஞ், தாமும் தனையனும் இழந்தவராய் இங்கிலாந்துக்குப் போயிருக்கிறார். அங்கே அவருக்கு பெரிய உத்தியோகம் கிடைப்பது நிச்சயம். கவர்னர் ஜெனரல், கவர்னர், கௌன்சில் மெம்பர்கள் எல்லாரும் ஐந்து வருஷம்மாத்திரம் உத்தியோகத்தி லிருக்கவேண்டும். இது நல்ல ஏற்பாடு. நீண்டிருந்தால் இவையோருக்குக் கஷ்டமும், அரசாட்சிக்கு நஷ்டமும் உண்டாகுமென்று எண்ணப்படுகின்றது.

யுத்த வரலாறு.—சென்றமீ வர்டன் பட்டணத்தை ஜர்மன்கள் மூற்றுகை போட்டும் அதைப் பிடித்துப் பாரிஸ் மார்க்கமாய்ப் பிரயாணப்பட முடியாமல் ஒன்றரை லட்சம் போர்வீரர்களை இழந்து கிடந்த சங்கதியை அறிவித்தோம். இப்போது 90 தினமாயும் அங்கேயே குண்டு சுட்டும், கைச்சண்டை செய்தும் கொண்டிருக்கிறார்கள். பாரிஸ் நகரத்துக்கு வர்டன் பட்டணம்தான் சுகமான மார்க்கமாகையால் ஜர்மன்கள் அதைப் பிடித்து ஒருவழி உண்டுபண்ணிக்கொள்ள பிரசப் பிரயத்தனஞ் செய்துவருகிறார்கள். இதுநிற்க, இந்த இரண்டுவருஷ யுத்தத்தால் யூரோப்பு முழுவதும் அலங்கோலமாய்ப் போகிறது. புருஷர்கள் யாவரும் போர்க்களத்தில் மாண்டுவருகிறார்கள். பதினைந்துவயது சிறுவர்கள்மாத்திரம் அந்தந்த தேசங்களில்இருக்கிறார்கள். இவர்கள்என்னசெய்யமுடியும். வித்தை வித்தி அடையவில்லை. பயிர்வேலை, தொழில்வேலை நிறுத்தப்படுகிறது. வரிகள் உயர்த்தப்படுகிறது. ராஜ்யங்கள் யாவும் கடன்கார நாடுகளாகி விடுகிறது. வர்த்தகம் பெரும்பாலும் நின்றுவிட்

மேமீ பஞ்சாங்கம்.—

வாரம்.	மேமீ = சித்திரை—வைகாசி. ● அமாவாசை, 1, 31. ○ பௌர்ணமி, 17.						சித்திரை—வைகாசி.			
ஞாயி ...	...	7	14	21	28	...	25	1	8	15
திங்க...	1	8	15	22	29	19	26	2	9	16
செவ்...	2	9	16	23	30	20	27	3	10	17
புதன்...	3	10	17	24	31	21	28	4	11	18
வியா ...	4	11	18	25	...	22	29	5	12	...
வெள்...	5	12	19	26	...	23	30	6	13	...
சனி ...	6	13	20	27	...	24	31	7	14	...

Vol. XXIX. No. 7.

3-5-16
4.200

டது. வாரந்தோறும் அனேக கப்பல்கள் மூழ்விக்கப்படுகின்றன. எத்தனையோ ஆகாயக் கப்பல்கள் தரையில் வீழ்த்தப்பட்டு நாசமாகின்றன. பிரஜைகள் பஞ்சத்தால் வருந்திப் பட்டினி கிடக்கிறார்கள். சமஸ்தரும் சமாதானத்துக்கு ஏங்கி வருந்துகிறார்கள். ஜர்மன் அகங்காரம் அடங்கும்வரையும், சண்டை நீடித்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. உலகத்தையெல்லாம் ஜெயித்து தலைராஜ்யமாக ஏனைய ராஜ்யங்களையெல்லாம் அடக்கியாண்டு பூலோகத்தில் அக்கிரமஞ்செய்வதே ஜர்மன்களுடைய முக்கிய அபேக்ஷை. இதை எதிர்த்து அடக்கவேண்டியே இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ரஷியா ஒன்றுகூடி விடாமுயற்சியாய்ப் படையெடுத்து வருகிறார்கள். வாஸ்தவத்திலே இந்த யுத்தம், நீதிக்கும் அநீதிக்கும், தர்மத்துக்கும் அதர்மத்துக்கும், நாகரீகத்துக்கும் அநாகரீகத்துக்கும், கொடுமைக்கும் நேர்மைக்கும் நடக்கிற சண்டை. நம்மவர்களே நாள்தோறும் ஜயமடைந்து வருகிறார்கள். ரஷியா திராபிசாண்ட் என்னும் முக்கியகடற்கரைப் பட்டணத்தைப் பிடித்தாயிற்று. இதனால் துருக்கர் சேனை இரண்டாகப் பிரிக்கப்பட்டுப் போயிற்று. அமெரிக்காவுக்கும் ஜர்மனிக்கும் யுத்த முண்டாகும்போலத் தோன்றுகிறது. ஜர்மன்கள் எதிரிகள் கப்பல்களை மாத்திரமல்ல, பிறர் கப்பல்களையும் மூழ்குவித்து உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் நடப்பித்து வருகிறது. சட்டத்துரோகமென்று அமெரிக்கர் வழக்காடுகிறார்கள். இவ்வக்கிரமம் நிறுத்தப்பட்டால் ஜர்மன்கள் தப்பினார்கள்; இல்லாவிட்டால் அமெரிக்கரோடும் யுத்தஞ்செய்ய நேரிடும். கெடுமதி கண்ணுக்குத் தோற்றாது.



பர்மா த்வஜஸ்தம்பங்கள்.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

இருபதாவது கதை.

செட்டியார்க் கதை.

ஒரு கிராமத்தில் ஜவுளிவியாபாரம் செய்கிற செட்டி ஒருவனிருந்தான். அவன் எப்பொழுதும் பட்டணங்களில் போய் ஜவுளி மொத்தமாய் வாங்கி வந்து தன் கிராமத்தில் லாபத்துக்கு விற்றுவந்தான். அப்படியே ஒரு தடவையில் பட்டணம்போய் ஜவுளி வாங்கிவர ஆயத்தப்பட்டான். ஆனால் தன் பணத்தைச் சுமந்துகொண்டுவர ஒரு கூலி ஆள் தேடினான். அப்போது அறுப்புக்காலமாக இருந்தபடியினால் கூலியாள் கிடைக்க மகா கஷ்டமாயிருந்தது. ஆனாலும் ராமன் என்ற ஒரு பெயருடையவன் செட்டியாரிடம் வந்து, செட்டியாரே, நான் இந்தப் பணமூட்டையைச் சுமந்து வருகிறேன், நான் கேட்கிற கூலி தருவீரா என்றான். அப்போது செட்டியார் நல்லது அப்படியே ஆகட்டும் என்றார். அதற்கு ராமன் செட்டியாரே எனக்கு அதிகமொன்றும் தேவையில்லை. ஆனால் ½ ரூபாயும், 3 டிராம் சாராயமும் கொடுத்தாற் போதும் என்றான். அப்படியே செட்டியும் சம்மதித்து: நல்லது, கொடுக்கிறேன் அப்பா, இன்று இரவு நல்ல நிலவு வெளிச்சமிருக்கிறது. ஆகையினால் நாம் கஷ்டமின்றிப் போகலாம், 6 மணிக்கு நன்றாய்ச் சாப்பிட்டுவிட்டு வந்துவிடு என்றார். அப்படியே இராமன் சம்மதித்து வீட்டில்போய் நன்றாய்ச் சாப்பிட்டுவிட்டுச் செட்டிவீடு வந்தான்.

செட்டி பணத்தையெல்லாம் ஒரு பையில் போட்டு நன்றாய்க் கட்டி இராமன் தலையில் ஏற்றினான். அப்போது இராமன் சொன்னான்: செட்டியாரே, அதிக பளுவாக இருக்கிறது. ஆனாலும் நான் சுமக்கிறேன், முன்னதாக நீர் சம்மதித்தபடி 8 அணாவும் 3 டிராம் சாராயமும் கொண்டு வாரும் என்றான். உடனே செட்டி 8 அணாவும் எடுத்துக் கொடுத்தான். அதை இராமன் வாங்கித் தான் கட்டியிருந்த வேஷ்டியில் முடிப்பிட்டான். பின்பு 3 டிராம் சாராயமும் கொண்டுவாருமென்றான். உடனே செட்டியார் தான் சொன்னபடி 3 டிராம் சாராயமும் வாங்கிக் கொடுத்தார்; அதையும் வாங்கிக் குடித்துக்கொண்டான். ஆகவே இராமன் மெத்த ஆனந்தமாகப் பணமூட்டையைத் தன் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டு, செட்டியாரே, புறப்படும் தடையில்லை யென்றான். உடனே செட்டியும் புறப்பட்டான். ஆக இருவரும் நிலவு வெளிச்சத்தில் கிராமத்தை விட்டுப் புறப்பட்டு நடந்து போகிறார்கள். ஐந்துமைல் தூரம்போனதும் செட்டியாருக்கு தூக்கப் பிசாசு பிடித்துக்கொண்டது, கண்ணை மிரட்டுகிறது. உடனே செட்டி இராமனைப் பார்த்துச் சொல்லுகிறான்; அடே இராமா! எனக்கு நித்திரை மயக்கம் உண்டாகிறது, நடக்க முடியுதில்லை; இந்த மரத்தடியில் கொஞ்சநேரம் தூங்கிவிட்டுப் போகலாம் என்றான். அதற்கு இராமன், செட்டியாரே ஒரே நடையாய் நடந்துவிடலாமே யென்றான். செட்டியோ அது முடியாது என்று மறுத்து நித்திரைசெய்துதான் போகவேண்டுமென்றுசொல்லி நின்றுகொண்டான். அப்போது இராமன் சொன்னான், நல்லது செட்டியாரே உமது இஷ்டப்படியே செய்வோம் என்று சொல்லி இருவரும் தங்கினார்கள்.

உடனே செட்டியார் தன்னுடைய பணமூட்டையை இராமனிடமிருந்து வாங்கி ஒரு செடிமறைவில் தலைப்பக்கத்தில் ஒரு குழித்தோண்டி அதினுள் பணமூட்டையை வைத்து மூடிவிட்டு தன்னுடைய தலையை அந்தக் குழிமேல் வைத்து நித்திரை செய்யலானான். இராமனும் அவன் பக்கத்தில் படுத்துக்கொண்டான். கொஞ்ச நேரத்திற்குள் செட்டியாருக்குப் பிடித்திருந்த தூக்கப்பிசாசு இராமனுக்கும் பிடிக்கலாச்சுது. ஆகவே இருவருமாக நித்திரையில் அமிழ்ந்துவிட்டார்கள். இராமனே தான் படுத்திருந்த இடத்தை விட்டு உருண்டோடி நடுரோட்டில் குருக்கே மனிதர் அங்குமிங்கும்போக இடமில்லாதபடி படுத்துக் கொண்டான். இப்படி இவர்கள் நித்திரைசெய்துகொண்டிருக்கும்பொழுது திடீரென்று பத்துத் திருடர்கள் அன்று திருடும்படியாகப் போய் ஒன்றும் கிடையாமல் மனவருத்தத்தோடு அவ்வழியாக வருகிறார்கள். ஆனால் அந்த ரோட்டுப்பாதை மெத்த ஒடுங்கி இருந்ததினால் அவர்கள் வேறு வழியாகப் போவதற்கு பயன் தென்படவில்லை. ஆனாலும் கஷ்டத்துடனே ரோட்டை விட்டு இறங்கி மேலூடிப் போகும்பொழுது ஒருவனுக்கு காலில் கல்லொன்று தட்டி இரத்தம் வரவே கோபமூண்டு இது என்னடா சனியனாயிருக்கிறது மரக்கட்டைபோல் வழியில் படுத்துத் தூங்குகிறான் என்று சொல்லிக்கொண்டே தன் கோபத்தை ஆற்றிக்கொண்டு போகும்பொழுது படுத்திருந்தவன் சும்மாயிருக்கக்கூடாதா எழுந்து உட்கார்ந்துக்கொண்டு சொல்லுகிறான். என்னப்பா மரக்கட்டையென்று சொல்லிக்கொண்டு போகிறாய்? இது மரக்கட்டையுமில்லை மண்ணாங்கட்டியுமில்லை. ஆனாலோ மனிதக்கட்டைதான் ½ ரூபாயுடனிருக்கிறது என்று சொன்னான். உடனே அந்தத் திருடர்கள் திரும்ப யோசித்துத் தங்கள் மனதில் சிந்திக்கலானார்கள். ஆனாலும் அரை ரூபாய் என்ற சத்தம்போலத் தெரிகிறதே என்று யோசித்து போய்ப் பார்க்கலாம் என்று வந்தார்கள். இராமன் உட்கார்ந்திருந்தான். அவர்களே இவனை ஆளுக்கொன்றாக உதைத்து ½ ரூபாய் முடிச்சையும் அவிழ்த்தெடுத்துக்கொண்டு போகிறபொழுது சமுசயித்து ரூபாயை வெளிச்சத்தில் மெதுவாக கையைத் திறந்து பார்க்கிறார்கள். இதுவென்ன் துட்டா ரூபாயா செல்லுமோ செல்லாதோ என்றார்கள்; ஆனால் வாஸ்தவமாகவே ½ ரூபாய்தான். உடனே அவர்கள் மனச்சந்தோஷத்துடன் ஆலை இல்லாத ஊரில் இலுப்பப்பூச் சர்க்கரை என்றாற்போல் இதாவது கிடைத்ததே என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே போகிறார்கள்.

அதையும் கேட்டுக்கொண்டிருந்த இராமன் மறுபடியும் என்னப்பா அப்படிப் பேசிக்கொண்டு போகிறீர்கள். ஒருவேளை செல்லுமோ செல்லாதோ என்கிற சந்தேகமிருந்தால் செட்டியார் மரத்தடியில் படுத்திருக்கின்றார் கேட்டுக்கொள்ளுங்கள் என்றான். போய்க்கொண்டிருந்த திருடர்கள் என்ன இது அதிர்ஷ்டப்பலனோ என்னமோ தெரியுதில்லை. செட்டியாரைக் கேளுங்கள் என்று சொல்லுகிறானே போய் அதையும் பார்ப்போம் என்று சொல்லி மறுபடியும்வந்து, இராமனை உதைத்தார்கள். அவன் உதையை பொறுக்கமுடியாமல் அதோ செட்டியார், செட்டியார் என்று சொன்னான். உடனே செட்டியிடம்போய் அவனையும் ஆளுக்கொரு உதையாக்கொடுக்கவே பணமிருக்கிறது அதையாவது எடுத்துக்கொள்ளுங்கள், என்னை அடிக்காதேயுங்கள் என்று சொல்லவே, அவர்கள் அதிகச் சந்தோஷத்துடன் பணத்தையெல்லாம் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். ஆனால், உதைகள்பட்ட செட்டியாரும் இராமனும் அதிகத் துக்கத்துடன் தூங்கினதினால் நமக்கு வந்த கெடுதி என்று நினைத்து பட்டபாடு போதும் என்று ஊருக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். துர்ச்சகவாசம் எந்நாளும் கெடுதி விளைவிக்கும்.

G. D.

HISTORY OF THE WAR

ஐரோப்பா யுத்த சரித்திரம்

“அன்பார்ந்த பண்டிதர் கங்காதரம்பிள்ளை அவர்கட்கு, நீங்களனுப்பிய யுத்த புஸ்தகமும் கடிதமும் பத்திரமாய்ச் சேர்ந்தது. அதில் ஏற்படுத்தியிருக்கும் தேசப்படமும் யுத்த வீரர்களின் படமும் மிக அழகாக இருக்கின்றன. சுலபமான நடையில் தான் எழுதியிருக்கிறீர்கள். இந்த நடை கிராமத்தாருக்கும் ஸ்கூலில் படிக்கும் சிறுபிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் சாதாரணமாய்த் தெரியுமென்பதற்குச் சந்தேகமில்லை. கவர்னர் அவர்கட்கு எழுதின தமிழ்மாத்திரம் கொஞ்சம் கடினம். ரெவரண்ட் டாக்டர் லாஸரஸ் அவர்களின் முகவுரைப்படி இந்தப் புஸ்தகத்தைப் பள்ளிக்கூடத்தில் ஏற்படுத்துவார்கள் என்று நினைக்கிறேன். இந்த ஒரு புஸ்தகம்தான் தமிழில் இவ்வளவு படங்களோடு கூடிய யுத்த புஸ்தகம். நேர்த்தியான காகிதத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றது. தாங்கள் திருச்சிக்கு மறுபடியும் வரும்போது தயவுசெய்து என்னைப் பார்க்கவும்.” தங்களுடைய “பிராஸ்பெக்டஸ் புஸ்தகத்தில் உள்ள தமிழ் சம்பாஷணையைப் படிக்க அதிக சந்தோஷமாயிருந்தது. மிஸ்டர் மேலோனிக்கு என் வந்தனத்தைச் செலுத்தவும்.” * *

மேற்படி கடிதத்தை அகால அக்கிரம மரணத்துக் கிரையான கனம் ஆர். ஒ. டி. ஹார்டிஞ், ஐ. சி. எஸ். அவர்கள் ம-ா-ா-ஸ்ரீ கங்காதரம் பிள்ளையவர்கள் இயற்றிய யுத்த சரித்திரத்தைப்பற்றி எழுதியனுப்பினார்கள்.

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

230. தேனேமெயன் றெள்ளமுதே-தேடிவந் தாயெனை நீ
மானே யுனைமுழுதும்-மன்னித்து விட்டேனே

231. என்றைக்கு வந்தெனை நீ-இரங்கிக் கெஞ்சுவையென
அன்றுதொட் டின்றுவரை-அங்கலாய்ப் போடிருந்தேன்

232. ஆயாசங் கொள்ளாதே-அலுப்புற் றிருக்காதே
நேயா எனைவிட்டினி-நீங்காதே யென்றழுது

233. குரல்விட்டுத் தந்தையரும்-கூப்பிட்டு ஊழியர்க்கு
தரித்திர னுகஎன்தன்-தனயனும் வந்துவிட்டான்

234. வெந்நீரி லேயிவனை-மெல்லக் குளிப்பாட்டி
பந்நீரும் சந்தனமும்-பண்பாக வேதெளித்து

235. உயர்வான வஸ்திரத்தை-உடுத்தியிப் பாலனுக்கு
வயிரக்கல் மோதிரத்தை-மாட்டும்கை விரலிலே

236. பாதங்களுக் கழகுப்-பாதரட்சை போடுங்கள்
சோதனத்தை யுமடித்துக்-கொண்டாடு மூழியரே

237. மகனு மரித்திருந்தான்-மறுபடி யும்முயிர்த்தான்
இகந்தனிற் காணுதான்-இன்றேஎன் கைகளிலே

238. அகப்பட்டுக் கொண்டானே-ஆகையால் வாத்தியங்கள்
மிகவு முழக்கிடுங்கள்-மீண்டும் நடித்திடுங்கள்

239. என்றானே ஊழியர்கள்-எல்லாரும் சீக்கிரமாய்
ஒன்றாகச் சேர்ந்துடம்பன்-உடுப்பதை யேகமுற்றி

240. பையனை வெந்நீரில்-பக்குவம தாய்க்கழுவி
வையம் புகழும்-பரிமளங்க ளெல்லாம்பூசி

241. அவன்விர லிலுயர்ந்த-அபராஞ்சி மோதிரத்தை
உவந்துமே போட்டபின்னர்-உயர்வான வஸ்திரத்தை

242. தந்து உடுத்தியிரு-தாள்களுக்கும் பாதரட்சை
சந்த துடனவனும்-தரித்திடச் செய்தார்கள்

243. இறைச்சி தனையருந்தி-எல்லவ ருமகிழ்ந்து
சிரத்தையாய் வாத்தியங்கள்-சீராய் நடத்தினார்கள்

244. வாத்தியங்கள் நாட்டியங்கள்-வகைவகையாய்முழங்கும்
நேர்த்தியாம் சத்தங்கள்-நிறைந்ததுவே யில்லமதில்

245. மூத்தமகன் வேலைகளை-முடித்து வயலினின்று
ஆத்திர மாய்வரவும்-அதிசயப் பட்டானே

246. வாத்திய சத்தங்களும்-மகிமைய தாய்தொனிக்க
சாத்தியப் பட்டதென்ன-சாற்றவுங் கேட்டிலனே

247. என்று மனதிலெண்ணி-ஏங்கியோ ரூழியனை
அன்றே யழைத்தனைத்தும்-அடியோ டறிந்துகொண்டு

248. கிரகத்தி னுள்நுழைய-கிஞ்சித்துங் கேளாமல்
சரணத்துக்கு வெளியே-சலிப்பாக நின்றுவிட்டான்

249. தயவான தந்தையரும்-தநயனிட மோடிவந்து
நயமுட னேபேசி-நந்தனனே உள்ளேவா

250. என்றே வருந்தியுமா-எழிலான மூத்தமகன்
நின்றேதன் தந்தையற்கு-நியாயமொன்று சொன்னான்கேள்

251. என்னருமைத் தந்தையரே-எந்நாளு நானுமது
பன்னரு மாளிகையில்-பணிவோ டிருந்துசர்வ

252. வேலைகளைப் புரிந்தேன்-வெகுவாகக் கீழ்ப்படிந்தேன்
காலையிலும் மாலையிலும்-களிவோ டுழைத்துவந்தேன்

253. வீட்டி னலுவல்களை-விரைவாக யெங்குமோடி
நாட்டமு டன்றினமே-நான்செய்து வந்திருந்தும்

254. நானும் என்னேசருமோர்-நாளாகிலுங் களிக்கத்
தானுமோ ராட்டுக்குட்டித்-தந்தீரோ சொல்லுமைய்யா

255. தந்தை யுமதுசொத்தை-தாசிகட்கும் வேசிகட்கும்
சொந்த மெனவளித்துத்-தோற்றுவிட்ட தம்பியற்கு

256. காசு பணத்தையெல்லாம்-கள்ளிலுஞ்சா ராயத்திலும்
நாசம் பண்ணித்தொலைத்து-நலிந்துவிட்ட தம்பியற்கு

257. சூழ்ச்சியற்றுப் பணத்தை-சூதாட்டத் திலிழந்து
தாழ்ச்சி யடைந்துவந்த-சண்டாளத் தம்பியற்கு

258. தந்தைக் கடங்காதான்-தமையன்சொற் கேளாதான்
கந்த னிவனுக்கோ-கறிசமைத்துப் போடுவது

259. நன்று நம்மோடிவனும்-நாளும் பிழைக்காது
பன்றிகளை மேய்த்துவந்த-பைய னிவனுக்கு

260. ஆடலும் பாடலும்-அலங்கார வாத்தியமும்
வீடெங்கும் வாசனைகள்-வீசுவதும் ஆச்சரியம்

261. என்று எரிச்சலுடன்-எழிலாருந் தந்தையொடு
நின்று புகன்றானே-நெடும்பொழுது மூத்தமகன்

262. தந்தையு மப்போது-தயவாகச் சொல்லிடுவான்
எந்தன் மகனேநீ-எதுஞ்சினங் கொள்ளாதே

263. என்னுடைய வீடெனக்கு-எப்போதும் சொந்தமென்று
உன்னிடு வாயப்பா-உள்ளபொரு ளெல்லாமும்

264. உன்னுடைய தல்லோ-உல்லாச மாயிருநீ
சின்னவனுக் கென்னஉண்டு-சினமதை வைக்காதே

265. எந்நாளு மென்மனையில்-இருப்பதைத் தின்பதுதான்
பின்னேதுந் தம்பியற்குப்-பிரித்துக் கொடுப்பதுண்டோ

266. செத்தானிவ னொருகால்-திரும்ப உயிர்த்தானே
நத்தி மறுபடியும்-நயந்திங்கு வந்தானே

267. காணாமற் போயிருந்தான்-காணக் கிடைத்தானே
ஆணு மிவனுக்கா-யவரதங் களிப்போம்

268. என்றிவ் வாறவர்கள்-இன்பக் குடும்பமென
நன்று சுகித்திருந்தார்-கவலைக்கே ளிவ்வுலகை

269. நிதிவந்தனை நரன்-நிரம்ப னென்றறிவீர்
சதிசெய்த மகனிந்தத்-தாரணியில் தானுளரோ

(இன்னும் வரும்.)

BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DEPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்துச்
சன்மார்க்க சிறுபுஸ்தக சங்கத்தாரால்
தமது புஸ்தகசாலையில் விற்கப்படும்

புதிய புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
கிறிஸ்துவில் நிலைத்திரு	0	8	0
ஆடவர் கும்மி	0	1	0
கிரணமாலிகை	0	6	0
அருளாகமமும், ஆதிசின்னங்களும்	0	2	0
வேதாகம பிரசித்த விர்த்தாந்தம்	0	8	0
சந்திரலீலாள்	0	2	0
பிள்ளைகளும் சபையும்	0	2	0
புதிய ஞானப்பாட்டுகள் பெரியது	0	4	0
,, சிறியது	0	3	0
ஞானகீதங்கள் பெரியது	0	10	0
,, சிறியது	0	4	0
,, ஓர் அணா புஸ்தகம்	0	1	0
பாலர்ப் பாட்டுகள்	0	1	0
ஞானப் பாட்டுகளும், ஞான கீதங்களும் ஒன்றாய் சேர்த்துக் கட்டினது	0	12	0
சிலுவைத் திருவாசகம்	0	1	0
லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேசியர் வியாக்கியானம்	0	4	0
விசுவாசிகளின் நித்திய இளைப்பாறுதல்	0	8	0
கிறிஸ்துமார்க்க உதாரணங்கள்	0	3	0
திருச்சபை சரித்திரம்	1	4	0
மாதர் கும்மி	0	1	0
காலைத்தியானம்	0	8	0
மாலைத்தியானம்	0	8	0
பரதேசியின் மோட்ச பிரயாணம்	0	14	0
சற்குரு சதகம்	0	1	6
கெட்ட குமாரன் சரிதை	0	0	9
ஆத்தும விபசாயம்	0	1	6
கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்	0	2	0
மூதேவி சீதேவி வீடுகள்: ஓர் கதை	0	1	0
சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது)	0	14	0
திருப்போர் (Holy War) புதுப் பதிப்பு	0	12	0
நேச அழைப்பு	0	1	0
பிள்ளைகள் குணப்படுதல்	0	6	0
தினதீபிகை	0	2	0
தாவீதின் சரித்திரம்	0	1	6
நித்தியானந்தக் காதல்	0	1	0
சத்தியவாக்கன்	0	1	3
பயப்படாதே	0	1	0
மேசியா மகத்துவம்	0	3	0
நல்ல மேய்ப்பன்	0	2	0
தியானசோலை	0	1	6
இருதயக்கண்ணாடி	0	2	0
போதக தீபிகை	0	6	0
நிஸ்தார ரத்தினகரம்	0	1	0

	ரூ.	அ.	பை.
யோசேப்பின் சரித்திரம்	0	1	6
துக்கசாகரத்தோணி	0	1	6
சிறு தலையணைகள்	0	1	6
வேதபுருஷர் Vol. I	1	0	0
,, Vol. II	0	8	0
கிறிஸ்தாசன் சரிதை	0	3	0
இயேசுவின் சிந்தை	0	2	0
காலைமணிச்சத்தம்	0	1	6
அருணோதய ஜெபத்தியானமும் அஸ்தமான ஜெபத்தியானமும்	0	3	0
என் இராஜா	0	2	0
பாவத்தையும் பாவத்தினின்று இரக்ஷிக்கப்படுகிற விதத்தையும் குறித்த சம்பாஷணைகள்	0	1	0
நவோபநிஷதம்	0	1	6
பூர்வபாதை	0	3	0
கற்பனையின்மேல் கற்பனை	0	6	0
ரோமான்மார்க்க சீர்தூக்கல்	0	1	0
கிறிஸ்தவ உன்னத ஜீவியப் பிரசங்கங்கள்	0	1	6
சிலுவைத் திருவாசகம்	0	1	0
சண்முகநாத கவிராயர் ஜீவிய விருத்தாந்தம்	0	1	0
வியாதிப்படுக்கைத் தோழன்	0	2	0
உருவகங்களை விளக்கிய பிரசங்கக் குறிப்புகள்	0	8	0
திருஅவதாரமாலை	0	3	0
ஆத்தும வினவுக்கு தேவவிடை	0	3	0
நன்னெறிக்குறிப்பு	0	1	0
கிறிஸ்துவின் ஜெப பாடசாலை	0	12	0
பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடந்த தேவனுடைய ஞானதிசயங்கள்	0	3	0
திருப்பணிவிடை	0	2	0
யாத்திரைச்சிந்து	0	2	0

No.		ரூ.	அ.	பை.
5.	திரு அவதாரச் சரிதை	0	0	4
14.	ஞான தேசாந்தரி சரித்திரம்	0	0	3
18.	பிறனைக் கொன்றவன் கதை	0	0	3
20.	இரக்ஷண்ய சரிதை	0	0	2
29.	காவலப்பன் கதை	0	0	3
46.	ஞானோதயம்	0	0	2
55.	நிச்சய வழி	0	0	3
56.	பாவிகள் நீதிமான்களாவதைக் குறித்துச் சொல்லியது	0	0	3
58.	மோட்ச காரணம்	0	0	2
64.	ரோமான் குருவின் ஞானக்கண்ணாடி	0	0	2
101.	குரு	0	0	3
102.	சாஸ்திரம்	0	0	3
103.	பாவம்	0	0	3
104.	மனுஷன்	0	0	3
105.	தெய்வம்	0	0	3
113.	பிராமணன்	0	0	3
115.	நேச நிருபம்	0	0	3
116.	ஞானக்கும்மி	0	0	3
118.	வெற்றிச் சிறப்பு	0	0	2
122.	ஞான வத்தப்பாட்டு	0	0	3
124.	யோசேப்பின் சரித்திரம்	0	0	4
138.	கிறிஸ்தவன் பழி ஒறுத்தல்	0	0	2
139.	நல் விதவை நடபடி	0	0	4
155.	கடவுள் லக்ஷண மகத்துவம்	0	0	2
158.	பாலர் திருநாதன் கவிதை	0	0	3
159.	தைப்பொங்கல்	0	0	3
160.	தீபாவளி	0	0	2
161.	ஆயுதபூஜை	0	0	2
167.	ஜீவியக் கண்ணாடி	0	0	2
170.	பாலர் கீர்த்தனங்கள்	0	0	3
173.	அத்துவைதம்	0	0	2
174.	நற்போத கீதம்	0	0	3
175.	இராப்போசன தியானம்	0	0	3
180.	கிறிஸ்தவர்கள் தங்கள் தேசத்தாருக்குச் செய்யவேண்டிய கடமை	0	0	3
181.	சம்பாஷணை	0	0	3
184.	தாய்மாருக்கு உபதேசம்	0	0	6
186.	ஜெப ஞானக்கும்மி	0	0	2
188.	மெய்ஞ்ஞானக்கும்மி	0	0	3
187.	பாவத்தைப்பற்றிய துயர விண்ணப்பம்	0	0	2
194.	தத்துப்புத்திரன் கதை	0	0	2
195.	ஹிந்து சிநேகிதர்களுக்கு ஒரு வார்த்தை	0	0	1
20?.	சுவிசேஷகன்	0	0	2
206.	மாம்சசத்துக்குரியவர்களும் ஆவிக்குரியவர்களும்	0	0	2
209.	மகவை இழந்த மாதாவுக்கோர் பிரசங்கம்	0	0	2
21?.	மெய்ஞ்ஞானக்கும்மி 2-ம் பாகம்	0	0	3
217.	சிவகாசித் திருவிழா	0	0	3
218.	சூதாடுதல் தப்பிதமா	0	0	3

சிறுகதைகள்.

No.		ரூ.	அ.	பை.
1.	ஓநாய்க் கதை	0	0	1
2.	ஒரு பூசாரியின் கதை	0	0	1
4.	சண்டைக்காரிகள் கதை	0	0	1
7.	பிணையாளிக் கதை	0	0	1
8.	முதல் மனுஷன் கதை	0	0	1
9.	இராட்சதன் கதை	0	0	1
10.	பிராமண வாலிபன்	0	0	1
11.	குஷ்டரோகி சுகமான கதை	0	0	1
14.	ஒரு பையன் கதை	0	0	1
15.	வாழைப்பழக் கதை	0	0	1
16.	பகையை வெல்லும் மருந்து	0	0	1
18.	கடன் தீர்த்தோன் கதை	0	0	1
19.	ஜாதகக் குறிப்பு	0	0	1
27.	பாலியராஜன் கதை	0	0	1
29.	மாம்பழக் கதை	0	0	1
34.	ராஜகுமாரனுக்கு வகை	0	0	1
45.	பிள்ளையைப்போட்டு பலாப்பழம் எடுத்த ஓடை	0	0	1

☞ தபாற்கூலி வேறே.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery. Madras.

விளம்பரம்

இருவருஷச் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் கிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916.

Registered No. M. 442.

सत्यमेवजयति
THE MESSENGER OF TRUTH

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... JUN 1916 ... MADRAS

சத்திய தூதன்.

JUNE, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

மைசூரில் கலாசாலை.—இந்தச் சமஸ்தானத்தில் பிரத்தியேகமான ஒரு யூனிவர்சிட்டி அல்லது கலாசாலை ஏற்படுத்தப்போகிறார்கள்.

பெண் லாயர். — பங்காளத்திலே எம். ஏ., பி. எல்., பரிட்சை கொடுத்திருக்கிற ஒரு மாது சிரோமணி, கல்கத்தா ஹைக்கோர்ட்டிலே வக்கீலாக வேண்டுமென்று மனுக் கொடுத்திருக்கிறாளாம். அவள் பேர் குகா. இது மிகவும் வியக்கத்தக்கது.

யுத்த வரி.—யுத்தச் செலவுக்காக அதிக வரி போட்டிருக்கிறார்கள். சர்க்கரை, டீ, வட்டி வருமானம் முதலான காரியங்களுக்கு வரிப்போட்டிருக்கிறது. லண்டனிலே தச்சன், கொல்லன் முதலானவர்களுக்குத் தினம் 15 ரூ. கிடைக்கிறதாம்.

எருசலேம்.—எம்பெருமான் இயேசுகிறிஸ்து வசித்து உயிர்துறந்த பேர்போன நகரமாகிய எருசலேமில் தற்காலம் 97,000 பேருண்டு. அவர்களில் 70,000 பேர் யூதர்கள், 15,000 பேர் கிறிஸ்தவர்கள், 12,000 பேர் மகம்மதியர்.

இந்தியாவிற் பொன்.—இந்தேசத்தில் தினம் ஒன்றுக்கு 25,000 சாவிரென்கள் உருக்கப்பட்டு நகைகளாகச் செய்யப்படுகின்றனவாம். இதனால் நாணயங் குறைந்துவிடுகிறது மாத்திரமல்ல, அவ்வளவு திரவியத்தின் வட்டியும் நஷ்டமாய்ப் போகிறது.

யுத்தகாலம்.—யுத்தம் இன்னு மொருவருஷம் நடந்தால், ஜர்மனி சண்டைக்கு ஆளில்லாமல் அதை நிறுத்த நேரிடுமென்று ஸ்வீடின் சாஸ்திரி கூறுகிறார். தப்பித்தவறி வருகிற வருஷம் நடக்கிற யுத்தம் நிலத்திலல்ல நீர்மேல் நடந்து வெற்றியடையுமாம்.

ஜார்ஜ் சக்கரவர்த்தி.—நமது இந்திய சக்கரவர்த்தி ஜார்ஜ் அவர்கள் தற்காலம் ரஷியா பாஷை படித்துவருகிறார். யாது காரணத்தாலெனத் தெரியவில்லை. ஒருவேளை இங்கிலிஷ் ராஜ்யத்திலே மதுபான வியாபாரத்தைக் குறைக்க அல்லது முற்றிலும் நிறுத்திவிட நோக்கமாயிருக்கும்.

மைசூரிற் கல்வி முயற்சி. — மைசூர் சமஸ்தானத்திலே 7 வயது முதல் 14 வயது வரையுமுள்ள ஆண்பெண் பிள்ளைகள் அனைவரும் கட்டாயம் பள்ளிக்கூடம் வருகிற ஜூலைமீ தொடங்கிப் போகவேண்டுமென்று ஒரு சட்டம் பிறந்துவிட்டது. பரோடா ராஜ்யத்திலும் இதே சட்டம் சில வருஷங்கட்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது. இனி மலையாள சமஸ்தானத்திலும் இது ஏற்படும்போலிருக்கிறது. அவ்வாறாயின், நமது இங்கிலிஷ் ராஜ்யத்தில்மட்டும் கல்வி மிக்க கேவலமாயிருக்கும். தற்காலம் 100-க்கு 8 பேர்மாத்திரம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள்.

வைகறை யெழுதல். — அதிகாலையில் நித்திரைவிட்டெழும்புவதால் பாரிஸ் பட்டணத்தில் மாத்திரம் வருஷத்துக்கு 40 லட்சம் சாவரென் சேகரமாகுமென்று ஒரு பிரெஞ்சு வைத்தியர் கணக்கிட்டிருக்கிறார். இந்தியாவிலும் ஜனங்கள் ஆண் பெண்பாலார் வீண்காலம் போக்குவதற்குப் பதிலாக ஏதாயினும் ஒரு அற்ப சொற்ப வேலைசெய்தால் ஏராளமான திரவியம் சேருமென்பதற்கு ஐயமில்லை. அங்கிலேய மாதுகள் உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண்டிருக்கையிலே, தையல், பின்னல், முதலான ஒரு வேலை செய்துகொண்டே யிருப்பார்கள். வீண்பேச்சுப் பேசி, சுருட்டுப்பிடித்து, வெற்றிலைபோட்டு, பச்சிஸ் ஆடி காலங்கழிப்பதைவிட இவ்விதத் தொழில் எத்தனையும் சிறந்தது.

யுத்த விவரம். — மெசப்பொத்தாமியாவிலே சிலகாலமாக நமக்கும் துருக்கருக்கும் சண்டை நடந்து வந்திருக்கிறது. ஜர்மன் உதவிபெற்ற துருக்கர் குட் என்னும் ஒரூரை முற்றுகை செய்தார்கள். அதற்குள் 9,000 அங்கிலேய வீரரும் 6,000 இந்திய வீரரும் இருந்தார்கள். துருக்கருக்கு அவ்வூரைப் பிடிக்க முடியாமற்போனாலும் அவ்வீரருக்கு ஆகாரம் அத்தியாவசியமாயிருந்தது. தொலைதூரத்திலிருந்து ஆகாரம் சேரவேண்டியிருந்தும், நமது வீரர் 143 நாளாக அவ்வூரைக் காத்துவந்தார்கள். ஆகிலும் கடைசியில் ஆகாரமின்றிப் பசியும் பட்டினியுமாய்க் கிடந்து மனஞ்சலித்து அவ்வூரை எதிரிகையில் ஒப்புவித்துவிட்டார்கள். 15,000 வீரரும் கைதிகளாய்ப் போனார்கள். பெரிய யுத்தங்களிலே காலாகாலத்தில் இப்பேர்ப்பட்ட ஆபத்துகள் சம்பவிக்கிறது வழக்கம். இது ஒன்று போக, யுத்தம் நமக்குச் சகாயமாகவே நடந்தேறி வருகிறது. சில கப்பல்கள் சுட்டுண்டு மூழ்குவிக்கப்படினும், வேறு புதுக் கப்பல்கள் கட்டிவருகிறார்கள். ஜர்மன்கள் வர்டன் பட்டணத்தைச் சுட்டும் முற்றிலும் தோற்றுப்போனார்கள். எத்தனையோ லட்சம் ஜர்மன்கள் மாண்டுபோனார்கள். இனி பாரிஸ் முகமாய்ச் செல்ல யத்தனியார்கள் என்பது நிச்சயம். ஒருவேளை அமெரிக்கருக்கும் ஜர்மன்களுக்கும் யுத்தந் தொடங்கும்போ லிருக்கிறது. இது நேரிட்டாலோ உலகமெங்கும் போராபத்து விளையும். ரஷியர்கள் திரெபிசாண்டைப் பிடித்து இன்னும் கிழக்குமுகமாயும் தெற்குமுகமாயும் யுத்தஞ்செய்து வெற்றியடைந்து போகிறார்கள். இதிற்க, ரஷிய சேனைகள் பாரிஸ் நகரத்தில் பாளையம் இறங்கி யிருக்கின்றன. இங்கிலிஷ் சேனையும் விரைவிலங்கே சேரும். அப்பொழுது மூன்று சைனியங்களும் கூடி பிரான்ஸ்—ஜர்மன் எல்லையைக் கடந்து ஜர்மனிபேரில் ஜலப்பிரவாகம்போலப் புரண்டு செல்லும். இந்திய சேனைகள் சில புதிதாய்ச் சேகரம்செய்து பயில்வித்தால் அதிக உதவியாயிருக்கும் என்று பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆங்கிலேய—இந்திய சேனையொன்று தயார் செய்கிறார்கள். இது ஓர் ஆயிரம்பேர்தான். இங்

ஜூன்மீ பஞ்சாங்கம்.—

வாரம்.	ஜூன்மீ = வைகாசி—ஆனி. ● அமாவாசை, 30உ ⊙ பௌர்ணமி, 15உ					வைகாசி—ஆனி.				
ஞாயி ...	...	4	11	18	25	...	22	29	5	12
திங்க ...	...	5	12	19	26	...	23	30	6	13
செவ் ...	...	6	13	20	27	...	24	31	7	14
புதன் ...	...	7	14	21	28	...	25	1	8	15
வியா ...	1	8	15	22	29	19	26	2	9	16
வெள் ...	2	9	16	23	30	20	27	3	10	17
சனி ...	3	10	17	24	...	21	28	4	11	...

தியசேனை உண்டுபண்ணினாலோ, 40, 50 லட்சக் கணக்காயிருக்கும். ஜர்மனியிலே ஆகாரத்துக்கு அதிகக் கஷ்டம் விளைந்திருக்கிறது. இறைச்சி, ரொட்டி, வெண்ணெய், பால் முதலான பதார்த்தங்கள் கிடைப்பது கஷ்டம். ஜனங்கள் அங்கங்கே கூட்டம் கூடிச் சமாதானத்துக்காக வருந்திக் கேட்கிறார்கள். கைசர் தான் சுத்த நிர்த்தோஷியென்றும், சண்டையைத் தொடங்கினவர் தாமல்லவென்றும் சாதிக்கிறார். சிலர் இவ்வருஷத்துக்குள்ளே யுத்தம் முடிந்து சமாதானமுண்டாகுமென்று நினைக்கிறார்கள். இங்கிலாந்திலே 40 லட்சம் போர்வீரர் வேண்டியிருப்பதால், 18 முதல் 41 வயதுமட்டுமுள்ள எல்லாப் புருஷரும் பட்டாளத்திற் சேரவேண்டுமென்று ஒரு சட்டம் பிறந்தாயிற்று. ஆகிலும், ஜர்மன்கள் சமாதானத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி அமெரிக்கரை வேண்டிவருகிறதாகத் தெரியவருகிறது. சமஸ்தமும் தெய்வ சங்கற்பம்.

REBIRTH.

புனர்ஜன்மம்.

புனர்ஜன்மம் என்றால் என்ன? இரண்டாம் பிறப்பு அல்லது மறுபிறப்பென்று பொருள்படும். ஒருவன் மறுபடியும் பிறத்தலைக் குறிக்கும். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வர்ணத்தார் துவிஜனர் அல்லது இரண்டாந்தரம் பிறப்பவர்கள் என்று வழங்குகிறது. அவர்கள் சூத்திரராகப் பிறந்து உபநயனமென்கிற நூல்தரிக்கும் ஆசாரத்துக் காளாகிறபொழுது மறுபடியும் ஜனனமாகி அவ்வவ் வர்ணத்தாராகிறார்களென்று சொல்லப்படுகிறது. ஆயினும், தலைப்பிற் கண்டிருக்கிற புனர்ஜன்மமென்பது இதுவல்ல.

சிக்காகோ பிரசங்க கூடம்.

மானிடர் மரித்தபின்பு வேறு உடலெடுத்துப் பிறக்கிறதாகச் சொல்லப்படுகிறதும் ஓர்விதமான மறுபிறப்புத்தான். இது மெய்யோ, பொய்யோவென்று இச்சமயம் விசாரிக்க வேண்டியதில்லை. தம்தம் நல்வினை தீவினைகளுக்கேற்க, மனிதர்கள் நாய், நரி, புலி, பூனைகளாகவும், அல்லது உயர் குலத்தவர் தாழ்குலத்தவராகவும், சுகஜீவிகள் பெரும் ரோகிகளாகவும் புதுப்புது உடலெடுத்து ஜன்மிப்பார்களென்று சொல்லப்படுகிறது. தலைப்பிற் கண்டிருக்கிற புனர்ஜன்மமென்பது இந்தக் கற்பிதப் பிறப்புமல்ல.

பின் எதுவென்றால் சொல்லுகிறேன் கேளுங்கள். எம்பெருமான் இயேசு ஸ்வாமி பூலோகத்திலிருந்த காலத்தில், பெரிய அந்தஸ்துள்ள ஒரு தனவான் இரவிலே இரகசியமாய் அவரைத் தரிசிக்க வந்தான். வந்து, ஸ்வாமி, தேவரீர் கடவுள் அனுப்பிய சற்குருவாயிருக்கவேண்டும். ஏனென்றால் தங்கள் திருக்கரத்தால் அதிசயமான அநேக செயல்கள் நடக்கிறது. குருடருக்குப் பார்வையும், செவிடருக்குக் கேள்வியும், ரோகிகளுக்குத் தட்சண சுகமும், செத்தோருக்கு உயிரும் கிடைக்கிறதே என்றவரை மிகவும் புகழ்ந்துகொண்டான். எம்பெருமானோ அதற்கு யாதொரு மாறுத்தரமும் உரைக்காமல், அக்கனவானைப் பார்த்து, "ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் சுவர்க்கம் புகான்" என்று புகன்றார். அதுகேட்டு அம்மகான் திடுக்கிட்டு, இதென்ன புதுமையாயிருக்கிறது! ஒருவன் மீண்டும் எப்படிச் சிறு குழந்தையாகப் பிறக்க முடியுமென்றான். அதற்கு ஆண்டவன், "ஒருவன் ஆவியினாலும் ஜலத்தினாலும் மறுபடியும் பிறந்தாலன்றி அவன் கடவுள் ராஜ்யத்திற் சேரான்" என்றார்.

இந்த அதிசயமான புனர்ஜன்ம மின்னதென்று நாம் இன்னும் நுட்பமாய் விசாரிக்கவேண்டும். எம்பெருமான் ஒருவர்மட்டும் தம்மைச் சேரவிரும்பும் அடியாரிடத்தில் இப்புனர்ஜன்மம் கேட்கிறார். மற்ற மதாசாரங்களிலே இந்தப் புதுப்பிறப்பு கனவிலும் கிடையாது. உதாரணமாக, ஒருவன் மகம்மது நபியை நம்பி, சுன்னத்துப் பண்ணிக்கொண்டால் துலுக்கனாய்விடுகிறான். இன்னொருவன், ஹிந்துத் தாய்தகப்பன்மாருக்குப் பிள்ளையாய்ப் பிறந்தக்ஷணமே ஹிந்துமதஸ்தனாகிவிடுகிறான். இன்னுமொருவன், எல்லாரும் சகோதரர் என்று சாதித்தால் தியசாப்பிக் சபையில் மெம்பராகிவிடுகிறான். இதெல்லாம் யாவரும் லகுவாய்ச் செய்துகொள்ளக்கூடிய காரியங்கள்.

எம்பெருமான் சாதிக்கிற புனர்ஜன்மமோ ஒருவன் தன்னால்தானே செய்துகொள்ளக் கூடிய ஒரு செயலல்ல. காக்கையானது கங்கையில் நீராடினாலும் அதன் கறுப்பு மாறாததுபோலும், பாம்பு பால்குடித்தாலும் அதன் விஷம் நீங்காததுபோலும், புலி புல்லைத் தின்றாலும் அதன் புலாலபேக்ஷை தினையளவும் குறையாததுபோலும், மனிதனானவன் தன் சுபாவகுணத்தை மாற்றிக்கொள்வது எவ்வளவும் கூடாமை. பஞ்சமாபாதகன் தன் தூர்க்குணத்தையும், குடியன் தன் மதுபானப் பிரியத்தையும், பொய்யன் அபத்தத்தையும், கள்வன் திருட்டுத்தனத்தையும், தூர்த்தன் தன் விபசாரக்குணத்தையும் விட முடியுமா? சுயேச்சைக்காரன் பரதுக்கஞ்சகியாத பரோபகார கிரகஸ்தனாவானா? லோபிக்கு உதாரத்துவம் பிறக்குமா? அவபக்தன் பக்தனாவானா? ஒரு வார்த்தையில் ஒருவன்தானே தன் மனதை மாற்றிப் பிறக்க முடியுமா?

ஆகிலும், இந்த அசாத்தியமான பிறப்பு எம்பெருமானடியார் யாவருக்கும் அத்தியாவசியமென்று அவர் சாதிக்கிறார். அன்பிருந்தால் ஆகாததும் ஆகும் என்பார்கள். இயேசு ஸ்வாமி அபரிமித அன்பு நிறைந்தவர். அன்பே உருவெடுத்து இவ்வுலகில் எழுந்தருளிய பரமபுருஷோத்தமன் அவர். அவரிடத்தில் அன்பும் விசுவாசமும் வைத்து அவருக்கடியாராகத் தீர்மானிப்பவர் யாவருக்கும் அவர் இந்தப் புனர்ஜன்ம வரத்தை அளிக்கிறார். அவர் திருஅவதாரஞ் செய்து இந்த ஈராயிர வருஷங்களாய்த் தமது அடியார் சகலரையும் மறுபிறப்படையச்செய்து வந்திருக்கிறார். அது எப்படியென்றால், காட்டுமாங்கிளையில் உயர்ந்த மாங்கிளையைப் பக்குவமாய் ஒட்டவைத்தால் அக்காட்டு மரம் நல்ல மரமாக மாறுவதுபோலவே, பூரண நம்பிக்கையினாலே அவரை உறுதியாய்ப் பற்றி அண்டிக்கொள்வோருக்கு அவரது அற்புத குணம் வருகிறது, தூர்க்குணம் போய்ச் சற்குணம் பிறக்கிறது. தீமையில் கசப்பும் நன்மையில் இனிப்பும் உதிக்கிறது. அவரது அடியான் புதுஜீவியாகி, பூலோகத்தில் இருக்குமளவும் பரலோக சிந்தையனாய் ஜீவித்து, மரிக்கும்பொழுது எம்பெருமான் திருவடி சேருகிறான்.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

இருபத்தொன்றாவது கதை.

பலவித மிருகங்களின் கதை.

மலையாள தேசத்தில் வயநாடு என்ற தாலுகாவில் ஒரு போதகர் இருந்தார். அவர் அத்தாலுகா முழுவதும் சுற்றித் திரிந்து அநேக ஏழை ஜனங்களுக்கு நல்ல நன்மைகள் செய்வார். இது இவருடைய முக்கிய வேலையாக இருந்தது. அநேகமாய் இவர் இரவில்தான் பிரயாணம் செய்வார். ஏனென்றால் பகலில் பிரயாணஞ்செய்தால் அன்று அவர் வேலைக்குத் தடையுண்டாகும். அதோடுகூட இரவில் பிரயாணஞ் செய்கிறது அவருக்கு அதிக களைப்புண்டாக்காது. இவர் முக்கியமாக மலைக் காடுகளில் இரண்டு அல்லது ஒரு குடிசைகள் இருக்கும் இடங்களைத் தேடிப்பிடித்து, அவர்களுடைய நிலைமை எப்படிப்பட்டதென்று கவனித்து, அவர்களுக்கு ஏதாவது தேவையிருக்குமா என்று விசாரிப்பார். அவர் ஆசையோடு போய் பார்க்கப் போகும்போது அக்குடிசைகளிலிருக்கும் ஏழை ஜனங்கள் இவரைச் சற்று தூரத்தில் பார்த்ததும், பயந்து, எல்லாரும் ஓடிப்போய்த் தங்கள் குடிசைகளில் நுழைந்து கதவை அடைத்துக்கொள்ளுவார்கள். அப்போது இப்போதகர் அவர்கள் வாசல் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அன்போடும் ஆசையோடும் நல்வார்த்தைகள் அவர்கள் பாஷையில் பேசுவார். இவைகளையெல்லாம் அவர்கள் கேட்டு பயம் நீங்கிக் கதவைத் திறப்பார்கள்.

உடனே அவர் சொல்லுவார்: நீங்கள் பயப்பட வேண்டாம். நான் ஒரு போதகர். உங்களுக்கு நல்ல செய்தி அறிவிக்க வந்திருக்கிறேனென்று சொல்லி அவர்கள் பயத்தை நீக்குவார். அதற்குள்ளாகக் குடிசைகள் மூன்று இருந்தாலும் முப்பதுபேர் அடங்கிய அந்த ஜனங்களெல்லாரும் அவரைச் சுற்றிக்கொள்ளுவார்கள். அப்பொழுது அவர், நான் உங்களுக்கு ஓர் நல்ல பாட்டு பாடுவேன். நீங்களெல்லாரும் உட்கார்ந்து கேட்கவேணும் என்று சொல்லுவார். உடனே பிள்ளைகளும் குட்டிகளுமாக எல்லாரும் உட்காருவார்கள். அப்போது அப்போதகர் கடவுளை மகிமைப்படுத்தி, சில பாட்டுகளை அவர்கள் பாஷையிலே பாடுவார். பின்பு 'கடவுளுடைய வல்லமை' என்பதைப்பற்றிப் பேசுவார். அதன் பின் ஒவ்வொரு சிறு பிள்ளையையும் விசாரித்து, சில பாடங்களைக் கற்றுக்கொடுப்பார். பெற்றோர்களுக்கும் நிரம்ப ஆனந்தமாக இருக்கும். ஐயா, நீர் இங்கே வாசஞ்செய்யும். நாங்கள் குடிசை கட்டித் தருகிறோம். நீர் போகக்கூடாது என்பார்கள். அப்பொழுது போதகர், என் அருமை ஜனங்களே, கடவுளைப் பிரார்த்தியுங்கள். அவர் உங்களை ஆசீர்வதித்து உங்களுக்குத் தேவையான நன்மைகளைத் தருவார். சீக்கிரத்தில் நான் உங்களை வந்து பார்ப்பேன். இப்பொழுது எனக்கு உத்தரவு கொடுங்கள் என்று சொல்லிவிட்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு இன்னும் கொஞ்சத்தூரத்திலுள்ள குடிசைகளைப் போய்ச் சந்திப்பார்.

இப்படியாகப் பகல் முழுவதும் இதே நோக்கமாய்ச் சுற்றித்திரிவார். இரவு வந்தவிட்டால் கொஞ்சம் ஆகாரம் புசித்துக்கொண்டு, உடனே புறப்பட்டு பத்து அல்லது பதினைந்து மைல் தூரமுள்ள இடங்களுக்கு நடந்துபோவார். ஆனால் அந்தக் காடுகளில் இரவில் ஒருவரும் பிரயாணஞ் செய்யமாட்டார்கள். இவருக்கே அப்படிச் செய்வது நாடோடிய வழக்கம். ஒருநாள் இப்போதகர் தன் ஆதீனத்திற்குள் வேலை செய்துவந்த ஒரு சிறு போதகரைப் பார்த்து: ஐயா, நாமிருவரும் இன்று இரவில் புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள ஒரு கிராமம்போய்ச் சேரவேண்டும். நீர் ஆயத்தப்படும் என்றார். அப்போது அவர் பயந்து, ஐயா, நீர் என்னைத் துஷ்டமிருகங்களுக்கு இரையாகக் கொடுக்கப்போகிறீரா? என்றார். அப்போது பெரிய போதகர்: சகோதரனே, நீர் அப்படிப் பயப்படவேண்டாம், கடவுள் நம்மை வழி நடத்துவார். இது நம்முடைய வேலை அல்ல, அவருடைய வேலை. ஆனாலும் நீர் இன்று அவருடைய மகிமையைக் காண்பீர் என்று சொன்னார். அப்போது அந்த சின்ன போதகர் தைரியங்கொண்டு, ஐயா, தடையில்லை. 'நான் புறப்பட ஆயத்தமாக இருக்கிறேன்' என்று சொல்லி, இருவருமாகச் சாப்பிட்டுவிட்டு இரவு 8 மணிக்கு புறப்பட்டார்கள். கிராமத்தைக் கடந்து பெரிய காட்டுப்பாதையாகப் போகிறார்கள். துஷ்ட மிருகங்களின் சத்தமும் பட்சி பறவைகளின் சத்தமும் அதிகக் கோஷ்டமாயிருக்கிறது. யானைகள் கும்பல் கும்பலாக மாட்டு மந்தைகளைப்போல போகின்றன. மரங்களை ஒடிக்கின்றன. இன்னும் கொஞ்சதூரத்தில் கரடிகள் உருமுகின்றன. காட்டுப் பன்றிகள் திரள்திரளாய் ஓடுகின்றன. இப்படிப்பட்ட காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டு போகிறார்கள். அவர்களுக்கு நடை தோன்றவில்லை. சின்ன போதகர் சொல்லுகிறார்: நம்மைக் கடவுள்தான் வழிநடத்துகிறார் என்று நான் முற்றுமாய் நம்புகிறேன். அவருடைய மகிமையான சிருஷ்டிகளையெல்லாம் இன்றுதான் பார்த்தேன். நம்முடைய கிராமங்களில் வளர்க்கப்படும் ஆடுமாடுகளைப்போல துஷ்டமிருகங்களும் மந்தை மந்தையாக இருக்கின்றனவே என்று சொல்லி ஆச்சரியப்பட்டார்.

ஒன்பதாவது மைல் போனதும் ஒரு சத்திரம் இருந்தது. அதில் அநேக சன்னியாசிகளும் வழிப்போக்கரும் தங்கியிருந்தார்கள். அந்தச் சத்திரத்தில் ஒருமணி சாமத்தில்போய் சேர்ந்தார்கள். ஜனங்கள் படுத்திருக்கும் சந்து இடங்களில் இவர்கள் இருவரும் உட்கார்ந்துகொண்டு, கடவுளைத் துதித்துப் பாடி ஜெபித்தார்கள். அப்பொழுது நித்திரை செய்தவர்கள் எல்லாரும் எழுந்திருந்து இவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே இவ்விருவரும் மெய்யான கடவுளைப்பற்றி போதனைசெய்து, காலத்தை ஆதாயப்படுத்துங்கள். ஒவ்வொருவரும் கடவுளுக்கு கணக்கு கொடுக்கவேணும் என்பதை விளக்கிக் காட்டினார்கள். அப்புறம் இரண்டு மணிவரைக்கும் அவ்விடத்தில் தங்கிவிட்டு 3-ம் மணிக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் காடுகளில் போகும்போது கடவுளை நினைத்துக்கொண்டு நடந்தார்கள். காலை 6 மணிக்குத் தாங்கள் நாடிவந்த கிராமம் சேர்ந்து அக்கிராம சத்திரத்தில் போய் இறங்கினார்கள். அதில் ஸ்நானம்செய்து கொஞ்சம் ஆகாரம் சாப்பிட்டுவிட்டு, பகல் 9 மணிக்குச் சத்திரத்தில் கூட்டம் நடத்தினார்கள்.

அக்கூட்டத்துக்கு வருகிறவர்கள் யாசகம் எடுக்கிறவர்கள், ஏறக்குறைய 11 ஆண்களும் 5 ஸ்திரீகளும் 6 குழந்தைகளுமே. இவர்கள் வழக்கமாய் வாரத்தில் ஒருநாள் இரண்டுமணி நேரம் அவ்விடம் தங்கி, போதகர் சொல்லிக்கொடுக்கும் கற்பனைகளையும் ஜெபங்களையும் பாராமல் படித்து தேவ வசனத்தைக் கேட்டு ஜெபம்செய்து போதகர் அவர்களுக்கு கொடுக்கும் 1 அணாவும், கால்படி அரிசியும் பெற்றுக்கொண்டு போவார்கள். இந்த வேலை முடித்துவிட்டு, குன்றுகளில் இருக்கப்பட்ட குடிசைகளில் போய், பகலெல்லாம் சில ஏழை ஜனங்களைக் கண்டு அவர்கள் ஆத்தும ஈடேற்றத்துக்குத் தேவையான நன்மைகளைச் சொல்லி, இப்படி நாலு குன்றுகளைப் பார்த்துவிட்டு, ஐந்தாவது குன்றில் இரவாகிவிட்டதால் அன்று இரவு அவ்விடத்தில் தங்கும்படி சில குடிசைக்காரர் கேட்டுக்கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

G. D.

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

270. தலைச்சன் பிள்ளைபோன்ற—தருமர்கள் தானுமுளார்
துலக்கிடுவே னருத்தம்—தூங்காமற் கேளுமிப்போ
271. ஆதிபுங் கவனுக்கு—ஆஸ்தியெது சொல்வேன்கேள்
பூதலமும் வானும்—புகலரிய சிருஷ்டிகளும்
272. சூரியச் சந்திரரும்—தொகையான வானுடுவும்
பாரில் மிசைத்துலங்கும்—பலமாம் பருவதமும்
273. கன்மலைக் குன்றுகளும்—கானகங் காடுகளும்
மின்னும் நவமணிகள்—விஸ்தார மாம்வனங்கள்
274. பட்சிகள் விலங்குகளும்—பாரின் நதிகுளங்கள்
நிச்சயமே கடலில்—நீந்தும் பிராணிகளும்
375. உலகின் கனிவகையும்—உற்றதான்யவகையும்
ஏலவுங் குறைவிலது—ஏகாந்த னாஸ்தியல்லோ
276. ஆறு கணதிகளெல்லாம்—அடர்ந்த வடவியெல்லாம்
ஊறும் பிராணிகளும்—உன்னதனா ராஸ்தியல்லோ
277. காற்று வெய்யில்மழையும்—கங்குல் பகலுகளும்
சாற்றரும் லோஹங்களும்—சயம்புவி னாஸ்தியல்லோ
278. காலம் சமயமெல்லாம்—கற்றவர்கள் கல்லாதோர்
ஞாலத்தி லாண்கள்பெண்கள்—நாதனி னாஸ்தியல்லோ
279. ஜீவன் சுகம்பலமும்—சீராம் நமதுடலம்
தேவனி னாஸ்தியல்லா—தேது நமதுசொந்தம்
280. இவ்வித ஆஸ்தியெல்லாம்—இருக்குங் கடவுளர்க்கு
எவ்வித மக்களுண்டு—இசைத்திடுவே னதனை
281. மக்க ளிருவிதமே—மண்மீது நல்லவர்கள்
எக்காலமும் விளங்கும்—இறுமாப்புக் கொண்டவர்தான்
282. நன்மை மிகுத்தோர்கள்—நாதனுக்கு நற்பிள்ளைகள்
தின்மை மிகுத்தோர்கள்—தீமையாம் சேய்களல்லோ
283. நல்லபிள்ளைகள் கடவுள்—நவின்றபடி செய்வாரே
அல்லவோ நியாயமதை—அறையக்கே ளிங்குசற்று
284. வீட்டில் நிலைத்துத்தந்தை — விண்டபடியே செய்து
கேட்டையெல்லாந் தவிர்த்து—கேதங்கள் நீங்கிடுவான்
285. தந்தையரி னன்பதனை—சந்தோஷ மாய்ப்பெற்று
விந்தையாய் நாட்கழித்து—விடுவானே நாமதுபோல்
286. அந்நாதி சொற்கேட்டு—அக்ரமமெலாம் விடுத்து
சந்தோஷமாய் மரித்தால்—சந்ததமும் பிள்ளைகளே
287. தந்தையுட நிதியைத்—தக்கபடி யேமதித்து
சந்ததமுங் காக்காமல்—தன்னிச்சை யாயலைந்து
288. கேடுகெட்டுப் பாடடைந்து—கேள்வி யிலாமற்றிரிந்து
வீடுவந்து சேர்ந்த—வீணன்போலே நாமும்
289. கடவுளர் சித்தமதை—கைக்கொள்வதை மறுத்து
தடந் தெரியாமல்—தட்டழிகின்றோமே
290. சின்ன மகனைப்போல்—சீரழிந்து கண்டகண்ட
இன்னல் புரிந்துதினம்—இழக்கின்றோ முத்திதனை
291. சாமி நமக்களித்த—சகல வரங்களையும்
நேமிதனி லேயழித்து—நிஷ்டூர ரானோமே
292. செல்வம் சுகங்களெல்லாம்—தேகம் பலங்களெல்லாம்
வல்ல பரனருளும்—மாபெரிய தாம்வரங்கள்
293. கண்ணாலும் காதாலும்—கருத்தாலும் வாக்காலும்
எண்ணரும் பாதகத்தை—எந்நாளும் செய்து வந்தோம்
294. இல்லம் மனைவிமக்கள்—இன்பமுள்ள நேசரெல்லாம்
பல்லாண்ட தாய்நமக்கு—பரமருளு நல்வரங்கள்

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணு கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருகுருஷ் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரசி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒன்றுக்கு 4 அணு; அரை அணு தபாற்கு 10 பிரசினையும் அனுப்பப்படும். 10 பிரசிகளுக்கு ஒன்றுக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலிய வேண்டுவோர் செயக்கைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல் ஹாஸுக்கேற்ற C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS
6 - JUL 1916
MADRAS.

சத்திய தூதன்.

JULY, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூலைமீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

கப்பல்கள் வயது.—சில கப்பல்கள், நீர், காற்று முதலான சேதங்களின்றி, 250 வருஷம் ஜீவித்திருக்குமென்று தெரியவருகிறது.

இந்தியர்க் சேனை.— இந்தியனைத் தெரிந்தெடுத்துப் பெருத்த ஒரு சேனை உண்டாக்கலாமென்று அனேகர் உத்தேசிக்கிறார்கள். முற்காலத்தில் இந்திய பட்டாளங்களேகொண்டு இங்கிலீஷ் தளகர்த்தர் அனேக ஜயங்கள் அடைந்திருக்கிறார்கள். யூரோப்பிலும் அவ்வாறு நடக்கக்கூடாதா என்கிறார்கள்.

இந்திய பிரதான நீதிபதி.—ஆனரபிள் ஜட்ஜ் அப்துர் ரஹீம் பிரதான நீதிபதியாகவும், ஹி. ஹெவுஷ்ணன் அவர்களே வைஸ்கோர்ட் ஜட்ஜாகவும் நியமிக்கப்பட்டார்கள். நியமர் ஒருவர் ஜட்ஜாவது இதுதான் முதல்தடவை. நியமர் நீண்டப்டாத மலயாள வகுப்பினர். கல்வியிலுலே இவ்வர்த்த பதவிக்கு வந்திருக்கிறார்கள்.

புது ஆகாயக் கப்பல்—பேர்போன வான மேக்கர் என்ற அமெரிக்க ஸர்த்தகர் அதிக உறுதியான ஓர் ஆகாயக்கப்பல் செய்கிறார். அவர் அதிலே ஏறி 30 மணி நேரத்திலே அத்லாந்திக் சமுத்திரத்தைக் கடந்து இங்கிலாந்துக்குப் போகத் தீர்மானித்திருக்கிறார். கப்பல் யாத்தினா தற்காலம் ஏழுநாள்கொண்டது. இது ஜெயமானுல், இம்மாதிரி அனேக ஆகாயக் கப்பல்கள் கட்டப்படும். அதினுலே பெருத்த யுத்தாதகூலம் வாய்க்கும்.

உபகாரச் சம்பளம். — இந்திய பெண்கள் (பி.ஏ., எல். எம். எஸ்.) முதலான கல்விதற்றவர்கள் இங்கிலாந்துக்குப் போய் இன்னும் தேர்ச்சியடையும்படி இந்திய கவர்ன்மெண்டார் வருஷந்தோறும் மாதம் 250 ரூ. சம்பளம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது இவ்வருஷம் ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்படும். இதனுல் ஸ்வதிய கல்வி விருத்தியும் சாதாரண கல்வி விர்த்தியும் உண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

கண்ணைக் காத்தல். — அனேகம்பேர் புத்தி மீனமாயும் அறியாமையினுலும் தங்கள் நேத்திரங்களைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள். கண்ணைக் காக்குஞ் சில முறைகளாவன: மந்த வெளிச்சத்தில் வாசிக்காதே. கடும் வெளிச்சத்திலும், வெளிச்சத்தைக்கெதிரிலும் வாசிக்காதே. வெளிச்சம் பின்னுல் இடதுபக்கத்தி லிருக்கவேண்டும். சலனத்த நித்தினா மயக்கமாயிருக்கையில் வாசிக்காதே. பண்டி சவாரி செய்கையிலும், அசைந்தாடிக்கொண்டும் வாசிக்காதே. படுத்தக்கொண்டும் படிக்காதே. கண்களைத் தினந்தோறும் குளிர்ந்த நீரிற் கழுவுதிறதுமிக்கப் பிரயோஜனம்.

பேரப்பத்து. — யுத்த மந்திரியாயிருந்த லார்ட் கிச்சினர் என்ற பிரபு இங்கிலாந்தின் வடசமுத்திரவழியாய் ஸர்வே ஸ்வீடின் நாடுகளைக் கடந்து ரஷியாவுக்குப் போய், அந்தத் தளகர்த்தனுடே யுத்தவிஷயமாய் ஆலோசனே செய்யும்படி கப்பல் லேறினர். அவரோடு சென்றவர் 75 பேர். இவர்கள் ஸ்காட்லந்துக்கு வடக்கே போய்க்கொண்டிருக்கையில் கப்பல் ஒரு பாணச்சாங்கத்தில் தட்டி நெருப்புப்பற்றி வெடித்து மூழ்கிவிட்டது. காலு படகுகளிலே சிலர் இறங்கித் தப்ப முயன்றும், காற்றுமழை அகோரத்தினுலே படகுகள் கணசேரமுடியாமல் அங்குமிங்கும் அலைப்புண்டு சின்னு பின்னமாய் உடைந்துபோய், அவற்றிலிருந்தவரனேவரும் கடலில் வீழ்ந்து மாண்டார்கள். லார்ட் கிச்சினரும் மூழ்கிப்போனர். கரையிலே இருந்திலேபேர் படகுகளைக் கண்டதாகச் சொல்லுகிறார்கள். இந்தப் பேராபத்தினுல் பிரிட்டிஷ் ராஜியத்திக்கும் மற்றும் னேகரான அரசர்களுக்கும் உண்டான நஷ்டம் இத்தனேயென மதிக்க முடியாது. இவ்வாபத்து இரவிலே நடந்தது. எதிரிகளாயிய ஜர்மன்கள் சமுத்திரத்திலே அங்கங்கே இந்தப் பாணச்சுரங்கங்களே மிதக்க வைத்திருக்கிறார்கள். கப்பல் அதைத் தட்டினவுடனே அது வெடித்துவிடுகிறது. அப்பால் நடக்கிறதை வாயாற் புகல முடியாது. தளகர்த்தர் இறந்துபோனலும், அவருடைய முக்கிய முயற்சி முடிவுபெற்றது. இங்கிலாந்திலே இப்பொழுது 50 லட்சம் போர் வீரர் யுத்தசன்னத்தரா யிருக்கிறார்கள். அன்றி, அவருக்கு மனவி மக்கள் இடையாது. விவாகஞ் செய்யாதவர். மன அமைதியுடன் நம்மாண்டவன் பாதம் சேர்ந்திருக்கிறார்.

யுத்த விவரங்கள். — யுத்தம் முன்போலவே பலவாரூய்ப் பல இடங்களில் நடந்தேறிவருகிறது. வர்டன் நகரப் படைமுயற்சியானது 5 மாதமாகியும், லட்சாதி லட்சாதி வீரர்கள் மடிந்தும், ஜர்மன்கள் பிடித்தபிடி விடாமல் இதுவரையும் நடத்திவருகிறார்கள். பின்னுக்குப் போகிறார்களே தவிர முன்னுக்குச் செல்லக் காணேம். பிரெஞ்சுக்காரர் தங்கள் உயர்ந்த பலத்த பீரங்களிலிருந்து கொடும் புக்குண்டு மழையை எதிரிகள்மேரில் சொரிந்துவருகிறார்கள். ஜர்மன்கள் 15 லட்சம்பேரை இழந்திருக்கிறார்கள். தம்நாட்டிலே 16 வயதுப் பையன்களையும்போருக்கு வர உத்தரவுசெய்திருக்கிறார்கள். நாடெங்கும் பசியும் பட்டினியும் பிரஜைகளே வாங்கிறது. கவர்ன்மெண்டாரே அன்னபதார்த்தங்களேப் பரிமாறிவருகிறார்கள். ஆகிலும் ஜர்மன் முதலு இன்னும் ஒடியவில்லை; 40 வருஷப் பிரயத்தனம் இன்னும் பெரும்பாரம் தாக்கத்தக்கதாக லிருக்கிறது. ராஜ்யத்திலுள்ள சிறு ராஜாக்களிற் பலர் கைசருக்கு விரோதமாக எழும்புகிற தருணமாகிறது. இதெல்லாம் பிரசியாவின் கர்வமென அவர்களுக்குத் தெரியும். இதன்றி, ரஷியாசேனை ஆஸ்திரியா, துருக்கியின்மீது ஜெயபேரிகை முழங்

ஜூலைமீ பஞ்சாங்கம்.—

வாரம்.	ஜூலைமீ = ஆனி—ஆடி. ● அமாவாசை, 29உ ⊙ பௌர்ணமி, 15உ						ஆனி—ஆடி.						
ஞாயி ...	...	2	9	16	23	30	...	19	26	1	8	15	
திங்க ...	...	3	10	17	24	31	...	20	27	2	9	16	
செவ் ...	...	4	11	18	25	...	...	21	28	3	10	...	
புதன் ...	...	5	12	19	26	...	...	22	29	4	11	...	
வியா ...	...	6	13	20	27	...	...	23	30	5	12	...	
வெள் ...	...	7	14	21	28	...	...	24	31	6	13	...	
சனி ...	1	8	15	22	29	...	18	25	32	7	14	...	

புஸ்தகம் ஒகூ தெ. கூ.

கிச் செல்கின்றது. சென்றவிடமெல்லாம் ஜெயம். லட்சாதி லட்சமான கைதிகளும், பீரங்கிகளும், ஆயுதங்கள் மருந்து குண்டுகளும், பல பட்டணங்களும் அவர்கள் கைகளில் விழுந்துவிட்டன; இன்னும் அனந்தம்மீதம் விழுந்து வருகின்றன. ஜர்மன் சக்கரவர்த்திக்குச் சேனைத்தொகை குறைந்துவிட்டமையால், நாலாபக்கமும் சைனியங்களே முன் போல அனுப்பச் சக்தியில்லை. இன்னு மொரு மாதத்திலே இன்னது நடக்குமென்று சொல்ல முடியாது. ஏனெனக ராஜ்யங்கள் அனேத்தும் கூடி ஜர்மன் சேனையைக் கொஞ்சம் கொஞ்சமாக வினைத்து வருகின்றன. கொண்டை வலிபோட்டாயிற்று. இனி வலைக்குள்ளே ஜர்மன் சேனை சிக்கிக்கொள்ளுகிறது தாமதமாயினும், நிச்சயம். திருக்கர் மூர்க்கம்கொண்டு தமது ராஜ்யத்தில் பூர்வ்தொடங்கி வசித்த அர்மீனிய கிறிஸ்தவர்கள் அமார் 5 லட்சம்பேரைச் சங்கரித்துவிட்டார்கள். தர்மம் ஜெயமடையவேண்டுமென்று நாம் அனேவரும் நடவுனே அதினமும் பிரார்த்திக்கவேண்டும்.

அப்போது இந்தப் போதகர்கள் அவர்களுக்கு நூதனமான ராகத்தில் நல்ல பாட்டுகளைப் பாடினர்கள். அவர்களுக்கு மெத்த சந்தோஷமா யிருந்தது. பின்பு அவர்களுடைய பாஷையிலே லெ சரித்திரங்களையும் தெய்வ வணக்கத்தைப்பற்றியும் அவர்கள் மனதில் நன்றாய்ப் படும்படி நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுத்தார்கள். எறக்குறைய மணியும் பத்து ஆகிவிட்டது. நெடிபிள்ளைக செல்லாரும் அப்படியே படுத்துத் தூங்கிவிட்டார்கள். ஆனலும் பெரியோருக்கு இன்னும் கேட்க ஆசையாயிருந்த படியினல் மறபடியும் ஒரு பாட்டுப் பாடினர்கள்.

அப்பாட்டு பாடி முடியுமுன் ஒரு மச்தை யானைகள் நிறைதும் பெரிதுமாக சத்தமிட்டுக்கொண்டு மாங்களை ஓடித்து அமளி பண்ணிக்கொண்டுவந்த சத்தம் கேட்டது. உடனே போதகர்களுக்குக் கொஞ்சம் பயங்கரமாகத்தானிருந்தது. அதற்குள்ளாக மற்ற ஜனங்கள் நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்று சொல்லி, இரண்டு ரெருப்புப் பந்தங்களைப் பிடித்துக்கொண்டும், இரண்டு தகர டப்பாக்களை அடித்துக்கொண்டும் கூச்சல் போட்டார்கள். உடபட்டு, அக்கிராமத்திற்குப் போய், அந்தக் குறும்பர்களைக் கூட்டிச் சேர்த்து, ஆராதனை நடத்திவிட்டு, உடனே தன் கிராமத்துக்குத் திரும்பிப் போனர். இரண்டு மைல்தூரம் நடந்ததும், சுரம் அதிகமாயிற்று. வழியும் அதிக காடான வழி. அவ்வழியில் அதிகமான ஜன நடமாட்டம் டையாது. வெகு பயங்கரமான பாதை. மேலும் இவருக்குச் சுரம் அதிகமாகித் தண்ணீர்தாகம் உண்டாகிவிட்டதால், அதிகக் களைப்புண்டாயிற்று. ஆனலும் கஷ்டத்தோடு இன்னும் ஒருமைல் நடந்து மலமேலிருந்து தண்ணீர் தேடிபாய்கிற இடத்தில் உட்கார்ந்து தண்ணீர்குடித்தார். உடனே வாந்தியெடுத்து மயக்கம் உண்டாகி, தண்ணீர்ரண்டையில் படுத்துக்கொண்டார். குடையைத் தலைக்குச் சமீபத்தில் விரித்துவைத்து, வேத புஸ்தகத்தைத் தலையோடு வைத்து படுத்துக்கொண்டார்.

அதற்குள்ளாக ஒரு புலி மேலேயிருந்து தேடி தண்ணீர்ரண்டைக்கு வந்தது. மேலும் தண்ணீரை நாய்குடிக்கும் மாதிரியாகச் சத்தம் கேட்டது. உடனே போதகர் புலிதான் என்று அறிந்து, தான் படித்திருந்தபடியே கைகால்களை அசைக்காமல், கண்ணை ணன்றும் மூடிக்கொண்டு, கடவுளிடத்தில் தன்னை ஒப்புவித்துவிட்டார். சொஞ்சநேரத்திற்குள்ளாகப் புலியானது தண்ணீர்க் குடித்துவிட்டு, அவர் தலைப் பக்கம் நின்று நாம்மாதிரியாக இனைத்துக்கொண்டிருந்தது. அப்புறம் அவர் பக்கத்தில் வந்து உலாவினது. மறபடியும் மலமேலேறிப் போனது. அதின் கால்கள் செத்தைகளில் படும் சத்தம் குறையக்குறைய மெதுவாக எறிட்டுப் பார்த்தார். அப்பொழுது புலி மேலே போய்க்கொண்டிருந்தது. இவருக்குப் புது உயிர் வந்தது. புலி மறைந்து போகவும், சுரமும் நின்றுவிட்டது. உடனே எழுந்து வேகமாய்த் தன் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்து, கடவுள் இந்தப்பெரிய ஆபத்திலிருந்து தன்னைத் தப்புவித்ததற்காக, அவரைத் துதித்து மகிமைப்படுத்தினர்.

G. D.

கடமெயன் மிஷன் ஸ்தானம்.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அறிசயக் கதைகள்

இருபத்தொன்றுவது கதையின் (தொடர்ச்சி.)

அந்த ஏழைக் குடிசைக்காரர் விரும்பினபடி அன்று இரவு அவ்விடம் தங்கினர்கள். அப்படியே அவர்களுக்குக் கிடைத்த ஆகாரத்தை சாப்பிட்டுக் கொண்டு அவர்களுக்குச் சில பாடல்களையும் கற்றுச் செய்கினையும் அறிவிக்கத் தொடங்கினர்கள். மிகுந்த ஆசையுடன் அவ்விடங்களில் குளிர் அதிகமானபடியினல், அந்த ஏழை ஜனங்கள் குடிசை எதிரில் பெரிய மரக்கட்டைகளை வெட்டிப்போட்டு நெருப்பு உண்டாக்கி நெருப்பைச் சுற்றிப் படுத்து கிக்கினை செய்வார்கள். அப்படியே அன்றையத்தினமும் இருவருடங்களாக நெருப்புப்போட்டு, அதைச்சுற்றி மாறு குடிசை ஜனங்கள் வந்து உட்கார்ந்தார்கள்.

அப்போது ஒரு பெரிய கதை சொல்லத் தொடங்கினர்கள். அதாவது:—

ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனுக்கு ஒரு குமாரன் இருந்தான். அவன் பெயர் ஜான் என்பது. அவன் தகப்பனர் அவனுக்கு ஒரு நல்ல வேலை கற்றுக்கொடுத்து அவனை ஒரு நல்ல மனுஷனாக்கவேண்டுமென்று அவனை ஒரு பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்த்து வைத்தார். அவன் அங்கு சில வருஷங்கள் படித்துவந்தான். அவன் தகப்பனர் அவனுக்கு அடிக்கடி கடிதம் எழுதி அனுப்புவார். அவன் அதற்கு மறுமொழி எழுதுவான். அவன் தகப்பனர் அவனுக்கு அனுப்பும் கடிதத்தில் அவன் படிக்கும் பள்ளிக்கூடத்தில் அவன் நடந்துகொள்ளும் நடக்கை எப்படி என்று விசாரிப்பார். அவன் தகப்பனர் அவனுக்கு அனுப்பும் கடிதத்தில் அவன் படிக்கும் பள்ளிக்கூடத்தில் அவன் நடந்துகொள்ளும் நடக்கை எப்படி என்று விசாரிப்பார். அவன் தகப்பனர் அவனுக்கு அனுப்பும் கடிதத்தில் அவன் படிக்கும் பள்ளிக்கூடத்தில் அவன் நடந்துகொள்ளும் நடக்கை எப்படி என்று விசாரிப்பார்.

OFFICE OF THE REGISTRAR OF SOCIETIES
OF INDIA
JUL 1916
MADRAS.

WATER DRINK *versus* ALCOHOLIC DRINKS.

ஜலபானத்துக்கும் மதுபானத்துக்குஞ் சண்டை.

இராகம், பியாகு. ரூபகதாளம்.

பல்லவி.

தாகமுள்ளோனே, இதோ! தண்ணீர் இருக்கிறது;
தாகந் தீர்த்துக்கொள்ள நீ வா, வா, வா; ஓ

அனுபல்லவி.

தாகத்தீர்க்கத் தண்ணீர்தான் வேண்டும்; தாகம்போக்க வெங்நீரும் போதும்;
சோகத் தீர்ப்பது தண்ணீர்; தேகம் ஏற்பது நன்னீர்;
பானம்பண்ணிச் சோதித்துப் பார், பார், பார்; ஓ

சரணங்கள்.

1. கள்ளுக்கடைக்கு நீ போய், கள்ளுக்குவை தூக்கி,
கள்னேன் நீ குடிக்கிறாய்? சொல், சொல், சொல்;
புளித்து நாறித்த கள் சூலத்துவிடும் மானம்,
மதிகெடுக்கும், இது மெய், மெய், மெய்;

புளித்துப்போன பனங்கள்ளும், சளித்துப்போன தென்னங்கள்ளும்
குடித்தால் நலக்கேடும்; குடித்தால் குரங்காட்டம்;
குவைனை விட்டோடிப் போ, போ, போ; ஓ

2. சாராயக் கடைக்குப் போய், சாராயப்புட்டி தூக்கி,
சாராயங் குடிப்பதேன்? சொல், சொல், சொல்;
காய்ச்சி வடித்த மது சாய்த்துப்போடுங் குடித்தால்;
வேர்த்து விழுவாய், இது மெய், மெய், மெய்;

யார்க்கு ரத்தங் கலங்கினகண்? யார்க்குக் காரணமில்லாக் காயம்?
யார்க்குப் புலம்பல், சண்டை? யார்க்குத் துக்கம், வேதனே?
சாராயம் நாடுவோர்க்கே—ஐ — யை — யோ! ஓ

3. ஜொலிக்கும் ஷாப்புக்குள், பளிங்குப் பாத்திரத்தில்,
குடித்த பானம் என்ன? சொல், சொல், சொல்;
பிடித்துக்கொள்ளும் உன்னை உலில்கி, ஜின், ரம், பிராந்தி,
எரித்துவிடும், இது மெய், மெய், மெய்;

ஸல், ஸறவுற்று, எற்கா உனக்கு; ஷெரி, போர்ட், கிலாரேட், ஷாம்பேன் ஆகா;
தோலும் எலும்புமாகி வீவாச விழப்பாய்;
பேரும்போம், குறிசொன்னேன் கேன், கேன், கேன்; ஓ

PARADISE LODGE,
May 28, 1916.

பரதீசு பட்சி.

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

295. நல்லறிவு மெய்ஞ்ஞான—ஞானுவித பலிகம்
சொல்லரு மேகனல்லோ—தொல்புலியிற் றப்
தலாம்

296. வித்தை சக்திகளெல்லாம்—வித்தை வினேத
மெல்லாம்
கர்த்தனருளிச்செய்த—கனமான தாம்பலர்கள்

297. பெற்றோர் பிறந்தவர்கள்—பின்னும்ற் போத
கர்கள்
மற்று முதிதமெல்லாம்—மன்ன னளித்தவரம்

298. தந்தையுட வாஸ்தியெல்லாம்—தாய னளித்த
தபோல்
இத்தப்பெரு மாஸ்தியையும் — இத்தையில்
காமழித்தோம்

299. செல்வமதை வீணுக—செலவழித்துத் தினமும்
வல்ல பரனுக்கப—மானம் வருத்துவித்தோம்

300. சுகத்தைக் கடவுளரின் — கந்தர நாமத்துக்
கென்று
இகத்திற் ப்ரயோகஞ்செய்யா — திழந்தோம்
இருபைனே

301. தேகத்தை பெல்வனவாய்த்—தேற்றி வளர்க்கத்
திரி
வகனே யேமறந்து—எல்லி பகலலைந்தோம்

302. பலமதை அன்னியபாம் — பரத்தைபற் கித்
தினம்
அலமைக் கிரியைசெய்து—அருளதை யேபிழை
ந்தோம்

303. கண்ணினுற் கண்டதெல்லாம் — கதையென்
றெணுதஇந்த
மண்ணினி லிச்சைகொண்டு—மகிழ்ந்தோமே
வையகத்தில்

304. காதலே கேட்டதெல்லாம்—கர்த்தனுக் கடாத
பெரும்
தீதான வார்த்தையல்லோ—நிம்மனே எச்ச
ரிக்கை

305. கருத்தால் நினைத்தெல்லாம்—கர்த்தருக் கரு
வறுப்பு
பெருத்ததண் டனைக்கல்லோ — பேதைகன்ன
மானேனும்

306. வாக்கா லுளாத்தமொழி—வானபரற் கேற்காது
காக்குமுப் போருமத்—காகக் குழியிலைப்
யோ

307. இல்லைமில் மனிவி—இடர்கள் படிவதையே
தொல்லுலகிற் பார்க்கத்—தொலையுமோ சொல்
லச்சொல்ல

308. மோட்ச வழியிலவனை—முழுதும் கடத்தாமல்
தாழ்ச்சி யடையவைத்தோம் — தற்பரனினுக்
கேற்காதே

309. மக்களை கல்வழியில்—மகிழ்த்து கடத்தாமல்
அக்கிர மாய்வளர்த்த—அய்யய மேபுரிக்
தோம்

310. நேசர்னே யேகெடுத்த—நேர்ந்தபடி பேயவ
னை
மோசம்பண்ணிப் போட்டோமே—மோட்சம்
புகுவோமோ

311. கல்லறிவை யேமறந்தி—நாதனுர்க் காகாத
புல்லறிவை யேற்றுப்—புரிந்தோம் கசகனே

312. மெய்ஞ்ஞானங் கெட்டு—மேதினியோர் மெச்
சும்பல
பொய்ஞ்ஞானந் தன்னைப்—போற்றி வளர்த்து
வந்தோம்

313. வித்தைகள் சக்தியெல்லாம்—வீணுக தூர்வழி
யில்
தத்தம்செய்துக் தரித்த—சண்டாள ரானேமே

314. பெற்றேர் பிறந்தவனை—பிரியமுடன் மன
தில்
சற்றுமிலு மதித்த—சன்மானக் தன்தோமோ

315. தேவ வாக்கனெல்லாம்—செல்லாது போல்
மதித்து
பூவினில் வாழாமல்—போனேமே யென்செய்
வோம்

316. பாவந்னைப் பகைத்து—பாவியையே நேசிக்
கும்
தேவனுரின் கிருபை—தேவையல்லோ பிட்ச
யமே

317. பாவியை நித்தநித்தம்—பட்சமுட னுதரிக்க
தேவ மகனேசு—தேடி யலைவதைநீ

318. பார்க்கலேயோ பாதகனே—பண்பாகத் தேட
வனை
மார்க்கமுண் டாகுமல்லோ—மானிடனே மோ
ட்சத்தில்

319. பாவத்திற் காகீ—பரிதபித் தேயழுது
தேவனு மேசுவைனீ—தேடியே வாயோ

320. செட்ட மகனழுது — தெஞ்சினுன் தந்தை
யிடம்
இட்டமுட னவனும்—இடக்கினே சேர்த்து

321. சேர்த்துக் கொண்டானதுபோல் — தேவனு
ருன்னையுமே
தூர்த்தியா மன்புடனே—பொறுத்து ஆரவனை
ப்பார்

322. வாராயோ தந்தையிடம் — வந்துப் பதம்ப
ணிந்து
பாராயோ சந்தோஷம்—பரனுர் விடுவிலே

323. பாதகனே யுனக்குப்—பணிந்துப் பலதுமுண்டு
ஓகரும் பவிஷெல்லாம்—ஓல்க ஜனக்களிப்
பார்

324. நீதியின் வஸ்திரத்தை—நித்தியமும் நீதரித்து
சோதி மிகுந்தவனுய்—சொர்க்கமதி லேவாழ்
வாய்

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது

பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது

1916—ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணு கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணுவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட அரைக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு அரைக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புத்தகம் முதலிய வேண்டுகோள் செயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியன் ஸொஸைட்டிக்கு C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916.

Registered No. M. 442.

614.
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 AUG 1916
MADRAS.

சத்திய தூதன்.

AUGUST, 1916. PRICE, 1 PIE.—விலை, 1 பை. ஆகஸ்ற்றுமீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

பிரிட்டிஷ் வைத்தியர்கள். — இங்கிலாந்தின் 30,000 வைத்தியர்களிலே 10,000 பேர் யுத்தத்துக்குப் போய் உதவிசெய்து வருகிறார்கள்.

சீனுவிலே கல்வி.—சீனுவிலே 100 புருஷரிலே ஒருத்தனுக்குமாத்திரம் வாசிக்கத் தெரியுமாம்; ஆயிரம் பெண்களிலே ஒருத்திக்குமாத்திரம் இந்தத் திறமையுண்டு. இது இந்தியாவிலும் கேவலம்.

தற்கொலை.—கல்கத்தாவிலே ஒரு பாலியன் பி. ஏ. பரீட்சையில் தேருமையால் மனங்கசந்து, அபின் அதிகமாய்த் தின்று தற்கொலை செய்து கொண்டான். தான்மட்டுமல்ல, தன் மனைவியும் அவனுகூட மடிந்தாளாம்.

டரோடாவில் நன்முயற்சி.—டரோடா சமஸ்தானத்திலே மார்க்க ஆராய்ச்சி சாஸ்திரமும், மற்ற கலைகளுடன் கற்பிக்கப்பட ஆரம்பித்திருக்கிறது. சென்னைச் சர்வகலாசாலையில்மாத்திரம் கடவுளைப் பற்றிக் கற்பிக்கப்படுகிறதில்லை.

யுத்தச்செலவு.—தினம் ஒன்றுக்கு இங்கிலாந்துக்குமட்டும் 60 லட்சம் பவுண்ட் அல்லது 9 கோடி ரூபாய் பிடிக்கிறது. இதனுலே பிரிட்டிஷ் அரசு பெருத்த கடனுக்குட்படுகிறது. இதற்கு வட்டிக் கொடுத்து, முதலைத் தீர்க்க ஒரு தூற்றுண்டு சென்றாலும் செல்லும்.

மைசூர் சர்வகலாசாலை. — இப்பொழுது மைசூர் சமஸ்தானத்துக்கென்று ஒரு சர்வகலாசாலை ஏற்பட்டிருக்கிறது. தற்காலம் இலக்கியமும், நியாயமும்மாத்திரம் கற்பிக்கப்படும். பிற்பாடு, விவசாயம், மருத்து, இஞ்சினியர்த்தொழில் போதிக்கப்படும். அதன்பின்பு மார்க்காராய்ச்சியும் சேர்க்கப்படும்.

பேண் கல்வி. — இங்கிய கவர்ன்மெண்டார் வருஷந்தோறும் ஒரு மாதை இங்கிலாந்துக்கனுப்பி மூன்று வருஷம் உயர்தரக் கல்வி கற்பிக்கிறதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வருஷத்துக்கு ரூ. 3,000 வீதம் மூன்று வருஷம் கொடுப்பார்கள். இது விசேஷமாய் வைத்தியம் படிக்க. இவ்வருஷம் பிரியகோஷ் என்னும் ஓர் பங்காளப்பெண்ணுக்கு இது கிடைத்திருக்கிறது. அம்மாது எம். பி. என்கிற வைத்திய பட்டம் பெற்றவள்.

செப்பலீன்கள். — இவ்வாகாயக் கப்பல்கள், செப்பலின் என்ற ஒரு ஜர்மன் பிரபு உண்டாக்கியது. பெருத்த ஒரு புகைக்கூண்டின் கீழ் இறுத்தலெ யந்திரங்கள் வைத்திருக்கிறது. அவற்றில் பிரயாணிகளும், குண்டுகளும், வேறு சாமான்களும் இருக்கும். சாதாரணமான ஒரு ஆகாயக் கப்பல் 23 ஆயிரம் ரூ. பெறுமானுல், இந்தப் பிரமாண்டமான யந்திரம் லட்சம் பெறுமென்பதற்குச் சந்தேகமில்லை. அதன் நீளம் 520 அடி; அகலம் 75 அடி; கனம் 25 டன். விறகு எடையின் 40 டண்டு சேர்ந்தது ஒரு டன். இம்மாதிரிக் கப்பல்கள் எத்தனையோ இங்கிலிஷ், பிரெஞ்சு பீரங்கிகளினுல் வீழ்த்தப்பட்டன.

ஜர்மனியின் நாலு பிழைகள். — (1) சொந்த வாக்கை மீறினுர்கள். பெலஜியம் என்ற சிறு ராஜ்யத்தைக் காப்பதாகச் சொல்லியும், அதை அழித்துப்போட்டார்கள். இதனுல் உலகம் அவர்மேல் நம்பிக்கையற்றிருக்கிறது. (2) இங்கிலாந்து, தங்களைப்போல, சண்டைக்குப் பயந்தி, பிரான்சைக் கைவிடுமென்று நினைத்தார்கள். (3) பாரிஸ் நகரத்தை லேசாய்ப் பிடிக்கலாமென்று எண்ணினர்கள். (4) வர்டன் வழியாய்ப் பாரிசுக்குப் போகப் பார்த்தார்கள். சென்ற பெப்ருவரி மீ ஆரம்பித்த முற்றிக்கை நாளதுவரையும் ஒழியாதிருந்தும், வர்டன் பட்டணம் இன்னும் பிடிக்கப்படவில்லை. தங்கள் போர் வீரரின் நிலைகள் லட்சக்கணக்காய் விழைபோல விதைக்கப்பட்டன. இதுவே அவர்கள் முதுகை உடைத்துவிட்டது. வர்டனைப் பிடிக்கிறதற்குப் பதில், அதிலிருந்து தப்பியோடுகிறதே அவர்களுக்குப் பேராபத்தாய் முடிந்தது. இனி, யூரோப்பிலே அரசர் அக்கிரமமும் கர்வமும் அடங்கி, தர்மமும், சமாதானமும் வெகுகாலம் நீடித்திருக்குங்காலம் உதயமாகிறது.

யுத்த வாலாறு. — இந்த மாதம் 4-ம் தேதியுடன் யுத்தம் தொடங்கி இரண்டு வருஷமாகிறது. அது மூன்று வருஷம் நடக்குமென்ற ஆரம்பத்திலேயே சிலர் உத்தேசித்தார்கள். இப்பொழுது நடக்கிற சீரைப் பார்த்தால், இந்த வருஷம் முடிகிறதற்குள்ளாகச் சமாதானஞ் செய்யப்படுமெனத் தோன்றுகிறது. இதுவரையும் ஜர்மன்கள் படையெடுத்துச் சென்ருர்கள். இப்பொழுது மற்றக் கட்சியார் அவர்கள்மீது படையெடுத்து, வெற்றியடைந்து வருகிறார்கள். இவர்கள் ஜர்மன் நாட்டிற்குள் செல்லச்செல்ல, அவர்கள் பின்வாங்கிப் போகிறார்கள். மூன்றினேர் பிந்திஞேராஞர்கள். ஆஸ்திரியர் முற்றிலும் தோற்றுப் போனர்கள். ஜர்மனிக்கு இன்னும் எத்தனையோ லட்சம் போர்வீரர் இருந்தாலும், அவர்களுக்கு ஆயிவிருந்த சக்தியும் உற்சாகமும் தீரமும் இடையாது. விசேஷமாய் இங்கிலீஷரின் பீரங்கிகளுக்கு எதிர் நிற்க அவர்களுக்கு முடியவில்லை. ரஷியர்கள் சேனையின் பாதையோ ஜயபாதை. வெகு சீக்கிரத்தில் இவர்கள் கிழக்கிலும், ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் மேற்கிலும், இத்தாலியர் தெற்கிலும், கப்பற்சேனைகள் வடகே சமுத்திரக்கையிலும், ஜர்மனியின்பேரில் படையெடுத்துச் செல்வார்கள். சமாதானத்துக்கு வருவது நிச்சயம்.

ஆகஸ்ற்றுமீ பஞ்சாங்கம்.—

வாரம்.	ஆகஸ்றுமீ = ஆடி—ஆவணி. ● அமாவாசை, 28உ. ⊙ பௌர்ணமி, 13உ.					ஆடி—ஆவணி.			
ஞாயி...	...	6	13	20	27	...	22	29	5	12
திங்க...	...	7	14	21	28	...	23	30	6	13
செவ்...	1	8	15	22	29	17	24	31	7	14
புதன்...	2	9	16	23	30	18	25	1	8	15
வியா...	3	10	17	24	31	19	26	2	9	16
வெள்...	4	11	18	25	...	20	27	3	10	...
சனி ...	5	12	19	26	...	21	28	4	11	...

Vol. XXIX. No. 10. புஸ்தகம் உக. நெ. கo.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்.

இருபத்திரண்டாம் கதை.

ஒரு ஸ்திரீக்குண்டான மனத்தைரியம்.

ஒரு சொமத்தில் ஒரு சமுசாரி நல்ல திரவிய சம்பத்துள்ளவனு யிருந்தான். ஒருநாள் அந்தச் சமுசாரி, தன் சொமத்தைவிட்டு அடுத்த சொமத்திற்குப் போய், சில வண்டிமாகெள் வாங்கும்படி போக வேண்டியதாயிருந்தது. போகும்போது தன் மனை வியினிடத்தில், வீட்டைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, அடுத்தநாள் புறப் பட்டுப்போய்விட்டான். இதைப் பார்த்திருந்த சில திருடர்கள் அன்று இரவில் அந்த வீட்டை கன்னம் வைத்துத் திருடவேண்டுமென்று ஆலோசனை செய்து, அன்று இரவில் நடுச்சாமத்தில் ஐந்து பேர் சேர்ந்து சுவரை இடித்து, துவாரம்செய்தார் கள். ஆனால் அந்தச் சத்தத்தைக்கேட்ட சமுசாரி யின் மனைவி எழுந்து, ஆ, ஆ, மோசத்துக்குள்ளா னேனே என்ற மனங்கலங்கி, தூங்கின தன் இரண்டு பிள்ளைகளையும் அப்படியே விட்டுவிட்டு, பக்கத்து அறையில் போய், அங்கேயிருந்த நெய்ப் பானையைத் தூக்கி, அடுப்பில் வைத்து, நன்றும்ப் காய்ச்சி, அந்தப் பானைக்குள் ஒரு அகப்பையும் போட்டுக்கொண்டு, திருடர் கன்னம் வைக்கும் சுவரின் பக்கத்தில் ஒரு மறைவு வைத்து, இந்த நெய்ப்பானையையும் தூக்கி வைத்துக்கொண்டான். திருடர்கள், சுவரில் துவாரம் தோன்றிவிட்டு, முத லாவது ஒரு கோல விட்டார்கள். யாதொரு சத்த முமில்லை. அப்புறம் ஒரு மனிதனைத் தூக்கி, அந்தத் துவாரத்தின் வழியாய் உள்ளே தள்ளினார்கள். அந்த மனிதன் மேழே குதித்ததும், அந்தப் பெண் பின்னே மறைவாக நின்றுகொண்டு, கொதிக்கிற நெய்யை ஒரு பாத்திரத்தில் விட்டு, முதல் திரு டன் முகத்தில் குபீரென்று ஊற்றினாள். அவன் அப்படாவென்று மேழே விழுந்துவிட்டான். உட னே அவள் அவனை இழுத்து பின்னுலே போட்டு விட்டாள். மறுபடியும் ஒருவனைத் தூக்கி உள்ளே தள்ளினார்கள். அவனையும் அதேமாதிரியாகக் கொ திக்கிற நெய்யினால் கொன்று, இழுத்துப் பின்னல் போட்டுக்கொண்டான். இப்படியே அந்த ஐந்து திருடர்களையும் கொன்றுவிட்டுத் திரும்ப யாரும் வராததைக் கண்டு, தூங்கின தன் பிள்ளைகளையும் எழுப்பிக்கொண்டு, எல்லோருமாகக் கூச்சல்போட் டார்கள். அப்போது பக்கத்து வீடுகளிலுள்ள ஆண்களும் பெண்களும் ஓடிவந்தார்கள். ஆனலும் அந்தப் பெண்பின்னே கதவைத் திறக்கவில்லே. ஜனங்கள் வெளியே நின்றுகொண்டு, அதென்ன, அதென்னவென்று கேட்டார்கள். அப்போது அந்தத் தைரியமுள்ள பெண் வெளியில் வந்தவர்க ளின் பெயரைச் சொல்லும்படியாகக் கேட்டுக் கொண்டாள். உடனே அவர்கள் தங்கள் பெய ரைச் சொன்னார்கள். அப்போது அந்தப் பெண் பிள்ளை பயம் நீங்கிக் கதவைத் திறந்தாள். உடனே எல்லாரும் வீட்டினுள்ளே வந்து, என்ன சங்கதி? என்ன சத்தம்? என்க, அந்தப் பெண் அவர்களை உள்ளே அழைத்துப்போய் ஐந்து மனிதர்களையும் காண்பித்து, நடந்த சமாசாரங்களையெல்லாம் விவ ரமாய்ச் சொன்னுள். ஜனங்களெல்லாரும், அவ ளுடைய புத்திக்கூர்மையையும், மனத்தைர்யத்தை யும் மெச்சிப் புகழ்ந்து, உடனே தன் கணவன் போன இடத்துக்கு ஆள் அனுப்பி அவனை வரு வித்தார்கள். அவனே அதிக ஆவலுடன் வந்து இவைகளையெல்லாம் பார்த்து, ஆயாசப்பட்டு, தன் மனைவிக்கும், தன் பிள்ளைகளுக்கும், தன் ஆஸ்திக் கும் நேரிடவிருந்த தீங்கையெல்லாம், தெய்வம் அந்தப் பெண்ணுக்கு நல்ல புத்தியையும், மனத்தை ரியத்தையும்கொடுத்தும் காத்து இரட்சித்தாரென்று கடவுளுக்குத் தகு செலுத்தினுன்.

G. D.



மதகாஸ்கர் தீவில் தாமதேவு பட்டணம்.

TEMPERANCE KUMMI.

மதுவிலக்குக் கும்மி

1. கும்மியடியுங்கள் தோழிமார்காள்,
மதுவிலக்குக்கும்மி பாடுங்கள்;
தம்பிதங்கையர்க்கு மதுபானம்
விஷமெனச்சொல்லி யடியுங்கள்.

2. கள்ளுக்கடைக்குப் போகாதேதம்பி,
வெள்ளைக்குதிரைமேல் ஏருதேதீ;
துள்ளியூனைக்காலின் மேழேபோடும்,
தள்ளாடிநடந்தேன் போகவேண்டும்?

3. சாராயக்கடைக்குப் போகாதேதீ,
கருங்குதிரைமேல் ஏருதேதீ;
பாராதகண்ணும் பார்த்துநாசைக்கும்,
பெரும்பாதகமாம் செல்லத்தம்பி.

4. பிராந்திஷாப்புக்குள் போகாதேதம்பி,
சம்பாதித்தகாசை எறியாதே;
பிராந்திகொடிய பீப்பானமாம்,
தப்பித்துக்கொள்ளபபார் செல்லத்தம்பி.

5. தூரைத்தகள்ளு புளிக்குந்தங்காய்,
குடித்தால்குமட்டிக் கொண்டுவரும்;
பிரையேறிய மதபானங்கள்
குடியாதேபுரைக் கேறுந்தங்காய்.

6. சாராயம்கொடிய விஷபானம்,
தலைக்கேறும் மயங்கிவிழுவாய்;
சாராயம்உன்னை எரித்துவிடும்,
கலைக்கமுடி யாதுதங்காய்.

7. அன்னியதேச மதபானங்கள்
அருந்தவேவேண்டாம் செல்லத்தங்காய்;
கன்னியர்க்குமான பங்கமாகும்;
மருந்துக்கும் உதவாதுதங்காய்.

குடிகாரர்களொடு சோராதே,
கூடியவரொடு குலவாதே;
படிப்படியாய்க் குடியில்சிக்கி
வாடிக்கையால் குடிகாரனுவாய்.

குடிகாரன்கண்கள் ரத்தமயம்,
கோபத்தால்அவன் மீசைதுடிக்கும்;
பிடிபட்டயானை போல்பிளிறி
மோகன்கொண்டலைவான் இல்குமக்கும்.

தாயென்றுந்தார மென்றுமறியான்,
வாயில்வந்தபடி பிதற்றுவான்;
'டோ'என்றுசொன்னலும் போகமாட்டான்:
நீயும்அறியு மறியான்.

நாணயமற்றவன் குடிகாரன்,
மூச்சுக்குமூன்நூறு பொய்பேசுவான்;
மானங்கெட்டு மதியுமிழந்து
மோகூபாதையை விட்டுநடப்பான்.

பெரியசோம்பேறி குடிகாரன்,
பெரியோர்சம்பாந்தியத்தை அழிப்பான்;
சிறியபொருளுக் கிருவொன்,
மற்றோர்காலிலும் விழுந்தழுவான்.

சிறைச்சாலைஅவன் மாமிவீடு,
சொந்தவீடும்அது வாருமல்லோ!
பறைசாற்றிப் பழிக்கப்பட்டாலும்
பஞ்சமபாவங் களுக்கும்அஞ்சான்.

பைத்தியக்காரர் ஆஸ்பத்திரியில்
பார்க்கலாம்பெருங் குடிகாரனை;
வைத்தியராலும் ஒன்றுங்கூடாது,
மார்க்கந்தவறி நடந்திடாதே.

குடிகாரன்ஆஸ்தி வியாதியாம்,
சந்ததிக்கும்அதை விட்டுப்போவான்;
குடிக்கக்கஞ்சியுஞ் கிடையாமல்
நிந்தைக்காளாய்க்கஞ்சித் தொட்டிசேர்வான்.

குடிகாரன்கோலம் அலங்கோலம்,
அவன்குடும்பமும் அலங்கோலம்;
குடிகாரனுக் கேதுஒழுக்கம்?
அவன்குடும்பத்துக் கேதுகனம்?

குடிகாரனுக்கு ஆயுள்சொற்பம்,
அவன்கோத்திரமும் அற்றுப்போகும்;
திடீரென விழுந்துமரிப்பான்,
அவன்தேவோ ரற்றுங்கிடப்பான்.

காசுக்காசைப்பட்டு கொலைசெய்வான்,
தூக்குமரத்தில் ஊஞ்சலாடுவான்;
மாசுமறுவற் றிருக்கும்படி
நீக்குகுடிகாரன் சகவாசம்.

கும்மிப்பாட்டுக்கேட்ட செல்லத்தம்பி,
குடியரைக்கண்டால் விட்டோடிப்போ;
கும்மிக்கும்குடிக்கும் ஒயாச்சண்டை,
குடியைவிடியோ டூறதம்பி.

மதுவிலக்குக் கும்மிமுற்றிற்று,
தங்கையேகேற்ற நீதியென்ன?
மதபானத்தை முற்றிலும்வெறு,
மங்கையேகுடிய ரோகுகூடேல்.

பாரதீசு பட்சி.

THE STORY OF A DAMBAN

டம்பன் கதை

(தொடர்ச்சி.)

325. பொன்னின் முடிதரித்து—பொல்லியே நித்தி
யமும்
மின்னி சுகித்திருப்பாய்—மீளாக் கதினிலே

326. நித்தியமாய் மோட்சமதில்—நீழே வாழ்ந்தி
ருந்து
நித்தம் விருந்தருந்தி—நீகதித்து வாழுவையே

327. குற்றம் புரிந்தகெட்டக்—குமரணைப் போல்
நீயும்
முற்றும் மனந்திரும்பு—முத்திதனே யேயடை
வாய்

328. பன்றி மேய்க்குதற்கொத்த—பாவமதை யே
வெறுத்து
நன்றியுள உளத்தோடு—நாதனடி சேர்ந்திடு
வாய்

329. எவ்வித பாவங்கள்—எல்லிபகல் செய்தாலும்
செவ்வையதாய்க் கழுவி—சேணுலகம் சேர்ப்
பாரே

330. தந்தைமனே யெண்ணுமல்—தவிப்புற் றிருந்த
துபோல்
மைந்தனே நீயிருந்தால்—மகிழ்ச்சிக்குள் ளா
காயே

331. னெமற்ற தந்தையடி—சீக்கிர மோடிவந்து
கனப்படப் பாராயோ—காலங் கழிக்காதே

332. எப்போது காண்பெனென்று—எகனர் காத்
திருக்க
இப்போதே போகமனம்—இணங்காயோ மா
னிடனே

333. தன்னரே தந்தையுனைத்—தனையாகச் சேர்த்
துக்கொண்டு
உள்ளம் மகிழ்ந்திடுவார்—உன்னதத்தி லெந்
நாளும்

334. தூதர்க ளெல்லாம்—சந்தோஷம் மிகப்பெருகி
தேங்கள் பாவுகே—டேழோ னுனக்காக

335. வான மண்டலமெல்லாம்—மாட்சிமை யான
பல
கானங்கள் பாடியுனே—கனம்பண்ணி யேமகி
ழும்

336. உன்தன் நிலைதீதி—உயர்ந்தக் கிரீடமதை
தந்துமே சூடுவார்கள்—சந்தோஷம் நித்திய
மே

337. இன்றே மனந்திரும்பி—யேசுவி னடிகளிலே
நன்றே பிழைத்திடப்பா—நாதனி னுசையி
தே

338. காலத்தை வீணுகக்—கழித்து விழிக்காதே
சாலவும் தண்டனையை—தானடைவாய் நீகர
கில்

339. நரகந்தனிற் கெட்டு—ஈசமடையு முன்னே
பரனு ரேசுவின்பொற்—பாதத்தை யண்டிடு
வாய்

340. உன்னை யரவணைக்க—உன்னதனு ரேசுவெ
னும்
மன்னனர் காத்திருக்க—வாராயோ இகுண
மே.

வாழி விருத்தம்.

அருள்பெருகு மதிகுணன் திருகமல வங்கிரிகள்
அனவரத காலம் வாழி
பொருள்பெருகு கெட்டகுண ரன்சரிதை சொல்தேவ
புத்ரனு ரேசு வாழி
தெருள்பெருகு முன்மருளு மபவதித் ராவியரும்
செம்மையாய்ப் பாவில் வாழி
மருள்பெருகு மாந்தரிச் சரிதமதை யோதியே
மண்விண்ணி லென்றும் வாழி.

BOOKS AND TRACTS FOR SALE AT THE TRACT DEPÔT, MEMORIAL HALL

சென்னபட்டணத்தச்
சன்மார்க்க நிறுபுன்தக சங்கத்தாரால்
தமது புன்தகசாலேயில் விற்கப்படும்

புதிய புஸ்தகங்கள்.

	ரூ.	அ.	பை.
கிறிஸ்துவில் நிலேத்திரு	0	8	0
ஆடவர் கும்மி	0	1	0
கிரணமாலிகை	0	6	0
அருளாகமமும், ஆதிசின்னங்களும் ..	0	2	0
வேதாகம பிரசித்த வித்தார்தம் ..	0	8	0
சன்திரலீலான்	0	2	0
பிள்ளைகளும் சம்பவும்	0	2	0
புதிய ஞானப்பாட்டுகள் பெரியது ..	0	4	0
,, சிறியது ..	0	3	0
ஞானதீபங்கள் பெரியது	0	10	0
,, சிறியது	0	4	0
,, ஓர் அணு புஸ்தகம் ..	0	1	0
பாலர்ப் பாட்டுகள்	0	1	0
ஞானப் பாட்டுகளும், ஞான தீபங்களும் ஒன்ருய் சேர்த்துக் கட்டினது ..	0	12	0
ஸ்லவைத் திருவாசகம்	0	1	0
லாஸரஸ் ஐயர் இயற்றிய எபேயர் வியாக்கியானம்	0	4	0
லிசுவாகிளின் நித்திய இனப்பாறு தல்	0	8	0
கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ..	0	3	0
திருச்சபை சரித்திரம்	1	4	0
மாதர் கும்மி	0	1	0
காலத்தியானம்	0	8	0
மாலத்தியானம்	0	8	0
பரதேயின் மோட்ச பிரயாணம் ..	0	14	0
சற்குரு சதகம்	0	1	6
செட்டகுமாரன் சரிதை	0	0	9
ஆத்ம விபசாயம்	0	1	6
கிறிஸ்தவ இல்லற ஒழுக்கம்	0	2	0
மூதேவி சீதேவி வீகென்: ஓர் கதை ..	0	1	0
சுவிசேஷ சமரஸம் (லாஸரஸ் ஐயர் இயற்றியது)	0	14	0
திருப்போர் (Holy War) புதுப் பதிப்பு	0	12	0
கேச அழைப்பு	0	1	0
பிள்ளைகள் குணப்படுதல்	0	6	0
தினபிதை	0	2	0
தாவீதின் சரித்திரம்	0	1	6
நித்தியானந்தக் காதல்	0	1	0
சத்தியவாக்கன்	0	1	3
பயப்படாதே	0	1	0
மேயா மகத்துவம்	0	3	0
நல்ல மேய்ப்பன்	0	2	0
நியானசோல	0	1	6
இருதயக்கண்ணுடி	0	2	0
போதக தீபிகை	0	6	0
கிஸ்தார ரத்தினகரம்	0	1	0
யோசேப்பின் சரித்திரம்	0	1	6
தக்கசாகரத்தோணி	0	1	6
நெ தலேயணைகள்	0	1	6
வேதபுருஷர் Vol. I.	1	0	0
,, Vol. II.	0	8	0
கிறிஸ்தரான் சரிதை	0	3	0
இயேசுவின் சித்தை	0	2	0
காலமணிச்சந்தம்	0	1	6
அருளுதய ஜெபத்தியானமும் அல் தமான ஜெபத்தியானமும்.. ..	0	3	0
என் இராஜா	0	2	0

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது
பிறந்ததுமுதல் குழந்தைகளின்
உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது
1916–ம் வருஷத்திய மெல்லின்ஸ்
பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு
தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அண கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான
'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'
என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையோப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு வருத்துக்கு 4 அணவும், அரை அண தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு வருத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் இரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிமோரியல் ஹாலுக்கெடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K. Press, Vepery, Madras—1916.



OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS
7 SEP 1916
MADRAS

சத்திய தூதன.

SEPTEMBER, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. செப்டெம்பர்மீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

ஆஸ்திரேலிய கோ.—இது முக்கால் பாகத்தைய 3 லட்சம் கொண்டதுதான்.

இராய கேனத்பத்.—பிரிட்டிஷ் தளகர்த்தர்களில் மிக்க கெறியவர் ஜெனரல் போர்ட் என்பவர்.

கவர்ன்மெண்டு. — நமது கவர்னரவர்களும் அவரோடு சேர்ந்த பெரிய உத்தியோகஸ்தர்களும் வருகிற அக்டோபர்மீ நீலகிரியிலிருந்து சென்னை வந்து சேருவார்கள்.

கோசுரும் மஞ்சள் நிறமும்.—கொசுருக்கு மஞ்சள் பிடிக்காமையால் அதைத் தரித்திருப்பவரை வாதிக்கிறதில்லையாம். அதலால், கொசுரு மிருக்கிற இடத்திலே ஜனங்கள் மஞ்சள் வேஷ்டி மூடிப்படிக்க வைக்கவேண்டும்.

இந்திய மிஷனரிச் சங்கம்.—கிறிஸ்துமார்க்கத்தைப் பிரபல்யப்படுத்த திருகெல்வேலி ஜில்லாவில் ஏற்பட்டிருக்கிற சங்கம் இது. இது நிதானம் சமஸ்தானத்திலும், மலையாளத்து மலவாகிகளிடத்திலும் சுவிசேஷத்தைக் கூறிவருகிறது. பிரதான ஸ்தானம் தோர்ணக்கல். இச்சங்கத்துக்கு பிஷப்பு ஒருவர்; குருமார் 3 பேர்; வேறு தொழிலாட்கள் 36 பேர். சென்ற வருஷம் சேகரமான தொகை 14,500 ரூ.

ஓர் மாதின் அரிய தியாகம்.—ஓர் மாதுக்கு அவள் சிற்றப்பன் 18,000 பவுண்–அதாவது 2½ லட்சம் ரூ. வைத்துப்போயும் அந்தத் திரவியம் அதர்மத்தில் சம்பாதித்த திரவியமாகையால் தனக்கது வேண்டாமென்று தன்னிலிட்டாளாம். அவள் அப்பிராயப்படி சம்பாதிக்கத்தக்கவை மூன்றே: புத்தி, நேசம், சித்தம். எத்தனேப் பிள்ளைகள் தகப்பன்மார் அநியாயமாய்ப் பரிதானம் வாங்கிச் சேர்த்தவைத்த சொத்தைச் சந்தோஷமாய்ப் பெற்று சீக்கிரத்தில் செலவழித்துப் போடுகிறார்கள்.

பெண்ணுக்கு வைத்தியப் பரீக்ஷை.—அதாவது, இத்தேசத்தில் உயர்ந்த வைத்தியப்பட்டம் பெற்ற ஒரு மாதுக்கு வருஷந்தோறும் ரூ. 3,000 வீதம் 3 வருஷம் கொடுத்து, இங்கிலாந்துக்குப் போய் இன்னும்அதிகமாகவாசிப்பிக்கவேண்டுமென்று உத்தரவாகியிருக்கிறது. இவ்வருஷம் இந்த உபகாரச் சம்பளம் ஒரு இந்திய கிறிஸ்தவப் பெண்–ரெஜினு கோஸ் என்னும் பங்காள மாதுக்குக் கிடைத்தது. இனி வருஷந்தோறும் இவ்விதமாய் ஒரு மாது இங்கிலாந்துக் கனுப்பப்படுவாள். இது நிறந்த செயல்.

சம்பள வரி. — வருஷம் ஆயிரம் ரூபாயும் அதற்குமேலும் வரும்படி யுள்ளவர்களுக்கெல்லாம் வரி யேற்பட்டிருப்பது யாவருக்குந் தெரிந்தகாரியம். இதனுல், மாதம் ரூ. 83, 5, 4-க்குக் குறைந்த சம்பளம் உள்ளவருக்கு இந்த வரி கிடையாது. இதுகிற்க, இதவணையும், ஆயிரம் முதல் ஈராயிரம் வரைக்கும் வரும்படியுள்ளவர்களுக்கு ரூ. க்கு 4-பை வீதமும், அதற்கு அதிகம் பெறுகிற மற்றவர்களெல்லாருக்கும் 5-பை வீதமும் வரி போட்டுவந்தார்கள். இதன் அதர்மத்தைநாம் நமது இங்கிலிஷ்பேப்பரில் அடிக்கடி எடுத்துக்காட்டி, வரிகளே வாவுக்குத் தக்கப்படி கிரமப்படுத்தவேண்டுமென்று காண்பித்தோம். இப்பொழுது அப்படியே வரியைக் கிரமப்படுத்தப் போகிறதாகக் கேள்வி. ஏழைகளே விட தனவான்களே இலேசாய் அதிக வரிகொடுக்கக் கூடியவர்கள்.

குழிச்சண்டை.—இப்பொழுது நடந்துவருகிற பயங்கரமான யுத்தத்தைக் குழிச்சண்டை என்று சொல்லலாம். முக்கியமாகப் போர்செய்து அழிக்கிற சாதனங்கள் பீரங்கிகளும், துப்பாக்கிகளுமேயாகையால், அவற்றுக்குத் தப்பும்பொருட்டு, போர்வீரர் ஏராளமான குழிகள் தோண்டி அதிலே மறைந்து இடக்கிறார்கள். 10,000 மைல் வரைக்கும் குழிகளுண்டு. குண்டுகள் பாய்கிற சமயத்தில் ஒளித்திருந்தும், பாயாத சமயத்தில் மேலேவந்து நகங்கள் பீரங்கிளேச் சுட்டுக்கொண்டு மிருக்கிறார்கள். சற்காலம், இங்கிலிஷர் மிகவும் பயங்கரமான பீரங்கிளேச் சுட்டு எதிரிகள் குழிகளேயெல்லாம் அடைப்பித்து அவர்கள் ஒளிக்க இடமின்றி, வெளிக்கிளம்பின உடனே அவர்கள்மேற் பாய்ந்து அவர்களுடன் கைச்சண்டை செய்து, தோற்கடிக்கிறார்கள். இதை எதிர்க்க ஜர்மன்கள் 30 அடி ஆழத்துக்குச் சில குழிகள் தோண்டி அதிலே ஒளித்திருந்து போர்வீரர் கைகலந்த உடனே வெளிக்கு வதிப் பின்னேயிருந்த அவர்கள்பேரில் விழுகிறார்களாம். ஆகலால், குழிச்சண்டையிலும் பல சண்டையுண்டு.

யுத்த விவரம். — அல்குலித் மக்கிரியும், பிரெஞ்சு ஜெனரலும் ஜெயம் நிச்சயம், ஜெயம் சீக்கிரமென்று கூறியிருக்கிறார்கள். ரஷியர்முன்னே ஆஸ்திரியர் நிற்க முடியாமல் அனேக லட்சமான வீரர்களே இழந்து ஓடிப்போகிறார்கள். ஆஸ்திரிய சேனே முற்றிலும் நாசமாய்ப் போய்விட்டது. இனி ஜர்மன்கள்மேற் படையெடுத்துச் செல்லுகிறார்கள். அவ்வாறே அங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் மேற்கே ஜர்மன்களேத் தம் தேசத்துக்குள்ளே தரத்திக்கொண்டே போகிறார்கள். இத்தாலியரும் தெற்கிலே ஆஸ்திரிய நாடுகளாக்களேப் பிடித்துக் கொண்டார்கள். இங்கிலிஷ் பீரங்கிகளின் கொடுமைக்கு ஜர்மன் பீரங்கிகள் தலிபொடிபோலாகின்றன. இதுகிற்க, ஜர்மனியிலே கொடிய பஞ்சம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. பிரஜைகளே எமாற்றிவந்தவர்கள் இனி அப்படிச் செய்ய முடியவில்லே. குடிகளுக்குக் கண் திறந்துவிட்டது. ஜர்மன் வீரர்களுக்கு ஜயத்துக்குப் பதில் அபஜெயமே லபிக்கிறதாய்விட்டது. ஆரம்பத்திலி

செப்டெம்பர்மீ பஞ்சாங்கம்.—

வாரம்	செப்டெம்பர்மீ.—அலவி—புரட்டாசி. ● அமாவாசை, 27உ ⊙ பௌர்ணமி, 11உ						ஆவணி—புரட்டாசி.			
ஞாயி...	...	3	10	17	24		19	26	2	9
திங்க...	...	4	11	18	25	..	20	27	3	10
செவ்...	...	5	12	19	26	...	21	28	4	11
புதன்...	...	6	13	20	27	..	22	29	5	12
வியா...	...	7	14	21	28	...	23	30	6	13
வெள்...	1	8	15	22	29	17	24	31	7	14
சனி ...	2	9	16	23	30	18	25	1	8	15

Vol. XXIX. No. 11. புஸ்தகம் உக. தொ. கக

ருந்த வீரதீரமும், சக்தி சௌரியமும் பறந்துபோய், மனச்சலிப்பும், அதைரியமும் மேலிட்டிருக்கிறது. அவர்கள் கப்பல்களெல்லாம் ஒரு நெருங்கிய வாய்க் காலில் அகப்பட்டுத் தவிக்கின்றன. கைசர் இப் பொழுது வாய்திறக்கக் காணோம். இந்த வருஷத்துக்குள்ளே, அல்லது மிஞ்சினால் வருகிற மார்ச்சு மாதத்துக்குள்ளே ஜர்மன்கள் சமாதானத்துக்குக் கெஞ்சுவார்க ளென்பதற்கு இனி ஐயமில்லை. பெருங்கஷ்டமும், பேராபத்தும் அப்பொழுதுதான் உலகமெங்கும் ஆரம்பிக்கும். ஜர்மன் வர்த்தகம் முற்றிலும் அழிந்துவிடும்.

மாட்டேன். ஆகையால் காளைக்கு ஆட்மேன்தை யை ஐந்து மணிக்குள் தொழுவத்தில் அடைத்து விட்டு, வீடுவந்து சேருவேன். நீ அதற்குள்ளாக சமையல்செய்து, சாப்பாடு ஆயத்தமாக வைத்துக் கொள்ளென்று சொல்லி மனைவிக்கு உத்தரவு கொடுத்துவிட்டான். அப்படியே மனைவியும் ஆகட்டுமென்று சொல்லிவிட்டு, என்ன பதார்த்தம் செய்யவேண்டுமென்று கேட்டாள்; அப்போது தனவான் நம்முடைய கோழிபெட்டைகளில் ஒன்றைப் பிடித்து அடித்து ன்ரூய்ச் சமைத்துவை என்றான். அப்படியே ஆகட்டுமென்றாள். இடையன் வழக்கம்போல் ஆட்டுமேய்தைக்குப் போய்விட்டான்.

பின்னுலே வந்தார்கள். அவர்களில் ஒருவன் இடரென்று இடையன் முதுகின்மேல் ஏறிக்கொண்டான். அப்படியிருந்தும், தன் முதுகின்மேலிருந்த பளுவுகூட அவனுக்கு உணர்வு இல்லாமலிருந்தது. நாடக முடியுமட்டும் அந்த வாலிபன் அவனுடைய முதுகின்மேல் இருந்துகொண்டான். நாடகம் முடிந்ததும் முதுகின்மேல் ஏறியிருந்தவனும் கீழே குதித்துவிட்டான். இடையன், அதிக ஆயாசத்தோடு நிமிர்ந்து, அப்படா; இரண்டு ஜன் சுமை தாராளமாயிருந்ததப்பா; என்றுசொல்லிக்கொண்டு, தடிக்கொம்பைத் தூக்கித் தோளின்மேல் வைத்துக் கொண்டு, வீடுபோய்ச் சேர்ந்தான்.



வாலெட்டா என்னும் பட்டணம்.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

இருபத்தமூன்றும் கதை.

இடையன் அரிச்சந்திரநாடகம் பார்க்கப்போன கதை.

ஒரு கிராமத்தில் சிலநாட்களாக நாடகம் ஆடி வந்தார்கள். இந்தச் செய்தி பக்கத்துக் கிராமங்களெல்லாம் எட்டினது. அப்போது அவ்வித கிராமங்களிலிருந்தும் அநேக ஜனங்கள் இந்த நாடகத்தைப் பார்க்கப் போனூர்கள். இச்செய்தியைக் கேட்ட ஆடுமேய்க்கிற இடையன், ஆகா, நான் பிறந்து இவ்வளவுகாலமாயும், ஒரு நாளாகிலும் நாடகம் பார்க்கவில்லையே, அது எப்படி யிருக்குமோ தெரியவில்லையே என்று தன் மனதில் சிந்தித்து, தன் வீட்டுக்கு வந்ததும், தன் இல்லாளைக் கூப்பிட்டுச் சொல்வான்: ஒ, என் மனைவியே பக்கத்துள் கிராமத்தில் நாடகம் ஆடுகிறது வெகு நேர்த்தியாயிருக்கிறதாம், நான் அதைப் பாராமல் இருக்க அன்றுமுழுதும் அவனுக்கு கோழிக்கறியின்மேலும் நாடகத்தின்பேரிலுமே நினைவு இருந்தது. அந்தி நேரமானதும், ஆகாளத் தொழுவத்தில் அடைத்து விட்டு, ஐந்துமணிக்கு வீடுவந்து, தன் மனைவியைக் கூப்பிட்டு சாப்பாடு ஆயத்தமாயிருக்கிறதா? என்று கேட்க, மனைவி உடனே, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. இலே போடட்டுமா? என்ருள். அப்படியே ஆகட்டும் என்ருன். அப்போது அவனுக்குத் திருப்தியாகுமட்டும் கறியும், சோறும் கொடுத்தாள். அவனே நன்ருய்ச் சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலம் போட்டுக்கொண்டான். அப்புறம் பெரிய தடிக் கொம்பும், தூக்கித் தோளின்மேல் வைத்துக்கொண்டு, வெகு ஆசையோடு மனையினிடத்தில் சொல்லிவிட்டு, புறப்பட்டுப் போனன். மூன்று மைல் தூரம் நடத்து அந்த இடம்போய்ச் சேர்ந்தான். நாடகம் ஆரம்பித்து நடக்கிறது. அங்கே ஜனங்களேயும், நீவெட்டிகளேயும், வேஷங்களேயும் பார்த்ததும் அதிக பிரமிப்பாகிவிட்டது. ஆனலும் இவன் ஒரு இடத்திலும் உட்காராமல் ஜனங்களுக்குப் பின்னலே, தன் தடிக்கொம்பைத் தனியில் ஊன்றி அதைப் பிடித்துக்கொண்டே குனிந்து நின்று பார்த்தான். இதைப் பார்த்த சில துஷ்டவாலிபர்கள் போனதும் தன் மனைவி ஓடிவந்து, என்ன! நாடகம் பார்த்தீர்களா! எப்படியிருந்தது என்று ஆசையோடு கேட்டாள். அவனே, நாடகம் இரண்டாள் பளுவு தாராளமாயிருந்தது என்ருன். அப்போது மனைவி என்ன சுமை யிருந்தது என்க, அவனே நாடகத்தின் பளுவு இரண்டாள் சுமை யிருந்தது என்று திரும்பவும் சொன்னுன். அவனோ, மறுபடியும் நாடகம் பளுவாய் இருக்காதே, பார்க்க, பார்க்க ஆசையாயிருக்குமே என்ருள். அப்படியே அவன் ஆம், ஆம் அது ஆசையாய்தான் இருந்தது. ஆனலும் முதுகின்மேல் பளுவு இருந்ததுபோல் தெரிந்தது என்ருன். இதினுல் நாம் அறிந்துகொள்வது என்னவென்ருல், நம் ஒவ்வொருவருக்கும் பாவச் சுமை யிருக்கிறது. ஆனல் நாம் பாவங்களைச் செய்யும்போது, இந்த இடையனைப்போல. உலக ஆசா பாசத்தால், பாவ உணர்ச்சி யற்றவர்களாய்த்தானிருக்கிறோம். ஆனல் நாம் ஒவ்வொருவரும் பாவத்தினுல் வரும் தண்டத்தை நினைத்து, அதற்கு விலகிப்போகும் வழியைக் கண்டடைவோமாக.

G. D.

The Lamentations of a Drunkard's Mother

குடிகாரனுடைய தாயின் புலம்பல்

1. பத்துமாதஞ் சுமந்து—பரிவாய்ப் பெற்று வளர்த்த
வித்வ ரோமணியே,—என்மகனே, கண்மணியே!
2. கண்கள் வெந்ததென்ன?—என் கண்மணியே, சொல்லாயோ?
புண்பட்ட என் நெஞ்சாற—உன் வாய்கிறந்து பேசாயோ?
3. கால்கள் தன்னாலுவதேன்?—உன் கைகள் நடுங்குவதேன்?
கால், கரம், முகம், தலே—காயப்பட்ட காரணமேன்?
4. உன் பொன்மேனி மங்கிப்போய்—மண்மேனியாய் மாறினதேன்?
முன்னிருந்த செல்வம்போய்—சீரழிய நேரிட்டதேன்?
5. பட்டுச்சொக் காய்கள்எங்கே?—உன் பாதரட்சையு மெங்கே?
கட்டுந் தலேப்பாகையும்—ஒய்யார நடையும் எங்கே?
6. கிளிபோன்ற பாரியாள்—வீழிகலங்கி நிற்பதேன்?
புலிபோல் பாய்ந்தவளே—நீ புடைத்த காரணமேன்?
7. உன் செல்லமக்கள் அரை—வெறுமையா யிருப்பதேன்?
உன்னேக் கண்டாலவர்கள்—பஞ்சாய்ப் பறந்தபோவதேன்?
8. தந்தை சம்பாத்தியம்போய்—நீ தேடிய சம்பத்தும்போய்,
நிந்தைக்கு நீ ஆளாகி—கந்தைத்துணியும் போர்த்தாயோ?
9. கட்டிய வீடு எங்கே?—கட்டில், தலேயணே யெங்கே?
பட்டினி யாய்க்கிடந்து—பாதையில் படுத்ததென்ன?
10. பஞ்சமா பாதகங்கள்—பலவிதக் கோரணிகள்
அஞ்சாமல் செய்துகெட்டு—தூக்குமரஞ் செல்வதென்ன?
11. கட்டைக்குள் போனபோ?—கட்டழகா, என்மகனே,
வெட்கத்துக் குள்ளானயே—வேறுநாற் கதியில்லேயோ?
12. சாராயக் கடைப்பக்கம்—சாயந்தரங்தோறும் நீபோய்,
சாராயங் குடித்ததால்—விஷந்தலேக் கேறினதோ?
13. பலநிற மதுக்கள்—பருகினதால், மகனே,
குலத்துக் கீனமான—கொலேபாதகஞ் செய்தாயோ?
14. உன் தாய் பதைபதைக்க—தம்பி, தங்கை, மக்கள் அழ,
உன்பாரி யாள்புலம்ப—வேலேவந்த தறியாயோ?
15. தூக்கு மேடை மேலேறி—சுற்றிஎல்லா ரையும்பார்த்து,
மூக்கு, வாய், கண்மறைய—முழுக்குல்லாவும் போட்டாயோ?
16. சூத்திரத்தைத் தொடலே—தொங்குகிறுன் செல்லமகன்;
ஆத்திரப்பட் டாலதென்ன!—ஐயையோ, உயிரதறுந்தான்!
17. பார்த்தரும் பாங்கிமாரே—பரிதபித் தாலதென்ன?
வேர்த்து விழுந்திடுவேன்—வீடுகொண்டு சேர்த்திடுங்கள்.
18. பிள்ளேகளேப் பெற்றோரே—கற்றோர், மற்றோருங் கேளுங்கள்,
பிள்ளேபெறல் போதாது—பேணிவளர்க்க வேண்டாமோ?
19. பெற்றோர் வழங்கலாமோ—பீர், பிராந்து, கள், சாராயம்?
பெற்றோரால் கெட்டமக்கள்—சாற்றும்பழி பலிக்காதோ?
20. செல்லமகன் சரிதை—செப்பினேன் நடந்தபடி;
நல்ல பிதா மாதாக்கள்—நல்வளர்ப்பில் வளர்க்காரோ?

PARADISE LODGE,
August 25, 1916.

பாரதீசு பாடி.

JAPAN AND INDIA

ஜப்பானும் இந்தியாவும்

1. ஜப்பான் தேசம்

ஜப்பான் என்ற பெயர் ஜி-பென் என்னும் பதத்தினின்று வந்தது. அவ்வார்த்தையைக்கொண்டு தான் ஜப்பானியர் தங்கள் தேசத்தை "சூரிய உற்பத்தி ஸ்தானம்" என அர்த்தங்கொள்ளும் நிப்போன் என்று அழைக்கின்றனர். இக்காரணம் பற்றி அத்தேசம் "சூரியோதய ராஜ்ஜியம்" என்று வழங்கப்படுகிறது. ஜப்பான் தேசத்தில் ஆசியா கண்டத்தின் கீழ்கோக்கு அப்பால் சங்கிலித் தொடர்போன்ற அநேக தீவுகளிருக்கின்றன. அவைகள் 1,500-மைல் நீளமாயும் 100 முதல் 200-மைல் அகலமாயும் இருக்கின்றன. ஆனல் இந்தியாவானது அதன் அதிகமான நீளத்திலும் அகலத்திலும் சுமார் 1,900-மைல் தூரமுள்ளது.

ஜப்பான் 1,62,000-சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. இந்தியா 17,66,597-சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. அதாவது ஜப்பான் இந்தியாவின் பத்தில் ஒருபங்கு விஸ்தீரணத்தைவிடக் குறைவானது. ஆகவே ஜப்பான் டிரேட் பிரிட்டன் அல்லது சென்னை ராஜதானியைவிடச் சற்று பெரியது. 1903-ம் வருஷம் எடுத்த கணக்கின் படி மொத்த ஜனத்தொகை 4,67,32,138. இப் பொழுது ஐந்து கோடிக்கு அதிகமாயிருக்கிறது. அதாவது ஒரு சதுர மைலுக்கு 290-பேர் உண்டு. இந்தியா முழுவதும் ஒப்பிட்டால் ஒரு சதுர மைலுக்கு 167-பேர்; பங்காளத்தில் ஒரு சதுர மைலுக்கு 413-பேர்.

வெகு பூர்வீக காலங்களில் ஜப்பான் தேசமானது ஆசியா கண்டத்தோடு சேர்ந்த ஓர் நிலபாகமாயிருந்தது. இப்பொழுதோ நான்கு பெருந்தீவுகளும் ஏறக்குறைய நாலாயிரம் சிறு தீவுகளுமுடைய ஓர் பிரிந்த தீவு உலகமாயிருக்கிறது. எரிமலேகளின் கிரியையினுலே சமுத்திரத்திற்குமேல் கொண்டுவரப்பட்டிருப்பதால் எரிமலேயும் பூகம்பமுமே ஜப்பானே உண்பெண்ணின கருவிகளென்கலாம். வாஸ்தவத்தில் இத்தேசம் எரிமலேகள் அதிகமாயிருக்கும் இடத்திலிருக்கிறது. இத்தேசத்தில் மூன்று எரிமலேத் தொடர்களும், 200-எரிமலேகளும் உண்டு. அவற்றுள் 50 – சதவீதக் குறைய இன்னமும் பயங்கரமானவைகள்தான். ஒவ்வொரு வருஷமும் 1,000 – பூகம்பங்களுக்கு அதிகமாய் உண்டாகின்றன. சராசரி நினந்தோறும் மூன்று குலுக்கங்கள் நேரிடுகின்றன. ஆனல் செய்ஸ்மோகிராப் (Seismograph) ரிக்கார்டுகளின்படி மனுஷக் கைகாடி அடிக்கிறதுபோல அடிக்கடி பூமியதிர்ச்சிகள் சம்பவிக்கின்றன. இரண்டு வருஷத்திற் கொருமுறை ஒரு பயங்கரமான குலுக்கம் உண்டாகிறது. சுமார் இருபது வருஷங்களுக்கு ஒருதடவை ஏராளமான உயிர் பொருள் சேதங்களே வருவிக்கும் உண்மையாகவே நாசஞ்செய்யும் ஓர் பூகம்பம் வருகிறது. வேனுவேளைகளில் பலமான அலேகளும் பிரவாகிக்கின்றன. அவைகளினுல் ஆயிரக்கணக்கான ஜனங்களும் நிராளான கிராமங்களும் சேதமாகின்றன. இவ்விதமாய் ஜப்பான் தேசமானது எரிமலேகள், பூகம்பங்கள், அலேகளாகிய மூன்று பெரிய பூதங்களால் சங்கடப்படுகிறது. இந்தியாவிலோ இம்மூன்றும் அவ்வளவு அதிகமாய் நேரிடுகிறதில்லே. தூரத்தைப் பார்த்தால் மனதுக்குக் கவர்ச்சி யுண்டுபண்ணினுலும், சில தீர்த்திபெற்ற ஆசிரியர் எழுதியிருக்கிறபடி ஜப்பான் ஒரு பரதீசு என்றும் சொல்லமுடியாது அல்லது அது ஓர் உத்தரிக்கும் ஸ்தலம் என்றும் சொல்லலாகாது.

விளம்பரம்

THE CHRISTIAN CENTRAL CO-OPERATIVE BANK, (LTD.)

கிரிஸ்தியன் சென்றல் கோ-வாப்பரேடிவ் பாங்கு, (லிமிட்டெட்.)

கிரிஸ்தவ கிராமிய சங்கங்களுக்கு உதவிபுரிகிறதே இந்தப் பாங்கின் நோக்கம். இதிலே இரண்டு விதமான பங்குக்காரருண்டு. A பங்குக்காரர் ரூ. 250–உம், B பங்குக்காரர் ரூ. 5ய–உம் கொடுக்கிறவர்கள். A வருப்பிலே 400 பேரும், B வருப்பிலே 2,000 பேரும் சேரலாம். அட்வான்சு ரூ 1-கொடுத்து, பங்கை ஐந்துமாதத்தில் கட்டிவிட வேண்டும். பற்பல சங்கங்களும், சபைகளும் தங்கள் நிரவியங்களே இதிலே வட்டிக்கு வைத்துச் சகாயம் பெறலாம். பங்குக்காரருக்கு நூற்றுக்கு 9 வரையும் லாபம் கொடுக்கப்படும். மொத்த லாபத்திலே காற்பங்கு ஆபத்து நிதியாகச் சேர்க்கப்படும். இந்த நிதியினுலே கிரிஸ்தவர்களுக்குப் பெரிய நன்மை யுண்டாகுமென்று கருதியே இதை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அதிபதி: மிஸ்டர் பால் அப்பாசாமி; உதவி அதிபதி: ரெவ ரெண்ட் ஜே. பாஸ்மோர்; மெம்பர்கள்: மிஸ்டர் எம். டி. தேவதாஸ்; மிஸ்டர் கே. டி.. பால்; ரெவ ரெண்ட் எச். ஏ. பாப்லி; காரியதரிசி: மிஸ்டர் ஜே. பிரேலிக். சேர விரும்புகிறவர்கள் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளவும். விலாசம் சென்னை, பிராட்வே, 22. சகல மிஷனெரிமார்களும், இந்திய குருமார்களும், இந்த நிதியைக்குறித்து விளம்பரம் செய்தி, இந்திய கிரிஸ்தவர்கள் யாவரும் இதில் சேரும்படி முயற்சிசெய்ய வேண்டிக்கொள்ளுகிறோம்.

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது
பிறந்ததுமுதல் குழந்தைகளின்
உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது
1916–ம் வருஷத்திய மெல்லின்ஸ்
பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு
தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணு கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான

'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'

என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுபட்ட ஒத்தைக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையு அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒத்தைக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் பிரயத்தைத தபாற்கூலியுட சென்னை மிஷனரியல் ஹவுஸ்கீப்பரை C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கு பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K Press, Vepery, Madras—1916.



161196

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - OCT 1916
MADRAS

சத்திய தூதன்.

OCTOBER, 1916. PRICE, 1 PIE.—விலை, 1 பை. அக்டோபர்மீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

இன்னுமொரு சர்வகலாசாலை.—மயூரிலுண்டான சர்வகலாசாலை போன்றதொன்று திருவிதாங்கோடாகிய மலையாள ராஜ்யத்திலும் ஸ்தாபிக்கப்படப்போகிறதாம்.

கவர்ன்மெண்டு.—ஏறக்குறைய ஏழுமாதமாய் நீலகிரியிலிருந்து வேலைசெய்த கவர்ன்மெண்டார் இம்மாதம் சென்னைக்குத் திரும்புவார்கள். இதற்குள்ளாக லார்ட் பெண்ட்லண்டவர்கள் ஒரு சிறு பிரயாணம் செய்துவருவார்கள்.

ஜீவித்திருக்கிற ஏழ தலைமுறைகள்.—இவ்வுமையான ஒரு குடும்பம் இங்கிலாந்தில் இருக்கிறதாக டாக்டர் பீலட் பிஷப்பெழுதியிருர். அக்குடும்பத்தில் ஏழாம் தலைமுறைக் குழந்தைக்கு ஒரு மாத வயதும் ஏழாம் தலைமுறைப் பாட்டிக்கு 96 வயதுமாம். ஏழுவரும் ஜீவித்திருக்கிறார்கள்.

பங்காளப் புலவர். — ரபெர்ந்தராதென்னும் இச்சிறந்த புலவர் தற்காலம் ஜப்பானில் பிரயாணஞ் செய்துவருகிறார். ஆசியா கண்டத்திலே ஜப்பான் தான் தலையெடுத்த ராஜ்யம். அதை இந்தியர் யாவரும் பின்பற்றி வித்தியையை வேண்டுமென்று கூறிவருகிறார். இதற்குச் சந்தேகமில்லை.

பத்திரிகை வயது.—இம்மாதத்துச் சஞ்சிகையோடு "சத்திய தூதன்" பத்திரிகையானது 29-வருஷம் முடிந்து, 30-ம் பிராயத்தை ஆரம்பிக்கிறது. இது சொற்பவிலைக்கு விற்கிற சாதாரண தமிழ்ப்பேப்பருக்கு நல்ல வயதென்றே சொல்லத் தகும். இதன்றி, இத்தனை வருஷக்காலமாய் நாமே இதை இடைவிடாது நடத்திவந்த கடவுள் அதற்கு கிரகம். அதற்காக அவருக்கு ஸ்துதி செலுத்துகின்றோம்.

இனச்சம்பந்தம்.—சகோதரர் மக்களும், அண்ணன் தங்கை மக்களும், சகோதரிகள் மக்களும் மணம்புரிவது வழக்கமாயினும், அதிலே அதிகக் கெடுதியுண்டென வைத்திய சாஸ்திரிகள் புகல்கிறது மாத்திரமன்றி, நாமும் அக்கெடுதிகளைக் கண்ணாரக் காணலாம். இனத்தவர்கள் கலப்பால் தேக வலிவும் மனநிடமும் குறைந்து நஷ்டப்படுகிறது. இனமல்லாதவர் கலப்பாலோ, புத்தி தீட்சண்யமும், உடல்வலியும் விர்த்தியடைகிறது.

ஹிந்துப்பேபரம்.—ராவ்சாஹிப் சி. ராமானுஜம் செட்டியாரவர்கள் ஹிந்துப் பத்ராயிருந்தும், கிறிஸ்தவ பெண்களின் உயர்தரக் கல்விக்காக ரூ. 9,000 கவர்ன்மெண்டுக்குக் கொடுத்து, அதன் வட்டியிலிருந்து மாதம் ரூ. 25 வீதமாக உதவிச் சம்பளம் ஏற்படுத்தியிருக்கிறர். இந்தச் சம்பளம் ஒரு பெண் பீ. ஏ. பரிட்சையில் தேறும்பொருட்டு 4 வருஷம் நடக்கும். பிறகு, இன்னொருத்திக்குக் கொடுக்கப்படும். இது உபகாரத்திற் சிறந்த உபகாரம். கடவுள் இம்மகானை மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக.

சமஸ்தா வாய்க்கால். — இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலே 20 மைல் அகலமான ஒரு ஆழமான சமுத்திர வாய்க்காலுண்டு. அதனடியிலே ஒரு சாலே போடவேண்டுமென்று அனேகர் சடவை பிரயத்தனப்பட்டும் வாய்க்காமற்போயிற்று. அதன் நஷ்டம் இந்த யுத்தத்திலே தெளிவுறத் தெரிவர்க்கையால், இப்பொழுது அந்தச் சாலேயைப் போடத் தீர்மானித்திருக்கிறார்கள். இதற்கு எண்ணூக்கடங்காப் பணச்செலவும், ஏராளமான காலமும் வேண்டியிருந்தாலும், இந்த நீரிழ்ச்சாலேயினல் புகலிய அநுகூலமுண்டாகும். அன்றி, ரீராந் பிரிந்திருக்கும் சினேகரான இரு ராஜ்யதாரும் தரையாலிணைக்கப்பட்டு இன்னும் நெருங்கிய ணபராவார். இப்போப்பட்ட சாலே தெம்ஸ் நதியின்கீழ்ப் போடப்பட்டிருக்கின்றன.

சேன்னை பிஷப்பவர்கள்—இப்போது லீவு மேலே இங்கிலாந்திலிருக்கிற சென்னை பிஷப்பவர்கள் இந்தியாவுக்குச் சுயஅரசு அருளவேண்டுமென்ற கருத்தாய் ஒரு இங்கிலிஷ் மாதாந்தரப் பத்திரிகையிலே பிரசித்தமாய் எழுதியிருக்கிறர். அனேக அங்கிலேயருக்கு இது பிடிக்கவில்லே. ஆகிலும் பிஷப்பவர்கள் சுயஅரவு உடனே கொடுக்கப்பட வேண்டுமென்று வாதிக்கவேயில்லே. ஒரு வேளை, அவர் கருத்தின்படி நூறவருஷஞ் சென்றூலும் செல்லும். அதனுல் அவர் எழுதுகிற விஷயத்தில் போனுகூலம் வாஸ்தவத்திலில்லே. ஆனுல் இரண்டொரு சீர்திருத்தங்கள் தற்காலம் அவசியம் செய்யவேண்டுமென்கிறர். அவையாவன: இந்தியர்களுக்கு ஆயுதம் தரிக்கும் உரிமையும், சேனையிற்சேரும் லொக்கியமும், இன்னும் அதிகமான உயர்ந்த உத்தியோகங்களும் உடனே கொடுக்கவேண்டுமென்று சொல்லுகின்றர்.

இந்தியாவுக்கு நல்ல சமயம்.—சண்டைக்கு முன்பு வருஷந்தோறும் ஜர்மனி, ஆஸ்திரியா என்கிற பகைஞர் ராஜ்யங்களிலிருந்து இந்தேசத்துக்கு 33 கோடி ரூ. பெறுமான பலசரக்குகள் இறக்குமதியாயின. இப்பொழுது அவை நிறுத்தப்பட்டன. இங்கிலிஷ் சரக்குகள் அதிக விலையுள்ளவை. சகாயமான கண்ணடி, காகிதம், வர்ணம், மாச்சுப்பெட்டி, தோல்வகைகள், தணிவகைகள், மருந்துகள் வராமையால் இத்தேசம் அதிக சௌமைப்படுகிறது. ஜப்பான் தேசத்திலிருந்து லெ சரக்குகள் வருகிறது. இந்தியர்கள் இந்த மிக்க உபயோகமான கைத்தொழில்களைக் கற்றுத் தங்களுக்காகச் செய்துகொண்டால் எத்தனைப் பிரயோஜனமாயிருக்கும்! இங்கிருந்து பச்சைத்தோல் போய், கோத்தியாப்பதனிட்டு வர, அதற்குப் பத்துமடங்கு அதிக விலைகொடுத்து வாங்குகிற மூட்டைகளாயிருக்கிறோம், இப்படிச் செய்து பணமிழப்பானேன்? இவ்கேயே கம்பனிகள் ஏற்படுத்தி மேற்படிப் பதார்த்தங்களே நாமே செய்துகொள்ளலாகாதா? நிரவியத்

அக்டோபர்மீ பஞ்சாங்கம்.—

வாரம்.	அக்டோபர்மீ = புரட்டாசி—ஐப்பசி. ● அமாவாசை, 26உ ⊙ பௌர்ணமி, 11உ.					புரட்டாசி—ஐப்பசி.				
தாயி ...	1	8	15	22	29	16	23	30	6	13
திங்க ...	2	9	16	23	30	17	24	31	7	14
செவ் ...	3	10	17	24	31	18	25	1	8	15
புதன்...	4	11	18	25	...	19	26	2	9	...
வியா ...	5	12	19	26	...	20	27	3	10	...
வெள்...	6	13	20	27	...	21	28	4	11	...
சனி ...	7	14	21	28	...	22	29	5	12	...

புஸ்தகம் உகூ நோ. கூ.

Vol. XXIX. No. 12



கீவாவின் பெரிய மகம்மது கோவில்.

தக்குக் குறைவில்லையாயினும், கூட்டுவேலைக்கும் ஸ்வஸ்த புத்திக்கும் நம்மவர்க்கு மிக்க குறைவுண்டு. கைத்தொழில் சித்திபெருவிடின், இந்தியாவுக்கு வித்தில் பிடையாது.

யுத்தம்.—இப்பொழுது ஜெயமெல்லாம் நட்ப ரசுகள் பட்சமாய்ச் சார்ந்திருக்கிறது. ஜர்மனி இதுவரையும் இழந்த வீரரின் தொகை 30—லட்சம். இதிலே போர்க்களத்தில் மாண்டவர்கள் 9—லட்சம்; மற்றவர்கள் படுகாயம் பட்டவர்களும், கைதிகளான வர்களுமாம். ஜர்மனி கையிலிருக்கிறவர்கள் இன்னும் 30—லட்சம். இவர்கள் தினந்தோறும் தொகை குறைந்தும், மனம் சிதைந்தும் வருகிறார்கள். இதிகிற்க, இதுவரையும் மதில்மேல் பூனைபோலப் பதுங்கியிருந்த ரூமேனியா நட்பரசைச் சேர்ந்து கொண்டது. இதனால் யுத்தம் விரைவிலே முடியும் என்பதற்குச் சந்தேகமில்லே. ரூமேனியா பல்கேரியாபிலே சண்டை ஆரம்பித்துவிட்டது. இதனால் சர்வியாவுக்கு உதவியும் ஜெயமும் கிடைக்கிறது. ஆஸ்திரியாவின் கதி எப்படியாகுமோ, ஸெ நினங்களுக்குள்ளாகத் தெரியவரும். மேற்கே பிரான்சு, இங்கிலாந்தும்; கிழக்கே ருஷ்யாவும், ரூமேனியாவும்; தெற்கே இத்தாலியும் எதிரிராஜ்யத்தை வளைந்துகொண்டு வருகிறார்கள். ஜர்மன்கள் பின்வாங்கிப்போகிறார்கள். பிரிட்டிஷ் பிரங்கி வெடிவேஸ் தாங்கமாட்டாமல் பின்னுபின்ன மாய்ச் தெறி ஓடுகிறார்கள். வருகிற கார்வாலத்துக்குள் யுத்தம் ஓயுமென்று பெரும்பாலாரும், இன்னும் ஒரு 9—அல்லது 12—மாதஞ் சென்றாலும் செல்லுமென்று சிலரும் உத்தேசிக்கிறார்கள். ஆகிலும் ஒரு பத்திரிகை சென்ற வருஷத்துக்கும் இந்த வருஷத்துக்குமுள்ள வித்தியாசத்தைப் பின்வருமாறு எடுத்து விளக்குகிறது:—

ஆகஸ்ட் 1915.	ஆகஸ்ட் 1916.
ஜர்மனி ருஷ்யாவில் முன்செல்லல்.	ரஷ்யர் ஜர்மன்களைப் பின்னுக்குத் துரத்தி வரல.
ஜர்மனி மேற்கில் படை எடுத்தல்.	பிரான்ஸ், இங்கிலாந்து ஜர்மனிமேல் படையெடுத்தல்.
திருக்கர் காலிப்போலியில் ஸ்திரமாய் நிற்றல்.	திருக்கர் எங்கும் தோற்றுப்போதல்.
இத்தாலியின் வீர்த்தி.	இத்தாலியர் ஆஸ்திரியரை முறியடித்தல்.
ஜர்மன் கப்பற்சேனை பழுதற்றிருத்தல்.	அது பின்னப்பட்டு ஓடிப்போதல்.
ஜர்மனியன் மூன்று பிரமாண்ட படைகள்.	மூன்றும் அபஜெயப்பட்டது.
ஜர்மனி ரஷ்யாவிலும் பிரான்சிலும் ஸ்தாபகமாதல்.	அவர்கள் இருதேசத்திலும் தோல்வியடைதல்.
ஜர்மன் வீரரும் பிரங்கிசளும் நிறைந்திருத்தல்.	இரண்டும் தேய்ந்துபோகுகட்டபசார் வீரரும் ஆயுதசளும் குறைந்திருத்தல்.
உர்மன் சேனை அதிகம்.	ஜர்மன்சேனை சொற்பம்.
ஜர்மனி முன்செல்லல்.	ஜர்மனி பின்வாங்கல்.

இந்தப் பத்திரிகை அச்சிட்டு அக்டோபரீ 1ஏ பிரசித்தமாகிறதற்குள்ளே என்னென்ன ஜெயாபஜெயக்கள் சம்பவிக்குமோ? கடவுளுக்குத்தான் தெரியும்.

INSTRUCTIVE STORIES

சன்மார்க்க அதிசயக் கதைகள்

இருபத்தினுலாம் கதை.

குடிகாரன் நஷ்டம்.

ஒரு கிராமத்தில் வசித்துவந்த ஒரு மனிதன் தனக்கு உண்டான சில ஆடுகளே விற்று அதின் ரொக்கம் 150 ரூபாயை பத்திரமாய் வைத்துக் கொண்டிருந்தான். இந்தச் சமயத்தில் சங்கராந்தி என்ற பண்டிகைநாளும் நிட்டிவந்தது. இதைக் கவனித்துவந்த ஒரு பெருங்குடிகாரன் பண்டிகைத் துவக்கத்துக்கு முன்னதாகவே மேற்படியானவனே கிநேகஞ்செய்து அழலுக்குக் கொஞ்சம் லாகிரி வஸ்துக்களேயும் வாங்கி ஊட்டி அவனேத் தன் வழியில் பழக்கிக்கொண்டான். அதற்குள்ளாக சங்கராந்திப் பண்டிகையும் வந்துவிட்டது. இருவரும் கலந்துகொண்டார்கள். அதாவது இந்த உற்சவத்தில் நல்ல பசுமாகள் லேகான வீலைக்குக் கிடைக்கும். இரண்டு பசுக்கள் வாங்கிக்கொண்டால், பின்னுக்கு நல்ல லாபம் கிடைக்குமென்று பெரிய மின், 150 ரூபாயும் எடுத்துக்கொண்டு சங்கராந்தி கும்பிட கோவிலுக்குப் போனுர்கள். அங்கே படைக்கவேண்டிய சீபாராதனைகளெல்லாம் செய்துவிட்டு மாட்டுக் கடைக்குச் சென்றனர். அவ்விடத்தில் நில மாடுகளே வீலைபேசி அதில் ஒரு பசுவும் கன்றுமாக 40 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொண்டார்கள். அப்புறம் ஒரு பிராந்திக்கடைக்குப் போனர்கள். பசுவை வெளியே கட்டிவிட்டு உள்ளே போய் ஆள் ஒன்றுக்கு 5 ரூபாய் மேனிக்கு 10 ரூபாய் லாகிரிவஸ்துவை வாங்கி இருவரும் வயிறு புடைக்க வெகு ஆனந்தத்தோடு பருகிவிட்டு வெளியே வந்தனர். மணியும் 6½ ஆகிவிட்டது. காலு மைல் தூரம் தங்கள் கிராமம் போய்ச் சேரவேண்டும். வெளியேவந்து பசுவைக் கட்டலிழ்த்து, ஒருவன் அதைப் பிடித்துக்கொள்ள மற்றவன் அதை ஓட்டிக்கொண்டு இருவரும் கிராமத்தை விட்டு அரை மைல் போய்விட்டார்கள். மயக்கம் மேன்மேலும் அதிகமாகிக்கொண்டேவந்து, புதிதாகக் குடிக்கப் பழகினவன் கீழே விழுந்துவிட்டான். ஆகையால் பழைய ஆசாமி அவனேத் தூக்கி தன் தோள்மேல் போட்டுக்கொண்டு ஒரு பர்லாங்கு தூரம் தள்ளாடித் தள்ளாடிப் போகிறதற்குள்ளாக அவனும் கீழே விழுந்துவிட்டான். இருவரும் புத்தி மயங்கி தாங்கள் இருக்கும் நீலமை யறியாத படியால் மாடு ஒருபக்கம் ஓடிப்போய்விட்டது. மேலும் தூனி ஒருபக்கம் பணம் ஒருபக்கம் இப்படியாக நிர்வாணமாய் ரஸ்தாவில் புரண்டு வாந்தி பண்ணி அவஸ்தைப்படுகிறார்கள். அதன் பக்கத்தில் ஒரு கடையும் அதில் வசிக்கிறவர்களும் ஒரு போதகரும் இருந்தார்கள். சாமம் ஒருமணி வேளையாயிருக்கும்.

இவர்கள் அங்கலாய்த்துக் கூச்சலிடுகிற சத்தம் அந்த ஜனங்களுக்குக் கேட்டது. ஆனுல் அவர்கள் திடீரென்று வந்து பார்க்கக் கூஞ்சப்பயப்பட்டார்கள். அப்போது அந்தப போதகர் அவர்களுக்குத் தைரியம் சொல்லி நானும் கூடவருகிறேன். ஒரு வீளக்குமாத்தைப் கையில் கொண்டுபோருங்கள் என்றார். அப்படியே ஒரு விளக்கும் ஒருசட்டியும் எடுத்துக்கொண்டு அவர்களைப் பார்க்கையில் வெகு பரிதாபமாய்க் கிடந்தார்கள். பனியினுல் தூணிக ளெல்லாம் நனைந்து விலகித் கிடக்கிறது. இவர்கள் உடம்பும் தலையுங்கூட பனியால் நனைந்ததன்றி, வாந்திபண்ணியிருந்தால் நாற்றம் உண்டாகிறது. அவர்களிடம் பேசினுலும் உணர்ச்சியில்லே. ஆகவே அவர்கள் மறுபடியும் வீட்டுக்குப்போய், கொஞ்சம் வெங்காயம் எடுத்துக்கொண்டுவந்து, அவ்விரு வரின் வாயிலுமூட்டி, அதை மெல்லச்செய்து சற்றுநேரம் அங்கே காத்து நின்றார்கள். கொஞ்ச நேரத்திற்குள்ளாக மயக்கம் தீர்ந்துவிட்டது. அவ்விருவரிடம் எல்லாச் சங்கதிகளையும் கேட்டறிந்தபோரில், "ஐயோ, பசுவையும் காணேம். ரூபாயையும் காணேம்" என்று அலறினுர்கள். அப்போது கை விளக்கை வைத்துக்கொண்டு அருகிலிருந்தும் தேடிப் பார்க்கையில் பணமூட்டை மாத்திரம் கிடைத்தது. அங்கே மேய்ந்துகொண்டு நின்ற பசுமாத்திரம் காணுமற்போயிற்று. ஜகைலேயெல்லாம் பார்த்த போதகர் அவ்விரண்டு குடிகாரருக்கும் குடிவெறியினுலுண்டான துன்பங்களேயும் நஷ்டங்களேயும் எடுத்துக்காட்டி, அதை முற்றுமாய் விட்டுவிடப் போதித்தார்.

"ஐயா! யாருக்கு வெசனே? யாருக்குத் தக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே." நீதி. 23. 29, 30.

G. D.

The Good Decision of the Son of Drunkards.

குடிகாரருடைய குமாரனின் நல்ல தீர்மானம்.

இராகம், நாதநாமக்கிரியை. மீசாதானம்.

1. மதுபானம் விஷபானம்—அம்மா—அதை
மருந்துக்கென்று சொன்னுலும்—நான்தொடேன்—ஐயா—மது.
2. ஜலபானம் ஏற்றபானம்—அம்மா—அதைக்
குலபான மாக்கிக்கொண்டால்—தீர்க்காயுள்—ஐயா—மது.
3. புளித்தகள் உதவாது—அம்மா—அதைக்
குடித்தபின் தலேசுற்றும்—நான்தொடேன்—ஐயா—மது.
4. வெளுத்தபால் எனக்காகும்—அம்மா—அதைக்
கொடுத்துப்பார்த்தால் குடிப்பேன்—தொண்டைவரை—ஐயா—மது.
5. சாராயமும் பிடியாது—அம்மா—அதன்
காரம் தலேக்கேறிவிடும்—கொடியது ஐயா—மது.
6. காப்பிப்பானம் எனக்காகும்—அம்மா—கருங்
காப்பிப்பானம் சுடச்சுட—நான்குடிப்பேன்—ஐயா—மது.
7. நிராகூரசம் மதுபானம்—அம்மா—அது
நிராகூப்பழம் போலவல்ல—நான்குடியேன்—ஐயா—மது.
8. எலுமிச்சம் பழரசம்—அம்மா—அது
வெகுஇஷ்டம் ஆனதினுல்—விடமாட்டேன்—ஐயா—மது.
9. பிராந்தியும் மதுபானம்—அம்மா—அதைச்
சாந்திசெய்ய யாராலாகும்—தரவேண்டாம்—ஐயா—மது.
10. சோடாவாட்டர் சுகபானம்—அம்மா—அது
சோடாசேர்ந்த சுத்தஜலம்—தோஷமில்லே—ஐயா—மது.
11. கள்ளைத்தான் கட்டவைக்கும்—அம்மா—மதி
நஷ்தைக்குள் ளாக்கிவிடுமே—நிர்ப்பாக்கியம்—ஐயா—மது.
12. பணம், பொருள் புகைந்துபோம்—அம்மா—நான்என்
பிணம்போல் கிடக்கவேண்டும்—பேரற்றுப்போய்—ஐயா—மது.
13. கெட்டவார்த்தை பேசவும்—அம்மா—மது
துட்டரோடு உறவாட—வழிகாட்டும்—ஐயா—மது.
14. சண்டைபோட எவிவிடும்—அம்மா—நான்என்
மண்டையை உடைத்துக்கொண்டு—மாளவேண்டும்—ஐயா—மது.
15. துன்மார்க்கத்திற்கு கடத்தும்—அம்மா—நான்என்
சன்மார்க்கம் தவறித்தோஷி—ஆகவேண்டும்—ஐயா—மது.

PARADISE LODGE,
August 27, 1916.

பரதீசு பட்சி.

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

சர். ஜோவான் ஜய் மோழ்டேய்ர்த்து.

பாதாளசாண்டம்.

பொருளடக்கம்.

ஆதன்ஞல் சிற்படியானவனின் பதிசை நிழந்தம், கடலே வருவதற்கு பாகம் ஆன பிவாரிஸ்ரும் தோஷ்டி வீரோதாவும் ஸாதனுல் ஸாதனுனின் பதனத்தை நிஸ்தை பண்ணுதற்கு ஸாதன் எபேசியாவும் சாசிஸ்ரும் ஆகிய பிளவுபடாத நிந்தனும், அந்தஸ்தை தனதினவனுமாகிய தலேவ சாதனன் போகவேண்டியதும், தராசாதாரத் ஸ்ரிஷ்டி சேனியே எழுப்பினும், ஸாவானின் ஸ்ரோயர் ஸவரத்தாலும். பிதாதாதின் பலன்களிலும் கஷ்தரா ணமில்லாத சேர்வினும் வளர்ப்பட்ட விஸ்திரரின் பெயர்களேத் தரித்துக்கொண்ட அச்சேனேதலிவர்களின் வரலாறும், சாதனன் நிருபவம் வாதத்தைக் கைவசப்படுத்தலுமென்னும், ஸ்வினேரகமும் ஸ்வின மனிதனும் உண்டாகப்பக்கார ரென்னும் நைர்மாம்ச சொன்னதும், பேய்களின் சாலே யென்றழைக்கப்பட்ட ஓர் அரண்மனையை நரகத்தில் கட்டவித்ததும், அம்மண்டபத்தில் தலேவர்கள் ஆலோசனைசெய்யக் கூடிவந்ததும் அடங்கியிருக்கின்றன.

1. திருவருள் விரும்பு படலம்.

பரமசங்கீதனே, ஆதிமனிதன் விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தபினுல், உலகத்தில் மரணமும் எண்ணிறந்த சங்கடங்களும் வினேந்தது மன்றி, ஏதேன் பூங்காவனமும் பறிபோனதல்லவோ? இந்த மகா துயரப்பாட்டை முதன்மையாகப் பாடுவாயாக; மீளவும் உன் சுரங்களே மீட்டி, அம் மனிசனிலும் சிறந்த ஓர் புருஷன் மனுமக்களுக்கு அந்த காருண்ய நிலேயைச் சம்பாதித்த ஆநந்தப் பாட்டையும் பாடுவாயாக.

ஆகியிலே வானமும் பூமியும் வெறுமையினின்று உருவான விசித்திர விநோதத்தை விசேஷமாக இஸ்ரவேல் ஜனங்களின் தலேவனுக்கு ஓரேப், சினுய் பர்வதசிகரங்களில் போதித்தவரே, ஸியோன் மலேயும் அனருகிலுள்ள சிலோவாக்குளமும் உமக்கு பிரீதியான ஸ்தலங்களானுல், அவ்விடங்களி லிருந்து, யான் எடுத்துரைக்கப்போகும் விஷயங்களில் எனக்கு உமதருள்புரியப் பிரார்த்திக்கிறேன். உன்னத ஆவியே, சகல ஆலயங்களிலும் நேர்மையும் பரிசுத்தமுமான இருதயத்தை விரும்புகிறவரே, என்னைப் படிப்பிப்பும். நீர் சமஸ்தத்தையும் அறிந்திருக்கிறீர். (இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது
பிறந்ததுமுதல் குழந்தைகளின்
உபயோகத்திற்காகச் செய்யப்பட்டது

இப்போதே தயாராக இருக்கின்றது
1916–ம் வருஷத்திய மெல்லின்ஸ்
பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு
தபால் மார்க்கமாக அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அண கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்.

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான
'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'
என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்குத் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt,
Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,
THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு வருஷத்துக்கு 4 அணு; அதை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புத்தகம் முதலியன வேண்டுவோர் பெயரைத் தபாற்கூலியுடன் சென்னை மிலாரியல் தாசுக்குமேற்ற C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K Press, Vepery, Madras—1916.

Registered No. M. 442.

சத்திய தூதன்.

NOVEMBER, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. நவம்பர் மீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

நியூஸிலாந்து.—ஜுரத்தை நிறுத்தும் அருமருந்து சாரை உபயோகிக்கப்படுகிற குனைனென் என்கிற டாபாரத்திலுள்ள, கவர்ன்மெண்டார் சென்றஜூல 10 லட்சம் ரூ லாபங்கண்டார்கள். ஆனாலும், இங்கிலாந்தைப் டப்பாலாயிகளில் பட்டணத் தவிர (வெறுங்கு) கால் அணுவுக்கு 10 கிரெய்ன்ஸ் வீதமாக சொற்பவிலைக்கு விற்கப்படுகிறது. இம் மருந்து சினகொனை என்கிற ஒரு மரத்திலிருந்து இறக்கப்படுகிறது. இம்மரத்தோட்டம் சீலோனிலே சர்க்கார் ஏகத்துப் பயிர்செய்கிறார்கள்.

கல்வி பயிலுவீர். — தற்காலம் இங்கிலாந்திலே கல்விப்பயிற்சியிலே பின்கண்ட மூன்று முறைகளை அதசரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்:—(1) தாபர சக்கரசாஸ்திரம் கற்பிக்கப்படவேண்டும். 2) லோக தர்மமும் நாட்டு நகரதர்மமும் உபதேசிக்கப்பட வேண்டும். பெரும்பாலோருக்கு வரி கொடுக்கிற சாஸனம் தெரியாது. சாலைகள் எப்படி உண்டாகி றது என்றும் தெரியாது. (3) மானுக்கரின் தேக சுவத்தியமும் பலமும் விர்த்தியடையவேண்டும். இது முக்கியம். இதன் மதியுரலேதான் அனேக இந்தியர்கள் அகாலமரணத்துக் கியையாகிறார்கள். (4) டனைகாரருக்கும் கூலிக்காரருக்கு மூள்ள விரோதம் நிவர்த்தியாகவேண்டும்.

கௌன்சில் மெம்பர்.—சென்னையிலே கவர்ன் மெண்ட் என்று சொல்லப்படுகிற அரசாட்சிச் சங்கத்திலே நாலு மெம்பர்களுண்டு. இவர்களுக் கதிபதி கவர்னரவர்கள்; அன்றி, புது ஆக்ட்படி இவர்களில் ஒருவர் இந்தியராயிருக்கவேண்டும். தற்காலம் சர். சிவசாமி ஐயர் இந்திய மெம்பரும், உப அதிபதியுமாயிருக்கிறார். சென்றமீ 8உ சர். ஹாரல்ட் ஸ்டூவர்ட் என்பவர் பென்ஷன் எடுத்துக் கொண்டு இங்கிலாந்துக்குப் போய்விட்டார் இப் பொழுது மிஸ்ற்றர் கிம்மன் என்பவரை நாலாம் மெம்பராக நியமித்திருக்கிறது. இவருக்கு அதிக சர்விஸ்காரர் நாலந்து பெரிய உத்தியோகஸ்த ருக்கு இதலுல் அதிக விசனமுண்டு.

யுத்த விவரம்.—நான்தோறும் கட்பரசருக்கு ஜெயமும், எதிரரசருக்கு அபஜெயமுமாக யுத்தம் நடந்துவருகிறது. புதிதாய்ச்சேர்ந்த ருமேனியாவை எவ்வகையாயினும்அழிக்கவேண்டுமென்ற வைராக் கியங்கொண்டிருக்கிறார்கள் ஜர்மானியர். இம்மா தத்திலே அவர்கள் கிச்சிடத் தொடங்குவார்களென் றும், இன்னுமாறுமாதத்திற்குள் யுத்தம் நின்றுவிடு மென்றும் ஒரு பெரியவர் கூறுகிறார். இதற்கெதி ராக வேறு சிலர் யுத்தமானது இன்னும் ஒன்றரை அல்லது இரண்டு வருஷம் சென்றாலும் செல்லு மென்கிறார்கள். ஜர்மன் ராஜ்யத்தக்குள்ளே தூவைத்து அங்குள்ள கோட்டை கொத்தளங்களின் சக்தியைக்கண்டறிந்தபின்புதான் யுத்தத்தின் முடிவு முதலியவற்றை வையமுத்துப் புகல முடியும். ஜர் மன்கள் தாமே பிரித்தப்படுத்தியிருக்கிற வணக் குப்பிரகாரம் மூப்பதலட்சம் பேருக் கதிகமான வீரர்களைப் பறிகொடுத்திருக்கிறார்களாம். ஆனும் இன்னும் 30 லட்சம் பேருண்டு. இவர்களும் மாளு கிறவரைக்கும்யுத்தஞ் செய்வார்கள்போலும். இது ந்த, கிரீக்கு ராஜ்யம் தன்னாலாகிறது. அதரசன் அடியில்லாக் குடுவைபோலத் தத்தளிக்கிறார். ஸைச ரின் மைத்துனன். இதுவே காரணம். வெகு சீக் கிரத்திலே, கிரேக்கர் அவனைத் தரத்திலிட்டு சுய அரசு ஸ்தாபித்து நட்பரசரோடு கூடி யுத்தஞ் செய் வார்களென்று பெரும்பாலும் கம்பப்படுகிறது. இத் தாலியா திரியெஸ்து நகரத்தைப் பிடித்துவிடும் போலிருக்கிறது. அனேக இந்தியர்கள் போர்வீரர்க ளாகக் கப்பலேறிச் செல்லுகிறார்கள். யுத்தத்துக்குப் பின்பு ஜர்மனியிலே சுயவரசு ஸ்தாபிக்கப்படு மென்று அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். இதுவே உத்தமம். யூரோப்பு ராஜ்யங்களெல்லாம் ஒரு பொதுச்சங்கத்தால் நடத்தப்பட்டால்தான் சண்டைக்கு எதலிருக்கமாட்டாது. எல்லாம் கட வுள் அநுக்கிரகம்.

நவம்பர்மீ பஞ்சாங்கம்.—

வாரம்	நவம்பர்மீ = இப்பசி—கார்த்திகை. ● அமாவாசை, 25உ ⊙ பௌர்ணமி, 9உ					இப்பசி—கார்த்திகை.				
ஞாயி ...	...	5	12	19	26	...	20	27	4	11
திங்க ...	...	6	13	20	27	...	21	28	5	12
செவ் ...	...	7	14	21	28	...	22	29	6	13
புதன் ...	1	8	15	22	29	16	23	30	7	14
வியா ...	2	9	16	23	30	17	24	1	8	15
வெள் ...	3	10	17	24	...	18	25	2	9	...
சனி ...	4	11	18	25	...	19	26	3	10	...

Vol. XXX. No. 1. புஸ்தகம் கூ. தூ க.

THE STORY OF RUTH.

ரூத்தின் சரிதம்.

விருத்தம்.

சோரு நாகேமி யெனுமரிய பக்தளின்,
சிந்தைக் குகந்தமருகி
தேசமா மோவாபி லேவசித் திட்டபல,
தெரிவையரி னன்மாதிரி
காராரு மிந்நியா தன்னிலுரை மருகிகள்,
கற்கபோ தனையீய்பவள்
கடினதா ரித்திரி யத்தியதில் பொறுமையை,
காட்டியவள் கதிர்பொறுக்கி
நாராரு மனதினள், நற்றவஞ் செய்பவள்,
நயருணு திசயலீலி
நாரவாக னனைமணஞ் செய்தவள் தாழ்மையும்,
கன்மையு மிகுந்திறுமி
பாராரு மானிடப் பவம்நீக்க வந்தமா,
பரனேசு நாதசுவாமி
பக்களாம் பாக்கியம் பெற்றவள் ரூத்தெனும்,
பாவைகதை நவிலுவேனே.

6. இன்னிலத் திலவர்க்கு—இருவர் மக்லோன் கிலியோன்
என்னும் குழந்தைகளாம்—இசைக்கக்கேள் தேசவளம்
7. பாலோடுந் தேசமது — பசுமையுள்ள தேச மது
காலைமாலை குடிகள்—களித்திருக்குந் தேச மது
8. தேனோடுந் தேசமது—தெண்ணீர் நிறைந் திருக்கும்
கானனெனுந் தேசம்—கட்டழகாந் தேசமது
9. பார்த்தவிடமெல்லாம்—பச்சை யாந்தேசமது
நீர்த்திசைக ளெங்கெங்கும் — நிறைந்தோடுங் தேசமது
10. பாங்கான தேசமது—பலனிறைந்த தேசமது
நீங்காத சந்தோஷம் — நிறைந்திருந்த தேச மது
11. மூன்மாரி பின்மாரி—முன்னற்கருந் தோப்பு களும்
பன்னியுந் நீராத—பலனுள்ள தேசமது
12. மாட்சிமை யுள்ளபல—மலிகிறைந்த தேச மது
காட்சிக் கடங்காத—கனவழகு தேசமது
13. ஆறுகளுங் ஙிணர்கள் — அங்கற்கு வற்றி ஜனம்
தூறலேக் காணுமல்—துஞ்சினர் தாகத்தால்
19. பசும்புற் றரைகாய்ந்து — பாழாச்சு காடத னில்
திசைத்திக் கெங்கெங்கும்—செஞ்சுடர்போ லானதுவே
20. காட்டில்நீர் புல்லில்லை — கானல்தா னெங் கெங்கும்
வீட்டிலன்னந் தானுமில்லை—விக்னெமுண் டானதுவே
21. ஆடு மாடுகளெல்லாம்—அலறி மடிந்தனவே
பூகெள் கிட்டாமல் — போனதுவே தேச மதில்
22. மனுஷாக ளெல்லாரும்—மடிந்தார்கள் பட் டினியால்
தனுவற்றிச் செத்தார்கள்—சங்கடம் பெருகி னதே
23. பட்சி பறவையெல்லாம்—பார்க்கக் கிடைக் காமல்
அச்சிலிட் டெங்கெங்குஞ் — ஆலாய்ப் பறந் தனவே



தாமத்தாவு, மதகாலக்கர் நீலில் ஓர் நகரம்.

கதை.

1. மோவாபெனும் பதியில் — முட்டுப்பட்ட ரூத்தென்னும்
பாவையின் கதையைமனப்–பாடம்பண்ணக் கோருகிறேன்
2. பாரிலிதைத் தினமும்—படித்தறி வோர்கள் மனம்
பூரிக்கு மென்பதற்கு–போந்த திருஷ்டாந்த மிது
3. இந்து தேசத்திலுள்ள — இளையாள்க ளுக் கிதிலே
அந்தமுள்ள போதனைகள்—அடங்கி யிருக் குதுகாண்
4. பெத்லேகே மென்னுமொரு—பேர்பெற்ற சிற்றூரில்
உத்தம எலிமேலேக்—உற்றமனை நாகோமி
5. என்னும் பதிசகிகள்—எகாந்த மோர்குடிலில்
முன்னளில் வாழ்ந்திருந்தார் — முன்னே னின் பக்தரவர்
13. இலுப்பைத் தோப்புகளும் — இனிமைதீவி த்ராக்ஷைகளும்
உலுங்குங் கனிமரங்கள்—உள்ளகல்ல தேச மது
14. மாரிகளாலும் பெய்யும் — மஞ்சுகளாலும் பாயும்
ஆறுகளாலு மெத்த—அழகான தேசமது.
15. ஆனை பெரிதானலும் — அதற்கு மடிசறுக் கும்
நூன மதுபோல — தழைந்ததங்கே தற் காலம்
16. நஞ்சைபுஞ்சை யால்செழித்த — நாடிதி லொருவருவஂம்
பஞ்சமுண் டானதுகாண்—பாடுவந்து நேர்ந் ததுவே
17. மேல்வானந் தானிறுஙி — வேறுபட்டு மாறி னதே
கால்வாய்க ளெங்கெங்கும்—காய்ந்து வறண் டனவே
24. மக்லோனுந் தன்மனைவி—மக்களுந்தா னென் னசெய்தார்
சிக்கினதை விற்றுக்கொஞ்சம் — இன்ரூர் சிலகாளாய்
25. மாடாடு விற்றுண்டார் — மண்பொன்னை விற்றுண்டார்
பீடிக்கும் பஞ்சமதோ—பின்னுங் தொலைய வில்லை
26. வீட்டுச் சாமானங்களை—விற்றுண்டனர் சில நாள்
வாட்டி வதைத்ததுனே—வந்தபஞ்ச மின்ன முந்தான்
27. அருமைப் பண்டங்களை–அவர்க ளவசரமாய் பொறுக்கி மோவாபுக்குப் — போய்சேர்ந்து விட்டார்கள்
28. மேன்மக ளுருமெலி–மேலேக்கு மேலித்த வான்பறந்து விட்டானே — வழுத்தவேண் டுமினி

29. நாகேமியும் புலம்பி — நாயகனே யெம்மை யிங்கு
வ்காந்த மாகவிட்டு—எவியேன் போனீரோ?
30. பஞ்சம் பிழைக்கவகை — பதியிலெங்குங் காணேனை
தஞ்சமெனக் காரையா—தனிமையாய் விட் டீரே
31. தேவா யெனக்கிரங்கும் — தேறுதலற்றே னதனை
நாவா லுரைத்திடவும்–ஞானநிதி லேனையா
32. மக்க ளிருவரிவர்-மகிமையெல் லாம்போச்சே
அக்கம் பக்கங்களெல்லாம் — ஆபத்து மிக வாச்சே
33. என்னு புலம்பியவள் — எகனின் தூணைவே ண்டி
கொண்டு பரிதபித்தாள்—கோதைநா கோமி யுந்தான்
34. அந்த மோவாபென்னும்— அஞ்ஞான தேச மதில்
மைந்த ரிருவருடன்—வந்தாளே நாகோமி
35. தக்கபத்தி யோடிருந்து—தனிவாசம் செய் தார்கள்
மக்களு மாச்சரிய—மாகப் பிழைத்தார்கள்
36. மோவாபெனும் பதியில் — மூற்றிலுமெய் தெய்வமில்லே
தேவ ஆராதனையும்–தேசத்தில் எங்குமில்லே
37. அம்பரனைப் பற்றினதோர்—அறிவுங் கிடை யாது
செம்பாலின் புஷ்டியதால் — செருக்கோடு வாழ்ந்தார்கள்
38. இக்காலம் போலகண்ட—இடமெங்கும் சற் றிலேகள்
அக்காலத் தங்கேயும்–அதிக மருந்தகாண்
39. வீக்கிரகத் தோப்புகளும் — விவிதமா மலய மும்
சொக்கினுலே செய்து—தொழுதாரே யந்த ஜனம்
40. மலைமீது சாமிகளும் — மலையடியின் சாமி களும்
குலதெய்வ மென்றவர்கள்—கூறி வணங்கி வந்தார்
41. மரத்தடி சாமிகளும்—வழியோர சாமிகளும்
நகரத்தில் தள்ளுமென–ஞாளும் நினையார்கள்
42. நதியோர சாமிகளும்—நகர்நடுவு சாமிகளும்
சதிசெய்யும் சாமியென்று—சற்றுமே எண் ணுர்கள்
43 இப்படியே மெய்யான—ஈசனை யறியாத தப்புசெய்யும் ஜாதிகளின்–சங்காதம் தங்கி னர்கள்
44. அஞ்ஞான தேசத்தில்—அவர்கள்வந்து தங் கினதால்
மெய்ஞ்ஞான தெய்வத்தை—மென்மேலு மே மறந்து
45 தந்தைகளின் தெய்வத்தை—தக்கபடி எண் ணுமல்
சிந்தையில்தம் கட்டளையை—சீருக வைக் காமல்
46. மறந்து அவமதித்து—வந்திருப்பா ரென்று சொல்ல
நிறந்தவழி யுண்டல்லோ—சிலருண மித்தி ரனே
47. பன்றியொடு சேர்ந்தகன்றும்—பாரில் மலர் தின்னும்
என்றசொல்வர் பெரியோர்—எற்குமே யிம் மொழிதான்
48. அஞ்ஞானிகள் நடுவில் — அவரியம் வாழ்ப வர்கள்
ஞ்ஞானம் பெற்று—சகித்திருக்க வேண்டு மல்லோ (இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஜயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

ஆதியில் சர்வாந்தரியாமியாய் பலத்த செக்கை களுடன் புரளைப்போல பாதாளத் தண்ணீர் களின்மீது அசைவாடிக்கொண்டு அதைக் காப் பந்தரிக்கச் செய்தீர். என் இருண்டமனதைப் பிரகாசிப்பியும், என் மனுதத்துவங்களைப் பலப் படுத்தும், உமது கரத்தினுல் என்னைத் தாங்கும், அப்போது உமதடியான வசனத்திலும் கிர்வியத்தி லும் இதுவரையிலும் விவரிக்கப்படாத நித்திய கடவுளின் மகத்துவங்களைப்பாடவும் அவரின் நிறைந்த வழிகளை மானிடருக்கு விளக்கவும் வல்லவனு வேன்.

2. தூதர்வீழ் படலம்.

தெய்வலோகமும் பாதாளலோகமும், யாதொ ன்றையும் உனக்கு மறைத்துவைக்கக்கூடாதே; ஆத லால் நான் உன்னை முதன்மையாகக் கேட்க விரும் புகிறதாவது: என் ஆதித்தாய் தந்தைகள் பாக்கியத் தையும் தேவநேசத்தையும் பெற்றவர்களாயும், சமஸ் தத்தக்கும ஏஜமானர்களாயும், ஓர் நிறிய கட்டளைக் குமாதிர முட்பட்டவர்களாயு மிருந்தவர்களல் லவோ. அப்படியிருக்க, கடவுளின் நித்தத்துக்கு விரோதஞ்செய்து விழுந்தகாரணம் யாது? அங்நிலை மைலிருந்தவர்களை வஞ்சித்தவன் யாவன்?

அந்தப் பாதாளசர்ப்பமே அவன். வஞ்சகம், பகை, பழிவாங்குதல் முதலிய தீயகுணங்களையே ஆபரணமாக அணிந்துகொண்டு மனுமக்களுக்குத் தாயானவளை வஞ்சித்தனன். அவனும் அவனு டைய சேனைகளும் சர்வத்துக்கும் அதிபதியானவ ருக்குத் தங்களைச் சமமென்றெண்ணி கர்வங்கொண் டதினுல் வானுலகத்திலிருந்து தள்ளப்பட்டனர். அவரின் மகிமையை அடையக்கருதி, அரசாட்சி யை எதிர்த்து, யுத்தம் புரிந்து அபஜெயப்பட்ட உன். சர்வவல்லவர் ஆகாய மண்டலத்திலிருந்து அவனைத் தள்ளி, நாசமும் எரிபந்தமும் குடிகொண் டிருக்கின்ற பாதாளகசத்தில் அனவரதகாலம் வசிக் கும்படி ஆக்ஞாபித்தார். ஆம், அவரின் கார்க்க ளுக்கு எதிர்க்கத்துணிந்த இவனை இருப்புச் சங்கிலிகளினுற் கட்டி அக்னிக்கடலிலே உருட் டினர். இதை அறிந்துகொள்வாயாக.

இராப்பகல் அளாவிக்கொண்டிருக்கும் விசாலத் திலும் ஒன்பதுமடங்கு விசாலமான இடத்துக்குப் பால்அவனும் அவனுடைய பரிவாரங்களும் தரத்தப் பட்டு எரிருடாவில் உழன்று உருண்டுகிடந்தனர்; ஆயினும் அழிந்துபோகக்கூடியவர்களல்ல. இதிலும் அதிகமான ஆக்ஞைக்கும் பாத்திரவாளுயிருந்தான். ஓர்காலத்தில் உதித்தில்லைமையிலிருந்தவன் இப்போது நிர்ப்பந்தஸ்திதியில் விழுந்தபடியால் அமைதலற்ற வளுயினன். அகங்காரம் நிறைந்த தன் ஆகாயிய க் கண்களை எறெடுத்து, ஓர் தூதன் பார்க்கக்கூடிய தூரமட்டும் பார்கிருன். எப்பக்கமும் பயங்கர நிறைச்சாலையாயிருந்தது. ஸ்தம்பங்களைப்போல் அக்னி எழும்பி சுவாலித்தது; சுவாலித்தும் வெ ளிச்சத்தையல்ல இருளையே பிறப்பித்துக்கொண்டி ருந்தது. ஐயோவென்னும் அலறுதலின் தொனி கள் கேட்டன. ஆம், இவைகள் கண்ணீரின் பள் ளத்தாக்குகள்; மரணநிழலின் பயங்கரஸ்தலம்கள். இங்கே சமாதானமும் இளைப்பாறுதலும் இல்லை. நம்பிக்கையென்பது கொஞ்சமென்கிலுங் கிடையா து. மூடிவில்லாத வேதனைமாத்திரம் இவ்விடத்தில் குடிகொண்டிருக்கிறது. எரிகிற கந்தகம் ஓர்பொதி லும் குன்றுமலும், புரண்டோடும் அக்கினிப்பிர வாகம் வற்றுமலும் இருக்கின்றன. நித்திய நீதியை வட்சணமாகவுடையவர் தம்மை விரோதிக்கிறவர்க ளுக்கு இவ்வித நிர்ப்பந்த ஸ்திதியை வற்படுத்தினுர். காரிருளையே அவர்களுக்குச் றைச்சாலையாக நி யமித்து அவ்விடத்திலேயே அவர்களுக்குச் சுதந்தரத் தையும் கட்டளையிட்டார். பூமியின் மத்தியிலிருந்து, அதின் கடைமூனைமட்டுமுள்ள தூரத்திலும் மும் மடங்கு தூரமாக வானுலகத்திற்கும் அவர்கள் தள் ளப்பட்ட விடத்திற்கும் இருந்தென்று சொல்ல லாம். ஒ, முன்னிருந்த விடத்துக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்? இவனுடைய தோழர்கள் இங்கே அக்கினிச்சூளையில் வேதிறதையும், சுழல் காற்றினுல் முறிக்கப்படுவதையும் பார்க்கிருன். பேச்சு மூச்சற்றவர்களாகவும் கிடந்தனர். அக்கி மத்திலும் பாரக்கிரமத்திலும் தனக்கிரண்டாவதா யும் பிற்காலத்தில் பலஸ்தீனுவில் பெயெல்செபூல் என்று அழைக்கப்பட்டவனுமா யிருந்தவனே தனக் கருகாமையி லிருக்கக்கண்டு, அவனிடத்தில் இந்தப் பெரிய வேதாளமாகிய சாத்தான் நிடாரிக்கமான வார்த்தைகளுடன் பேச வாரம்பித்தனன்.

3. வேதாளம் வசனித்த படலம்.

எனது சிநேகிதனே, எவ்வாறு விழுந்துகிடக்கி றுய்? ஒளியின் ராஜ்யத்தில் பிரகாசத்தையே ஆடை யாக அணிந்துகொண்டிருந்தவனே, எண்ணிறந்த தூதர்களிலும் சிறந்தவனே, நீ எவ்வாறு வேறுபட் டிருக்கிறுய்? உடன்படிக்கை, அந்தரங்க ஆலோ சனை, மகத்துவ கிருத்தியங்கள் முதலானவைகளில் எனக்கு உத்தமகூட்டாளியாயிருந்தவனே, இப் போது இந்த நிர்ப்பந்தத்திலும் அதோகதியிலும் இருபேரும் சமமாக விழுந்திடக்கிறேரும். இப் பாதாளத்தின் பயங்கரத்தை யாரால் விவரிக்கக் கூடும்? எவ்வளவு மேன்மையான ஸ்தலத்திலிருந்து விழுந்திருக்கிறேரும். சர்வலோகாதிபதியானவர் தமது இடிகளை எமதமேல் பிரயோகித்து தாம் மே லானவரென்பதை விளக்கியிருக்கிறார். இதுவரைக் கும் அவருடைய பயங்கர ஆயுதங்கள் இன்னதென் றது நாம் அறியவில்லை. ஆயினும் இவைகளல்ல, இவைகளிலும் கொடிதானவைகளை அச்செயவீரன் கையாடி, தமது சாங்கோபாங்கத்தை வெளிப்படுத் நினும் நான் பயப்படுகிறதில்லை. வெளிப்படை யான கம்முடைய ஒளி மங்கிப்போயிற்றேதவிர வேறல்ல. அவர் செய்த அநியாயங்களை நினைக் கையில் சொல்லிமுடியாத அகங்காரமும் வெறுப் பும் உண்டாகிறது. அவருடன் எதிர்த்துப் போரா டவும் என்னை எவியிடுகிறது. இந்தப் பெரிய யுத் தத்தில் நான் ஏரானமான தூதர்ப்படைகளைச் சேர்த் துக்கொண்டேன். இவர்கள் ஏகமனதுடன் அவரு டைய ராஜரீக ஆஞ்ஞையை வெறுத்து என்னைத் தங்களுக்கு அரசனுகத் தெரிந்துகொண்டு அவரின் அளவற்ற வல்லமைக்கு எதிர்த்து வானுலகத்தின் வெளிகளில் மகா உக்கிரத்துடன் போர்புரிந்து அவ ருடைய சிங்காசனத்தை ஓர் சமயத்தில் அசைக்கப் பார்த்தனர். இந்த யுத்தத்தில் அபஜெயப்பட்டுபோ னதினுலென்ன? நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோமா? அடங்கார்சித்தம், பழிவாங்குகுணம், தீராவர்மம் இவைகளை நாம் இழக்கவில்லையே? இந்த மகத்துவ லக்ஷணங்களை அவருடைய கோபமாவது வல்லமையாவது நம்மைவிட்டுப் பிரிக்கப்போட மாட்டாது. ஓர்காலத்தில் தம்முடைய அரசாட்சி யைக்குறித்துச் சந்தேகித்து என் கரத்தின் பராக் ரமத்தை அஞ்னைவருக்குமுன், காலுன்றி அவ ரது தயவைத் தேடுவதைப்போலொத்த இழிவான காரியம் ஒன்றுண்டோ? அப்படிச் செய்தால், கம்மு டைய நிலைமை இதிலும் அதிக கேடுள்ளதாகிவிடும். தூதர்களாயிருப்பினுல் நம்முடைய பலம் ஓர்போ தினும் குன்றுது.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD BISCUITS

மெல்லின்ஸ் ஆகார பிஸ்கோத்து.

மெல்லின்ஸ் ஆகார பிஸ்கோத்துவில் சரீரத்தை வளர்க்கக் கூடிய உணவு விசேஷித்தவகையாய் திரட்டிச் சேர்க்கப்பட்டிருக்கின்ற விஷயத்தை கவனிக்கவேண்டியது அவசியம். தற்சமயம் எகிப்து, மெசொப்பொத்தாமியா நாடுகளில் போர்புரிந்து வருகிற ராணுவங்களுக்கும், அந்நாடுகளில் காயப்பட்டிருக்கிற போர்வீரர்களுக்கும், காற்றூடாமல் பத்திரமாகக் கட்டப்பட்டிருக்கின்ற மெல்லின்ஸ் ஆகார பிஸ்கோத்துகள் அடங்கிய டப்பாக்கள் அதிகப் பிரியமாக அங்கிகரிக்கப்படக்கூடிய நன்கொடையென்று கண்டறியப்பட்டிருக்கின்றது. இந்த மெல்லின்ஸ் ஆகார பிஸ்கோத்துகளின் முக்கிய குணதிசயம் தாங்கக்கூடாத காங்கையான இடங்களிலும்கூட ஆகாரவலுமை குன்றாமல் இருக்கிறதேயாம். அதிகமாக உழைத்து களைத்துப்போகிறவர்களுக்கு இந்த மெல்லின்ஸ் ஆகார பிஸ்கோத்து ஒரு முக்கியமான உணவாம்.

இந்த பிஸ்கோத்துகள் சில்லறையாக கடைகளில் வாங்கலாம். அல்லது மொத்தமாக வாங்க விரும்புவோர் மதுராஸ் ஓக்ஸ் அண்டு கம்பேனியாரிடத்திலிருந்து காற்றூடக்கூடாத மூன்று டசன் டப்பாக்கள் அடங்கிய பெட்டிகள் வாங்கிக்கொள்ளலாம்.

இந்த மெல்லின்ஸ் ஆகார பிஸ்கோத்துவின் விலை முன்போல இருக்கிறதேதவிர தற்கால சண்டையின் நிமித்தம் அதிகப்படுத்தப்படவில்லை.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 annas Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு வருஷத்துக்கு 4 அணா; அல்லது அணா தபாற்செலவு 10 பிரதிகளுக்கு ஒரு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன சம்பந்தமான கடிதங்களை தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல் தபாற்கந்தோர் C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி வைத்துக்கொள்ளவும்.

S. P. C. K Press, Vepery, Madras - 1916.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 DEC 1916

சத்திய தூதன்.

DECEMBER, 1916. PRICE, 1 PIE.—விலை, க பை. டிசெம்பர்மீ, 1916.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

நமது கவர்ன்மேண்டார்.—காகிதம், கண்ணாடித்தொழில்கள் முதலியவை நடப்பிக்கும்படி பல பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள்.

ஜப்பான் சர்வகாரதாகூ.—இதிலே கிறிஸ்து மார்க்கத்தை உபதேசிக்கும்படி ஒரு வித்தியா போத கனே நியமிக்க ஒரு ஜப்பானியர் 3 லட்சம் ரூ. கொடுத்திருக்கிறார்.

போப்பிலியார்.—இத்தத் தெலுங்கு ராஜன் தமது அரசை ராஜிநாமா செய்துவிட்டு, தமது மூத்தகுமாரனே சமஸ்தானத்துக்கு அதிபதியாக ஏற்படுத்தியிருக்கிறார். ராஜ்யபாரம் சுமக்கமாட்டாத பாரமென்பது யாவருக்கும் தெரிந்தகாரியம்.

குநட்டுக் கடியாக்கான்.—முழுக்குருடன் ஒருவன் ஒரு கின்ன கடியாரத்தைத் தண்டித்துண்டாகப் பிரித்துச் சரிப்படுத்திச் சுத்தஞ்செய்து மறுபடியும் முன்போலச் சேர்த்து நடச்செய்கிறனும். நமது நேத்திராசுகி அவனது வீரக்களிலே அமர்ந்திருக்கிறது.

சீனவிலே ஞாயிறு.—மூன்று சினராஜ்யத்திலே மற்ற தினங்களிற்போல ஆதிவாரத்திலும் வேலைசெய்து வருவார்கள். இப்பொழுது அப்படிச் செய்யாமல் வாரத்தில் இந்த ஒரு தினத்தை ஓய்வுநாளாகக் கைக்கொண்டு வருகிறார்கள். இதனால் லபிக்கும் சுகமும் பயனும் இனிச்சான் சொல்ல வரும். இந்தியா முழுவதிலும் அவ்வாறே நடக்க வேண்டும்.

இரும்பு நாணயம்.—ஜர்மன் தேசத்தார் ஒரு புதுவழக்கினதாக ஒரு காரியமுண்டு. இப்போழுது, ஜர்மனியிலே போதுமான செம்பு இல்லாமையால், இரும்பு நாணயங்கள் கோடிகோடியாக அடிக்கப்பட்டு வர்த்தகத்துக்கு உபயோகித்து வருகிறார்களாம். இதுவும் ஜர்மன் யுக்தி. அங்கிலேயரும் ஏனைய அரசகளும் அவ்வாறு செய்தால், செம்பும் வெள்ளியும் செலவாகாமலிருக்குமே.

ஹிந்து உதாரத்துவம்.—கலகல ராமானுஜஞ் செட்டியவர்கள் இந்திய பெண்கள் உயர்தரக்கல்வி பயின்று பி. ஏ. பட்டம் பெறத்தக்காக மாதம் 25 ரூ. வீதமான இரண்டு உபகாரச் சம்பளம் ஏற்படுத்தியிருக்கிறார். ஒன்று ஹிந்துப் பெண்களுக்கும், மற்றொன்று கிறிஸ்தப் பெண்களுக்கும். ஒவ்வொன்றும் 4 நாலு வருஷம் கவர்ன்மெண்ட் காலேஜில் கொடுக்கப்படும். இதுபோல வேறனேகரும் செய்வார்களெனக் கோருகின்றேம்.

அமெரிக்க அரசு.—அமெரிக்காவில் அரசன் கிடையாது. பிரான்சுபோல் ஒரு அதிபதிமாத்திரமுண்டு. இவர் 5 வருஷத்துக் கொருமுறை தெரிந்தெடுக்கப்படுகிறவர். இதுவரையும் அதிபதியாயிருந்த உவில்சன் என்பவரை மறுபடியும் தெரிந்தெடுத்தார்கள். இவருக்கு எதிரியாயிருந்த ஜட்ஜ் யூஸ் என்பர் ஏழு வோட்டாலேமாத்திரம் தோற்றுப்போனர். இதனாலே கட்சி வெகு சம்பவமாயிருந்தனவென்று அநுமானிக்கலாம்.

யுத்த கைதிகள்.—சண்டை செய்துவருகிற எல்லாத் தேசக்களிலும் தற்காலம் யுத்தத்திற் பிடியுண்ட கைதிகள் 50 லட்சம் பேருண்டு என்று கணக்கிட்டிருக்கிறது. இது ஜெனீவாயின் ஜனத்தொகைக்கு பத்துமடங் கதிகப்பட்டது. ஆகிலும், இவ்வீரர்கள் யாவரும் அந்தந்த அரசினுலே காக்கப்பட்டு வருகிறார்கள். இனி யுத்தத்துக்குப் பின்பு, இவர்களுக்கும் தப்புகிற அல்லது ஜெயிக்கிற மற்ற வீரர்களுக்கும், வேலை கிடைக்கிறது மகாக் கஷ்டமாயிருக்கும்.

யுத்த வரலாறு.—யுத்தம் மேற்கிலும், தென்கிழக்கிலும் அகோரமாய் நடந்துவருகிறது. அங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஜெயித்துக்கொண்டே முன்னுக்குச் செல்லுகிறார்கள். ஆயிரக்கணக்கான எதிரிவீரர்களை ஒவ்வொரு தேசம் நினைத்தோறும் பிடித்துக் கொண்டு வருகிறார்கள். ஜர்மன் எல்லை முன்பு 500 மைல் விசாலமாக விருந்தது, இப்பொழுது 200 மைலாகக் குறுகிவிட்டது. இந்த அபஜெயங்களை ஜர்மன்கள் தங்கள் பத்திரிகைகளிலே பதறி ரங்கமாகத் தெரிவித்து வருகிறார்கள். ஆகிலும், யுத்தத்தை இலேசாக விடமாட்டார்கள்போலும். அபரிமித வைராக்கியஞ் சாதித்து, கடைசிவீரன் மடியுமட்டும் சண்டை போடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு பெரிய பொல்லாங்குமட்டும் தாராளமாய்ச் செய்துவருகிறார்கள். கடல்நீழ் கப்பல்களைக்கொண்டு பிரமாண்ட சமுத்திரங்களிலே செல்லுகிற வர்த்தகக் கப்பல்களையும் மற்ற மரக்கலங்களையும் குண்டுகட்டி நீரிலமிழ்த்தி வருகிறார்கள். உயிர்ச்சேதத்தைக் குறித்து அவர்களுக்குச் சினையளவுக் இலேசமுங் கிடையாது. உதாரணமாக, இரண்டு வாரத்துக்கு முன்பு, இங்கியாவிலிருந்து போய்க்கொண்டிருந்த "அரேபியா" என்ற மெய்ல் கப்பலே மால்ட்டா என்கிற தீவுக்கு 300 மைல் தூரத்திலே திடீரென்று சுட்டார்கள். அதிலே கடதாசுகள் மட்டுமல்ல, 700-ச் சில்லறைப் பிரயாணிகளு மிருந்தார்கள். இவர்கள் யாவரும் உடனே படகுகளிலே (ஒவ்வொரு கப்பலிலும் உயிர்காக்கும் படகுகள் அனேகம் தொங்கவிட்டிருக்கும்) இறங்கி உயிர்தப்பி வேறு கப்பல்களிலே ஏற்றப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக தத்தம் தேசங்கள்போய்ச் சேர்ந்தார்கள். ஜர்மன்கள் இயற்றிவருகிற இப்படிப்பட்ட கொடிய செயல்களைதாம் அவர்களுக்குக் கடைசியிலே பெருங்கிராய் முடியும். யுத்தம் இன்னொரு வருஷம் அல்லது ஒன்றரை வருஷம் நடக்குமென்று அனேகர் எண்ணுகிறார்கள். ஆஸ்திரியாவின் பிரதம மந்திரியைச் சுட்டுப்போட்டார்கள். அதன் சக்கரவர்த்தியும் அபய நிலையில் கிடந்து 86-ம் வயதில் இறந்து போனர். கிரீஸ் தேசம் இரண்டு அரசாகப் பிரிந்துவிட்டது. அரசன் ஜர்மன்பட்சம் சார்ந்தவானமையால், குடிகள் அதற்கு விரோதமாய் வெனுஸிலாஸ் மந்திரியை சாலோனிக்காவில் அரசாளச் செய்திருக்கிறார்கள். அதிக மழையினுலே ரஷியாவின் படைகள் கொஞ்சம் தாமதப்

டிசெம்பர்மீ பஞ்சாங்கம்.—

வாரம்.	டிசெம்பர்மீ = கார்த்திகை—மார்கழி. ● அமாவாசை, 24உ ⊙ பௌர்ணமி, 9உ.							கார்த்திகை—மார்கழி.						
ஞாயி...	...	3	10	17	24	31	..	18	25	3	10	17		
திங்க...	....	4	11	18	25	....	....	19	26	4	11	...		
செவ்...	...	5	12	19	26	....	....	20	27	5	12	...		
புதன்...	...	6	13	20	27	....	....	21	28	6	13	...		
வியா ...	...	7	14	21	28	....	....	22	29	7	14	...		
வெள்...	1	8	15	22	29	....	16	23	1	8	15	...		
சனி ...	2	9	16	23	30	....	17	24	2	9	16	...		

20-4-16

பட்டிருக்கின்றன. ஸ்வீடின் எதிரிகள் பக்கமும், நார்வே நமதரசர் பக்கமும், சாய்கிறதாகத் தோன்றுகிறது. இந்த வருஷாந்தத்துக்குள் என்ன சம்பவிக்குமோ, கடவுளுக்குத்தான் தெரியும். அனைத்தும் அவர் சித்தம்.

AN AMERICAN WOMEN'S COLLEGE

அமெரிக்கா தேசத்துப் பெண் கலாசாலை

உவெல்லஸ்லி கலாசாலை (Wellesley College) அமெரிக்காவிலுள்ள பெரிதும் பழமையானதுமான பெண் பாடசாலைகளிலொன்று. இது பாஸ்டன் (Boston) பட்டணத்திலிருந்து 15 மைல் தூரத்



மலாயத்தீவு படகு.

தில் ஒரு அழகான ஏரிக்கரையின்மேல் புதர்களும் பசும்புற்றரைகளும் சிறு குன்றுகளும் அடர்ந்த முன்னூறு ஏக்ரா விஸ்தீரணமுள்ள பூமியில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தக் கலாசாலையைச் சேர்ந்த 1,400 பெண்களும், 200 போதனாசிரியரும் எப்போதும் சிங்காரமான ஒரு பூங்காவனத்தின்கண் வசிக்கிறார்கள். இந்த நந்தவனத்தில், இங்குமங்கும் 20 கட்டடங்களுக்கு மேலிருக்கின்றன. மையத்திலிருக்கிற பெரிய கட்டடத்தில் எல்லா வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. அதோடு சேர்த்து ஒரு ஆலயம், சங்கீதக்கூடம், சித்திரக்கூடம், சோதிமண்டபம், தேக அப்பியாச சாலை, சாஸ்திரப்பயிற்சி கூடம், புஸ்தகசாலை ஆகிய இவைகளெல்லாங் கட்டப்பட்டிருக்கின்றன. மீதி கட்டடங்கள் பெண்கள் வசிக்கிற விடுதிகள். ஒவ்வொரு வீட்டிலும் வீட்டுத்தாயென்று அழைக்கப்படும் ஒரு முதிர்வயதுள்ள ஒரு அம்மாளிருக்கிறாள். அவள் தன்னைச்சேர்ந்த பெண்களை ஏகக் குடும்பமாகச் சம்ரட்சணை செய்வதில், விசேஷித்த சிரத்தை எடுத்துக்கொள்ளுவள்.

இந்தக் கலாசாலைக்கு அமெரிக்காவின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும், இங்கிலாந்து, சீனா, ஜப்பான் முதலிய சீமைகளிலிருந்தும் பெண்கள் வருகிறார்கள். உவெல்லஸ்லி பாடசாலை சந்தோஷமும், சுறுசுறுப்புமான ஓர் இடம். காலை ஏழுமணிக்குப் பெண்களெல்லாரும் எழுந்திருந்து, உணவு அருந்தி, அரைமணிநேரம் அவரவர் அறைகளை ஒழுங்குபடுத்தி எட்டுமணிக்கு ஆலயத்தில் தலைமை பெருமாட்டியினால் நடத்தப்படும் காலை ஜெபத்துக்கு ஆயத்தமாவார்கள். கட்டடங்கள் தூரத்துக்குத் தூரமாயிருப்பதனால் சில பெண்கள் மையத்திலிருக்கிற சில கட்டடங்களுக்கு வர ஒருமைல் நடக்கவேண்டியதாகும். சுருக்கமான ஜெப ஆராதனை முடிந்தவுடனே பற்பல கட்டடங்களுக்குப் பெண்கள் கலைந்துபோவார்கள். கொஞ்சநேரம் கூச்சலும், பேச்சும், நகைப்பும், பாட்டுமாயிருக்கும். ஒன்பது மணி அடித்தவுடனே, எல்லாம் அடங்கிப்போம்.

ஒவ்வொரு மணிக்கும் வகுப்புகள் மாறும்; ஓய்வாயிருக்கும் நேரங்களில் புஸ்தகக்கூடத்திற்காவது, தங்களறைகளுக்காவது போவார்கள்; உஷ்ணகாலத்தில் விருட்சங்களினடியி லுட்கார்ந்து வாசிப்பார்கள். மத்தியானத்தில் சாப்பாட்டுக்கென்று விடும் ஒருமணி நேரம்தவிர, மாலை நாலேகால் மணி வரையில் வகுப்புகள் நடக்கும். புஸ்தகக்கூடத்தில் அநேக மணிநேரம் வாசிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் செலவிடும் நேரமும், வகுப்புகளில் உபந்நியாசங்களுக்கும், வினாவிடைகளுக்கும் பிடிக்கும் நேரமும் அந்தக் கலாசாலையின் ஜீவியத்தில் அதிக அருமையானது.

மாலை நாலேகால் மணிக்கெல்லாம் தேக அப்பியாசத்திற்கென்று ஆயத்தஞ்செய்யும் பெண்கள் கும்பல் கும்பலாய்த் தோட்டமெல்லாம் நிற்பார்கள். சிலர் டென்னிஸ், ஹாக்கி முதலான விளையாட்டுகளை விளையாடப் போவார்கள்.

இன்னும் ஒரு கூட்டத்தார் தாங்கள் வெளியேறிப்போகுங் காலத்தில் நடத்தப்போகிற நாடகத்தை ஏரியை அடுத்த ஒரு அமைதியான இடத்தில் அப்பியாசஞ் செய்துகொண்டிருப்பார்கள். அநேக பெண்கள் லேசான தோணிகளிலேறி பாடிக்கொண்டு தண்டுவலித்துப் போவார்கள். விளையாட்டு மைதானத்தில் பதினேழு டென்னிஸ் கோர்ட்டுகளும் ஐந்து கூடைப்பந்து கோர்ட்டுகளும், இரண்டு ஹாக்கி விளையாடும் ஸ்தலங்களு மிருக்கின்றன.

பெண்களுடைய ஆத்துமமும் மனது மாத்திரமல்ல, அவர்களுடைய தேகமும் விருத்திபண்ணப்படவேண்டுமென்று அந்த கலாசாலையிலுள்ள போதனாசிரியர் நம்புகிறார்கள். பயிற்சியுடைய ஏறக்குறைய இருபது உபாத்திமார் தங்கள் முழுநேரத்தையும் தேகப்பியாசத்திற்கென்று செலவிடுகிறார்கள். இவ்விதமான தேகப்பியாசங்கள் முடிந்தபின்னர் எல்லாரும் வீடுகளுக்குத் திரும்பி வஸ்திரங்களை மாற்றிக்கொண்டு, ஆறரைமணிக்கு இராச்சாப்பாட்டுக்கு உட்காருவார்கள். சாப்பாடு முடிந்தவுடன் அரைமணி நேரத்திற்குச் சங்கீத காலக்ஷேபம் நடக்கும்.

பிறகு மணி அடிக்கும்போது அவரவர் பாடங்களைப் படிக்க ஆரம்பிப்பார்கள். அநேகர் சித்திரக் கூடத்திற்கும், புஸ்தகசாலைக்கும், சங்கீத கூடத்திற்கும், பல சங்கங்களின் கூட்டங்களுக்கும் போவார்கள். அந்த நந்தவனத்தில் சில பெண்கள் நட்சத்திரங்களைக் கவனித்து, தங்கள் வானசாஸ்திர வகுப்புக்குச் சென்று, அவைகளைப்பற்றின குறிப்புகள் செய்வார்கள். பத்துமணிக்கெல்லாம் கதவு சாத்தப்படுமாகையால் அவரவர்கள் தங்கள் தங்கள் விடுதிகளுக்குப் படுக்கப் போகவேண்டும்.

இந்த கலாசாலை ஒரு சிறு பட்டணம்போலிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கும் சட்டங்கள் அதிக சொற்பம். அவைகளில் அநேகம் அங்கேயுள்ள வித்தியார்த்திகளாலேயே நிருமிக்கப்படுகின்றன. இச்சட்டங்களுக்குக் கீழ்ப்படியாத பெண்களிருந்தால் அவர்களை அனுப்பிவிடவும் வித்தியார்த்திகளுக்கு அதிகாரமுண்டு. வருஷாவருஷம் அவர்கள் தங்கள் சொந்த அக்கிராசனாதிபதியையும் உத்தியோகத்தாரையும் நியமித்துக்கொண்டு அநேக பெரிய கூட்டங்களும் சிறிய காரிய நிர்வாகக் கூட்

டங்களும் பற்பல வீடுகளில் நடத்துகிறார்கள். இவைகள் எல்லாஞ்சேர்ந்து பொதுக்கூட்டங்களில் பேசவும், சங்கங்கள் ஸ்தாபிக்கவும், காரியம் நிர்வாகிக்கவும், பிரமாணங்களுக்குக் கீழ் அடங்கவும் பெண்களைப் பயிற்றுவிக்கின்றன.

இங்கேயிருக்கும் கிறிஸ்தவ சங்கம் பக்திவிருத்திக்கேதுவான அநேக கூட்டங்களை வைத்து, பாடசாலைகளில் வேலைசெய்கிறவர்களுக்குள்ளும், எளிய அயலகத்தாருக்குள்ளும் பரோபகாரமான உதவிசெய்வதோடுகூட சீனா, இந்தியா இவைகளிலுள்ள சில மிஷன்களை ஆதரிக்கிறது.

இவ்விதமாக இந்த கலாசாலையிலும் அமெரிக்காவின் இதர கலாசாலைகளிலும் தேறி அநேகர் தேசமெங்கும் போய் மனைவிகளாகவும், தாய்களாகவும், உபாத்தினிகளாகவும், வைத்தியர்களாகவும், உழைத்துவருகிறார்கள். சென்ற வருஷத்தில் சென்னையில் பெண்களுக்கென்று இரண்டு கலாசாலைகள் ஸ்தாபனமாயிருக்கின்றன. இவைகளும் நாளடைவில் உவெல்லஸ்லி (Wellesley) பாடசாலையைப்போலவே எல்லாவிதத்திலும் விருத்தியடைந்து, இந்த தேசத்திற்கு ஆசீர்வாதமாகுமென்று நம்புகிறோம்.

C. W.

THE STORY OF RUTH

ரூத்தின் சரிதம்

(தொடர்ச்சி.)

கதை.

49. விக்கிரக பக்தர்செய்யும்—வீண்சடங்கா சாரமெல்லாம்
தக்கமெய்க் கிறிஸ்தவர்கள் — தாரணியில் செய்யாரே
50. பாதிக் கிறிஸ்தவர்கள்—பாழுஞ் சடங்கனைத்தும்
மேதினியிலே செய்து — வேகுவாரே நரகில்
51. மக்லோன் கிலியோனும்—மங்கல கல்யாணம்பண்ண
தக்கவய தானார்கள்—தங்களுக்குப் பெண்ணேது?
52. இப்போதும் நாகோமி — இருந்தவிடம் விட்டுசொந்த
குப்பம் வருவாளோ — கூடாது என்று சொல்லி
53. அத்தேசத்தில் தானே—அவர்கட்கு ரண்டு பெண்கள
உத்தேசித் தேரூத்—ஓர்பாளெனும் பெயரை
54. தக்க தருணமதில்—தையலரை நேமித்து
மக்க ளிருவருக்கும்—மங்கள முடித்தாளே
55. விதவையின் மக்களிப்போ — வீட்டெஜமானானார்கள்
இதுவும் பரன்செயலே — என்றெண்ணினாளவளும்
56. கவலைகள் நீங்கினது—கண்ணீர் தொலைந்ததென்று
அவளெண்ணி மெத்தவுமா — ஆனந்தங் கொண்டனளே
57. துக்கமுங் களிப்புமல்லோ — தொல்லுலகிலேகலந்து
எக்காலும் வந்திடுமே — என்னும் மொழிப் படிக்கு
58. மங்கள முடிந்தபத்து—வருஷம் பிழைத்த மக்கள்
தங்காமலே மரித்து — தாயைக்கை விட்டனர்காண்
59. சம்பிரமமாக மக்கள் — சஞ்சரித்த வாசலிப்போ
கைம்பெண்க ளின்குடிலாய்—காணுவதும் சஞ்சலமே
60. நாகோமி மக்களுக்காய் — நாளும் புலம்பி ஐயோ!
சாகாமல் செத்தேனே—சஞ்சலத்துக் காளானேன்
61. கணவன் மரித்தாரே — கண்மணிகளும் போச்சே
மணமுடித்தப் பெண்களிப்போ — மாடிக்கலுமாச்சே
62. கைத்தாங்கி யெங்களையே—காப்பா ரெனவிருந்தோம்
ஐயோ விதவைகளாய்-அலையவிட்டுப் போனாரே
63. என்தேசத் திலிருந்து — என்பொருளெல்லாந்தோற்றேன்
அன்னிய தேசம்வந்து—ஆண்மக்களையிழந்தேன்
64. ஒண்டியா யென்னைப்பரன் — ஒடுக்கினாரென்பவத்தால்
தண்டித் தெனையிகவும்—தாழ்த்தினார் மெய்யாக
65. பாவிகளி லும்பெரிய—பாவிநா னானும்
தாவி யரவணைப்பார்-தற்பரனார் மாதயவாய்
66. நெஞ்சே கலங்காதே—நேசர் துணையிருப்பார்
தஞ்ச மளிப்பரென்று-தன்னைத்தான் தேற்றிக்கொண்டாள்
67. கணவனை நம்பியவள்—கைம்பெண்ணாய்ப் போனாளே
துணையாம் சேய்களைநம்பி — துக்கத்துக்கானாளே

(இன்னும் வரும்.)

MADRAS DEPRESSED CLASSES CONFERENCE

தென்னிந்திய ஒடுக்கப்பட்டவர்கள் ஆறாவது மஹாக் கூட்டம்.

1916-ம் ௵ டிசெம்பர் ௴ 16-ம் ௳ சனிவாரம்.

ஒடுக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் மஹாக்கூட்டம் சென்னையில் நடக்கும். குடியிருப்பு, படிப்பு, அடிமை ஊழியம், கூலி, கிராம உத்தியோகஸ்தர்கள் அதிகாரம், உபகாரச்சம்பளம், சர்க்கார் உத்தியோகம் முதலியவை பேசப்படும்.

மஹாக்கூட்டத்தில் பேசப்படவேண்டிய விஷயங்கள் சந்தோஷத்தோடு அங்கீகரிக்கப்படும். அந்தந்த சபையின் பிரதிநிதிகள் ஒவ்வொரு கிராமத்திலுமிருந்து மஹாக்கூட்டத்துக்கு வரும்படியான ஏற்பாடுகள், அங்கங்கேயுள்ள குருக்கள், உபகாரிகள் செய்யவேண்டுமென்பது வரவேற்கும் சபையின் கோரிக்கை.

இந்திய கவர்ன்மெண்டாரும், சென்னை கவர்ன்மெண்டாரும் ஒடுக்கப்பட்டவர்களை முன்னேற்றும்படியான வழிகளைத் தேடுகிற இக்காலத்தில், ஒடுக்கப்பட்டவர்கள் விழிப்படைவது அவசியம்.

மற்ற விஷயங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதலாம். ஒடுக்கப்பட்ட சங்கம் பொதுக் காரியதரிசி கனம்: B. K. சாமுவேல் மணிக்கிராமம், சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா. தென்னிந்திய ரெயில்வேயில் ரிட்டண்டிக்கட்டு கிடைக்கும்.

இஸ்ரவேல் நல்லப்பா.
சைதாப்பேட்டை,
சென்னை.

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. வேதவான் ஐவி மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

நாம் சுவர்க்கவாசிகளானதால் நம்முடைய தேகம் அழிவைக் காணமாட்டாது. கடந்துபோன சம்பவத்தினால் நாம் ஆயுதபரிட்சையில் அவருக்கு எவ்வளவேனும் தாழ்ந்தவர்க ளல்லவென்று அறிந்திருக்கிறோம். வருங்காலத்திற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய இறந்தகால சம்பவங்கள் அனுகூலமாயிருக்கின்றன. நாம் அநுபோகசாலிகளாயிருக்கிறோம். காரியத்தைக் கவனித்துப் பார்க்குமளவில், புஜபலபராக்கிரமத்தினாலாவது தந்திர உபாயத்தினாலாவது நாம் நித்தியமாய் சண்டைபுரிந்து கொண்டிருக்கத் தீர்மானிக்கலாம். அதற்கு வேண்டிய தைரியமும் நம்பிக்கையும் நமக்குண்டு. இப்போது வெற்றிவேந்தனைச் சந்தோஷ சாகரத்தில் அமிழ்ந்தி, கொடுங்கோல் மன்னனாயிருக்கிற நம்முடைய பெரிய சத்துருவாகிய கர்த்தனுடன் நான் ஓர்போதிலும் ஒப்புரவாகவேகூடாது.

இவ்வாறு வேதனையில் அமிழ்ந்திக்கிடந்தவனும் மருள விழுந்தவனுமான தூதன், பெருமையோடும் கர்வத்தோடும் தன் சங்கடங்களைச் சற்றும் உணராதவனைப்போல் பேசினான். பேசினவுடன் தைரியத்திலும் கர்வத்திலும் சிறந்து, சாத்தானுக்கு உத்தம சிநேகிதனும் ஆதிக்கத்திலும் அதிகாரத்திலும் அவனுக்கு இரண்டாவதாகவுமிருந்த பெயெல்செபூல் மறுமொழியாகச் சொன்னதாவது:

4. பெயெல்செபூல் வசனித்த படலம்.

ஓ அரசனே! சிங்காசனங்களில் வீற்றிருந்து அரசாட்சி செய்தவர்களின் பிரதானியே! அணிவகுத்த சேராபீன் சேனைகளை அமர்க்களத்திற்கு நடத்தின தளகர்த்தனே! பயங்கர கிரியைகளை நடப்பிப்பதற்கு அஞ்சாதவனே! வானுலக சக்கரவர்த்திக்கு இடையூறுண்டுபண்ணி அவருடைய உன்னத அரசாட்சியை அலங்கோலப்படுத்தத் துணிந்தவனே! விதிப்பிரமாணத்தினாலோ அல்லது அகஸ்மாத்தாயோ நாம் இவ்வாறு அபஜெயமடைந்து வானுலகத்தை இழந்தவர்களானோம். இந்த மகா பலத்தசேனை நாசத்திலும் மோசத்திலும் அமிழ்ந்திக்கிடப்பதைப் பார்த்து மிகுந்த வேதனையடைகிறேன். ஆழ்ந்த யோசனைகள் என் மனதில் உண்டாகின்றன. இவர்கள் வானப்பிறவிகளானதால் ஓர்போதிலும் அழியக்கூடியவர்களல்ல. எதை ஜெயங்கொண்டாலும் மனதையும் ஆவியையும் ஒருவரும் ஜெயிக்கமாட்டார்கள். சீக்கிரத்தில் அவைகள் பலத்தை அடையக்கூடும். நம்முடைய மகிமை மங்கிப்போயினும், பாக்கியம் நிர்ப்பாக்கியமாயினும் என்ன? நம்மை ஜெயித்தவர் ஆவியையும் சக்தியையும் நம்மைவிட்டு எடுத்துவிடாமல் சகலவித சங்கடங்களையும் துன்பங்களையும் அனுபவிக்க அவைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். நம்முடைய சேனைகளின் பலத்தை அடக்கிப்போட்டதினால் தாம் சர்வவல்லவர் என்பதை திருஷ்டாந்தப்படுத்தினார் அல்லவோ? சரீரவல்லமை ஒன்று தவிர வேறெந்தவகையிலும் அவர் நம்மை ஜெயிக்கக் கூடாது. நம்மை அடிமைகளாக்கி, எப்பொழுதும் இப்பாதாளலோகத்தில் அவரது ஆக்கினைக்கரத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றச் செய்தபடியால் நம்மைப் பழிவாங்குகிறாரென்று நன்றாய் விளங்குகிறது. ஆயினும் நம்முடைய பலமும் நம்முடைய சேனைகளுடைய பலமும் எவ்வளவேனும் குன்றிப்போகவில்லை; குன்றிப்போகவுமாட்டாது.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

குழந்தைகளுக்கும் பிணியாளிகளுக்கும் ஏற்றது.

கையினுல் தொடாமல் செய்யப்பட்டது
பிறந்ததுமுதல் குழந்தைகளின் உபயோகத்திற்கு இசைய செய்யப்பட்டது :

இப்போதே தயாராக இருக்கின்றது
1917–ம் வருஷத்திய மெல்லின்ஸ் பஞ்சாங்கம்

மேல்விலாசமும் 2 அணவும் அனுப்புவோருக்கு தபால் மார்க்கமாக இந்தியா தேசத்துக்குள் அனுப்பப்படும். அல்லது நேரில் வந்து 2 அணு கொடுத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்

தாய்மாருக்கு மிகவும் பிரயோசனமான
'இந்தியாவில் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் முறை'
என்னும் புத்தகம் 2 அணவுடன் தங்கள் விலாசம் அனுப்புவோருக்கு இந்தியா தேசத்துக்குள் தபால் மார்க்கமாய் அனுப்பப்படும்.

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ, (லிமிட்டெட்)
மதராஸ்

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

S. P. C. K Press, Vepery, Madras—1916.

விளம்பரம்.

ஒருவருஷக் கையோப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஞ்சுத்தைக்கு 4 அணு; அரை அணு தபாதுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஞ்சுத்தைக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் பிரயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல் ஹாஸுக்கேற்ற C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

சத்திய தூதன்.

JANUARY, 1917. PRICE, 1 PIE.—விலை, 1 பை. ஜனுவரிமீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

புது ஷெரீப்பு.—இங்கரத்தக்கு இவ்வருஷம் ராவுசாய்பு சி. ராமானுஜம் செட்டியார் ஷெரீப்பா யிருக்கிறார். ஷெரிப்பென்றால் தலைமையான நகர வாசி. நகரத்தின் பொது விஷயங்களுக்குச் சிலை யானவர்.

எபிசோப்பி நிருபவியாச்சியானம்.—சத்திய தூதன் பத்திராதிபர் இயற்றியிருக்கிற இந்நூல் அச்சிட்டு வருகிறது. புது வருஷத்தில் பிரசுரமாகும். இதிலே அரும்பத விளக்கத்துடன், அங்கங்கே திருத்தின மொழிபெயர்ப்பும் பல படங்களும் அடங்கியிருக்கிறதாம்.

பாமாலில் கிரிஸ்துமதம்.— இங்காட்டிலே 35,000 கிறிஸ்துவர்கள் மாத்திரமுண்டு. இது நூறு வருஷத்து முயற்சிக்குத் தக்க பலனன்ற. இந்தியா முழுவதும் ஒரு தலைமுறைகாலத்தில் அதாவது இன்னும் முப்பது வருஷத்திலே கிறிஸ்த தேசமாய் விடுமென்று ஒரு அங்கிலேய குரு உரைத்திருக்கிறாராம். இது சுத்த மதியீனம்.

சில நல்ல தூறிப்புகள்.—வெங்காயத்தை உப்பிட்ட நீரிலே வேகவைத்தால் அதன் ருசி குன்றுதாம். இரும்பு தருப் பிடிக்காதபடிக்கு அதிலே கொஞ்சம் கொழுப்புத்தடவி உலர்ந்த இடத்தில் வைக்கவேண்டும். பால் கட்டிப்போனால், அதிலே கொஞ்சம் சோடா போட்டால், மதமாகிவிடும். பாலைச் சிவப்புப் புட்டியில் வைத்தால் அனேக மணிநேரம் கெடாதாம்.

சிறுவர் பாங்கு.—அமெரிக்காவிலே சிறுவர் மாத்திரம் பணஞ்சேர்த்து வைக்கிற பாங்குகள் உண்டு. இரண்டு லட்சம் 17 ஆயிரம் சிறுவர் இவ்விதமாகப் பணஞ்சேர்த்து வைக்கிறார்கள். அத் தொகை 40 லட்சம் ரூ. இது நல்ல தேர்ச்சி. சிறுமையிலேயே சிக்கனமாய்ச் செலவுசெய்து மச்சம்பிடிக்கக் கற்றுக்கொள்ளுகிறது பிற்காலத்தில் அதிகமான நன்மை பயக்கும்.

இந்திய நாஷனல் காங்கிரேஸ்.— இந்த வருஷாந்த மகாசபை சென்றமீ 27, 28, 29 தேதிகளில் லக்னௌ பட்டணத்திற் கூடிற்று. இந்தியாவுக்குச் சுய அரசு கொடுக்கவேண்டுமென்றும் இன்னும் பல மிராசுகள் கிடைக்கவேண்டுமென்றும் சீர்மானங்கள் செய்யப்பட்டன. யுத்தம் ஒய்ந்தபின்பு அனேக சீர்திருத்தங்கள் அவசியம் உண்டாகும்.

மதுபானம்.—சென்ற 8 வருஷத்திலே இருந்த 5,714 சாராயக்கடைகள் இப்பொழுது சென்னை ராஜதானியிலே 3,000 மாகக் குறைந்துவிட்டன. ஆரம்பத்திலேகவர்ன்மெண்டார்கடைகளை அடைக்க அஞ்சினார்கள். எதோ பெருந்தீங்குண்டாகுமென எண்ணினார்கள். அப்படியே செய்துவந்தால் குடியர்கள் ஒன்றுங் குடிக்கக் கிடைக்காமல் மதுவைத் துவேஷித்து விடுவார்கள். மதபானம் விற்கப்படாதென்றே சட்டம் உண்டாகவேண்டும்.

இந்தியாவில் சுய அரசு. — இதர காலனிகள்போல இத்தேசத்திலும் சுய அரசு, அதாவது, சொந்தமான மார்லிமெந்து வைத்து அரசு நடத்த வேண்டுமென்ற அனேக இந்தியர்கள் விரும்புகிறார்கள். பலர் அதற்கு ஆக்ஷேபனே செய்கிறார்கள். ஒன்று நிச்சயம், இதைநடக்க வெகுகாலஞ் செல்லும். ஆகிலும், இடையிலே அனேகஞ் சீர்திருத்தங்கள் உண்டாகு மென்பதற்குச் சந்தேகமில்லை.

தென் ஆபிரிகா தேசாபிமானி.—போபோன பாரிஸ்டர் காந்தியின் நண்பரான போலக் பாரிஸ்டர் சென்றமீ சென்னை வந்து போனார். அவர் தென் ஆபிரிகாவுக்குப் போயிருக்கிற இந்தியர்களின் நன்மைக்காக காந்தியுடன் கடும்பாடு பட்டவர். இங்கிலாந்தில் அவருக்கு மரியாதை செய்யப்பட்டது. அவர் இந்தியரல்ல, யூதர்; ஆயினும் இந்தியருக்காகமிக்கப் பிரயாசை யெடுத்துவந்த ஆங்கிய கண்டத்தவர்.

அங்கிலேய தேசை. — இச்சேனை இப்பொழுது 50 லட்சம்வராயும் சேர்ந்து நல்ல தேர்ச்சியடைந்திருக்கிறது. பயங்கரமான ஒரு போரிலே யுண்டுபண்ணி யிருக்கிறார்கள். அது ஒரு மோட்டார்காரில் உண்டுபண்ணி யிருக்கிறது. பார்த்தால் ஒரு பிரமாண்டமான யானைபோலிருக்கிறது. எந்தப் பள்ளத்தையும் தாண்டவும், மேடுகளே உடைத்துச் செல்லவும் தக்கது. இதை எதிர்க்க ஜர்மன்களுக்குச் சக்தி கிடையாது. இதன் அபாயத்தைக் கண்டுதான் அமரை நிறுத்த முயலுகிறார்கள்.

இந்தியாவிலும், ஒரு பெரிய சைனியம் ஏற்படுத்தலாம். குறைந்தது 5 கோடி வீரர் சேர்ந்த ஒரு சேனையை லேசில் தயார்செய்யலாமே. அங்கிலேயருக்கு சுதேசிகளிடத்தில் முழு விசுவாசமில்லை.

ஜர்மன் தந்திரம்.—ஜர்மன்களை இனி யாரும் நம்பார்கள். அவர்களுடைய சதி மோசங்கள் இன்னும் நடந்துவருகின்றன. சமாதானஞ் செய்துகொள்ளும்படி ஒரு பெரிய உபாயஞ் செய்திருக்கிறார்கள். பெல்ஜியனைப் பார்த்து, நீங்கள் சமாதானத்துக்குப் பலவந்தஞ் செய்யாவிட்டால், நாங்கள் உங்கள் தேசத்தையும் அதன் அரிய கட்டடங்களையும் தரையோடழித்து விடுவோமென்று பயமுறுத்தியிருக்கிறார்கள். பெல்ஜியருக்கு யாது செய்யவுமென்று தோற்றவில்லை. ஒருபட்சம் தேசத்திலே பஞ்சமும், வறுமையும், தன்பமும் வாளம். ஜர்மன் கொடுமை வாயாற் புகலப்படாது. ஒருபட்சம், கட்பரசர் யுத்தத்தை நிறுத்தலாகாதென்று சாதிக்கிறார்கள். ஜர்மன்கள் தோற்றார்கள் என்பதற்கு அவர்கள் சமாதானத்துக் கலைகிறதே சாட்சி. அவர்கள் கர்வமும் கொரேச் சிந்தையும் முற்றிலு மடங்க வேண்டும்.

யுத்த வாலாறு.—இனி யுத்தம் முடியத்தொடங்கும்போல் தோற்றுகின்றது. டிசெம்பர்மீ 13உ யில் ஜர்மன் மந்திரி சமாதானத்துக் காயத்தமாயிருக்கிறதாகவும், இன்னுமதிகமான நஷ்டங்கள் வருவிக்க மனதில்லாதிருக்கிறதாகவும், சாஸ்வதமான சமாதானமே செய்யச் சித்தமாயிருக்கிறதாகவும் வெளிப்படுத்தினர். இந்தச் செய்தி உலக

ஜனுவரிமீ பஞ்சாங்கம்.—

வாரம்.	ஜனுவரிமீ = மார்கழி—தை. ● அமாவாசை, 23உ ⊙ பௌர்ணமி, 8உ					கார்கழி—தை.				
ஞாயி ...	...	7	14	21	28	..	24	2	9	16
திங்க ...	1	8	15	22	29	18	25	3	10	17
செவ் ...	2	9	16	23	30	19	26	4	11	18
புதன் ...	3	10	17	24	31	20	27	5	12	19
லியா ...	4	11	18	25	...	21	28	6	13	...
வெள் ...	5	12	19	26	...	22	29	7	14	...
சனி ...	6	13	20	27	...	23	1	8	15	...

மெங்கும் பிரசித்தமாய்விட்டது. போப்புவும் (ரோமைச் சபைத்தலைவர்) அமெரிக்க அதிபதியும் இவ்விஷயத்தில் சிரமை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறார்கள். நட்பரசரோ இத்தனை விரைவிலே சமாதானத்துக்கு வரமாட்டார்கள் போலத் தோன்றுகிறது. ஏனென்றால், இருபட்சத்தாரில் ஒருவருக்கும் சரியான ஜயம் கிடைக்கவில்லை. இன்னும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொலைசெய்துகொண்டு வருகிறார்களேயன்றி, ஒருவர் ராஜ்யமும் எதிரியினாலே பிடிபடாமலிருக்கிறது. ஜர்மன் காலனிகளை (புது ராஜ்யங்களை) நட்பரசர் ஜெயித்துக் கைப்பற்றிக் கொண்டார்களாயினும், நட்பரசர் இதுவரையும் ஜர்மன் தேசத்துக்குள் நுழையவில்லை. ஜர்மன்கள் இன்னும் பிரான்சிலே பாளயமிறங்கி யிருக்கிறதுமன்றி, பெல்ஜியம், போலந்து, சர்வியா, ருமேனியா முதலிய ராஜ்யங்கள் தங்கள் ஆதீனத்தி லிருக்கின்றன. ஆகிலும், ஜர்மன்கள் நாளுக்குநாள் ஒடுங்கி வருகிறார்கள். போதுமான வீரர்கள் கிடையாது. நாடொறும் பரியும் பட்டினியும், நட்பரசர்கள் நாளுக்குநாள் வீரர்த்தொகையிலும், குண்டுச் சாமான்களிலும், பொதுச் சக்தியிலும் அதிகரித்து வருகிறார்கள். இங்கிலாந்திலே வயதுசென்ற ஆஸ்கித் மந்திரி போய் மகா சாமர்த்தியமுள்ள லார்ட் ஜார்ஜ் என்பவர் மந்திரியாய்விட்டார். அவ்வாறே ரஷியாவிலும், பிரான்சிலும். இதனால், யுத்தம் இன்னுஞ் சிலகாலம் நடந்துவந்தால் ஜர்மன்தேசமே பிடிக்கப்படும். நட்பரசர் சொன்னபடி ஜர்மன்கள் ஒப்புக்கொள்வார்கள். மந்திரிகள் எவ்வாறு தீர்ப்பார்களோவென்று இப்பொழுது தீர்க்கமாய்ச் சொல்ல முடியாது. இந்த இரண்டரை வருஷக்காலத்திலே கடலில் அமிழ்த்தப்பட்ட கப்பல்கள் ஆயிரத்துக் கதிகமானவை; கொல்லுண்ட வீரர்கள் எத்தனையோ கோடிப்பேர்; காயப்பட்டவர்களுக்கும் கை, கால், கண் இழந்தவர்களின் தொகை எண்ணுக்கடங்காதது. திரவிய நஷ்டம் மனதால் கிரகிக்கவொண்ணாது; கோவில்கள், மாடமாளிகைகள், ஊர்கள், கிராமங்கள், பயிர்பச்சைகள் இவற்றின் அழிவு உலகத்திலே முன் எந்நாளும் நடந்ததேயில்லை. ராஜ்யங்களிலே உண்டாயிருக்கிற துக்கமும், அழுகையும், தரித்திரமும், தௌர்பாக்கியமும் அளவற்றவை. சமாதானம் அத்தியாவசியமே.

நியுசிலண்ட் வீடுகள்.

THE STORY OF RUTH.

ரூத்தின் சரிதம்.

(தொடர்ச்சி.)

கதை.

68. சஞ்சலத்தா லென்னசெய்வாள்—தன்சொந்த தேசமதில்
பஞ்சமொன்று மில்லையென்று — பலராலுங் கேள்வியுற்றாள்

69. திரும்பவு மவ்விடமே—சீக்கிரமாய்ப் போவதற்கு
மருமக்க ளையழைத்து—வாழ்த்தியே சொல்வாளே

70. எங்கின எந்தனுக்கும் — என்னைவிட்டுப் போனவர்க்கும்
நீங்க ளுதவினநேர்—நிமலனு முங்களுக்கு

71. உதவிசெய் யக்கடவர்—உத்தமிக ளேயம்மா!
சதிகளே நீங்களிப்போ—தாய்வீட்டுக் கேகிடுங்கள்

72. என்றவள் சொல்லிமுத்தம்—இட்டாள் மருகிகட்கு
நன்றியுள்ளப் பெண்ணிருவர்—நயந்துதம் மாமியர்க்கு

73. சொல்லுவார் அம்மம்மா—சொந்தமுள்ள மாமியரே!
தொல்புவியி லேஉம்மை—தூரவிட்டுப் போகோமே

74. உமது ஜனத்தண்டை—உம்மோடு தான்வருவோம்
சமைய மிதிலும்மை—தனியே விடோமென்றார்

75. இதினு லறிவதென்ன—எந்திழையாள் நாகோமி
அதுலனின்மெய்யறிவை-ஆனமட்டுமவர்க்கு

76. புகட்டி யிருப்பளென்று — புலப்படு வதுமெய்யே
இகத்தில்மெய் தெய்வறிவு — இருக்குதோ உந்தனுக்குள்

77. பெரியோரே சிறுவர்க்கு—பிறப்பிறப் பில்லான்மெய்
அறிவைப் புகட்டிவையும்—அதுவே யவர்க்காஸ்தி

78. தெய்வ அறிவுநம்மை—தேற்றி யிருள்நீக்கி
மெய்ஞானத் தையளிக்கும்—மேதினி மூத்தோரே

79. மாமியைவிடப் பெண்கள் — மனமற்று நகோமி
யுடனடந்தார்-குரல்விட் டழுபவராய்

80. அம்மா அழுவதென்ன — அப்புறம் வருவதென்ன?
சும்மா நின்றுவிடுங்கள்—சொந்தவீ டேகுமென்றாள்

81 மருமக ளோர்பாளும்—மாமியில் லாபமில்லை
திரும்பி விடுவேனென்று—திசைநோக்கிச் சென்றனளே

82 தையல்ரூத் தென்பவளோ—தனத்தை யனைமுற்றும்
கைவிட மனதற்று—கசிந்துருகி நடந்தாள்

83. அன்பு நிறைந்தரூத்தை — அவள்மாமி பாருங்கண்டு
பின்னுஞ் சொல்லுவதென்ன—பெண்ணே நீயும் போய்விடு

84. என்னோடு வந்துனக்கு—என்னலாப முண்டம்மா
பின்னும்வர வேண்டாம்நீ—பிள்ளையெனப் புகன்றாள்

85. அத்தையர் சொல்லுமொழி — அவளுக்குப் பிடிக்காமல்
மெத்தவுந் துக்கங்கொண்டு — விளம்புவாள் மாமியாரே!

86. நத்திநீர் போகுமிடம் — நானும் வருவனம்மா
இரத்தனையில் நீர்தங்கும்—இடம்நான் தங்குவேனம்மா

87. உமது ஜனங்களெல்லாம் — உலகில்என் ஜனமம்மா
சமனேநீர் வணங்கிடும் — சாமிஎன் சாமியம்மா

88. நீர்மரிக்கு மிடந்தான்—நிகிலம்நான் சாகுமிடம்
பாரிலுமை வைக்குமிடம் — பக்கமென்னிடமம்மா!

89. மரணமொன்றே யல்லாது — மண்ணினிலும்மைவிட்டு
மருகி யெனைப்பிரிக்க—மாளாதொன் றாலுமென்றாள்

90. இருகண்ணில் நீரோடும்—இளகிய முகத்தோடும்
மருகி யுரைத்தமொழி — மாமியின் தடையெல்லாம்

91. உடைக்கு மிருப்புக்குண்டுக்—கொப்ப விருந்ததினால்
மடந்தைதன் மாமியோடு — வாழ்ந்தவிதம் தெளிவு

92. பத்து வருஷமாய்—பக்தன் நாகோமியிடம்
புத்தி படித்ததினால்—புகழ்ச்சிக் குரியோளானாள்

93. தன்சொந்த ஊர்மறந்தாள்—தாய்தந்தையை மறந்தாள்
அன்புள்ள மாமியோடு—அவளொரே மாம்சமானாள்

94. செத்தாலும் அற்பசுகம்—செகத்தி லெனக்கு வேண்டாம்
பத்தர்நடுவே துன்பம் — படுவதே வாசியென்று

95. மோசே முனிபோல—மொழிந்துதன் னத்தையரும்
பேசாதிருந்து விட்டாள்—பெண்களே கேளுமிங்கே

96. துன்பமும் துக்கமுந்தான் — தொல்புவியினில்தேவ
அன்பை விளக்குங்குகை—ஆதலால் கேளுமிங்கே

(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

ஏனெனில் நித்தியவஸ்துக்களை நித்திய தண்டனைகளுக்கு உட்படுத்துவதினால் பயன் என்ன? இப்படி பெயெல்செபூல் சொல்லி முடிப்பதற்கு முன்னமே ராட்சதபசாசாகிய வேதாளம் உக்கிரசகிதமான வார்த்தைகளுடனேயும், உரத்தசப்தத்துடனேயும் பேசத்தொடங்கினான்.

5. மீளவும் வேதாளம் வசனித்த படலம்.

விழுந்த கேருபீனே! பராக்கிரமச்செய்கையிலும் சங்கடங்களை அனுபவிப்பதிலும் சோர்ந்துபோவது மகா நிர்ப்பாக்கியம். "கேட்டிலூறுதி கூட்டுமுடைமை" என்பது நிச்சயமாயிருக்கட்டும். நன்மைசெய்வது ஒருக்காலும் நம்முடைய வேலையல்ல; தீமைசெய்வதே என்றும் நம்முடைய வேலை. அதிலும் நமக்கு எதிரியாகிய கர்த்தனுக்குத் தீமைசெய்வதே நம்முடைய முக்கியவேலை. நமக்குச் சங்கடத்தை வருவிப்பதினால் தமக்கு நன்மையைச் சம்பாதித்துக் கொள்ளுகிறாரென்று நாம் அறிந்தால் அதைக் குலைத்துவிடுவதே நமது தொழில். நன்மையிலிருந்து தீமையைப் பிறப்பிப்பதே நமக்கடுத்தகாரியம். அன்னமிட்டாரைக் கன்னமிடுவதே நமக்குப் பெருமை. இவ்வாறு நம்முடைய எண்ணங்கள் கைகூடுமானால் எப்படியும் கைகூடும்.) அவரது அந்தரங்க ஆலோசனைகளைச் சின்னபின்னமாக்கி அவருக்குக் கோபத்தை மூட்டிவிடலாம்; ஆனால் இன்னம் சற்றே கவனி, ஜெய வீரனாகிய அவர் நம்மை நாசஞ்செய்யும்பொருட்டு பிரயோகித்த அக்கினிமாரியையும் கந்தக இடிகளையும் இப்போது வானத்தின் மதகுகளண்டைக்குத் திருப்பிக்கொண்டிருக்கிறார். நமதுமேல் புரண்டோடின அக்கினி அலைகளும் ஒதுங்கிப்போயிருக்கின்றன. மின்னலுடனேயும் கர்ச்சனையுடனேயும் இறங்கின வானபீரங்கிகள் பாதாள உலகத்தில் உறுமிக்கொண்டிருக்கின்றன. ஆதலால் இந்த நல்ல சமயத்தை நாம் தப்பவிடக்கூடாது. ஓர்வேளை வெறுப்பினாலோ, அல்லது அலட்சியத்தினாலோ, அல்லது போந்த திர்ப்திகரத்தை யடைந்ததினாலோ தண்டனைகளை அவர் நிறுத்தியிருக்கலாம். இருக்கட்டும், அதோ சற்று தூரத்தில் பயங்கரமும் நிர்ப்பாக்கியமும் நிறைந்தும், கரடு முரடுமான ஓர் பாலைவனத்தைப் பார்க்கிறாயா? அதற்குப் பேர் அழிவின் ஸ்தலம். தழல்களினால் உண்டாகும் மங்கிய வெளிச்சமாத்திரம் தோன்றுகிறது. இங்கே அக்கினி அலைகள் நம்மேல் மோதிக்கொண்டிருப்பதால் அவ்விடத்திற்குப் போய் சற்றே இளைப்பாறுவோமாக. இளைப்பாறுவது அசாத்தியமாயினும், இந்த அதோகதியில் பிரலாபித்திருக்கும் நமது கூட்டாளிகளையும் உடன் பிரதானிகளையும் அவ்விடத்தில் கூடிவரச்செய்து எல்லோருக்கும் பொதுச்சத்துருவாயிருப்பவனைக் கோப மூட்டுகிறது வகை இன்னதென்றும், அவ்வாறு செய்கையில் நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை நமக்கு இலபிக்குமெனில், நடந்துகொள்ள வேண்டிய விதங்கள் என்னவென்றும் ஆலோசிப்போமாக.

இவ்வாறு சாத்தான் இரண்டாவது அதிகாரஸ்தனிடத்தில் பேசுகையில், அவன் கண்கள் நெருப்புத்தழல்களைப்போலப் பிரகாசித்தன. அவனுடைய நீண்டதும் பிரமாண்டமுமான உடல் அநேக மைல்கள் தூரம் அலைகளின்மீது உரண்டு புரண்டுகொண்டிருந்தது. பூர்வீகத்தில் யூப்பித்தர் தேவனுடன் சண்டைபுரிந்த நூறு கரங்களையுடைய பிரையெரிஸ் என்னும் ராட்சதனின் உடலுக்கொப்பாயிருந்தது. அல்லது நார்வே கடலில் யாத்திரைசெய்பவர்கள் பிரமாண்டமான திமிங்கில ஜந்தைக் கற்பாறையென்று நினைத்து அதன்மேல் நங்கூரம்போட்டுக் கவலையற்றவர்களாய் நித்திரை செய்வதுண்டு. அவ்வித ஜந்துவின் உடலுக்கொப்பாயிருந்ததென்றும் சொல்லலாம். சங்கிலிகளினால் கட்டப்பட்டு நெடுஞ்சாண்கிடையாய் நரகக்கடலில் படுத்திருந்தான். அதிலிருந்து எழும்பவும் தலையை எடுக்கவுங் கூடாமலிருந்தது: இவன் தன் சர்ப்பத்தன்மையான தந்திர ஆலோசனைகளை நிறைவேற்ற ஏற்பட்டகாரணத்தால் தேவகோபத்துக்குத் தன்னை நேரஸ்தனுக்கிக்கொண்டான். மேலும் அவனால் பிற்பாடு வஞ்சிக்கப்பட்ட மனிதனுக்குக் கடவுள் கிருபையையும் இரக்கத்தையும் அளித்ததினால் இவனுடைய தண்டனைகளையே பெருகச்செய்தார். இதுவே திருவுளச்சித்தமாயிருந்தது.

ஓர் இமைப்பொழுதில் நரகவரியினின்று எழுந்தருளி மகமேருவைப்போல் நின்றனன். அவனுடைய உள்ளங்கைகளில் எரிதழல்கள் பிரகாசித்தன. அவன் படுத்திருந்தவிடம் காலியானதால் ஆழமான ஓர் பள்ளத்தாக்கைப்போல் காணப்பட்டது. விரித்த ரெக்கைகளுடன் பறந்து நரகத்தின் ஆகாய மண்டலத்தை ஊடுருவிச்சென்று கட்டாந்தரையான ஓரிடத்தில் வந்து நின்றனன். இத்தனை எரிபந்தவஸ்துக்கள் நிறைந்த விடமாயிருந்தது, சமுத்திரத்தில் அக்கினி ஜலம் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும்வண்ணம், நெருப்புக்கங்குகளும் கட்டிகளும் இவ்விடத்தில் சேர்ந்து ரேகித்துக்கொண்டிருந்தது. அக்கினியைக் கக்கும் மலைகளிலிருந்து திரட்சியாய்ப் புறப்படும் நெருப்புத்தழல்கள், கற்குகள் கட்டிகள் தூரத்திலிருக்கும் மைதானவெளிகளில் தெளிக்கப்படுமாப்போல், இத்தரையானது நரகத்தில் காணப்பட்டது.

ஆம், சபிக்கப்பட்டவனின் கால்களுக்கு இதுவே இளைப்பாறும் ஸ்தலம், இவனுக்கு இரண்டாவதான அதிகாரஸ்தனும் இவனுடைய மாதிரியின்படி நடந்து கடவுளின் சித்தத்தை அவமாக்கி தன் சொந்த வல்லமையால் நரகவலையினின்று தப்புவித்துக் கொண்டேனென்று எண்ணமுற்று மேற்சொல்லிய ராட்சத பசாசுக்கருகாமையில் வந்து உட்கார்ந்தனன்.

இப்போது பசாசாகிய வேதாளம் மறுபடியும் பேசினதாவது: மோட்சலோகத்திற்குப் பதிலாக நாம் இந்தப் படுகுழியையா வாசஸ்தலமாகத் தெரிந்துகொள்ளுகிறது? இதுவா நம்முடைய ராஜ்யம்? நம்முடைய தேசம்? நம்முடைய பட்டணம்? நிகரில்லாத பிரகாசம்பொருந்திய விண்ணுலகை விட்டுவிட்டு துக்கசாகரமான இந்த நரகர் உலகத்திலேயா சுயாதீன அரசாட்சி செய்கிறது? நல்லது இருக்கட்டும். ஏகச்சக்ரவர்த்தியாக ஆளுகைசெய்கிறவர் இப்போது தமது சுயஇஷ்டத்தின்படிக்குச் சகலத்தையும் நடத்திக்கொண்டுவருகிறார். அதனால் நமக்குக் கெடுதி ஒன்றுமில்லை அவருக்குத் தூரத்திருப்பதே மகாபாக்கியம். மனோசக்தியில் அவருக்குக் குறைவுள்ளவர்களல்லவென் றறிந்திருக்கிறோம் அவருடைய புஜபலத்தினால்மாத்திரம் நம்மை மேற்கொண்டிருக்கிறாரேயல்லது வேறல்ல. ஆதலால், சந்தோஷம் என்றும் குடிகொண்டிருக்கும்; வானுலகத்தின் செல்வப் பூங்காவனங்களே, உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். பாதாளலோகமே, உனக்கும் உன் பயங்கரக் காட்சிகளுக்கும் வந்தனம் செய்கிறேன். ஆராய்ந்தறியக்கூடாத ஆழமான நரகமே, உன்னிடத்தில் நவமாய் வசிக்கப்போகிறவனை ஏற்றுக்கொள்வாயாக.— அவனுடைய மனம் இடப்பெயர்ச்சியினாலாவது காலபேதத்தினாலாவது மாறக்கூடியதல்ல. சுயாதீன சித்தத்தையே தனக்கு லட்சணமாக அணிந்துகொண்டிருக்கிறான். தன்னிலேதானே மோட்சானந்தத்தை நரகவாதனையாக்கவும், நரகவாதனையை மோட்சானந்தமாகவுமாக்கிக்கொள்ள சக்தியுள்ளவனாயிருக்கிறான். எங்கேயிருந்தாலும் எப்படியிருந்தாலும் நமக்குக் கவையென்ன? நாம் ஒரே விதமாகவே யிருப்போம். இடிகள்என்மேல் விழுந்ததினால் நான் கொஞ்சம் பலட்சயப்பட்டிருக்கிறேன். இந்நரகத்திலேயே நாம் சுயாதீனர்களாயிருக்கலாம். இங்கே சுயாதீன அரசாட்சிசெய்வது சர்வ வல்லவருக்கு எரிப்பாயிருக்கவுமாட்டாது. இதை விட்டு நம்மைத் துரத்திவிடவுமாட்டார். நாம் வெகு சுகபத்திரத்துடன் ஆண்டுகொண்டிருக்கலாம். எனக்குத் தோன்றுகிறபடிக்கு அரசாட்சிசெய்வதே கேருபீன்களின் லட்சணம். நரகத்திலிருந்தாலும் ஆளுகை செய்தால் அதுவே போதும்; ஏனென்றால் வானத்தில் அடிமையாயிருப்பதிலும் நரகத்தில் அரசனாயிருப்பதே உத்தமம். ஆகையால் நமது உத்தமசிநேகிதரும் இந்த பாதாள உலகத்தில் உடன்பங்காளிகளுமானவர்கள் எல்லோரையும் கூடிவரச்செய்து, இந்த தூர் அதிஷ்டமுள்ள இடத்தை விட்டு நீங்கிக்கொள்ளும்படியாவது, அல்லது ஆயுதபாணிகளாய் நின்று இன்னம் ஒருமுறை சண்டைசெய்து நாம் இழந்த வானத்தைச் சம்பாதிக்கும்படியாவது, அல்லது நரகத்திலேதானே நாம் இழந்துபோனதைத் தேடிக்கொள்ளும்படியாவது, இம்மூன்று காரியங்களில் ஒன்றைத் தெரிந்துகொள்வதே என் மனோதீர்மானமாயிருக்கிறதென்றான்.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, The Rev. Dr. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் ரொக்கத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிலேரியல் தாசுக்கேற்ற C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

S. P. C. K Press, Vepery, Madras—1917.

Registered No. M. 442.

REGISTRAR OF NEWSPAPERS 6 FEB 1917 MADRAS

சத்திய தூதன்.

FEBRUARY, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. பெப்ருவரிமீ, 1917.

NEWS AND NOTES
வர்த்தமானக் குறிப்புகள்

ரேஷில் பிரயாணக் கேலவு.—சென்னை தென் இந்திய இருப்புப்பாதைகளிலே இனி மூன்றும் வகுப்பு டிக்கட்கள் அனாவிழுக்காடு அதிகமாக்கப் படுகிறதாகப் பிரஸ்தாபம். 3-ம் வகுப்பு ஏழை களுக்கல்ல, முதலாம் இரண்டாம் வகுப்புச் செல் வர்களுக்குத்தான் அதிகம் போடவேண்டும்.

சர்வ கிரிஸ்தவ சங்கம். — இதன் மூன்றும் கூட்டம் சென்ற டிசம்பர்மீ கடையில் சென்னை யிலே கூடினது. வெளியூர்களிலிருந்து சிலர் வந்து ஆலோசனை செய்து தீர்மானங்கள் ஏற்படுத்தினர் கள். இத்தேசத்திலுள் ளறக்குறைய 40 லட்ச கிரிஸ்தவர்களுக்குச் சில நன்மைகள் வீளையுமெனக் கோருகிறோம்.

லார்ட் பெண்ட்லண்ட்.—மதது கவர்னரவர்க ளுக்கு இது ஐந்தாம் வருஷம். இந்தக் கடைசி வருஷத்திலே இந்த ராஜதானிக்கு ஏதாவது விசே ஷித்த ஓர் நன்மை செய்வாரெனக் கோருகிறோம். அவருடைய அரசிலே ஏகதேசம் மூன்று வருஷம் யுத்தக்கால மாய்விட்டது பரிதாபந்தான். ஆகிலும், யுத்தத்துக்காகவும் ஆஸ்பத்திரிக் கப்பலுக்காகவும் அவரும் அவரது பத்தினியாரும் அதிக முயற்சி யெடுத்திருக்கிறார்கள். லார்ட் கார்மைக்கேலும் போய்விடுகிறார்.

நேஷனல் காங்கிரஸ்.—இந்த வருஷாந்தச் சபையார் லக்ஷ்மணபுரியிலே கூடி இந்தியாவுக்கு "ஹோம்ரூல்" அல்லது சுய அரசு உடனே கொடு க்கவேண்டுமென்றும், வேறு சில சீர்திருத்தங்கள் உண்டுபண்ண வேண்டுமென்றும் தீர்மானஞ்செய் தார்கள். ஏறக்குறைய ஈராயிரம்பேர் இந்தியாவின் சகல பாகங்களிலிருந்தும் வந்து கூடினார்கள். மகம்மதியரும், கிரிஸ்தவர்களும், ஜைனர்களும், பாரசீகரும், இந்தியரும் வேறு பலரும் ஒன்று சேர்ந்து ஐக்கியமுற்றிருந்தார்கள். வருகிற காங்கி ரெஸ் டில்லியிலிருக்குமாம்.

கௌன்சில் மெம்பர்.—கவர்மெண்டு என னப்படுகிற காலவரில் சிலவரும், இரண்டு இங்கிலிஷ் மெம்பரும் ஒரு இந்திய மெம்பரும் தற்காலம் இருக்கிறார்கள். இப்பொழுதிருக்கிற இந்திய மெம்பர் ஸர். சிவசாமி ஐயர் இம்மாதம் தமது ஐந்து வருஷக்காலம் முடிகிறதால் போய் விடுகிறார். அவருக்குப் பதில் பூ. ராஜகோபாலா சிரியர் சக்கரவர்த்தியினுலே நியமிக்கப்பட்டிருக் கிறார். அவர் முன்பு மலையாளத்துக்கு திவானும், பின்பு கவர்ன்மெண்டு செக்கிரிடேரியுமா யிருந்து, இப்பொழுது இந்த மேலான உத்தியோகத்துக்கு வந்திருக்கிறார். அதிக சமர்த்தர்; பெருத்த அநு போகஸ்தன், பட்சபாதமின்றித் தமது கடமைகளை நிறைவேற்றுவாரென்பதற் கையமில்லை.

சூத்திரர்க் கட்சி. — இந்த ஐக்கிய காலத்தில் பிராமணருக்கு விரோதமாக சூத்திரர்க் கட்சி என் றொரு முயற்சி ஏற்பட்டிருக்கிறது. சகல ஆப் பீசுகளிலும் பிராமணரே பெரும்பாலும் உத்தியோ கஞ் செய்துவருகிறதைப் பொறுக்கமட்டாமல், வேய இந்தியர் கூடி ஒரு கட்சியாயிருந்து மேற்படி பிராமணரை எதிர்க்க வகையார்க்கிறார்கள். இவ் வாறு சில கிரிஸ்தவர்களும் ஒன்றுகூடி மேற்படி இருகட்சியாரையும் எதிர்க்க முயலுகிறார்கள். இது உசிதமேயன்று. பிராமணர் உயர்பதவி யடைகிற தற்கு அவர்கள் கல்வி முயற்சியே காரணம். வேய வகுப்பாரும் கல்வி பயின்று கருத்தாய்ப் பிழைத் தால், அவர்களுக்குக் கிடையாத உத்தியோகம் ஒன்றுமில்லை. கல்வியல்ல வென்னும் பூர்வ வாக்கியத்தை மறக்கலாகாது. கல்வியோடுகூட அடங்கிப்பொறக் குஞ் சக்தியும் அத்தியாவசியம். இம்மூன்றுமிருக் கின், கட்கிள் அவசியமாகா.

அதிக வீலை.—இத்தேசத்தில் இப்பொழுது பல பொருள்களும் அதிக வீலையேறிவிட்டன. விசேஷமாக, இங்கிலாந்து, ஜர்மனி முதலிய தேசங்களிலிருந்து வருகிற காகிதம், துணி, கண் ணடி, மாச்சுப்பெட்டி முதலான பதார்த்தங்கள் கிடைக்கிறதே அரிதாய்விட்டது. இதுகவேயெல் லாம் இங்கேயே செய்துமுடிக்கக் கற்றுக்கொண் டால், இந்தியருக்கு எத்தேன லாபமுண்டாகும்! பதார்த்தங்களே லட்சாலட்சமாய்ச் செய்யக் கம் பெனிகளும் யந்திரங்களும் வேண்டும். கொஞ்சங் கொஞ்சமாகக் கையால் செய்வதால் யாதொரு லாபமே கிடைக்காது. குடைகள், கண்ணடிப் பதார்த்தங்கள், கொருப்புக்குச்சிகள் இதுகளிலே ஒன்றுமட்டும் கன்றும் ஏராளமாயும் செய்யக் கற் றுக்கொண்டால், இதேசத்திற்கு எத்தேன கன்மை யுண்டாகும். பீ. ஏ. முதலிய கல்விப்பட்டங்களே விட இவை எத்தேனயோமடங்குப் பிரயோஜனமா னவை!

புது வழி தூப்பீஸ் சட்டம்.—சென்னப்பட் ணத்திற்கென்று ஒரு புதுச்சட்டம் ஏற்படுத்தப் போகிறார்கள். மூப்பத்தாறுக்குப் பதில் இனி காற்பத்துமூன்று மெம்பர்கள் இருப்பார்களாம். பிரெஸிடெண்ட் வேறே, கம்மிஷனர் வேறே இருப்பார்களாம். இதுகள் அத்தேன வீசேஷமன்று. போடவிருக்கும் வரிகள்தாம் பயங்கரமானவை. வீட்டெவரியைப் பதினேட்டாயிலிருந்து இருபத் தைந்தாக உயர்த்தப்போகிறார்கள். அதாவது, வாட கை வருஷத்துக்கு நூருலல், அதிலே 25 ரூ. வரிக் குக் கொடுத்தலிட வேண்டுமாம். இதனல் இனி மேல் வீட்டெவாடகைகள் அதிகமாய் உயர்தலிடும்; சொந்தக்காரருக்கும் கஷ்டமுண்டாகும்! அன்றி, வீட்டையாவது, நிலத்தையாவது, லாபத்துக்கு விற் பனைசெய்தால், லாபத்தில் ஐந்திலொரு பாகம் வரி யாப்பீசார்க்குக் கட்டிவிட வேண்டுமாம். இது பெரிய அநியாயம், உத்தியோக வரிக்குப் பதில் வருமானவரி (இன்கம் டாக்ஸ்) போடப்போகிறார் கள்; அதாவது, கவர்ன்மெண்டுக்கு ஒரு வரி, வரி யாப்பீசுக்கு ஒரு வரி-இரட்டை வரிகட்ட கேரிடும். கடையாக, ரெயில்வே டிக்கட்டுகள் வாங்குஞல் (15 மைலுக் கதிகப்பட்ட பிரயாணம்) டிக்கட் ஒன்றுக்கு நூற்றுக்குப் பதினேந்து விழுக்காடு வரி

பெப்ருவரிமீ பஞ்சாங்கம்—

வாரம்	பெப்ருவரிமீ = தை—மாசி. ● அமாவாசை, 21உ ⊙ பௌர்ணமி, 6உ.					தை—மாசி.			
ஞாயி...	...	4	11	18	25	...	23	30	7	14
திங்க...	..	5	12	19	26	...	24	1	8	15
செவ்...	...	6	13	20	27	...	25	2	9	16
புதன்...	...	7	14	21	28	...	26	3	10	17
லீயா...	1	8	15	22	...	20	27	4	11	...
வெள்...	2	9	16	23	...	21	28	5	12	...
சனி...	3	10	17	24	...	22	29	6	13	...

புஸ்தகம் கூ. நே. சு.

Vol. XXX. No. 4.

கட்டவேண்டும். உதாரணமாக, சேலத்துக்கு இப்பொழுது டிக்கட்டு 2 ரூபாயானல், இனிமேல் 2 ரூ. 2 அணு ஆய்விடும். பிரஜைகளும், மியூனிசிப்பல் மெம்பர்களும் இந்த அதர்மங்களை எதிர்க்க வேண்டும்.

THE WAR

யுத்த வரலாறு

அங்கிலேயரும், பிரான்சியரும், ருஷியரும், இத்தாலியரும் எதிரிகள் குழிகளைப் பற்றிக்கொண்டு அவர்களைப் பின்னுக்குத் துரத்திக்கொண்டே வருகிருர்கள். ஜர்மன்கள் சமாதானத்துக்கு வேண்டினுலும் அது அவர்களுக்குக் கிடைக்காது. நட்பரசர் சாஸ்வதமான சமாதானம்மட்டும் விரும்புகிருர்கள். ஜர்மன்கள் யூரோப்பிலே தலைராஜ்யமா யிருக்கத்தொடுத்த முயற்சியை முற்றிலும் விட்டுவிட்டான். இந்த பூதப்பேயோ, பலமுறை வருத்தப்பார்க்கிறது. அவர்களை நம்புவதெவ்வாறு? ஜகமெல்லாம் அவர்கள் பாதகத்தைப் பார்த்துக் குலை நடுங்குகிறது. கடவுள் வெகு சீக்கிரத்திலே பழிவாங்குவாரென்பதற்குச் சந்தேகமில்லை.

இதுநிற்க, ஜயம் அங்கங்கே நட்பரசர் விஷயமாய் நடந்துகொண்டே வருகிறது. ஆஸ்திரியாவிலும், ஜர்மனியிலும், துருக்கி ராஜபிரதானியிலும் பசியும் பட்டினியும் அதிகம். பிரஜா கலகங்கள் பல நடக்கின்றன. தினம் ஐந்தாறு கப்பல்கள் சப்மெரின்களால் கடலுக்குள் அமிழ்த்தப்படுகின்றன. அர்மீனியன் ஜனத்திலே லட்சக்கணக்கானபேர் வன்கொலைக் கிரையானுர்கள். இவர்களை மீட்கும்பொருட்டே ரஷியர் படையெடுத்துச் செல்லுகிருர்கள். ஆகாயக் கப்பல்கள் எதிரிகளின் பாளயங்களை அர்த்தநாசம் செய்துவருகின்றன. அங்கிலேயரைக் கண்டவுடனே ஜர்மன்கள் ஓட்டம் பிடிக்கிருர்கள். எதிர்த்துச் சண்டைசெய்யுஞ் சக்தி கிடையாது. இங்கிலாந்திலே யுத்தசெலவுக்காக (தினம் $7\frac{1}{2}$ கோடி ரூ.) கவர்ன்மெண்டார் நூற்றுக் கைந்து வீதமாகக் கடன்கேட்டுப் பெற்ருர்கள். அதிக வட்டி கொடுக்கிறதினுலே, முன்னே வாங்கின கடன் பேப்பர் விலை குறைந்து, ஜனங்கள் நஷ்டமடைகிருர்கள். வருகிற எப்பிரல், ஜூன் மாதத்திலே சமாதான முண்டாகுமென்று எண்ணப்படுகிறது.



மெல்பர்ன் நகரம்.

வேண்டும். முற்காலத்தில் அயல்நாடுகளிலிருந்து அபகரித்துக்கொண்ட நாடுகள் யாவற்றையும் அவரவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். தங்கள் சேனைகளைக் குறித்த தொகைக்குள் வைக்கவேண்டும். அவர்கள் சொந்த ராஜ்யம்மாத்திரம் பின்னப்படுத்தப்படாது. ஆனு லிதற்குள்ளேயே அவர்கள் நடமாடி அமைதலாய் நடந்துகொள்ளவேண்டும். பெல்ஜியம் ராஜ்யத்துக்குச் செய்த சொல்லரிய நஷ்டத்துக்குப் பதில் கட்டவேண்டும். அப்படியே மற்ற துர்ச்செயல்களுக்கும். ஆயினும், ஜர்மன் அக்கிரமத்துக்குக் கங்குகரை கிடையாது. யுத்தத்துக்கு அவர்கள் காரணரே யல்லரெனச் சாதிக்கிருர்கள். சமாதானத்திற்குக் கெஞ்சிக்கொண்டிருக்கையிலேயே பல புதுத் துர்க்கிருத்தியங்களை ஆலோசிக்கிருர்கள். உதாரணமாக, ஸ்விட்சர்லாந்து தேசத்துவழியாய்ப் புகுந்து பிரான்சைப் பின்னுமொருமுறை படையெடுக்க முயல்வார்களாம். இதென்ன அக்கிரமம். பேயும் எம்பெருமான் இயேசுவை மூன்றுதரம் சோதித்து, அப்புறம்

THE STORY OF RUTH

ரூத்தின் சரிதம்

(தொடர்ச்சி.)

கதை.

97. தனவந்தனைக் கோடி—ஜனமண்டி வாழ்த்துவர்கள்
கனகமற்ருேனை யாரும்—கனிந்துறவாடார்கள்
98. உலக யியல்பிதுபோல்—உத்தமரூத் செய்யாமல்
நலமான மாமியாரை—நத்த அலுவலென்ன?
99. தனமுமல்ல யிருந்த—தரித்திரமு மல்லயிது
கனமான தெய்வறிவும்—கடவுள் வணக்கமுமே
100. இந்திய மாமிகளும்—இவர்கள் மருகிகளும்
பந்தமுள ரூத்கதையால்—பாடம் படிக்கத்தகும்
101. பாம்புக்கும் கீரிக்கும்—பகையுண் டதனைவிட
வீம்புள்ள மாமியர்க்கும்—வீட்டில் மருகிகட்கும்
102. மண்சட்டித் தானலவோ—மாமியுடைத்தகலம்
பொன்சட்டியே மருகி—போட்டுடைத்த மட்பாண்டம்
103. என்னும் பழமொழிபோல்—எத்தனைக் கிறிஸ்தவரை
பன்னருங் குடும்பங்களில்—பார்ப்பதுமா சங்கடமே
104. காரணமென் னிதற்கு—கர்த்தன் கிறிஸ்து வைத்தான்
ஆரணத்திலே யறியா—தாகையாலே யல்லவோ?
105. உள்ளத்தி னுள்ளவர்மேல்—உசிதமா மன்புதனை
எள்ளளவும் வைக்காதால்—எல்லாக் குறைவுமுண்டு
106. மருகியாம் ரூத்தினுட—மனதை யறிந்த அத்தை
பிரிவதைப்பற்றிப் பின்பு—பேசாதிருந்துவிட்டாள்
107. காடு மலைகளையும்—கணவாய்ப் பள்ளங்களையும்
மேடுகளையுந் தாண்டி—மெலிந்து வழிநடந்தார்
108. கானல் வெய்யில்களையும்—கடும்பசி தாகத்தையும்
ஆனமட்டுஞ் சகித்து—அயர்ந்து வழிநடந்தார்

109. கங்குல்பகலாய் நூறு—கல்லுக்கு மேல் நடந்து
நங்கைகள் பெத்தலேகேம்—நாடுவந்து சேர்ந்தார்கள்
110. பெத்லேகேம் வந்தவுடன்—பெண்மகள் நாகோமியுந்தன்
உற்றமனையைக் கண்டு—உகுத்திருப்பாள் கண்ணீரை
111. மச்சா யிருந்தமனை—வாவா மாறியிப்போ
குச்சா யிருப்பதைநா—கோமியுந்தான் கண்டாளே
112. நெட்டை மாளிகையிப்போ—நெடுங்கால மானதினல்
குட்டிச் சுவரானக்—கோலத்தைக் கண்டாளே
113. தன்வீட்டின் முன்னலே—தானிருந்து கொண்டாளப்போ
முன்னின்ற வூராரும்—முற்று மதிசயித்து
114. தையல் நாகோமியவள்—தானேர் பென்று மிக
ஐயப்படப் பேசி—ஐயையோ என்ருர்கள்
115. ஐயோ உந்தன்ரூபம்—அநியாய மாய்மாறி
மெய்யே நிறங்கெட்டு—மெலிந்ததுவே என்ன?
116. பிச்சை எடுப்பவள்போல்—பிசகாயல் தோன்றுகிருய்
அச்சோநா கோமியென்று—அங்கலாய்த்தார்கள் ஜனம்
117. அப்போநா கோமிசொல்வாள்—அத்தனுர் தானெனக்கு
இப்போ கசப்பைத்தந்தார்—இப்படி யிருக்க என்பேர்
118. மாதுநா கோமியல்ல—மாராளென்றே அழையும்
வேதனின் சித்தமென்னில்—மெய்யாய் லபித்ததுவே
119. நாகோமி யெனுமினிய—நாமத்துக் கர்த்தமின்பம்
மாகசப் பென்னுமர்த்தம்—மாராளெனும் பெயர்க்கு
120. தன்னின்ப மெல்லாமித்—தாரணியிலே மிகவும்
துன்பமாய் மாறிற்றென—தோன்றப்பேர் மாற்றினளே
121. மருகியாம் ரூத்தவளும்—மாமிநா கோமியுமோ
திரும்பிபெத் தலைவந்த—தினம்வாற் கோதுமையின்
122. பயிறுப் பானதினல்—பாரமாம் சாலமது
வயிற்பிழைத்த லரிதே—மாதரிவ ரென்ன செய்வார்?

(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

6. மீளவும் பெயெல்செபூல் வசனித்த படலம்.

இவ்வாறு வேதாளம் பேசினவுடன் கீர்த்திப்பிரதாபரான பெயெல்செபூல் அவனுக்கு மாறுத்தரமாக, ஜகஜோதியான சேனைகளை நடத்துந் தளகர்த்தனே, சர்வவல்லவினைத் தவிர, மற்றவர்களால் ஓர்போதிலும் ஜயிக்கப்படாதவனே, நரகபாதாளத்தில் வீழ்ந்து அக்கினியில் அமிழ்ந்திக்கிடக்குந் திரண்டசேனைகள் உன் அமிர்தமான சத்தத்தை ஒருமுறைமாத்திரம் கேட்பார்களானல், அவர்கள் அதிக தைரியத்துடனேயும் உற்சாகத்துடனேயும் எழுந்திருந்து போருக்கு எத்தனப்படுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. மோசநாசஞ் சம்பவிக்குந் தருணங்களில் உன் வார்த்தைகள் அவர்களுக்குள் நன்னம்பிக்கையை உண்டுபண்ணும் அச்சாரம்போலிருக்கின்றன. யுத்தமுகத்திலும் ரணக்களத்தில் போராடிக்கொண்டிருக்கும்போதும் உன் தொனி அவர்களுக்கு அரணன ஓர் கோட்டையைப்போலிருக்கிறது. ஆனல் இப்போது உன்னதமான இடத்திலிருந்து இப்பாதாளவுலையில் விழுந்துகிடப்பதினல் அவர்கள் மதிமயங்கி மனங்கலங்கினவர்களாயிருக்கிருர்கள்.

இப்படி பெயெல்செபூல் பேசிக்கொண்டிருக்கும்போது வேதாளம் ஏரிகரையோரமாய் வந்துநின்று தன் பளுவும், பிரமாண்டமும், உருண்டைவடிவுமான கேடயத்தைப் பின்னலே எறிந்தான். அது வானசாஸ்திரிகள் தூரதிஷ்டிக்கண்ணுடியில் பார்க்கும் அமிர்தகதிரோனுக்கொப்பாகவும், அதின் புள்ளிகள் அச்சந்திரனிலிருக்கும் குன்றுகள் கெபிகளுக்கொப்பாகவும் இருந்தன. இக்கேடயம் அவன் புஜத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. அவன் பிடித்திருந்த ஈட்டி கப்பல்களுக்குப் பாய்மரங்களாகப் பிரயோகிக்கப்படும் நார்வே தேசத்தின் உயர்ந்ததும் பிரமாண்டமுமான மரங்களை ஒப்பிட்டால், அவைகள் சிறிய பிரம்புகளாகவிருக்கும். இதை ஊன்றிக்கொண்டு நரகத்தழல்களின்மீது இடறிவிழாதபடிக்கு நடக்கப் பிரயாசப்பட்டான்; ஆனல் நீலவர்ணமான வானத்தின் சமதளவரிசையின்மீது நடந்ததுபோலிருக்கவில்லை, மேலும் அக்கினி வேகமாயிருந்ததினல் அவன் அடைந்த சங்கடம் அதிகமாயிருந்தது. நகரத்தின் மேற்கூரை அக்கினித்தழல்களினுல் சமைக்கப்பட்டிருந்தது. ஆகிலும் மிகுந்தபொறுமையுடன் இச்சங்கடங்களைச் சகித்து எரிகடலின் கரையோரத்தினின்று பாதாளத்தில் மதிமயங்கி, வசந்தகாலத்தில் பள்ளத்தாக்குகளில் உதிர்ந்துகிடக்கும் ஏராளமான இலைகளுக்கொப்பான தூதப்படைகளை உரத்தசப்தத்துடன் கூப்பிடத் தொடங்கினன். கோசேனில் வாசஞ்செய்த இஸ்ரவேலரை துரோகத்தனமாய்த் துரத்திக்கொண்டுபோன எகிப்தியரின் ரதங்களும், துரகங்களும், பதாதிகளும், பஞ்சவர்ணக் கொடிகளும் எவ்வாறு சிவந்தசமுத்திரத்தின் கரையோரத்தில் சின்ன பின்னமாகிச் சிதறிக்கிடந்தனவோ அவ்வாறே நரகக்கடலின்மீது ஒன்ருேடொன்று நெருக்கிக்கொண்டு மூர்ச்சையற்றுப்போன பிரேதங்களுக்கொப்பாக அத்தூதச்சேனைகள் விழுந்துகிடந்தன. அப்படியிருந்தும் இவனுடைய சப்தத்துக்கு நகரத்தின் கடைகோடிகளிலிருந்தும் எதிரொலிகள் உண்டாயின.

7. படைகளை எழுப்புதல்செய்த படலம்.

அரசகுமாரரே, பராக்கிரமசாலிகளே, யுத்தவீரர்களே, வானத்தின் முதற்பலித்த கனிகளே, இப்போது நீங்கள் பரலோகத்தை இழந்தவர்களாயிருந்தும் ஓர்காலத்தில் அது உங்கள் சுதந்தரமாயிருந்தது. நித்தியசுகிதமாயிருக்கும் ஆவிகளுக்கு இவ்வாறு சம்பவிப்பது வாஸ்தவமான காரியந்தானு? யுத்தகளத்தில் மட்டுமிஞ்சின சங்கடங்களை அனுபவித்தபடியால், களைத்துப்போய் இளைப்பாறும் பொருட்டு இவ்விடத்தைத் தெரிந்துகொண்டீர்களோ? அல்லது தாழ்ந்தஸ்திதியிலிருந்துகொண்டு உங்களுக்கு அபஜயமுண்டாக்கின வீரனை ஸ்தவுத்தியஞ் செய்துகொண்டிருக்க எத்தனிக்கிறீர்களோ? அவர் வானத்திலிருந்து கேருபீன்களும் சேராபீன்களும் இக்கடலில் உழன்று பிரலாபித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து அகமகிழ்ச்சியடைகிறதை அறியீர்களோ? இப்படி நாம் இருக்கும்போதே நம்முடைய கேவலமான ஸ்திதியை அறிந்துகொண்டு அதிசீக்கிரத்தில் அவருடைய பணிவிடையாட்கள் வானத்தின் கதவுகளைத் திறந்துகொண்டு புறந்தோடிவந்து சங்கிலித் தொடர்பான இடிகளை நம்மேல் பிரயோகித்து சண்டமாருதஞ்செய்து பாதாளத்தின் கடையாந்தரத்துக்கு நம்மைத் துரத்திவிடமாட்டார்களோ? ஆகையால் எழுந்திருங்கள்; இல்லாவிட்டால் என்றும் இவ்வண்ணமாகவே வீழ்ந்துகிடப்பீர்கள் என்ருன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் அவர்கள் தங்கள் ரெக்கைகளை விரித்து எழுந்து நின்றனர். காவல்காப்போர் தங்கள் எஜமானைக் கண்டவளவில் நித்திரையை உதறிவிட்டு அதிசீக்கிரமாய் எழும்புவதற்கொப்பாயிருந்தது. அபாயமான நிலைமையில் தாங்கள் இருப்பதை நன்ருய் அறிந்துணர்ந்ததினல் தங்கள் சேனுபதியின் கட்டளையைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டவர்களைப்போல் நின்றனர். அம்ராமின்புத்திரனுகிய மோசே எகிப்துதேசத்தில் கோலை நீட்டினவுடனே வெட்டுக்கிளிகள் திரள்திரளாய் வந்து பகலொளியையும் மறைத்து நீல்நதியையும் அந்தகாரத்தினல் மூடினதுபோலவே எண்ணிறந்த தூதர்களினலாகிய இந்தப்பெரிய சேனுசமுத்திரமானது நகரத்தின் நான்கு திசைகளையும் அளாவிக்கொண்டிருந்தது. நகரத்தின் மேற்கூரையும் தளமும் நான்கு பக்கங்களும் அக்கினித் தழல்களினல் சமைக்கப்பட்டிருந்தமையால் இப்பெருங்கூட்டம் அதன் நடுவில் ரெக்கைகளை விரித்துக்கொண்டிருந்தது.

அவர்களின் பெரிய சுல்த்தானுகிய வேதாளம் தன் ஈட்டியை உயர்த்தவே இத்திரண்டகூட்டம் சமநடையாய் நடந்து சந்தைவெளிகளில் கும்பு கூடுவதுபோல் அவனைப் புடைசூழ்ந்து நின்றது. பூர்வீகத்தில் ஐரோப்பாவின் வடபாகங்களிலிருந்து ஈக்களைப்போல் எண்ணிக்கைக்கடங்காத ஜனக்கூட்டங்கள் தானியுப், ரைன் நதிகளைக் கடந்து ஜிப்ரால்ற்றர், லிபியாவணுந்தரங்களைமொய்த்துக்கொண்டாற்போல் மூடிக்கொண்டிருந்தது. இக்கூட்டத்துக்கு நிகரான தொன்றையும் சரித்திரங்களில் காணேம். உடனே ஒவ்வொரு அணிவகுப்பிலும், ராணுவப்பிரிவுகளிலுமிருந்த படைத்தலைவர்கள் தங்களின் மகாப்பிரதானியாகிய தளகர்த்தனிருக்குமிடத்துக்கு ஓடிவந்தனர். அவர்களின் வடிவு தேவர்களின் வடிவுக்கொப்பாயிருந்தது மானிடர்களைவிட ரூபத்திலும் மகிமையிலும் சிறப்புற்றிருந்தனர். இவர்கள் ஓர்காலத்தில் வானத்தின் உயர்ந்த ஆசனங்களில் உட்கார்ந்திருந்தவர்கள்; ஆனல் அவர்கள் நாமங்கள் வானபுஸ்தகத்திலில்லை. அவர்கள் செய்த கலகத்தினிமித்தம் அவர்கள் நாமங்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கப்பட்டுப்போயின. கடவுளானவர் மானிடர்களைப் பரிட்சிக்கும்பொருட்டு நீடிய பொறுமையாயிருந்ததை இவர்கள் தங்களுக்கேற்ற சமயமென்றெண்ணி, உலகமெங்குந்திரிந்து பொய்வஞ்சனைகளால் ஏவாளின் புத்திரரைக் கெடுத்து, தங்களைச் சிருஷ்டித்தவரை மறக்கவும் காணக்கூடாதவரின் மகிமையைப் பொன், வெள்ளி முதலிய பஞ்சலோகங்களினல் சமைக்கப்பட்ட மிருகவடிவுகளுக்குச் செலுத்தும்படிசெய்து, பிசாசுக்களைத் தெய்வங்களாக வணங்கும்படி ஏவுதல் செய்தனர்.

இதுவரைக்கும் அவர்களுக்கு நாமங்களில்லை; ஆனல் பிற்காலத்தில் ஜாதிகள் அவர்களுக்குப் பற்பல நாமங்களைச் சூட்டி பற்பல விக்கிரகங்களை அவர்கள் பேரால் அழைத்தார்கள்.

8. சேனைத்தலைவர் படலம்.

வானசங்கீதனே, அச்சேனைத்தலைவர்களின் நாமதேயங்களென்ன? அந்தஸ்தின்படியே அவர்களில் முதன்மையும் கடைசியுமாயிருந்தவர்கள் யாரென்று எனக்கு விவரித்துச் சொல்லுவாயாக.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates. One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor,

THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

S. P. C. K. Press, Vepery, Madras—1917.

விளம்பரம்.

ஒருவருஷச் சையோப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுப்பட ஒத்தருக்கு 4 அணு; அல்லது அணு தபாற்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒத்தருக்கு கு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் பெயர்த்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல் ஹாஸ்தக்கேந்திர C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS 14 MAR 1917 MADRAS

சத்திய தூதன்.

MARCH, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. மார்ச்சுமீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

யுத்தத் நேச விவரங்கள்.—

தேசம்.	கோல் ஜன்டவர்.	ஸ்பெய்ன் பட்டவர்.	கைதிகள்.	மொத்தம்.
பிரான்ஸ்	4,00,000	6,60,000	1,80,000	13,00,000
இங்கிலாந்து	1,81,000	2,00,000	90,000	4,11,000
பெல்ஜியம்	49,000	49,000	15,000	1,13,000
ரஷ்யா	12,50,000	16,80,000	8,50,000	37,80,000
ஜர்மனி	16,30,000	18,80,000	4,90,000	40,00,000
ஆஸ்திரியா	16,10,000	18,65,000	9,10,000	48,85,000
துருக்கி	1,10,000	1,44,000	95,000	3,49,000
மொத்தம்	52,90,000	64,78,000	26,30,000	1,43,90,000

உலகத்து மார்க்க விவரங்கள்.—

கிரிஸ்தவர்கள் 564 மில்லியன் (மில்லியன் 10 லட்சம்); சீனமதஸ்தர் 301 மில்லியன்; மஹமதியர் 222 மில்லியன்; ஹிந்துக்கள் 210 மல்லியன்; பேய்வணக்கர் 158 மில்லியன்; புத்தர் 138 மில்லியன்; ஜப்பான் மதஸ்தர் 25 மில்லியன்; யூதர் 13 மில்லியன்; மற்றவர்கள் 15 மில்லியன்; ஆக மொத்தம் 1,646 மில்லியன் அல்லது 1e4 கோடி 60 லட்சம்.

யுத்தச் செலவு.—

கட்சியார்	இதுவரையும்		தினம் ஒன்றுக்கு	
இங்கிலாந்து	கு. 22,320	மில்லியன்	75	மில்லியன்
பிரான்ஸ்	,, 16,200	,,	46½	,,
ரஷ்யா	,, 16,500	,,	48	,,
இத்தாலியா	,, 3,600	,,	29	,,
வேறுசில	,, 2,140	,,	9	,,
எதிரிகள்				
ஜர்மனி	,, 18,780	,,	66	,,
ஆஸ்திரியா	,, 10,680	,,	36	,,
துருக்கி, பல்கேரியா.	,, 1,740	,,	4½	,,
மொத்தம்	92,760	,,	309	,,

முன்போல மில்லியன் பத்துலட்சம் ரூபாவாலும் நீங்களே கணித்துக்கொள்ளலாம்.

வால் நட்சத்திரம்.—இந்த வருஷம் ஜூலை மாதத்திலே பிரமாண்டமான ஓர் வால்நட்சத்திரம் வானத்தில் தோன்றி, சிலகாலவரையும் சிறிது மங்கலாய்ப் பிரகாசிக்குமாம். அதற்குச் சமாதான நட்சத்திரம் எனப்பெயரிட்டிருக்கிறார்கள். இதைப் போனவருஷம் ஒரு ஜர்மன் வித்வான் கண்டுபிடித்தான். இந்த வானஜோதி, நடக்கும் பெரும்சண்டைக்கும் எதிர்பார்த்திருக்கும் சமாதானத்திற்கும் அடையாளமென எண்ணப்படுகிறது. சிலர் இதை யுகாந்தக்காலத்துக் குறிப்பென்றும் கூறுகிறார்கள்.

ஓர் அதிநூதன வஸ்து.—ஒரு அமெரிக்க வித்வான் மிகவும் அருமையான ஒரு பதார்த்தத்தைக் கண்டுபிடித்திருக்கிறனும். அதை உலகமெங்கும் பிரசித்தம்பண்ணத் தீர்மானித்திருக்கிறன். அது ஒருவித சக்திப் பதார்த்தம். நீராவி, மின்சாரம், பெற்றோல் முதலியனவற்றைப் போன்றதாயினும் அவற்றிலும் 50 மடங்கு அதிக சக்தியுள்ளது. அதனுல் இப்பொழுது கப்பல், ரெயில்வே, மோட்டார்கார் முதலியவற்றை 50 மடங்கு நயமாகவும் அதிக லேசாகவும் விலாவாகவும் ஓட்டலாமென்று எண்ணிருக்கிறனும். இதனுல் மோட்டார்காருக்கு இப்பொழுது மாதம் 100 ரூ. செலவாஞல், இந்தப் புதுப் பதார்த்தத்தினுல் 2 ரூ. செலவே பிடிக்குமாம். கப்பல், டிரெய்ன் முதலியவற்றுக்கு இனி சீமைக்கரி தேவையிராது. இது என்ன பேரதிசயம்!

பப்ளிக் சர்வீஸ் கம்மீஷனர்.—இந்திய உத்தியோக விஷயங்களை விசாரிக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட மெம்பர்கள் தங்கள் ரிப்போர்ட்டை எழுதியிருக்கிறார்கள். அதிலே கண்டிருக்கும் தீர்மானங்கள் அங்கிலேய உத்தியோகஸ்தருக்கு அனுகூலமானவையே தவிர, இந்தியர்களுக்கு அனேகமாய்ப் பிரதிகூலமானவை எனத் தெரியவருகிறது. அதில் ஒரு மெம்பராயிருந்த ஜட்ஜ் அப்துர் ரஹீம் அதற்கு உடன்படாமல் தனக்கென்று வேறொரு தீர்மானம் எழுதியிருக்கிறார். இனி இந்திய பாலியர் இங்கிலாந்து போய்ப் பரீட்சைகொடுத்து சிவில் சர்வீஸ் உத்தியோகம் பார்க்கிறது கூடாதாகிறபடியால் அப்படியே ஏனைய உத்தியோகங்களுக்கும். இதனுல் இந்துதேசம் முழுவதும் ஜனங்களுக்குப் பெருத்த விசனமாயிருக்கிறது. சுய அரசு வேண்டுமென்று கேட்கிறார்கள். துலுக்கர், இந்தியர், கிரிஸ்தவர் முதலிய சமஸ்த ஜனங்களும் இவ்விஷயத்தில் ஒன்றுகூடி யிருக்கிறார்கள்.

கப்பலேறும் கூலிகள்.—கெட்டால், மோரிஸ், பிஜி, பினாங்கு முதலான பிரிட்டிஷ் ஸ்தானங்களுக்கு இத்தேசத்திலிருந்து அனேக கூலிகள் ஆணும் பெண்ணுமாய், ஆயிரக்கணக்கானபேர் வருஷந்தோறும் கப்பலேறிச் செல்லுகிறார்கள். ஆசாமிகள் அவர்களுக்கு அதிகமான கூலி—தினம் ஒன்றுக்கு ஆண்களுக்கு 12 அணுவும் பெண்களுக்கு 9 அணுவுமாக—கொடுக்கப்படும் என்று சொல்லி ஏமாற்றிவிடுகிறார்கள். அங்கே போனுல், இங்கே 3 அணுவுக்குக் கிடைக்கிற அரிசிகூட 12 அணுவுக்கு அகப்படுகிறதில்லையாம். அன்றி, 5 வருஷம் வரைக்கும் சிறு இடங்களிலே பற்பல அசுத்தரோடு கூடிக் கஷ்டஜீவனம் செய்கிறதுமல்லாமல், பெண்பாலாருக்கு யாதொரு பாதகாவலுமின்றி மூன்று நான்கு புருஷரோடு விபசாரஞ் செய்துவர ஏற்பாடு நடக்கிறது. கேள்விமுறை கிடையாது. மேஸ்திரிகள் முதலியோர் செய்கிற அக்கிரமத்துக்கும் கொடுமைக்கும் முடிவில்லை. இந்தக் கப்பலேறுதலே முற்றிலும் நிறுத்திவிட அனேக இந்திய பிரபுக்கள் தேசமெங்கும் கூட்டம் கூடித் தீர்மானஞ் செய்துவருகிறார்கள். அங்கே போய்த் தங்கள் கண்ணுலே கண்டுவந்த பேருவுகாரிகளே இப்பாதகங்களுக்குச் சாட்சி. இதனுல் கிராமவாசிகள் யாவரும் எச்சரிப்படைந்து, உள்ளூர்ப் பச்சை பயிர்களேயும் பரிசுத்த பாதகாப்பையும் விட்டுப் பிரதேசம் போகவேகூடாதெனப் பட்சமாய்க் கோட்டுக்கொள்ளுகிறேம்.

மார்ச்சுமீ பஞ்சாங்கம்.—

வாரம்	மார்ச்சுமீ = மாசி—பங்குனி. ● அமாவாசை, 23உ ⊙ பௌர்ணமி, 8உ					மாசி—பங்குனி.			
ஞாயி	4	11	18	25	...	21	28	5	12
திங்க ...	5	12	19	26	...	22	29	6	13
செவ் ...	6	13	20	27	...	23	30	7	14
புதன்	7	14	21	28	...	24	1	8	15
லியா ...	1	8	15	22	29	18	25	2	9	16
வெள் ...	2	9	16	23	30	19	26	3	10	17
சனி ...	3	10	17	24	31	20	27	4	11	18

Vol. XXX. No. 5.

1-3-17
4

THE WAR

யுத்த வரலாறு

ஜர்மனி இப்பொழுது நூதனமான ஒரு பிரயத்தினம் தொடங்கியிருக்கிறது. சமுத்திரத்திற் செல்லும் சகலமான கப்பல்களையும் — அவையாவருடையவையினும் சரி, எதிரிகளுடையவை மட்டுமல்ல, உலகத்து அரசுகள் சகலத்தின் கப்பல்களையும்—சப்மெரின் என்கிற தனது கடற்கீழ்ப்படகால் சுட்டு அழிக்க தீர்மானித்து அவ்வாறு அழித்தும் வருகிறது. இதனால் அமெரிக்காவுக்கும் தனக்கும் சம்பந்தம் ஒழிந்து, மீளவிலே யுத்தம் நடக்குமென் றெண்ணப்படுகிறது. உலகமுழுவதுக்கும் விரோதமாய்ப் போர்செய்யும் அரசு ஜெயிப்பதெப்படி? எவ்வளவேனும் முடியாது. ஜெயத்துக்குப் பதில் அபஜெயமும் அழிவுமே சம் பவுண்டுமானால், இந்த மொத்தத்தை ரூபாயிலே கணக்குப் பார்த்துக்கொள்ளலாம். அங்கிலேயர் இப்பொழுது 2,000 மில்லியன் பவுண் வைத்துச் செலவுசெய்து, நட்பரசருக்கு உதவிபுரிந்தும் வருகிறார்கள்—இவ்வருஷத்துக்குள்ளே யுத்தம் ஓய்ந்து விடும்.

THE STORY OF RUTH

ரூத்தின் சரிதம்

(தொடர்ச்சி.)

கதை.

123. இவளி னினத்தாரோ—இரண்டொருநாள் போவதிப்பார்கள்
அவமானம் வருமே—அதிகநாள் தங்கிவிட்டால்

கிரீன்லாந்துத் தீவார்.

நேரிடும். ஜர்மனிக்குள்ளதெல்லாம் 200 சப்மெரின்கள். இவற்றை அங்கிலேயக் கப்பற்சேனையார் கடலிலே வேட்டையாடிக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவருகிறார்கள். அன்றி அனேக புதுக்கப்பல்களும் கட்டிவருகிறார்கள். உலகத்தின் வியாபாரத்தை அழிக்கும்பொருட்டே ஜர்மனி இவ்வித பிரதாப்பிரயத்தனஞ் செய்யத் துணிந்துவிட்டது. ஆயினும், ஜர்மனி நிலச்சண்டையிலே மேற்கில் தோற்றுவிடுமென்பதற்குச் சந்தேகமில்லை. நிஜம் தோற்றேவருகிறது. படைகளெல்லாம் ஒடுங்கிவிட்டன. அத்தேசத்தில் பஞ்சம் பறக்கிறது. தங்கள் தோல்விகளை வெளிப்படுத்தாமல், பிரஜைகளை உற்சாகப்படுத்திவருகிறார்கள். வருஷமாதத்தில் கட்டாயசர் பெருத்த ஒரு படையெடுக்க யத்தனிக்கிறார்கள். இந்தப் படையுமற்றியிலே ஜர்மன்கள் தோற்றுவிடுவார்களென அஞ்சுகிறார்கள். அஞ்சித்தான் சப்மெரின் படை தொடுத்துவருகிறார்கள் ஜர்மனி தோற்கும்பட்சத்தில் செலுத்தவேண்டிய நஷ்டம் ஆறுயிரம் மில்லியன் பவுண்டாம். ஒரு பவுண்ட் 15—ரூபாயும், ஒரு மில்லியன் பத்துலட்

124. நாகோமியோ கிழவி—நாள்முழுக்க வேலை செய்யாள்
வேகமே நானெழுத்து-வேலைசெய்ய த்ராணி புண்டு
125. இச்சித்து ரூத்தவளும்—இருமிங்கென் னத்தையரே
பிச்சைக் கதிர்பொறுக்க—போவேன் வயலுக்கென்றாள்
126. அக்காலத் தன்னில்—அறுப்பறுக்கு மூழியர்கள்
திக்கற்றவர் பொறுக்க—திதிப் போவார் கதிரை
127. சிமான் போவாசென்னும்—திரளிய வாலுடைய
பூமியிலே பொறுக்க—போனளே பெண்ணரும்
128. வீடியுங் காலியிலே — வீதவை ரூத்தும் பொறுக்கும்
படிவயல் போனளே—பகராக்கே எங்கவளும்
129. தப்பவிடுங் கதிரை—தான்பொறுக்கிச் சேர்த்தாளே
அப்போது போவாசும்—ஆளுளைப் பார்க்கவந்து
130. அந்தாதி உம்மோடே—அகவா திருப்பாரே
என்றவரை வாழ்த்தி-எதிர்கின்ரு னட்போது
131. நிருமல னும்மையுந்தான்—நித்தமா சீவதிப்பார்
இறைவனே என்றவரும் — எதிர்வாழ்த்து கூறினரே
132. பாக்கியன் போவாசின்—பக்தி தயாளமற்றும்
யோக்கியங்க ளதிலே—ஒழுங்காய் விளங்குதல்லோ
133. நியாயமே நந்தேச—நிலத்வா தினெல்லாம்
ஆயுளைலா மவ்விதம்—ஆகவே செய்வரென்முல்
134. இந்த ஜனங்கள்தம் — இடம்வேலை செய்வரை
நிந்தித் தடிப்பார்கள்—நிசமாக வையகத்தில்
135. வேலைகளைச் செய்துமவர்-வேசாரிப் போகும்படி
கூலிகொடார்க ளேயோ—குறையவர்மேல் கூறுவரே
136. வயலில் பயிரறுத்த — மனிதரின் கூலிகளோ
தியவுள்ள போவாசைத்-தாக்கிச்சத்தம் போடாமல்
137. ஏஜமானைக் கண்டவுடன்—எக்களித்துக் கர்த்தரும்மை
நிஜமாயா சீர்வதிப்பர்—சீணைத்தி லென்றதுவே
138. எஜமானும் போவாசும்—எறெடுத்துப் பார்க்கச்சே
வதிகர முள்ளப்புது — மாதுமுகங் கண்டானே
139. ஆரப்பா மேஸ்திரியே—அங்கொரு பூரிய பெண்ணள்
சீராய்க் கதிர்பொறுக்கி—தித்திரமாய் நிற்கின்ருள்
140. என்றபோ வாள்கேட்க—எதுனைப்பா சூழியரும்
கன்று ரூத்தின்கதையை—கவின்ருர்க ளப்போது
141. மனமிரங்கி போவாசும் — மகளேயின்னும் • பொறுக்கு
தினமும் என்தன்வயலில்-சீராய்ப் பொறுக்கிக்கொள்வாய்
142. மற்றெருவர் வயலில்—மாதேநீ போகாதே
சற்றுமஞ் சாமலிங்கே—தான்வந்து நீபொறுக்கு
143. பெரியோனென் னுழியராம் — பெண்களனேகமுளர்
திரிந்தவ ரோடிருந்து—சீராய்ப் பொறுக்குக் கதிர்
144. ஆதலெங்கிலு முன்னே—அடித்தித் துரத்தாத படி
கூறினே னுழியர்க்கு—குற்றமொன்று மில்லையம்மா
145. வேலைக் காரர்களுக்கு—வைத்திருக்கும் நீரன்னம்
சாலவுமுன்தனுக்கும்—தானுண்டு பக்கற்லே
146. குடித்து நீரன்னமுண்டு—குந்தி யிளைப்டாரம்மா
விடிந்ததும் வந்திடம்மா—மேன்மகளே என்றுரைத்தான்
147. இறையவன் போவாசின் — இன்பமொழி கேட்டவளும்
தரையில் முகம்படவே—தான்விழுந் தான் வணங்கி
148. அந்திய தேசத்தவ—ளாகியே நானிருக்க
என்னே விகாரித்த — இரகசத்தின் காரணமென்?
149. என்றுரைக்க போவாசும் — எண்ணமுடன் வாய்திறந்து
உன்புருஷன் மாண்டதுவும்—உன்னத்தையாருக்குநீ
150. ஊக்கமாய் செய்ததுவும் — உன்தந்தை தாயாரை
நீக்கிஜென்ம தேசம்விட்டே—நீயறியா ஜாதியிடம்
151. வந்து பிழைத்திருந்த—வரலா றெலாங்கேட்டேன்
உன்தன் செய்கைக்குப்பலன் — உண்மையாய் வந்ததுவே
152. இஸ்ரவேலின் தேவன்—இடம்தஞ்ச மாக வந்தாய்
கிலைவுப்போன்ற வுனக்கார் — சீர்தருவா ரொன்றுரைத்தான்
153. போவாஸ் மங்களஞ்சொல்லி—போஜனமுந் தானளித்தான்
போவாய் மீதியைக்கொண்டு—போய்க்கொடத்தை யருக்கென்ருன்
154. அவள் சேர்த்ததானிதுமோ — அன்றதினமெட்டுப்படி
பவனத்திற் கதையெடுத்து — பட்சமுடன் போனளே
155. தானியத்தோடு அவள் — தக்கத்தின் பண்டங்களே
மானினி யுமெடுத்து — மகிழ்வுடனே போனளே
156. போனது மாமிகண்டு—பொங்கி யகமகிழ்ந்து
ஏனம்மா என்றுசேதி—எல்லாம் விசாரித்தாள்
157. அப்போது ரூத்தும்—அன்று பகலின்செய்தி தப்பாமல் சொல்லி—தனதெஜ மானுடைய

(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

கா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

கேள், இவர்கள் நாகபாதாளத்தை விட்டு பூமியின்மீது வசித்தவர்களைச் சூறையாடப் புறப்பட்டவர்கள்; ஓர்காலத்தில் சாட்சாத் கடவுளின் ஆசனத்தண்டை தங்கள் ஆசனங்களைப் போடவும் அவர் பீடத்தண்டையைத் தங்கள் பீடங்களைக் கட்டவும் தணிந்தவர்கள். ஆம் அடிக்கடி அவருடைய பரிசுத்த ஆலயங்களுக்குள்ளேயும் பிரவேசித்து, பரிசுத்த சடங்குகளையும் பண்டிகைகளையும் சகலவித அருவருப்புகளினலும் சபிக்கப்பட்ட வஸ்துக்களினலும் அசுசிப்படுத்தினவர்கள். அவர்களின் அந்தகாரக் கிரியைகளினல் ஒளியின் புத்திரரை அவமானப்படுத்தினவர்கள். இதை அறிந்துகொள்வாயாக.

முதன்மையாக மொலோக் என்பவன் வந்துநின்றனன்: இவன் பயங்கரமான அரசன். நரபலிகளிலோடிவந்த ரத்தத்தினல் தன்னைப் பூசிக்கொண்டவன். அவனைப் பிரியப்படுத்தும்பொருட்டு சிசுக்களை அக்கினியில் பஸ்மமாக்கினர்கள். அச்சிசுக்களின் அழுகுரல் கோரதபடிக்குத் தம்புரு நாகசுர முதலிய மேளவாத்தியங்களே வாசித்தனர். இந்த அவலட்சண விக்கிரகத்தை அம்மொனியர் நமஸ்கரித்தனர். இவனுடைய ஆளுகை ஆர்காப், பேசான் முதலிய இடங்களிலும் அர்னேன் நதிக்கரை போரங்களிலும் விஸ்தீரணமாய்ச் சென்றது. இதில் இவன் திர்ப்தியடையாமல் ஞானம்நிறைந்த சாலொமோனின் இருதயத்தை சற்பனையினல் வசப்படுத்தி அவனுடைய ஆலயத்தை யெகோவாவின் ஆலயத்துக்கு எதிராகக் கட்டினன். மேலும் இன்னும் பள்ளத்தாக்கில் ஒரு தோப்பை உண்டுபண்ணி அதை தோப்பேத்தென்றும் காரிருள்நிறைந்த கிகென்ன என்றும் அழைத்தனன்.—இது நரகத்துக்கு முன்னடையாளமான ஸ்தலமாயிருந்தது.

இரண்டாவது கீமோஸ் என்பவன் வந்து நின்றனன்: இவன் மோவாப் புத்திரரின் அசங்கிதமும் அருவருப்புமாயிருந்ததுமன்றி, ஆரோவேலிலிருந்து நீபோவின் சொடிமுடிகள்மட்டும், அப்பிரிமின் தென்திசை தொடங்கி எஸ்போன், ஆரோனேம் சியோன் தேசத்தின் திராட்சச்செடிகள் நிறைந்த சிம்மாவின் புஷ்பப்பள்ளத்தாக்குமட்டுக்கும், ஏலியலேலிமுதல் சவக்கடல்மட்டுக்கும் யாவருக்கும் பயங்கரத்தை உண்பெண்ணிக்கொண் டிருந்தவன். இஸ்ரவேலர் நீல்நதியைக் கடந்து சித்தீமில் பாளையமிறங்கினபோது அவர்களே வஞ்சித்த காரணத்தினிமித்தம் பேயோர் என்கிற பேரைப் பெற்றவன். அக்கிரமச்சடங்குகளினிமித்தம் தேவன் பற்பல வாதைகளினல் இஸ்ரவேலரை வாதித்தார். இடுதுதலின் ஸ்தலமாகிய மோளோகின் தோப்புமட்டுக்கும் அவனுடைய அதிகாரஞ்சென்றது. ஆடல் பாடல்களும் நரபலிகளும் துராசையை எழுப்புவதற்கேற்ற அருவருப்பும் அசங்கிதமுமான கிருத்தி பக்களும் அவ்விடத்தில் நடந்தேறின. பக்தஞ்ஞிய யோசியா அரசன் இவ்கிரமக்கிரியை செய்தவர்களைத் தூரத்திவிட்டான்.

மூன்ருவது பெயேலீம் அஸ்தரோத் என்பவர்கள் வந்து நின்றனர்: இவர்கள் ஐபிராத் நதிக்கரையோரம் தொடங்கி, எகிப்துதேசத்தை சீரியாவிலிருந்து பிரிக்கும் நதிமட்டாகப் பெயர்போனவர்கள். பெயேலீம் ஆணுக்கும் அஸ்தரோத் பெண்ணுக்கும் பெயராயிருந்ததினல், தேவனும் தேவியுமாக விருந்தனர். ஆலிகள் தங்கள் இஷ்டப்பிரகாரம் ஆண்பெண் ரூபமாக மனுஷர்களுக்குக் காணப்படக்கூடும். மேலும் அவர்களின் தேகங்கள், பொருத்தகள், என்பு, மாமிசமுதலியவற்ருல் சமைக்கப்படவுமில்லை, பலவற்ற அசரீரி வஸ்துக்களாயிருந்தன. தங்களுக்குப் பிரியமான எவ்வித வடிவைப் பூண்டுகொள்ளவும், வீரியவும், கருங்கவும், பிரகாசிக்கவும், மங்கிப்போகவும், ஆகாயமண்டலத்தை எங்கும் ஊடுருவிச்சென்று நன்மையும் தீமையுமான தொழில்களே நிறைவேற்ற வல்லமையுள்ளவர்களாயிருந்தனர்.

இஸ்ரவேலர் கேனைகளின் கர்த்தனுகிய யெகோவாவை விட்டு இத்தேவர்களே வணங்கி, அவருடைய பரிசுத்த பீடத்தை அலட்சியஞ்செய்ததினிமித்தம் அரோசிக்கப்பட்டதக்க சத்துருக்களின் கூட்டியினல் குத்துண்டு தலேழாக விழுந்தனர். அல்தரோத் என்னும் தேவதையை பினிக்கிய தேசத்தார்வான அரசி என்று அழைப்பார்கள். இவளுக்குப் பிறைபோன்ற இரண்டு கொம்புகளுண்டு. இத்தேவதைக்கு ஸ்தானியாக சீதோனின் கன்னிகைகள், சந்திரவெளிச்சத்தில் பிரார்த்தனைகள் பாடி நடனஞ்செய்வார்கள். சீயோனிலும் இவள்பேரில் கவிகட்டினவர்களும் இருந்தனர். பிற்றின்பப்பிரியனுகிய ஓர் அரசன் இவர்களுக்காக ஓர் பீடத்தை மலையின்மீது கட்டினன். அது அக்கிரமஸ்தலமானதுந் தவிர அதிலிருந்த விக்கிரகத்தைச் சேவித்த ஸ்திரீகளால் அவ்வரசன் இருதயம் அசுயாப்ப் போய்விட்டது.

நான்காவது தாழஸ் என்பவன் வந்து நின்றனன்; இவன் அடைந்த பகிரயத்தினிமித்தம், சீதோனின் கன்னிகைகள் வருஷந்தோறும் கூட்டங்கூடி புலம்பி அழுதனர். கோடைகாலத்தில் விசேஷமாய் இவனை நினைத்துப் பாடுபவர்களுமுண்டு. கெவ்புற்ற சந்துடன் சமுத்திரத்துக்கோடின அடோனிஸ்தியின் ஜலம் இவனுடைய காயத்திலிருந்து புறப்பட்ட உதிரத்தினல் அப்படியாயிற்றென்று சொல்லுவார்கள். இந்தக் கட்டுக்கதையைக்கேட்ட சீயோனின் குமாரத்திகளும் பரிதாபத்துடன் ஆலயப்பிராகாரங்களிலே கூக்குரலிட்டு அழுதார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசியானவர் யூதாவின் அக்கிரமக்கிரியைகளைக் கண்ட தரிசனத்தில் இக்காட்சியையும் கண்டதாகச் சொல்லியிருக்கிருர்.

ஐந்தாவது தாகோன் என்பவன் வந்து நின்றனன்: இவன் உத்தம மனஸ்தாபப்பட்டவனைத் தோன்றினன். ஓர்காலத்தில் சிறையாகக் கொண்டுபோன உடம்படிக்கை பெட்டி இவனுடைய விக்கிரகத்தை கொண்டியாக்கி செசையும் கைகளையும் உடைத்துவிட்டதினல், அவ்விக்கிரகம் வாசல்நிலையில் குப்புற விழுந்து கிடந்தது. அதின் உருவம் கடலின் காண்டாமிருகத்தைப்போலவும் மேல்பாதியில் மனுஷவடிவாயும் கீழ்பாதியில் மச்சவடிவாயுமிருந்தது. இந்த அகோர தேவனுக்காக ஆதோத் என்னுமிடத்தில் ஓர் சிறந்த ஆலயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பலஸ்தினுவின் கடற்றரை பட்டணங்களிலும், காத், அஸ்கலோன், அக்கிரோன், காத்சாபட்டணங்களிலும் இவன் பெயர் மிகப் பயங்கரத்துடன் வழங்கப்பட்டது.

ஆருவது ரிம்மோன் என்பவன் வந்து நின்றனன்: இவன் தாகோனைத் தொட்டுக்கொண்டு வந்தான். இவனுடைய வாசஸ்தலம் அழகிய கரியாகிய தமஸ்குவிலும், இவனுடைய ஆலயங்கள் தெளிந்த ஜலம் ஓடின அப்னு, பார்ப்பார் என்னும் வளம் பொருந்திய ஆற்றோரங்களிலும் கட்டப்பட்டிருந்தன. இவனும் தேவனுடைய ஆலயத்துக்கு வீரோதியாயிருந்தான். ஓர் சமயத்தில், குஷ்டரோகியான மனிதனே இழந்து ஓர் அரசனைச் சம்பாதித்தான். அவன் யாரெனில்: மந்தருணமுள்ள ஆகாஸ் என்ற அரசனே! இவன் கர்த்தருடைய ஆலயத்தை அசட்டைசெய்து சூரியனின் வழக்கத்தைப் பின்பற்றி அருவருப்பான பலிகளைச் செலுத்தி பொய்த் தேவர்களே நமஸ்கரிக்க ஏவப்பட்டான்.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 1 anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டியது. பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒரு வருஷத்துக்கு 4 அணு; அவை அணு தபாலுக்கு 10 பிரதிவரையில அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒரு வருஷத்துக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புத்தகம் முதலியன வேண்டுவோர் பிரயாணத்தை தபாதலியுடன் சென்னை மிலோரியல் ஹாலுக்கேதிர C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு தெரிவித்துக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

Registered No. M. 442.

THE REGISTRAR OF BOOKS 12 APR 1917 MADRAS

சத்திய தூதன்.

APRIL, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. ஏப்பிரல்மீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

சீர்திருத்தங்கள்.—கவர்னர் ஜெனரல் சபையிலே 19 மெம்பர்கள் கூடி யுத்தத்தைப் பின்பு அனேக சீர்திருத்தங்கள் உண்டுபண்ணவேண்டுமென்று முக்கிய விண்ணப்பஞ் செய்திருக்கிறார்கள்.

இந்தியாவின் வேதமத்.—இந்திய கவர்ன்மெண்டார் யுத்தச்செலவுக்காக இங்கிலாந்துக்கு 100 மில்லியன் பவுண் அனுப்பத் தீர்மானித்துவிட்டார்கள். பெருந்தொகையாயினும் இது 20 தினயுத்தச்செலவுதான்.

ஓர் இந்து வழர்ர்.—வடக்கே ஒரு பசு கொட்டாயில் கட்டியிருந்தபடியே செத்துப்போனல், அதற்கு உடையவன் அதன் கயிற்றைத் தன் கழுத்திற் கட்டிக்கொண்டு வீடுவீடாகப் போய் மாடு போல் கத்திப் பிச்சையெடுக்க வேண்டுமாம். இது இந்தியாவின் பசு அபிமானத்துக்கோர் சாட்சி.

வாழையின் பிரயோஜனம்.—யூரோப்பிலே வாழையைப் பயிர்செய்யும்பொருட்டுப் பிரமாண்ட பிரயத்தினஞ் செய்துவருகிறார்கள். இந்தப் பழம் மனுஷஜாதியின் சுகத்துக்கும் பலத்துக்கும் எத்தனையோ உபயோகமுள்ளது. இதவும் கோதுமையும் கலந்து சாப்பிட்டால், இதற்கு மிஞ்சிய அமிர்தம் கிடையாது. இத்தேசத்தவர் வாழைப்பழத்தையும், காயையும், மற்றும் அதைச் சேர்ந்த பல பதார்த்தங்களையும் அனேகமாய்ச் சாப்பிடுகிறார்கள்.

மிக்க நேடியவன்.—இங்கிலீஷ் ராணுவத்திற் சேரும்படி வந்த ஆட்களில் ஒருவன் 8 அடி 2 அங்குலம் உயரமுள்ளவனும். அவனை அதிகாரிகள் எடுக்கவில்லை. போர்வீரர் வழக்கமாய் 5½ அல்லது 6 அடி உயரமுள்ளவர்கள். சாதாரண கதவிலே அவன் தலை இடித்துக்கொள்வான். முற்காலத்தில் இதற்கும் உயரமானவர்கள் பூலோகத்திலிருந்ததுண்டு. தற்காலம் எல்லாம் குழிச்சண்டையானமையால் சிறிது குள்ளமானவர்களே தக்க வீரர்களாம்.

போரும் பாவும்.—இத்தேசத்திலே பத்து மாற்றத் தங்கமென்று பொன்னின் நாணயத்தைக் கணிப்பார்கள். அதற்குக் குறைந்த மாற்றுள்ளது அப்பட்டமான பொன்னுகாது: யூரோப்பிலே 24 காரட்டுள்ளதுதான் சுத்த பொன்னும் ஒரு சாவிரன் 22 காரட் கொண்டது. மற்ற இரண்டும் வெள்ளியும் செம்பும் கலந்தது. சலப்பேன் என்றல் உறுதிக்காக. இங்கிலிஷ் நகைகள், கடியாரச் சங்கிலிகள் முதலானவை 18, 15 காரட் உள்ளவை, சுத்தப் பொன்னன்று.

இந்திய சேவை.—இந்தியாவிலிருக்கிற ஒவ்வொரு ஐரோப்பியனும் போர்வீரனாக வேண்டுமென்று கட்டளை பிறந்துவிட்டது; 18–50–க்குட்பட்டவர்கள் யாவரும் இதற்குட்படவேண்டும். அன்றியும் இஷ்டமான இந்தியர்களும் போர்வீராகலாமென்றும் உத்தரவு பிறந்திருக்கிறது. இவர்கள் சுதேசத்திலிருந்து வெளியே அனுப்பப்பட்டார்கள். அதனல் சகல காலேஜிகளிலும், ஸ்கூல்களிலும் வாசிக்கும் மாணக்கர்கள் இந்தப் புதுச் சேனையிற் சேர்ந்துவருகிறார்கள். இம்மாதிரியாய் 10 லட்சம் போர்வீரர் சேர்ந்தால் இந்தியாவுக்கு எத்தனை உபபலமாயிருக்கும்.

பிராமணரோழிந்த ஹிந்துக்கள்.—பிராமணர் மட்டும் கஷ்டப்பட்டு வாசித்து பெரும்பான்மையான உத்தியோகங்களையெல்லாம் அடைந்து சுகித்துவருகிறது சகிக்கமாட்டாமல் மற்ற இந்தியர்கள் ஒன்றுகூடி முயற்சியெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உதாரணமாக, சென்னை ராஜதானியிலே 12 ஆயிரம் பி. ஏ. பட்டம் பெற்றவர்களிலே 9000 பேர் பிராமணர்கள். ஜனத்தொகையிலே அவர்கள் 20 லட்சம்பேர்தான்; மற்ற ஹிந்துக்கள் 350 லட்சம் பேர். என்னபேதம்! தங்களுக்கென்ற "ஜஸ்டிஸ்" அல்லது "நீதி" என்கிற ஒரு தினப்பத்திரிகையும் அச்சிட்டு நடத்திவருகிறார்கள். இம்முயற்சியினுலே பல நற்பயன்கள் லபிக்குமெனக் கோருகிறோம்.

குருடர்ர் ஸ்கூல்.—1911–ம் வருஷத்து ஜனத்தொகையின்படி இத்தேசத்திலே 5 முதல் 15 வயதுப் பிள்ளைகளிலே 41,558 குருடரும், 58,804 ஊமைசெவிடரும் இருக்கிறார்களாம். இவர்களுக்கென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பாடசாலைகளிலே 500 பிள்ளைகள்மாத்திரம் வாசிக்கிறார்கள். இன்னுலே லட்சத்துக் கதிகமானபேர் எழுத்துவாசனை யில்லாமல் இருக்கிறார்கள். இந்த 500 பேரும் மிஷனரிமார் முயற்சியினுலே கல்வியும் கைத்தொழிலும் பயின்றுவருகிறார்கள். குருடர் அவர்களுக்கென்று செய்திருக்கிற ஒருவிதப் புஸ்தகத்தைக் கையால் தடவி வாசிக்கிறார்கள். பாலையங்கோட்டையிலே குருடும் செவிடும் ஊமையுமான ஒரு பிராமணப்பெண் எழுதவும் வாசிக்கவும், தையல் தைக்கவும் மாத்திரமன்றி, டைப்புமெஷின் அடிக்கவும் கற்றுக்கொண்டிருக்கிறாள். கிரிஸ்தவர்கள்தான் இவ்வித நன்முயற்சிக்குக் காரணரென்றறிக. சர்க்கார் இம்மாதிரிப் பாடசாலைகட்கு அதிக உதவிபுரிந்து வருகிறார்கள்.

குரூரக் கோலை.—கல்கத்தாவுக்கடுத்த ஓர் ஊரமத்தில் புருஷனைப் புதிதாய் இழந்த ஓர் ஸைவிதவையும் இரண்டு சிறு பிள்ளைகளும் குடியிருந்தார்கள். அவள் குரு அவளிடஞ் சென்று நீ உன் இரு மக்களையும் கொன்று பதார்த்தஞ் செய்து காமனைவரும் புசித்தால் கடவுளுக்கு மிக்கப் பிரீதி யுண்டாகும். பின்னைகளையும் மறுபடியும் உயிரோடெழுப்பியருள்வார் என்றுபதேசித்து அவள் நெற்றியிலே ஒரு குங்குமப் பொட்டிட்டான். அவள் உடனே இரு மக்களையும் கொன்று சமைத்து அமுது படைத்தாளாம். எல்லாரும் திருப்தியாயுண்டார்களாம். பிறகு அவளுக்குப் புத்தி வந்து, மக்களைத் திரும்பிவரக் காணுமையால் வெகுவாய் அழுது புலம்ப ஆரம்பிக்கவே, இக்கரியம் போலீசார்கையில் அகப்பட்டுக்கொண்டது. பொட்டிடவே அவள் ஸ்மரணைதப்பி, மக்களாசையற்ற

ஏப்பிரல்மீ பஞ்சாங்கம்.—

வாரம்	ஏப்பிரல்மீ = பங்குனி—சித்திரை. ● அமாவாசை, 21உ ⊙ பௌர்ணமி, 7உ					பங்குனி—சித்திரை.				
தாயி ...	1	8	15	22	29	19	26	3	10	17
தீங்க ...	2	9	16	23	30	20	27	4	11	18
செவ் ...	3	10	17	24	..	21	28	5	12	...
புதன் ..	4	11	18	25	...	22	29	6	13	...
வீயா ...	5	12	19	26	...	23	30	7	14	...
வெள் ...	6	13	20	27	..	24	1	8	15	...
சன் ...	7	14	21	28	...	25	2	9	16	.

Vol. XXX. No. 6.

புஸ்தகம் ரூ.o. நே. கூ.

வளானதாகப் போக்குச்சொல்லுகிறாள். அனைவருக்கும் தக்கதண்டனை கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. பெரிய புராணத்தில் இதைப்போல ஒரு கதையுண்டு. இது அதன் பயனா யிருக்குமென்று எண்ணுகிறோம். அவளையும் அக்குருவையும் ஆயுசுமட்டும் கப்பலேற்றிவிட்டார்கள்.

THE WAR

யுத்த வரலாறு

இப்பொழுது ஜர்மனிக் கழுத்தில் கத்திவைத்தாற்போ லிருக்கிறது. மேற்கே தினந்தோறும் தோற்றும், பின்னேடியும் வருகிறார்கள். கிழக்கிலும் தெற்கிலும் அவ்வாறே. மெசொப்பொத்தாமியாவிலே அவர்கள் கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் வியர்த்தமாய்ப்போயின. அத்தேசத்தின் வழியாய் இன்னும் கிழக்கே படையெடுத்து, துருக்கியின் உதவியால் இந்தியாவைச் ஜெயிக்கவும், இருப்புப்பாதை போடவும் ஆரம்பித்தவர்கள் இப்பொழுது முற்றிலும் தோற்றுப் பித்தர்போல விழிக்கிறார்கள். பாக்டாட் என்னும் முக்கியமான நகரம் பிடிக்கப்பட்டது. இந்தியாவிலே அவர்கள் அனேகரைக் கலகத் தெழுப்பும்படி வெகு பிரயாசை யெடுத்ததாக அவர்களெழுதிய கடிதங்களால் வெளிப்படுகிறது. இதுவே பங்காளத்தில் இதுவரையும் நடந்துவருகிற கொலைபாதகங்களுக்கும் மற்றும் கொள்ளைகளுக்கும், மருந்துக் கிடங்குகளுக்கும் காரணம். ஜர்மன்கள் அமெரிக்காவின் மூலமாய் வேண்டின பொய்ச்சமாதானத்துக்கு நட்பரசர் இணங்கமாட்டோமென விடையளித்து விட்டார்கள். இதனால் அவர்கள் கோபமுற்றுப் பழிவாங்கத் தீர்மானித்து, சப்மெரின் சண்டையைச் சில காலமாக ஆரம்பித்தும், கப்பல்களைச் சுட்டமிழ்த்தியும், நூற்றுக்கொன்று வீதந்தான் நாசமாயிற்று. இது ஆற்றிற்கரைத்த புளிபோல. ஆயிரமான புதுக் கப்பல்களைக் கட்டிவருகிறது மாத்திரமல்ல, ஒவ்வொரு கப்பலிலும் பீரங்கி முதலிய ஆயுதங்களை வைத்தனுப்புகிறார்கள். பிரயாணிகளும் எப்போதும் போல யாத்திரை செய்கிறார்கள். அமெரிக்காவுக்கு விரோதமாக, மெக்சிக்கோவிலும் கலகங்கள் தூண்டிவிட்டார்கள். உவில்சன் அதிபதியைக் கொல்லும்படி ஏற்பாடுசெய்து, ஒருவனிடத்தில் பாம் என்கிற பாணங்கள் வைத்திருந்தார்கள். அவன் பிடிக்கப்பட்டுக் கைதியாய்க் கிடக்கிறான். உறைமழையாலும் அதிகுளிர்ச்சியாலும் யுத்தம் அத்தனை அகோரமாய் நடக்காவிடினும், இம்மாதந்தொடங்கி பெரும் படைகள் மேற்கிலும் கிழக்கிலும் ஜர்மனியின்பேரில் தாக்குவது நிஜம். ஜர்மன் சேனைகள் தொகையிற் குறைந்துவிட்டது மாத்திரமன்றி, சக்தி வைராக்கியத்திலும் சிதைந்து கிடக்கிறார்கள். அவர்கள் மந்திரி வீரதீரமாய்ப் பிதற்றினாலும், உள்ளுக்குள்ளே நடுக்கமுற்றிருக்கிறான். தன் நாட்டில் பஞ்சம் மிஞ்சிவிட்டது. அங்கங்கே கலகங்கள் உண்டாகின்றன. இங்கிலாந்திலும் ஏற்றுமதிகள் அதிகமாய்க் குறைக்கப்பட்டன. ஆகிலும் பக்தர் யாவரும் யுத்தம் விரைவில் ஓயவேண்டுமென்றே கடவுளைப் பிரார்த்தித்து வருகிறார்கள்.

இதுநிற்க, ருஷியாவிலே ஒரு பெரிய மாறுதல் திடீரென உண்டாகிவிட்டது. சக்ரவர்த்தியை நீக்கிவிட்டு, பிரஜைகளே ராஜ்ய பரிபாலனத்தை ஒப்புக்கொண்டு, யுத்தத்தை இன்னுமதிக வைராக்கியமாக நடத்தத் தீர்மானித்துவிட்டார்கள். எங்கும் தனிகாலத்தில் ஜனங்கள்தான் முக்கியமாயெழும்பி அதிகாரஞ்செலுத்த ஏற்பட்டிருக்கிறார்கள்.



தீபெத்தில் ஒரு தானிய வீடு.

THE STORY OF RUTH

ரூத்தின் சரிதம்

(தொடர்ச்சி.)

கதை.

158. நாமம் போவாசென்றாள் — நாகோமி யப்போது
நேமியில் பிழைப்போர்க்கும் — நெடுந்துயிலானவர்க்கும்
159. தயைசெய்யு மாண்டவரால்—தானுசிடைப் பெறுவான்
அயலல்ல அவனம்மை—ஆதரிக்கும் பந்துக்களில்
160. அவனு மொருவனம்மா — ஆண்டவர் நமக்கிரங்கி
அவதியில் கைகொடுத்தார் — அவருக்கு ஸ்தோத்திரமே
161. பரிவுள்ள போவாஸ்தன்—பந்துவென்ப தாய் ரூத்தும்
அறிந்தன ளப்போதான்—ஆனதென்னக் கேளுங்கள்
162. அங்ஙனம்போவாசின்—ஆசைப்படிக்கே ரூத்
மங்கை யவனுடைய—வயல்வேலை யாட்களொடு
163. சேர்ந்து அறுப்பறுத்து—சேகரித்தாள் கதிரை
வாழ்ந்தாள் சில்நாளாய்—வயலறுத்துத் தீருமட்டும்
164. இப்படியே ரூத்தின்—இடமிருந்த தாழ்மைக் குணம்
செப்ப அரியதென்று — தெரியுதல்லோ நன்றாக
165. ஊழியம் அற்பமென்று—உண்மைக்குணங் காட்டாத
ஏழைக ளானவர்க்கு—இதுநல்ல சித்திரமே
166. தையலரே உம்மை — தாழ்மைக்குணந் தானுயர்த்தி
வையத்தில் காக்கும்—வகையென் றுணர்வீரே
167. இங்கு மோவாபியர்நாம்-இஸ்ரவேல் பெண்களொடு
தங்கியே பிச்சைக்கதிர் — தானெடுத்தா ளென்னஎண்ணார்
168. நமது கவுரதையை—நாம்விடலாமோ எனவே
சமயமிதி லவளும்—சற்றும் எண்ணாதிருந்தாள்
169. மாமிமேலே யிருந்த—மகத்தான அன்பவளை
க்ஷேமத்துடன் காக்க—தேடினதே யீனதொழில்

170. இறுமாப் பானகுணம்—இருக்குமோ அன்புக்கு?
உறுதியாகப் பவுலும்—உரைத்தாரே இல்லையென்று
171. இந்து மருகிகளே —இசைக்கின்றே னுங்கள் புத்தி
ஏன்மாமி கால்நீட்டி—இஷ்டமுட னுட்கார
172. நானேன் கஷ்டப்பட்டு-நாள்கழிக்க வேண்டுமென்பீர்
மானினி ரூத்தீண்டு — மனதிலு மெண்ணவில்லை
173. ஏதுமொரு பொறாமை — என்றுமவ ளுக்கில்லை
மேதினியி லன்புக்கு — போட்டிமை பொறாமை இல்லை.
174. இஸ்ரவே லாண்டவனை—என்றும் நம்பினவர்க்கு
நிசமாகக் கஷ்டமொன்றும்-நீணிலத்தி லவதில்லை
175. பட்டினி யாயிருக்கும் — பாரில் பலத்த சிங்கக்
குட்டிகளா னாலும்-கொஞ்சம் கவனியுங்கள்
176. கர்த்தரின் பிள்ளைகட்குக்-கஷ்டமொன்றும் வாராது
சத்திய வேதமீண்டு — தானே மொழியு மெய்யே
177. நாகோமி பெத்லேயாம்-நகர்வந்த காலமுதல்
யூகியாம் ரூத்தையொரு—உத்தம சமுசாரி
178. ஆக்கவேண்டு மெனவே -ஆசைகொண்டே யிருந்தாள்
யோக்கியன் போவாசும்-ஒண்டியாக இருந்தான்
179. ஆகையினாலே ரூத்தை — அந்தச்செல்வன் போவாஸ்வி
வாகஞ்செய் திடமெத்த — வாகுவழி தேடினளே
180. போவாசோ ரூத்தினுட-போந்தநற் குணங்கள்கண்டு
ஆவல்கொண் டவளைமன — மாக விரும்பினனே
181. புகழ்பெற்ற ரூத்துக்கோ — போவாசைக் காட்டிலுமோர்
மிகநெருங் கியபந்து—மத்திரனு மிருந்தான்
182. அவன் விவாகஞ்செய்ய—ஆகாதென உரைத்தால்
தவறாமல் ரூத்தைநான்—தாலிகட்டிக் கொள்வேனென்றான்
183. மடந்தை ரூத்தையவன்—மணம் புரியாமல்
விடுவேனென்று சொல்லி—விட்டுவிட்டானப்போதே
184. போவாசதை யறிந்து — பொங்கிபல ஊர்களுக்கு
ஆவலுடன் மணவோலை — அதைஎழுதி விட்டானே
185. எல்லாருங் கூடினார்கள்—எக்களிப் படைந்தார்கள்
நல்லநல்ல வாத்தியங்கள்—நயப்புடன் செய்தார்கள்
186. ஞானம் நிறைந்தபல-நல்லோர் சபைநடுவே
வானபரனை எண்ணி — மாதை மணம்புரிந்தான்
187. போனகம் ஏழைகட்கு—போந்த படியளித்தான்
தீன ரூத்திப்போது—சிறப்பாகத் தோன்றுகிறாள்
188. சமுசாரி யாயிருந்தாள்—தான்விதவை யான பின்பு
அமல னருளினால்—ஆனாளே ஜமாட்டி

(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

ஏழாவது ஆசிரிஸ், ஐசிஸ், ஓரிஸ் என்பவர்கள் வந்து நின்றனர்: இவர்கள் பூர்வீகத்தாருக்குள் கீர்த்தி பிரதாபமடைந்தவர்கள். அவலட்சண வடிவையுடையவர்கள். சூனிய வித்தைகளினால் எகிப்தின் பூசாரிகளையும் ஜனங்களையும் மதிகெடச் செய்தவர்கள். தங்கள் விக்கிரகங்களை மனுஷர் வடிவாகவல்ல மிருகவடிவாகச் செய்து வணங்கச் சொன்னவர்கள். இவர்களால் இஸ்ரவேலர் ஓர் சமயத்தில் கொள்ளை நோயால் வாதிக்கப்பட்டனர். ஏனென்றால் எகிப்தில் இரவலாக வாங்கின நகைநட்டுகளை அழித்து ஓரேபில் ஓர் கன்றுக்குட்டியை வார்ப்பித்து வணங்கினர். மேலும் கலகஞ்செய்த அரசனாகிய எரொபெயாம் தாணிலும் பெத்தேலிலும் இரண்டு கன்றுக்குட்டிகளை வார்ப்பித்து வைத்து, சிருட்டிகரை புல் தின்கிற எருதுகளுக்குச் சமமாக்கினான். யெகோவாவின் தூதன் எகிப்தின் தெருவீதிகளிற் சென்று தலைச்சன்பிள்ளைகளையும் மிருகங்களின் முதல் ஈற்றுகளையும் சமூலமாய் வெட்டி நாசஞ் செய்தான்.

எட்டாவது பேலியாள் என்பவன் வந்து நின்றனன்: வானத்திலிருந்து விழுந்த ஆவிகளில் இவனைவிட அசுத்தமான ஆவிகள் ஒன்றுமில்லை. தீமையை தீமைக்கென்றே நேசித்தவர்களில் இவனுக்குச் சமமானவர்கள் ஒருவருமில்லை. இவனுக்கென்று ஓர் ஆலயமும் சமர்ப்பிக்கப்படவுமில்லை. சாம்பிராணி தூபவர்க்கம் எங்கும் காட்டப்படவுமில்லை. ஆயினும் பூசாரிகள் நாஸ்திகராய்த் திரும்பினதையும், ஏலியின் புத்திரரைப்போல் கொடுமையினாலும் துர்இச்சைகளினாலும் நிறைந்து, அவபக்தியுடன் நடந்ததையும் கவனித்துப் பார்க்கும்போது கர்த்தருடைய ஆலயங்களிலும் இவன் அரசாட்சி செய்தவனென்று தோன்றுகிறது. அரசர் மாளிகைகளிலும் மிச்சமாய் அரசாண்டான். கூத்துகள் ஆடல் பாடல்கள் அதிகமாய் நடந்தன. ரத்தஞ் சிந்துதல் பழிகாரணங்கள் நடந்த பட்டணங்களிலும் ஆளுகை செய்தான். அப்பட்டணங்களில் ராக்காலங்களில் திராட்சரசம் குடித்து வெறிகொண்டவர்கள் அலைந்து திரிவார்கள். சோதோமிலும் கிபெயாவிலும் விபசாரம், வேசித்தனம் முதலிய துஷ்கிருத்தியங்களைச் செய்தாவது, வழிப்போக்கரைக் காப்பாற்ற கதவுகளை மூடினதே அதற்குப் போந்த சாட்சியாயிருக்கிறது.

இவர்கள்தான் அந்தஸ்திலும் ஒழுங்கிலும் முதன்மையானவர்கள்; மற்றவர்களை விவரித்துச் சொல்ல காலம் போதாது. யாவான் வம்சத்தில் பிறந்து தேவர்களென் றழைக்கப்பட்டவர்கள் வானமும் பூமியும் தங்கள் தாய்தந்தைகளென்று பெருமை பாராட்டினர். வானத்தின் சிரேஷ்ட புத்திரனென் றழைக்கப்பட்ட தித்தான், தன் வம்சத்தாருடனேயும், முதற்பிறப்பின் சுதந்தரத்துடனேயும் சாற்றர்ண் என்பவனால் வஞ்சிக்கப்பட்டான். சாற்றர்ண் என்பவனும் ஓர் காலத்தில் பலத்ததேவனாகிய யூப்பித்தர் என்பவனால் வஞ்சிக்கப்பட்டான். ஆதலின் கிரேக்கரின் பெரிய தேவனும் வஞ்சனைக்காரனென்று விளங்குகிறது. இவர்கள் கிரேத்தா தீவிலும், இதோ விலும், பிற்பாடு ஒலிம்பாவிலும், டோரிக்தேசத்திலும் இன்னும் தொலைதூரமான விடங்களிலும் பிரபல்லியத்தை அடைந்தவர்களாயிருந்தனர்.

9. விருதுகாட்டின படலம்.

இவர்களும் இன்னும் எண்ணிறந்த தூதர்களும் கூட்டங்கூட்டமாய் வந்து நின்றனர். அவர்கள் தலை கவிழ்ந்தவர்களாயும் சோர்புற்ற முகங்களையுடையவர்களாயு மிருந்தனர். ஆயினும் அவர்கள் தங்கள் தளகர்த்தனாகிய வேதாளம் நம்பிக்கையற்றவனாய்ப் போகாதிருப்பதைக் கண்டதினால் சற்றே சந்தோஷப்படுகிறவர்களைப்போல் காணப்பட்டனர். அழிவின் பள்ளத்தாக்கிலிருந்தும் தங்களை அழியாதவர்களென்று எண்ணிக்கொண்டனர். வேதாளத்தின் முகபிம்பமோ சந்தேகக் குறிகளை யுடையதுபோலவிருந்தது. அப்படியிருந்தும் அகங்காரம் கெர்வம் முதலிய குணங்கள் அவனை ஏவ அச்சேனைபதிகளின் தைரியம் குறைந்து போகாதபடிக்கு உரத்த சப்தத்துடன் அவர்களோடு பேசுகிறான். அவன் பேசின வார்த்தைகள் கேட்பதற்கு கெம்பீரமாயிருந்ததேயன்றி யாதொரு பொருளுமில்லாதவைகளாயிருந்தன. அத்தூதச்சேனைகளின் பயங்கரத்தை ஒருவாறு நீக்கினான். உடனே எக்காள வாத்தியங்கள் சப்திக்கவும் யுத்தக்கொடிகளை ஆகாயத்தில் விரிக்கவும் கட்டளையிட்டான். அவ்வாறே வாத்தியங்கள் சப்திக்கத் துவக்கினபோது உயர்ந்த புஜங்களையுடையவனும் வீரனுமான சேராபீனாகிய ஆசசேல் என்பவன், இந்த கனம் மற்றவர்களுக்குரியதல்ல; எனக்கே உரியதென்று பளபளப்பான அணிவகுப்புகளிலிருந்து துரிதமாய் ஓடிவந்து யுத்தக்கொடியை வெகுதூரம் பறந்துகொண்டிருக்கும்படி விரித்தான். இந்த ராஜகொடியானது ஆகாயத்தில் அவாந்தரமாய் நிற்கும் ஓர் பெரிய கிரகத்தைப்போல் துலாம்பரமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்தது. முத்துக்களினாலும் பொன்மயமான எழுத்துக்களினாலும் கேருபீன் சேராபீன்களின் ஆயுதவலங்காரத்தாலும் ஜோடிக்கப்பட்டதாய்க் காணப்பட்டது. எக்காளத்தொனி முழங்கிக்கொண்டே யிருந்தது. இத்தொனியைக் கேட்ட சேனைசமுத்திரம் பெரிய ஆரவாரத்துடன் ஆர்ப்பரித்தது. இப்பெரிய ஆர்ப்பரிப்பு நரகத்தின் மேற்கூரையை இரண்டாக வெடிக்கச் செய்ததுபோல விருந்ததுமன்றி, நரகத்தைச் சூழ்ந்திருந்த காரிருள்நிறைந்த ராஜ்யங்களையும் கிடுகிடுவென்று நடுங்கச் செய்ததுபோலவிருந்தது.

10. அணிவகுத்துநின்ற படலம்.

ஓர் இமைப்பொழுதில் இருளும் அந்தகாரமும் நிறைந்த அந்தப் பாழுலகத்தில் ஆயிரம் பதினாயிரங் கொடிகள், பல வர்ணங்கள் தீரப்பட்டனவாயும் விநோத விசித்திர அலங்காரம் பொருந்தினவைகளாயும் காணப்பட்டன. ஈட்டிகளினாலாகிய ஓர் அடர்த்தியான காடும் எழும்பிற்று. கணக்கிடக்கூடாத தலைச்சீராக்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன. அளவிடக்கூடாத ஆழமும் அகன்றதுமான கோடாகோடி கேடயங்களும் அநர்த்தம்பண்ணும் பாணங்களும் அஸ்திரங்களும் காணப்பட்டன. பூர்வீகயுத்தவீரர் ரணக்களத்துக்கு வாத்தியங்களின்தொனியைக் கேட்டு வீரியமாய்ச் சென்றதுபோல இந்த ஆவிகள் அணிவகுத்துத் தங்கள் புஜபல பராக்கிரமத்தின்மேல் போந்த நம்பிக்கையுடையவர்களாய் அபஜெயம், மரணதண்டனை இவைகளுக்கு எவ்வளவேனும் அஞ்சாமல் சகலவிதமான கலகங்கள், சந்தேகங்கள் திகில்கள் முதலியவைகளைத் தங்கள் மனதிலிருந்து அப்புறப்படுத்தினவர்களாய் வீரதீரத்துடன் கெம்பீரித்துச் சென்றனர். மேலும் ஒருவரோடொருவர் ஐக்கப்பட்டவர்களாயும் ஒரே சரீரமாக இணைக்கப்பட்டவர்களாயு மிருந்தனர். மிகுந்த அமைதலுடன் எரிபந்தமும் அக்கினித்தழல்களும் நிறைந்த தரையின்மீது நடந்தனர். ஊதுகுழல்களின் சப்தத்தைக்கேட்டுத் தங்கள் வருத்தங்களை மறந்தவர்களைப்போல் காணப்பட்டனர். வேதாளத்துக்கு எதிரே வந்து நின்றனர். நிச்சயமாகவே, பயங்கர சகிதமான இராணுவங்களாயிருந்தன.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஹீனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna Postage Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷத்துக் கையோப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஐந்தாக்கு 4 அணு; அதை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஐந்தாக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலிய வேண்டுகோள் சமயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல் ஹாஸ்பிடேஜ் C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

சத்திய தூதன.

MAY, 1917. PRICE, 1 PIE.—விலை, 1 பை. மேமீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

செக்ஸோஸ்லத்தி. — இந்தியாவின் ஏழு மாகாணங்களிலே நிரபியவிஷயத்திலே சென்னை ஐந்தாவது, இது நமக்குச் சிறப்பன்ற.

மகம்மதிய கலெக்டர்கள்.—கான் பாஹதூர் ஷேகமதன் சாய்பு சென்னைக்குக் கலெக்டராகவும், உல்மான் சாய்பு வடஆர்காட்டுச் சித்தூர்க் கலெக்டராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னைக்கு இந்தியர் கலெக்டரானது இதுதான் முதல்தடவை. இவ்விதமாக கவர்ன்மெண்டார் இந்தியர்களே உயர்பதவிக்குக் கொண்டுவருவது மிக்க தர்மமென்றே சொல்லவேண்டும்.

இந்தியா இங்கிலாந்துக்களித்தது. — போர் வீரரும் பொதுவான நிரபியங்கள் மாத்திரமல்ல, நூறு மில்லியன் பவுண்மாம். இது 20 காள் யுத்தச்செலவுத்தான் ஆனும், பெருந்தொகையே. இதை நிவித்திக்கும்பொருட்டு இறக்குமதி தானிகளுக்கு வரியும், அலைட்சத்துக் கதிகமான வருமானங்கட்கு வரியும், வேறு சில வரிகளும் போட்டிருக்கிறார்கள்.

கப்பலேறுங் கூலிகள்.—இந்தியா வருஷத்துக்கென்று ஒப்பந்தஞ் செய்துகொண்டு மோரீஸ், கொழும்பு, பினாங்கு, பீஜி முதலிய அந்நிய தேசங்களுக்குச் சென்று கொமை அதபவிக்கிற கூலிகளைக் காப்பாற்றவேண்டுமென்று முன்பு சொன்னோமே. இப்பொழுது இந்திய கவர்ன்மெண்டார் இவ்வியாயத்தை நிறுத்திவிட்டார்கள். இனி இம்மாதிரிக் கூலிகள் இத்தேசத்திலிருந்து கப்பலேற்றப்படமாட்டார்கள். சுயேச்சையாய்ப் போகிறதற்கு யாதொரு தடையுமில்லையாயினும், இத்தேசத்திலும் புதிதாய்ப் போரிலே ஜயித்திருக்கிற மெசொப்பொத்தாமியாமுதலிய காகெனிலும் அகேகயிரமான கூலிகள் அத்நியாவசியமாயிருக்கிறது.

இந்திய சேனை.—அதாவது பட்டாளங்களைப் போன்றதன்று. இந்தச் சேனை இத்தேசமெங்கும் பூர்வத்தொட்டு கடந்தேறி வருகிறது. இப்போது சேர்க்கப்படுகிற சேனை சுயேச்சைச் சைனியம் அல்லது வாலண்டியர் கார்ட். அதென்னவெனில் மாணக்கர், உத்தியோகஸ்தர் முதலானவர்களில் 18—முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் ஏழு இந்திய மாகாணங்களிலே ஒவ்வொன்றுக்கு 1200 வீதமாகச் சேர்ந்து பாத்துமுதலிய கற்றுக் கொண்டு 3 மாதமானபிறகு நத்தம் ஊர் உத்தியோகங்கட்குச் சென்று, சண்டைக்கு ஆசாயிருக்கவேண்டும். இதிலே பலவந்தம் ஒன்றுமிடையாது. இஷ்டமான பாலியர் தங்கள் பேர் விவரங்களே யெழுதிக்கொடுத்து, டாக்டரானபின்பு, குறிக்கப்பட்ட சென்னை, கல்கத்தா, பங்களூர், புனு முதலிய இடங்களில் மூன்றுமாதம் பயிற்சி பெறவேண்டும். இந்த ஏற்பாட்டினலே, இத்தேசத்திலே ஒரு லட்சம்பேர் சேர்ந்த ஒரு நல்ல சேனை உண்டாயிருக்கும். மூன்றுமாதம் பயிற்சி பெறுகையில் உணவு, உடை ஆயுதங்களும் 11 ரூ. உபகாரச் சம்பளமும் கிடைக்கும். அனேக இந்திய வாலிபர் இச்சேனையிற் சேர்ந்து, போர்வீர ராவரெனக் கோருகின்றேம்.

பத்சமர்க் கல்வி —இத்தேசத்தில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வகுப்பினரைச் சேராத 60 லட்சம் ஜனத்தைப் பஞ்சமரென்கிறது வழக்கம். இவர்களிற்றாம் இத்தேசத்துப் பூர்வ குடிகளும் அதற்குச் சொந்தமானவர்களுமாம். மேற்படி ஜாதிகளிலிருந்து குற்றங்குறைவினலே தள்ளுண்டவர்களும் இத்தப் பஞ்சமரிற் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களோதான் மற்ற இந்தியர் பறையரென்றும், புலையர் சமரென்றும், பீல், மஹாரென்றும் பலவாறு பழைத்துவருகிறார்கள். இவர்களுடைய சொற்ப கல்விக்காகத் தற்காலம் அங்கங்கே தகுந்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் மிக்க உபயோகமான தொழிலாளிகளாயினும், இவர்களுக்குச் சுத்தமே கிடையாது. அன்றி, செத்தக்கிடக்கிற மிருகஜீவன்களின் இறைச்சியை ஆவலாய்த் தின்பார்கள். இக்கத் காரணங்களினலேதான் எனைய ஜாதிகள் இவர்களைத் தீண்டுகிறதில்லை. ஆனல், இனி இவர்களுக்கு, கண்ணெனத்தகும் எண்ணும் எழுத்தும் கிடைத்தால், நாகரீகமடைந்து, சுத்த ஜீவியஞ் செய்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இவர்கள் விகிதம் ஒவ்வொரு சேரியிலும் பாடசாலைகள் ஸ்தாபிக்கும்படி அனேக தேசாபிமானிகள் முயற்சியெடுத்து வருகிறார்கள். கட லூரில் பஞ்சமருக்கென்ற ஒரு பள்ளிக்கூடம் உண்டாயிருக்கிறது.

ஜப்பான் சாம்ராஜ்யம். — ஆசியா கண்டத்திலே இதுதான் நிலைமையான ராஜ்யம். இங்கிய ராஜ்யத்தில் அதிக ஜனமிருந்தாலும், இது அடிமைராஜ்யம், ஏகதேசம் அங்கியரின் ஆளுகைக்குட்பட்டது. ஜப்பான் சுய அரசு. இதுவே அதன் அற்புத வித்திக்குக் காரணம். இவ்வகை காலயிர் நிலை கூடியதாயினும், முக்கியமான நிலன் மூன்றே. அவை, நோண்டேது, விக்கோர், இயொஷிடு என்பவை. மொத்த ஜனத்தொகை 7 கோடி 2 லட்சம். பூர்வ குடிகளில் 20,000 பேர்தான் ஜீவித்திருக்கிறார்கள். சீதோஷ்ணங்கள் இத்தேசத்தை விட சோர்த்தியானவை. கல்வி மழையுண்டு. அகேக மலைகளிருந்தாலும், பெரிய நதிகள் இடையா. அனேக எரிமலைகளுண்டு. காய்கனிகள், பழவர்க்கன், மிருகஜீவன்கள் ஏராளமானவை. கூட்டிவரு மானமட்டும் வருஷத்துக்கு 5 கோடி பௌர். இத் தேசத்திற்போலவே பயிர்த்தொழிலே குடிகளின் முக்கிய ஜீவனுபாயம். சோர்த்தியான கைத்தொழில்களுண்டு. ஜாதி வித்தியாசமே கிடையாது. பெண் கல்வி விசேஷம். அனேகப்பேர் அமெரிக்காவுக்குச் சென்று கல்வித்தேர்ச்சி அடைந்துவருகிறார்கள். கிரிஸ்துமார்க்கம் அதிக விர்த்தியடைந்திருக்கிறது. ஆனல் அங்கே வந்திப்திருக்கிற ஸ்வைகள் சுத்த சுயாதீனமானவை. ஜப்பான் தீவுகளில் (அதன்பேர் டோக்கியோ) 2 கோடி 19 லட்சம் குடிகளுண்டு. அது உலகத்தின் ஐந்தாம் பட்டணம்.

மேமீ பஞ்சாங்கம்—

வாரம்.	மேமீ = சித்திரை—வைகாசி. ● அமாவாசை, 21உ. ⊙ பௌர்ணமி, 7உ.						சித்திரை—வைகாசி.						
ஞாயி...	....	6	13	20	27	...	24	31	7	14			
திங்க...	....	7	14	21	28	..	25	1	8	15			
செவ்...	1	8	15	22	29	19	26	2	9	16			
புதன்...	2	9	16	23	30	20	27	3	10	17			
லியா...	3	10	17	24	31	21	28	4	11	18			
வெள்...	4	11	18	25	...	22	29	5	12	...			
சனி ...	5	12	19	26	...	23	30	6	13	...			

Vol. XXX. No. 7.

28-4-17

ணம். சென்னையிலே 6 லட்சம்கூடக் கிடையாது. கல்விப்பயிற்சி எல்லாருக்குமுண்டு. ஆண்கள் 5 வருஷமும், பெண்கள் 4 வருஷமும் பாடசாலைக்குப் போவது கட்டாயம். இத்தேசத்தில் அப்படிப்பட்ட சட்டம் கிடையாது. ஜப்பான் பாஷைமட்டும் பெருங்குறையுள்ளது. அது சீனாப்போல அட்சரங்களுக்குப் பதில் எண்ணாயிரம் சித்திரங்களை உபயோகிக்கிறது; இவற்றைக் கற்றுக்கொள்ள எத்தனையோ வருஷங்கள் செல்லுகின்றன. வெகு சீக்கிரத்திலே தகுதியான எழுத்துக்கள் உண்டுபண்ணிக்கொள்வார்கள். ஐம்பது வருஷத்திற்கு முன்பு இத்தேசம் நாகரீகமற்ற நாடாயிருந்தது.

THE WAR

யுத்த வரலாறு

ஐரோப்பிலே இப்பொழுது ஆரம்பித்திருக்கிற ஸ்பிரிங்கென்னும் குளிர்காலத்தோடு உறைமழை நீங்கி உஷ்ணமுதிக்கிற காரணத்தால், நட்பரசர்கள் யுத்தத்தை மும்முரமாய்த் தொடங்கி தினந்தோறும் எதிரிச்சேனையைப் பின்னுக்குத் துரத்தியும், தோல்வித்தும், பிடித்தும், கொள்ளையடித்துமே வருகிறார்கள். பெல்ஜியம் எல்லைக்கு அணுகிவிட்டார்கள். தற்காலம் இந்நாடு ஜர்மனியின் கையிலகப்பட்டிருக்கிறது யாவருக்கும் தெரிந்தகாரியம். இந்தப் பத்திரிகை உங்கள் கையிற் கிடைக்கும் முன்பு பெல்ஜியத்துக்குள்ளே அங்கிலேயரும் பிரான்சியரும் நுழைந்துவிடுவார்கள். ரஷியாவில் சக்கரவர்த்தி யரசுபோய், ஜனவரசு ஏற்பட்டதை முன்னே அறிவித்தோமே. யாதொரு உதிரச்சேதமின்றி இப்பெருமாறுதல் உண்டானதே அற்புதம். இனி ரஷியர்கள் அதிவைராக்கியமாய்ப் போர் புரிந்து வருகிறார்கள். கிழக்கிலே அங்கிலேயரோடு கூடி துருக்கியரைத் துரத்திக்கொண்டு போகிறார்கள். மெசொப்பொத்தாமியா இனி இந்தியாவைச் சேர்ந்தது. இந்திய சேனைகளைக்கொண்டுதான் அது ஜயிக்கப்பட்டது. இனி லண்டனிலிருந்து இந்தியாவுக்கு ரெயில்வேபோட ஆரம்பிப்பார்கள்.

இதுநிற்க, அமெரிக்கரும் ஜர்மனிக்கு விரோதமாக யுத்தம் ஆரம்பித்துவிட்டார்கள். இது ஜர்மனிக்குப் போராபத்தும், முழுத்தோல்விக்கு அறிகுறியுமாம். அமெரிக்கர் நட்பரசருக்கு ஆயிரமில்லியன் பவுண்ட் திரவிய சகாயமும், 20 லட்சம் சேனையும், ஆயிரம் புதுக்கப்பல்களும், ஏராளமான பீரங்கி, துபாக்கி குண்மெருந்து முதலியவைகளும் அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டார்கள். கடவுளும் சகிக்கமாட்டாத ஜர்மன் அக்கிரமத்தைப் பூவரசர் சகிக்கமுடியுமா? அமெரிக்கர்மாத்திரமல்ல, பிரசிலும், பானமாவும், கூபாவும், ஸ்பெயினும், இன்னும் பல சிற்றரசரும் நமது நட்பரசரைச் சேர்ந்துகொண்டார்கள். பூர்வத்திலே, பாண்டவர்கட்கும் துரியோதனாதியர்க்கும் நடந்ததுபோலவே, இப்பொழுது நாகரீகமடைந்திருக்கிற பூலோகமெங்கும் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் என்றும் நடவாத கொடிய சச்சரவுண்டாயிருக்கிறது. இனி ஒருக்காலும் உலகத்திலே எப்படிப்பட்ட யுத்தமும் நடவாவண்ணம், அதர்மர் அனைவரும் முற்றுமுடியத் தோல்வியுறுவார்கள். ஜர்மன் கைசர் மகன் ஒருத்தன் ஆகாயத்தில் மாண்டான். அவர் பிரஜைகளுக்கு அனேக சீர்திருத்தங்கள் வாக்களித்துவருகிறார். ஒரு தீராவியாதியும் பிடித்திருக்கிறதாகப் பிரஸ்தாபம். அவரையும் அவர் குடும்பத்தையும் ரஷியா அரசனைப்போல அப்புறப்படுத்தி, சுயவரசு ஸ்தாபிக்கக் குடிகளில் அனேகர் இரகசியப் பிரயத்தனஞ் செய்துவருகிறார்களாம். வருகிற ஆகஸ்ட்மோதத்திற்குள் (அப்பொழுது சரியாய் மூன்று வருஷமாகும் யுத்தந்தொடங்கி) என்னென்ன பயங்கரமான அதிசயங்கள் நேரிடுமோ, நம்மாலிப்பொழுதுரைக்கமுடியாது. ஆனால் ஒன்று; ஜர்மனி தோற்று நிர்மூலமாகிறது நிச்சயம்.



அமெரிக்க அதிபதியின் அரண்மனை.

THE STORY OF RUTH

ரூத்தின் சரிதம்

(தொடர்ச்சி.)

கதை.

189. கலியாணப் பந்தலிலே — காதலுடன் கூடினவர்
சலியாமல் வாழ்த்தி— சாற்றினா ராசிடையை
190. உன்வீட்டில் வந்த—உத்தம மனைவியையும்
உன்னதன் ராகேலையும்—உரிமையாம் லேயாளையும்
191. வாழ்ந்திருக்கச் செய்ததுபோல்—மண்ணில் ரூத்மங்கையையும்
தாழ்ந்து போகாமலென்றும்—தழைத்தோங்கச் செய்வாரே
192. பாங்கா யெப்ராத்தாவில் — பாக்கியவானாயிருந்தும்
ஓங்கி வளர்வாயே—உத்தமனே பெத்தலையில்
193. என்று வரமளித்து—ஏனையோர் வாழ்த்தினார்கள்
நன்றாக மங்களமும்—நாட்டில் முடிந்தது காண்
194. ரூத்துங் கர்ப்பந்தரித்து—ரூபமுள்ள ஆண் செய்து
பேத்தென் னொருமகனைப்—பெற்றாள் போவாசுவுக்கு
195. தையல் ரூத்தும்அதனை—தானருமை யாய் வளர்த்து
மெய்யாக நாடெங்கும்—மேன்மைப் புகழடைந்தாள்
196. இந்த ஓபேத்து — ஈசாயைப் பெற்றெடுத்தான்
அந்த ஈசாயும்—ஆனந்தமாம் கவினன்
197. தாவீதைப் பெற்றெடுத்தான் — தாரணியில் தாவீதாம்
காவலன் வம்மிசத்தில்—கர்த்தன் பிறந்தனரே
198. எழில்பெரு ரூத்தே — எவ்வளவு பாக்யவதி?
அழகுள்ள பாவையரின் — ஆபரண மாயிரம்மா
199. மாதரசி ரூத்தினுட — மகிமை நிறைந்த குணம்
சோதரிகளுக் கிருந்தால் — தொல்லுலகில் பாக்கியமே
200. பன்னரும் போவாசை—பாரில் மணந்தபின்னும்
முன்னிருந்த மாமியைரூத்—முற்று மாவணைத்தாள்

201. நல்லரூத்தின் சேயுக்கு—நாகோமித் தாயானாள்
சொல்வளோ தன்னையினி—தொல்லுலகில் மாராளென்று?
202 புவனம் படைத்தோனும்—புகழ்ந்து நாகோமிதன்னை
அவள்கசப்பை யெல்லாம் — அடியோடே மாற்றினரே
203. வையகத்தின் மாமிகளே — மருமக்க ளானவரே!
மெய்யாய் ரூத்துங்களுக்கு—மேலான மாதிரியே.

வாழி விருத்தம்.

வாழி பரன்வாழி சுதன்வாழி யாவியான
வரும்வாழி யெஞ்ஞான்றுமே
வாழி ரூத்தின் கதைப்பாடி காட்டுபவரும்
வளமுடன் கேட்பவர்களும்
வாழியிச் சரிதையைக் கவியா லுரைத்தவன்
வாழிசக் ததமும்வாழி
வாழி வையம்படைத் தாள்பவன் திரியேக
மாசேனன் வாழி வாழி.

S. DAVIES.

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

அவைகளின் நீளமும் அகலமும் பிரமிக்கத்தக்கனவாயிருந்தன. ஆயுதங்கள் துலாம்பரமாய்ப் பிரகாசித்தன. பூர்வீக யுத்தவீரர்களைப்போல் ஓர் கையில் ஈட்டியையும் மற்றொரு கையில் கேடயத்தையும் பிடித்துக்கொண்டு தங்கள் மகத்துவ அரசன் எப்போது கட்டளை கொடுப்பானோவென்று காத்துக் கொண்டிருந்தனர். ஆயுதபாணிகளாய் நின்ற தன் சேனைகளின் முகங்களையும் அவர்களின் வளர்த்தியையும் வேதாளம் ஆவலுடன் பார்த்து அவர்களின் தொகையைக் கணிக்கிறான். அவனுடைய இருதயம் பெருமையினால் நிறைந்து உரங்கொண்டது. ஏனெனில் மனிதன் சிருட்டிக்கப்பட்ட காலமுதற்கொண்டு இந்நாள்பரியந்தம் இவ்வித சேனைகள் ஓரிடத்திலுங்கூடி வரவில்லை. இதிகாசநூல்களில் கண்டிருக்கும் திரண்ட சேனைகளையும் சார்லிமேன் என்னும்பெரியசக்கரவர்த்தியின் இராணுவபலத்தையும் கிரேக்கை உரோமை தேசங்களின் எண்ணிறந்த சேனா வீரர்களையும் இவர்களுடன் ஒப்பிட்டால் அவைகள் கொக்குகளின்கூட்டம் ஒன்றோடொன்று போர்செய்வது போலிருக்கும். இவ்வாறு மானிடச் சேனைகளுக்கு எவ்வளவேனும் ஒப்பிடக்கூடாத இத்தேவர்களின் சேனா தங்களின் பயங்கரப்படத்தக்க சேனாபதியை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தனர். அவனோ வடிவத்திலும் தேகசலனத்திலும், ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களுக்கு மேற்பட்டவனாயும் கர்வம் நிறைந்தவனாயும் ஓர் பெரிய கோபுரத்தைப்போல் அவர்களுக்கு எதிரே நின்றான். அவனுடைய முகதேஜசின் அருள் முற்றிலும் மறைந்துபோகாமல் அங்குமிங்கும் இடிந்து பழுதாய்ப்போன ஓர் பெரிய மாளிகைக்கொப்பாயிருந்தது. மேகங்கள் ஆகாயத்தில் வட்டமிடும்போது சூரியகிரணங்கள் வர தடைப்படுமாப்போலவும், சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் நடுவே வரும்போது, சூரியப்பிரகாசம் மறைந்துபோவதுபோலவும் அவனுடைய ஒளி மங்கிப்போயிருந்தது. அவனுடைய முகத்தில் இடிகளினாலுண்டாகிய ஆழ்ந்த வடுக்களிருந்தன. கவலையானது ஓர் வடிவம் பூண்டு அவன் முகத்தில் உட்கார்ந்தாப்போலிருந்தது. அவனுடைய கடினமும் அஞ்சாமையுமான நெற்றி அவன் உள்ளத்திலிருந்த அகந்தையையும் பழிவாங்கவேண்டுமென்கிற சிந்தையையும் வெளிப்படுத்திற்று. அவனுடைய கண்கள் கொடுமையினால் நிறைந்திருந்தன. ஓர் காலத்தில் மகிமையின் நிலைமையிலிருந்தவர்களாகிய தனது உத்தம கூட்டாளிகள், இப்போது வேதனையில் உடன்பங்காளிகளாயிருப்பதை உணர்ந்து மட்டுமிஞ்சின விசாரத்தையடைந்தவனைக் காணப்பட்டனன். இலட்சாதிலட்சம் ஆவிகள் இவனுடைய குற்றத்தினிமித்தம் நித்திய மகத்துவப் பிரகாசத்தை இழந்து தண்டனைக்குள்ளானார்கள். அப்படியிருந்தும் அவனுக்கு மிகுந்த உண்மையான தாசரைப்போல் நின்றனர். வானத்தினின்று அக்கினிமாரி பெய்தால் காட்டிலுள்ள கர்வாலிமரங்கள் பட்டுப்போய் மொட்டையாய் நிற்குமாப்போல் அவர்கள் மகிமையெல்லாம் வாடிநின்றனர். அவன் பேச ஆரம்பிக்கும்போது அவர்கள் படையின் வல இடபக்கங்களை மடித்துக்கொண்டு அவனுக்கருகாமையில் வந்தனர். அவன் பேசும் வகையை கவனிக்கும்பொருட்டு தங்கள் வாய்களுக்கு முத்திரைபோட்டவர்களுக்கொப்பாக அமைதலாய் நின்றனர். அவன் மூன்றுமுறை பிரயாசப்பட்டும் பேச ஏதுவில்லாமற்போயிற்று. தூதர்கள் அழுகிறவண்ணம் நீர்த்துளிகள் பலவந்தத்துடனே அவன் நேத்திரங்களிலிருந்து புறப்பட்டுவந்தன. கடைசியாகப் பெருமூச்சுகளுடன் அடியில்வரும் வார்த்தைகள் அவன் வாயிலிருந்து புறப்பட்டன. அவையாவன:

11. மீளவும் சேனைகளை உற்சாகஞ்செய்த படலம்.

அழியாமையை இலட்சணமாக அணிந்துகொண்டிருக்கும் ஆவிகளே! சர்வ வல்லவர் தவிர மற்ற வல்லமைகளுக்கு மேலான வல்லமைகளே! நாம் புரிந்த சண்டை பயங்கரப்படத்தக்கதாயினும் ஓர்போதிலும் கனவீனமுள்ளதல்ல. நாம் இருக்கும் ஸ்தானமும் சொல்வதற்கு மிகவும் வெறுப்பாயிருக்கப்பட்ட இம்மாறுதலும் அதற்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. மெத்தவும் கெம்பீரமாய் நிற்கும் தேவர்களினாலாகிய இப்பெரிய சேனை இவ்வாறு முறியடிக்கப்பட்டுப் போகுமென்று திரிகாலங்களையும்ஆய்ந்துயோசிக்கத்தக்க எந்த மனோசக்தியினாலும் அறியக்கூடியதாயிருந்ததோ? அவ்வாறே வானுலகத்தை யிழந்து பெரிய நஷ்டத்தையடைந்த இத்தூதர்களின்கூட்டம் திரும்பவும் தனது சுயபராக்கிரமத்தால் உன்னதத்துக்கேறி தங்கள் ஆதி வாசஸ்தலங்களைச் சம்பாதித்துக்கொள்ள மாட்டார்களென்று சொன்னால் அதை யாராகிலும் நம்பக்கூடுமோ? வான சேனைகளே, எனக்குச் சாட்சிகளாயிருங்கள் விபரீத ஆலோசனைகளினாலும் ஆபத்துக்குத் தப்பிக்கொள்ளவேணுமென்கிற எண்ணத்தினாலும் நம்முடைய நம்பிக்கையை இழந்துவிட்டோம். இம்மட்டாக வான அரசன் சுகபத்திரத்துடனே ஆண்டுவருகிறார். அவருடைய இராச்சியஸ்தானம், புராதனக் கீர்த்திப்பிரதாபத்தையும், சர்வசம்மதத்தையும் உடையதாயிருக்கிறது. இது முகாந்தரத்தினால் நம்முடைய பிரயத்தனங்கள் அவமாய்ப்போயின. நாமும் உயர்ந்த வானத்திலிருந்து தலைகீழாய் வீழ்ந்தோம். ஆனால் இப்போது அவருடைய வல்லமையின் அளவையும் நம்முடைய வல்லமையின் அளவையும் அறிந்துகொண்டோம். நாம் அவருடன் சண்டைசெய்யத் துணியாமலிருக்கவும் சண்டை நேரிடுங்காலத்தில் பயப்படாதிருக்கவும் கற்றுக்கொண்டோம். ஆதலால் நாம் இப்போது செய்யவேண்டிய முக்கியகாரியம் என்னவெனில், பலத்தினால் நாம் ஜெயிக்கக் கூடாமற்போன காரியத்தைத் தந்திரவுபாயத்தினால் முடிப்பதேயாம். அப்படிச் செய்தால் பலத்தினால் நம்மை ஜெயித்தவர் தம்முடைய சத்துருக்களில் பாதிப்பேரைமாத்திரம் ஜெயித்ததாக அறிந்துகொள்வார். இடமகன்ற இந்த ஆகாயவிரிவிலே வேறு உலகங்கள் உண்டாக்கி வைக்கப்பட்டிருக்கலாம். மேலும் சிறிதுநாட்களுக்குமுன், வானுலகத்தில் நவமான ஓர் உலகத்தைக் கடவுளானவர் சிருட்டிக்கப்போகிறாரென்றும், அதில் ஓர் நவமான ஜாதியை வசிக்கச்செய்து அச்சாதிக்கு தூதருக்குச் சமமான சிலாக்கியங்களை அளித்து அவர்களை விசேஷித்தவிதமாய் ஆசீர்வதிக்கப் போகிறாரென்றும் பிரஸ்தாப முண்டாயிருந்தது. அவ்விடத்திற்குப் பிரயாசப்பட்டுப் போவதே நம்முடைய முக்கிய கடமையாயிருக்கிறது. அங்கே போகாவிட்டால் வேறே எங்கேயாவது போகவேண்டும். ஏனென்றால் வானப்பிறவிகள் பாதாளமாகிய இக்கிடங்கில் அடைப்பட்டிருப்பது அல்லது நரகச் சிறைச்சாலையில் நீடித்தகாலம் வசித்துக்கொண்டிருப்பது மகா நிர்ப்பந்தம். மேற்சொல்லிய எண்ணங்கள் நமக்குள்ளே எழும்புகின்றமையால், முடிவான ஓர் தீர்மானத்தை நாம் செய்யவேண்டும். சமாதானம் என்னும் பேச்சுத் தூரமாயிருக்கட்டும். கீழ்ப்படிதல் நம்மில் யாருக்காவது சரிப்படுமா? சரிப்படாதே. ஆகையினால் யுத்தஞ்செய்யவேண்டும். ஆனால் அந்த யுத்தம் பகிரங்கமாகவோ அல்லது அந்தரங்கமாகவோ அதுதான் இப்போது தீர்மானிக்க வேண்டியது என்றனன்.

12. அரண்மனைகட்டின படலம்.

இவ்வாறு வேதாளம் பேசிமுடிய அவனுடைய வார்த்தைகளை உறுதியாக்கும்பொருட்டு லட்சாதிலட்சம் பலத்த சேராபீன்கள் தங்கள் அரைகளிலிருந்த கூரிய பட்டாக்கத்திகளை ஓர் கொடிப்பொழுதில் உருவி மிகுந்த திடாரிக்கத்துடன் பிடித்து நின்றனர். அவ்வாறு செய்யவே சடுதியில் நரகமெங்கும் ஜோதிமயமாயிற்று. சர்வவல்லவருக்கு விரோதமாய் மெத்தவும் ஆரவாரித்தனர். ஆயுதங்களை வல்லமையுடன் பிடித்து தங்கள் கேடயங்களை ஒன்றோடொன்று மோதிக்கொண்டு வானத்துக்கு விரோதமாய் சபதங்கூறி யுத்தக்கோலமாய் இரைந்தனர். இவர்களுக்குச் சமீபத்தில் ஓர் மலையிருந்தது. அதின் உன்னதமும் பயங்கரமுமான சிகரத்தினின்று அக்கினியும் இருண்ட புகையும் புறப்பட்டன. அதில் ஓர் பாகம் பளிங்கைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதில் கந்தகமும் அதற்குக் கீழாக பஞ்சலோகங்கள் பாளம் பாளமாக வெட்டியெடுக்கக் கூடியதாயுமிருந்தது. இம்மலைக்கு நேராக ஓர் சதுரங்க சகிதமாய் அணிவகுக்கப்பட்ட சேனை துரிதமாய் ஓடிவந்தது. அதெப்படியிருந்ததென்றால், காடுவெட்டிகள் மண்வெட்டி கோடரி முதலிய ஆயுதங்களைப் பிடித்து, ஓர் பட்டாளத்துக்கு முன்சென்று வழியை விசாலமாக்கி அகழியை வெட்டி பத்திரிகைகளைச் சமர்ப்பிக்கும் பாவனையாகவேயிருந்தது. இவர்களுக்கு மம்மோன் தளகர்த்தனாயிருந்தான். இந்த மம்மோன் வானத்திலிருந்து வீழ்ந்த எல்லா ஆவிகளிலும் தலைகவிழ்ந்தவனாயிருந்தான். வானத்திலிருக்கும்போது அவனுடைய பார்வையும் எண்ணமும் கீழ்நோக்கிக்கொண்டிருந்தன. வானத்தின் தளவரிசையில் பதிக்கப்பட்டிருந்த உயர்ந்த ரத்னங்களையும் அந்தக் கற்களைச் சுற்றியிருந்த தங்கரேக்குகளையும் மிகுதியாய் ஆசித்தான். தெய்வீகமும் பரிசுத்தமுமான யாதொன்றையும் அவன் யாசிக்கவும் நேசிக்கவுமில்லை. அவனாலேயே மானிடர்களும் தூண்டப்பட்டு பூமியின் மத்தியஸ்தானங்களில் ஒளிக்கப்பட்டிருக்கும் திரவியங்களைக் கொள்ளையாடினார்கள்.

(இன்னும் வரும்.)

Registered No. M. 442.

சத்திய தூதன்.

JUNE, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூன்மீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

இந்தியாவுக்கு மரியாதை.—பெரிய கவன்சிலுக்குப் போயிருந்த பிக்கனியர் அரசரும், விக்கமன்ற வாயரும் லண்டன் கார்தாரால் கௌரவமடையப் பெற்றார்கள்.

அற்புதப் பணை.—இந்ததேசத்திலே பரீட்பூர் என்கிற ஊரில் அற்புதச் செயலுள்ள ஒரு பனமர முண்டாம். அது காலையிலே நிலைமிர்ந்து, மேலை லெல்லாம் உயர்ந்தும், மாலையிலே மேலன் நலை பிற் படத்தக்கதாய் வளைந்துமிருக்கிறதாம். இது பிரதிதினக் காட்சி. இந்த ரகசியத்தை யறியும் படி வித்வான்கள் முயற்சிலிருக்கிறார்களாம்.

ஒரு புதுக்கப்பல். — இத்தாலியாவிலே ஒரு புதிய கப்பல் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு மணிக்கு 100 மைல் ஓடுகிறதாம். கப்பல்கள் சாதாரணமாய் 15 மைல் மாத்திரம் ஓடும். அதனுல் உண்டாகிற அலைகள் பல மைல் தூரமாக மோதுகிறபடியால் சப்மெரினுவது அது பாய்வி கிற குண்டாவது அக்கப்பலிடம் வராதாம். இதனுல் சப்மெரின் சச்சரவும் ஒழித்துபோகிறது.

பாதாளை. — சமாதான காலத்திலே பிரிட்டிஷ் சேனைக்கு வருஷந்தோறும் 2½ லட்சம் சப் பாத்து போதுமானதாயிருந்தது. இப்பொழுதோ ஒருகோடி 20 லட்சம் பூட்களன் செலவாகிறது. இதுமாத்திரமல்ல, ரஷியாவுக்கு 70 லட்சமும், பிரான்சுக்கு 20 லட்சமும் தைக்கவேண்டியதா யிற்று. மொத்தத்திலே 3 கோடியே 20 லட்சம் பூட்ச செய்து முடிந்தனவாம்.

வழிந்து மிஷனேரிக்கங்கம்.—கிரிஸ்தவர்களே ப்போல் ஹிந்துக்களும் இப்பொழுது ஒரு மிஷ னெரிச்சங்கம் ஸ்தாபித்திருக்கிறார்கள். தன்னே ஹிந்து வென்ற அறிக்கையிற்ற ஒவ்வொருவனும் ஹிந்து மதஸ்தனென்றும், ஜாதிபேதமின்றி சகல ரும் ஹிந்து ஆலயங்களுக்குள் சென்று ஸ்வாமியை ஆராதிக்கலாமென்றும், இம்மதத்தை எல்லும் பிரச் தாபிக்கவேண்டுமென்றும் நிர்மானித்திருக்கிறார்கள்.

இந்திய உவார் லோன். — அதாவது, யுத்தச் செலவுக்காக இந்திய கவர்ன்மெண்டார் ஒரு பெரிய கடன் கேட்டிருக்கிறார்கள். அதன் தொகை 150 கோடி ரூபாய். இதிலே ஏறக்குறைய 25 கோடி வருவாயிற்று. பம்பாய் 9 கோடியும், பங்காளம் 8 கோடியும், பஞ்சாப் 3 கோடியும், சென்னை 1 கோடியும் மற்றும் வேறு ராஜதானிகள் 3 கோடியும் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கடனுக்கு வட்டி நூற்றுக்கு 5; இது கல்ல வட்டிதான்.

மேசோப்பொத்தாமியா. — வடமேற்கிலிருக்கிற இந்தப் பெருந்தேசத்தை பிரிட்டிஷார் தருக்கினிடத்திலிருந்து ஜெயித்துவிட்டார்கள். அதன் முக்கியபட்டணம் பாக்டாட். அதன் கடற் கரைப்பட்டணம் பாஸ்ரா. இங்கியிலிருந்து ராணு வங்கள் மாத்திரமல்ல, ஆயிரமாயிரமான பலவித வேலையாட்களும் கல்ல சம்பளத்துக்காகப் போயி ருக்கிறார்கள். இன்னும் பெல நாடுகளையும் ஜெயித்துக் கைப்பற்றிக் கொள்வார்கள்போலத் தோன்றுகிறது. யுத்தமுடிந்த உடனே லண்டனுக்கும் இந்தியாவுக் கும் இருப்புப்பாதை போடப்படும். இதைப்போன்ற நினத் நிலே பிரயாணஞ்செய்து முடிக்கலாம்.

கல்கத்தாவில் பரீட்சை. — கல்கத்தாவிலே நிறுத்த காலத்துக்குமுன்பே கடந்த பிரவேசப் பரீட் சைக் கேள்விகள் எல்லாம் முன்னதாக வெளிப் பட்டுவிட்டன. இப்படி சென்னையிலும் முற்காலத் தில் கடந்ததுண்டு. இதை நிறுத்தும்படிக்கு சர்வ கலாசாலை அதிகாரிகள் அதிக பிரயாசை யெடுத்துக் கொள்ளுகிறார்கள். சிலகாலம் கேள்விகள் ஜெயி லிலே அச்சிட்டார்கள். அதுவும் பயனற்றுப்போ யிற்று. சென்னைக் கேள்விகளைச் நிறிதகாலமாக இங்கிலாந்தில் அச்சிட்டு வருகிறார்கள். கல்கத்தா விலும் இப்படிச் செய்வார்கள்போலும். ஆகிலும், கேள்விகள் முந்தியே வெளிப்பட்டுப்போதல் இத் தேசத்தாருக்கு இழிவுதான்.

இங்கிலாந்திலே விவகாயம். — சண்டைக்கு முன்பு இங்கிலாந்திலே பயிர்த்தொழில் வெகு சொற்பமாய் நடந்துவந்தது. முக்கியமாய்க் கைத் தொழில்தான் அதிகமாய்ச் செய்யப்பட்டு இந்த வியாபாரம் உலகமெங்கும் பரவிவந்தது. ஆனுல், சப்மெரின்கள் செய்துவருகிற அக்கிரமத்தினுலே, கப்பல்கள் முன்போல வாளமாக யாத்திரை செய் யாமல் இருக்கிற காரணத்தால், தானிய தவசங் கள் இங்கிலாந்துக்குப் போகிறதில்லே. ஆனுல் இப்பொழுது இதை நிவர்த்திக்கும்படி, விவசாயத் தொழில் ஆரம்பித்து, 10 லட்சம் எக்கர் பூமி இப்பொழுது பயிராய் வருகிறது. யுத்தம் வரு கிற வருஷமெல்லாம் கடன்தேறினுலும், தானிய தைக்குறித்து இங்கிலாந்துக்குப் பயம் கிடையாது.

இந்தியர்க் கல்வி.—உலகத்திலுள்ள தேசங்கள லெல்லாம் இந்தியா கல்வி விஷயத்தில் கடைத்தி முற்றது. இது அதிக வெட்கப்படத்தக்கது. வே தமும், இதிஹாச புராண காவியங்களு மிரு தென்ன? ஆயிரம் ஆண்களில் 106 பேரும், ஆ ரம் பெண்களில் 10 பேரும்மாத்திரம் எழுத்த வாசனையுள்ளவர்கள். ஆகலால், நாம் செய்யவேண் டிய முதற்காரியம் கல்வித்தேர்ச்சியே. ஜனங் ளுக்குக் கல்வி யிருந்தால்தான், மற்ற செல்வங் ளும் தெப்புளும் உண்டாகும். யூரோப்பிலே அப்படி யில்லே. அற்ப வேலைகாரர்கூடப் படி கத்தெரிந்தவர்கள். பத்திராதிபர் ஒவ்வொரு தினம திலும் பரம்பரையாயுள்ள ஒவ்வொரு தினவே பள்ளிக்கூடத்துக்கும் சர்க்கார் உதவிபுரிந்து புது பிள்ளைகளே சேர்த்து, கலகேரிப் பிள்ளைகளு கும் படிக்க, எழுத, கணக்குப்போடக் கற்பிக் வேண்டுமென்று ஒரு ஏற்பாடு செய்திருக்கிறது கவர்ன்மெண்டார் அவ்வேற்பாட்டை அதசரி தால், 10, 15 வருஷத்திற்குள்ளாக இத்தேசத்தில் கல்வித்திறமை அதிகரித்த விடுமென்பதற்குச் ச தேகமில்லே. சென்னை ராஜதானியிலேமாத்திர

ஜூன்மீ பஞ்சாங்கம்.—

வாரம்	ஜூன்மீ = வைசாகி—ஆனி. ● அமாவாசை, 19க. ⊙ பௌர்ணமி, 5க.							வைசாகி—ஆனி.						
ஞாயி ...	....	3	10	17	24	...	21	28	4	11				
திங்க ...	....	4	11	18	25	...	22	29	5	12				
செவ் ...	....	5	12	19	26	...	23	30	6	13				
புதன் ...	....	6	13	20	27	...	24	31	7	14				
லியா ...	....	7	14	21	28	...	25	1	8	15				
வெள் ...	1	8	15	22	29	19	26	2	9	16				
சனி ...	2	9	16	23	30	20	27	3	10	17				

சூதாட்டம் என்பது தன்னிரத்தால் பணத்தை அபகரிக்கும் விளையாட்டைமாத்திரம் குறிக்காமல் வீண யாபேஷ்களில் பாருக்காவது கஷ்டத்தை வினவிக்கும் ஆட்டத்தையுங் குறிக்கும். சூதாட்டம் "அறத்தைவேர் கல்லும், அருளாகிற் சோக்கும், நிறத்தையே கொண்டருளைத் தேய்க்கும், மறத் தையே பூண்டு விரோதஞ்செய்யும், உருவழிக்கும். உண்மை யுயர்வழிக்கும், வண்மை நிரு வழிக்கும், மானஞ் நிதைக்கும், மருவும் ஒருவரோ டன்பழிக்கும்" என்று புகழேந்திப் புலவன் சொன்னது மெய்யே. பேபெற்ற கனசக்காவர்த்தி, புட்காளென்னுமோர் நிற்றாசனேடு சூதாடி, அச்சூதில் நாகேசர் முதலியவற்றை இழந்து, மனைவியும் மக்களும் பின்றொடர காடுவிட்டுக் காட டைந்ததும், பாண்டவின் மைந்தர் திரியோதனுதிகளுடன் சூதாடி, நாகேசர் இழந்து, சொலற்கரிய மானக்கேடடைந்து, காட்டை உறைவிடமாய்க் கொண்டதுமாகிய மூற்காலச் சரித்திரங்கள் தற்காலத்தில் எட்டேச்வைக்காய்போ வானதேதவிர, நமக்கு எச்சரிப்பாயிருக்கிறதாகக் காணேம். வழக்கமாய் வர்த்த மானப் பத்திரிகைகள் வரித்தவருவோர் ஒரு ரூபாய் போட்டு ஆயிரம் ரூபாய் பெற்றவர்கள் பேர், விலாசம் முதலியவைகளைப் பார்த்து, தற்காலச் சூதாட்டம் மோனுவதற்கோர் ராஜ பாதையென கினைத்து, சூதாட்டத்தில் நீலயிட நேரிடுகிறது. தற்காலப் புத்தகங்களில் சூதாடிக் கெட்டவர்கள் சரித்திரம் வரா மையாலும், சாராயம் அபின்முதலிய இலாகிரி வஸ்துக்களுடன் போர்புரிபவர்கள்தானும் தற்கால சூதாட்டக் கோஷ்டத்தைக் கவனியாதபடி செவிபேட்டிருப்பதாலும் பக்திமான்கள்கூட சூதாட்ட வீஷ யத்தில் பாராமுகமாயிருக்கிறப்போல் தோன்றுகிறது.

தற்காலம் வீட்டிலும் காட்டிலும், வினையாட்டிலும் வேலைஸ்தலத்திலும், பெரியவர்களுக்குள்ளும் சிறியவர்களுக்குள்ளும், ஆண்களுக்குள்ளும் பெண்களுக்குள்ளும் சூதாட்டு ஒரு வினையாட்டு. பள்ளிக் கூடத்துக்குப்போகும் வயகவருமுன்னே காலையிலே கையில் காலு கோலியுண்டை: இரண்டடிக்கொன்று, ஒரு காசுக்கு இரண்டு கோலியுண்டை; மாலையிலே இரண்டு காசு கஷ்டம், அல்லது இரண்டு காசு இலாபம். பின்னே பள்ளிக்கூடம் போனுல் பென்சலாட்டம்; இரண்டு பென்சில் வந்தாலும் வந்தது, இரண்டு பென்சில் போனலும் போனதுதான். அறையிலாடி அம்பலத்திலாடினுற்போல், பையன் வரவரத் தேர்ந்து பந்தயங்கட்டி பந்தயப் பெலித்தால் தன்தைக்குச் சந்தோஷம், தாய்க்குக் னிப்பு. ஆபீ சுக்குப் போனுல் அங்கொருவன் கையில் கைக்கடிகாரம்; ஆளுக்கொரு ரூபாய் அவிழ்த்துவைக்க உட மெனிகளுக்குப் பத்து ரூபாய், ஒருவனுக்குக் கடிகாரம், ஒன்பதுபேருக்குப் பெருமூச்சு. சென்ன பட்டணத்து வீதியிலே மணிச்சப்தம், எட்டிப்பார்த்தால் சூதாட்டம்; சங்கிலே நாடாவாட்டம், சேவலினைக் கண்டால ஓட்டம்; தோட்டத்து மூலையிலே சூதாட்டம்; எழைவாயிலே மண்; தன்தைக்குப் போனுல் சார் சன்ற் குனிமேலே, சேவகர் அவனைச் சூழ, ஆனல் அதிரும், இங்கும், எங்கும் சூதாட்டம், எத்த னையோவகைச் சூதாட்டம்! வனையமாம், துபாக்கியாம், வாட்பெரியாம்; காட்டிலே காடைப் பத்தயமாம், கவதாரிப் பத்தயமாம், புருப் பத்தயமாம், கரும்புப் பத்தயமாம், சேவல் போராம், மல் யுத்தமாம், சல்லிகட்டாம்; பார்க்கிறவர்களுக்குள்ளும் பத்தயமாம், பணக்காருக்குள்ளும் பத்தயமாம். கல்கத்தாவிலே குதிரை ஓட்ட மாம்; அண்ணன் ஒரு ரூபாய், தங்கை ஒரு ரூபாய், அம்மாள் ஒரு ரூபாய், ஐயா ஒரு ரூபாய், தொட் டிலிலே தூங்குகிற பேரில்லாக் குழந்தையும் ஒரு ரூபாய்; வந்தால் ஆயிரம் ரூபாயாம், போனுல் ஒரு ரூபாய்தானும், ஒரு ஆலயம் கட்டவேண்டுமாம்; ஆளுக்கொரு ரூபாய்தானும், ஐந்நூறுபேருக்குப் பிரை சாம். ஆலயத்திலே அதப்பின் பண்டிகையாம்; கத்தரிக்காயாம்; கலமாம், ஐயோ! பிதாவின் மீடி வியா பார மீடும், கன்னர் குகையுமாம்.

பெருத்த சூதாட்டங்கள்தான் கஷ்டத்தை வினவிக்கும், அற்ப சுவல்ப ஆட்டங்களால் அதிர்ஷ்டமிருந் தால் ஆனிக்காரர்கள் ஆவலாம் என்கிறீர்களோ? "வேண்டற்க வென்றிடினுஞ் சூனே வென்றதனுஉர் தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று" என்றபடி சூதினல் வென்ற பணம் சூதனுக்கே கேட்டை யுண்டு பண்ணும். சூதாட்டம் கோதாட்டம். "கோதாட்டொழி" என்பது மூதறிஞர் மொழி. சூதாட்டம் வாதாட் டம் என்றபடி சூதர் வாதாடுவர். "சூதும் வாதும் வேனே செய்யும்." சூதாட்டத்திற்குப் பணஆசையே மூலகாரணம். "பணஆசை எல்லாத் தீமைக்கும் வோயிருக்கிறது; சீலர் அதை டுக்கித்து, வீகவா சந்தைவிட்டு வழவி, அநேக வேதனைகளேலே நங்னே உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" என்ற சத்தியவேதம் பகருகிறது. சூதாடுகிறவன் தன்னையே தாக்கில் போடுவதற்குக் கயிறு திருக்குகிறவன் என்பது சத்தியமே. ஆதலால் நீங்கள் பிறருடைய கால்காசுக்கும் ஆசைவைக்காமல், எவ்வகைச் சூதாட் டத்தையும் வெறுத்துத்தள்ளி, "பொல்லாங்காய்த் தோன்றுகிற எவ்வாவற்றையும் விட்டு விலகுங்கள்." மேலும், உங்கள் பின்னேகளுடைய படிப்பைக் கவனித்துவருவதுபோல அவர்கள் வினையாட்டையுஞ் கவனித்து, அவர்கள் இரத்தப்பழி உங்கள் நிலேமேல் வராதபடி பாருங்கள்.

PARADISE BIRD.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

55,000 கிராமங்களும், இந்தியா முழுவதிலும் 570,000 கிராமங்களுமுண்டு. மிஷனர்களும், இங்கிலீஷ் கற்பிக்கிறதை நிறுத்தி, தங்கள் ஏழைகளுக்குச் சொற்பப் படிப்பு தத்தம் பாஷையிலே கற்பிக்கிறதே சிறந்தது.

THE WAR

யுத்த வரலாறு

ரஷியா திடீரென்று சுயவரசானதும், அமெரிக்கா நட்பரசரைச் சேர்த்துக்கொண்டதும் ஜர்மனிக்குக் கழுத்திற் கத்திவைத்தாற்போ லிருக்கிறது. அமெரிக்கா சாதாரண ராஜ்யமன்று. இந்தியாவுக்கு மூன்றுமடங்குப் பெரியது. நட்பரசருக்கு வேண்டிய திரவிய சகாயமும், உணவுச்சரக்குச் சகாயமும், குண்டு, மருந்து பீரங்கிச் சகாயமும், 20 லட்சம் போர்வீரரும் மற்றும் பெருத்த உபகாரங்களும் கொடுத்துதவ ஆரம்பித்திருக்கிறது. ஜர்மன் சேனை வினைவிற் குறைய, நட்பரசர்ச்சேனை விரைவில் அதிகரித்து வருகிறது. அங்கிலேயரும் பிரான்சியரும் ஜர்மன்களைப் பல விடங்களிலே தோற்கடித்து, முக்கியமான அனேக பட்டணங்களையும் ஊர்களையும் கைப்பற்றிக்கொண்டார்கள். சென்ற மாதத்தில்மட்டும் ஜர்மனி 5 லட்சம் போர்வீரரைப் பறிகொடுத்தது. அபகரித்துக்கொண்ட நிலபலங்களிலே முக்கால்வாசி இழந்துவிட்டது. ஆஸ்திரியாவின் புதுச் சக்கரவர்த்தியும், பல்கேரியாவும், துருக்கியும் தத்தம் பலமொடுங்கிப்போய், தனித்தனியாய்ச் சமாதானஞ் செய்துகொள்ளப் பிரயாசப்படுகின்றன.

சப்மெரின்களைக்கொண்டு பிரிட்டிஷ் பிரான்சு முதலிய ராஜ்யங்களின் வர்த்தகக் கப்பல்களை முழுகுவிக்கலாமென்ற எண்ணம் நிறைவேறாமற் போயிற்று. முழுவிக்கப்படுகிற ஒவ்வொரு கப்பலுக்குப் பதிலாக, பத்துக் கப்பல்களைக் கூட்டிவருகிறார்கள். அன்றி, எத்தனையோ சப்மெரின்கள் அழிக்கப்பட்டன. இதனால் ஜர்மன்கள் கோலிழந்த குருடனைப்போ லிருக்கிறார்கள். இதுநிற்க, ரஷியாவைப்போல, ஜர்மன் சக்கரவர்த்தியையும் சிம்மாசனத்தினின்று குடும்பசமேதமாகத் தூரத்திவிட்டு, சுயவரசு ஸ்தாபித்து, சமாதானஞ் செய்துகொள்ளப் பிரயாசப்படுகிறார்கள். இப்படியே நடக்குமென்பதற்குத் தினையளவுச் சந்தேகமுமில்லை. உலகமெங்கும் சுயவரசுத்தான் பிரஜைகளுக்குப் பிரியமாயிருக்கிறது. யூரோப்பிலே தற்காலம் ரஷியா, பிரான்சு, போர்த்துகல், சுவித்சர்லந்து முதலிய ராஜ்யங்களெல்லாம் சுயவரசாயிருக்கின்றன. கிரீசும் வெகு சீக்கிரத்தில் அப்படியாகும்.

ஜர்மனியின் க்ஷாத்திரமெல்லாம் இங்கிலாந்தின் பேரில் இருக்கிறது. நம் ராஜ்யத்தார் பிரான்சியருக்காக உடன்பட்டதே அதன் காரணம். அவர்கள் அவ்வாறு சண்டையிற் பிரவேசியாதிருந்தால், முதல் பிரான்சியரை நொறுக்கிவிட்டு, பிறகு ரஷியாவைத் தோற்று அடக்குவித்து, அவர்கள் இனி யுத்தத்துக்கெழும்பாமல் சமாதானப்படுத்திக்கொண்டு, கடைசியிலே இங்கிலாந்தின் பேரிற் படையெடுத்து, அதையும் தூள்பொடியாய் நொறுக்கிவிடத் தீர்மானித்திருந்தார்கள். இதற்காக 45 வருஷம் பிரயத்தனஞ் செய்துவந்தார்கள். இதனைத்தும் அங்கிலேயரால் வியர்த்தமாய்விட்டது. இப்பொழுது உலகமுழுவதும் ஜர்மனிக்கு விரோதமாயும், அதன் அக்கிரமத்திற்கு விரோதமாயும் எழும்பிவிட்டது. கடவுளே அதற்குப் பிரதிகூலமாகிவிட்டார்.

நியூஜீலாந்தக் குடிசை.

FOUR WAYS OF LIVING.

சதுர் ஜீவியம்.

முன்னொருகாலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். தன் பட்டத்துக் குமாரனுக்கு நற்புத்தி போதிக்கும்பொருட்டு பரமோத்தமனாகிய ஒரு குருவை அமர்த்தினான். அவன் மிக்க நிபுணனாயிருந்தாலும், தக்க யுக்தியுள்ளவன். மனங்கசக்கக் கடிந்துகொள்ளாமல், உத்தம சத்தியங்களை அத்தனையும் மதுரமாய்ப் புகட்டுகிறவன். ஒருநாள் குரு அரசகுமாரனைப் பார்த்து, பிள்ளாய், உலகத்திலே சதுர் ஜீவியங்கள் உண்டு; அதாவது, மனிதர் நான்குவிதமாய் ஜீவித்து வருகிறார்கள். தினம் ஒன்றாக, நாம் இந்நான்கையும் போய்க் கண்ணாரக் கண்டுகொள்வோமென்றான்.

அப்படியே அவன் மறுநாள் உதயத்திலே அரசகுமாரனை ராஜ சிறைக்கூடத்துக்கு அழைத்துப் போனான். அங்கே விலங்கிட்டுக்கிடந்த ஒரு கைதியைக் கண்டார்கள். அவனைக் காட்டி, இவன் சதுர் ஜீவியத்தில் ஒன்றுக்கு உதாரணம். இப்பாதகன் ஆரம்பத்திலே தன் சித்தமே தனக்குப் பாக்கியம் என்கிற ஜீவனோபாயத்தைச் சட்டமாக அநுசரித்தவன். தனக்கிஷ்டமான யாவற்றையும் மனங்கூசாமல் செய்துவந்தான். கொலை, களவோ, காமவிகாரமோ, பொய், சூதோ—எதையும் தனக்கு இன்பம் வரத்தக்கதாய் நடப்பித்து, கடைசியிலே பிடிக்கப்பட்டு, விலங்கிட்டுச் சிறையிலே போடப்பட்டான். இவன் தன் சொந்த மனோபீஷ்டத்தை நிறைவேற்ற முடியாது. சிற்றின்பமென்கிறது சுயசித்த சாதனை. இது கடவுளுக்கு ஏற்காது. கஷ்டநஷ்டத்துக்குச் செல்லும் மார்க்கம்.

மறுநாள் குரு ராஜகுமாரனை ஒரு மகாராஜன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அப்பொழுது தனவந்தனும் அவன் குமாரனும் சாப்பிடுஞ்சமயமாயிருந்தது. வீட்டுநாய்கள் கூடத்தினி நின்று கொண்டிருந்தன. அந்நேரம் ஒரு ஏழைப் பிச்சைக்காரன் ஒருபிடி அன்னத்துக்கு அங்கே வந்து குரலிட்டுக் கூவினான். அவன் குரலைக் கேட்கவே, அந்த நாய்கள் அவன்மீது பாய்ந்து அவனைக் கடித்துவிட்டன. அதன் காரணத்தைக் குறித்து குரு சிறுவனை விசாரிக்க, அவன், இந்த நாய்கள் எங்கே தங்கள் தீனியை அபகரித்துக்கொள்வானோவென்று அஞ்சி, அவன்மேல் பாய்ந்தன என்றான். அதற்கு குரு, அப்பா, இது இரண்டாஞ்ஜீவியம். இதுதான் சுய நேச ஜீவியமென்கிறது. எல்லாந் தனக்கே, பிறருக்கு ஒன்றும் போகலாகாதென்கிற எண்ணம். தம் குறையே பெரிது. பிறர் குறையை நினைக்கிறதேயில்லை. துக்கமுற்றோர்த் துயரத்தை நீக்கார்; குறையுற்றோருக்கு உதவிபுரியார். குலைத்துக் கடித்த அந்நாயின் குணமே சுயநேசத்துக்குதாரணம்.

மூன்றாம்நாள் குருவும் சிஷனும் ஒரு தோட்டிச்சேரிக்குப் போனார்கள். அந்தச் சேரி நகரத்துக்கப்பால் இருந்தது. அங்கே கிடுகிடு கிழவி ஒருத்தி, இரண்டு சிறு பிள்ளைகளுக்குக் கஞ்சி வார்த்துக்கொண்டிருந்தாள். ராஜகுமாரன் அவளை, அம்மா, இவர்கள் உன் பேரப்பிள்ளைகளா என்றான். அவள், அல்ல: அவர்கள் பசியாய்ச் சேரியிலே அலைந்து திரிகிற அநாத பிள்ளைகள். எனக்குக் கிடைக்கிற கஞ்சியிலே, அவர்களுக்குக் கொஞ்சம் வார்க்கிறேன் என்றான். அவன் அவள் தயாளத்

தையும் தயவையும் புகழ்ந்து, சந்தோஷமுற்று, அவள் கையிலே கொஞ்சம் பணங்கொடுத்தான். குரு அவனைப்பார்த்து இதுதான் மூன்றாம் ஜீவியம் என்றான். அரசகுமாரன் அது என்னவென, குரு, இது பரோபகார ஜீவியம். சுய ஒறுப்பு ஜீவியம் என்றாலும் சரி. அந்த ஏழைக்கிழவி, தனக்குக் கிடைத்ததை அப்பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தாள்.

கடைசியிலே, நாலாம்நாள் வந்தபொழுது, குரு, இன்றைக்கு நாம் வேறெங்கும் போகவேண்டியதில்லை. நாலாம் ஜீவியதைப்பற்றி ஒரு கதை சொல்லுகிறேன், கேள். அனேக வருஷங்களுக்கு முன்னே அன்பின் அவதாரமாகிய ஒரு சத்புருஷர், இவ்வுலகில் தோன்றினார். அவர் ஏழை, எளியவர்கள், பிணியாளிகள், குருடர், முடவர் யாவரிடத்திலும் அளவற்ற தயவுள்ளவர். அவர் திருவாய்மலர்ந்தருளிய வரம உபதேசங்களைச் சகலரும் கேட்டு வியப்புற்றார்கள். உதாரணமாக, உங்களில் எவன் அரசனாக விரும்புகிறானோ அவன் அடிமையாயிருக்கட்டும். பெரியவனாகிறதற்கு வழி சிறியவனாயிருத்தலே என்று போதித்தார். அவருடைய ஜீவியம் தமக்கென்று தினையளவுமிராமல் பிறருக்கென்றே விளங்கியது. இதுவே சற்குரு ஜீவியம். இதுதான் நாலாம் ஜீவியம். எல்லாவற்றிலும் சிறந்தது. பேரின்பத்துக்குச் செல்லும் பாதை இதுவே என்றார்.

அதுகேட்டு ராஜபுத்திரன், இந்தப் பரமாத்துமாவை வழிபடுவ தெப்படியென, குரு, அவருடைய ஜீவிய விருத்தாந்தம் நான்கு சிறு புஸ்தகங்களிலே அடங்கியிருக்கிறது. அவற்றை வாசித்துப்பார்த்தால், இயேசுகிறிஸ்து என்கிற இந்த அவதாரபுருஷரின் கல்யாண குணங்கள், போதனைகள், அனைத்தையும் அறிந்துகொள்ளலாம் என, அச்சிறுவன், அப்படியானால் நான் அந்தக் கிரந்தங்களை வாங்கி வாசித்து, அந்தப் புண்ணியநாதனிடம் விஸ்வாசம் வைத்து, அவரது அருளினாலே சுயசித்த ஜீவியத்தையும், சுயநேய ஜீவியத்தையும் விட்டுவிட்டு, சற்குரு ஜீவியமாகிய நான்காம் ஜீவியத்தையே என் ஒரே ஜீவியமாக வைத்து நடப்பேன் என்றான்.

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

பாதாளகாண்டம்.

இவனுடைய கூட்டாளிகளில் சிலர் அதிசீக்கிரத்தில் அம்மலையின் ஓர் பக்கத்தைத் துளைத்து அதினின்று பொற்பாளங்களைத் தோண்டியெடுத்தனர். நரகத்தில் பொன்விளையுமோ என்று ஒருவரும் அதிசயப்படவேண்டுவதில்லை. அவ்விலையுள்ள வஸ்துவுக்கு அதுவே தகுந்தவிடமாயிருக்கும். அழிந்துபோகும் வஸ்துக்களைப்பற்றி மேன்மைபாராட்டுபவர்களே, எகிப்தின் பிரமிட்கோபுரங்களையும் பாபிலோன் முதலிய நகரங்களையும் அதின் உப்பரிகைகளையும் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் குறித்து அதிசயத்துடன் பேசுபவர்களே, வல்லமையையும் வித்தையின் திறமையையும் விளங்கச்செய்த அம்மாட்சிமையான கட்டுக்கோப்புகளும், ஞாபகஸ்தம்பங்களும் எவ்வளவு சீக்கிரத்தில் துராவிகளினால் அழிக்கப்பட்டுப் போயினவென்றறியீர்களோ? ஆம், அநேக தலைமுறைகளாய் எண்ணிறந்த மனிதர்களின் கைகளினால் சமைக்கப்பட்ட கட்டிடங்கள் ஓர் மணிநேரத்தில் எளிதில் தளமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. நாகவெளியில் வேறொரு கூட்டத்தார் அதியுக்தியுடன் பாலங்களிலிருந்த களிம்புகளை நீக்கி சுத்தமான லோகங்களை உண்டாக்கினார்கள். மூன்றாவதான ஓர் கூட்டம் தரையில் அநேக அச்சுகளைச் செய்து உலோகங்களை உருக்கிவிட்டார்கள். கன்னரக்குழாய்களில் காற்றோடிச் செல்லுமாப்போல் அவ்வச்சுக்களின் ஒவ்வொரு நுட்பமான பங்கிலும் உருக்கிவிட்ட உலோகங்கள் ஓடி நிரம்பிற்று.

தட்சணமே மேளவாத்திய சப்தத்தோடும் இனிய ராகத்தொனிகளோடும் ஆகாயக்கூண்டெழும்பும் வண்ணமாய் ஓர் மகத்தான விசாலமுள்ள கட்டிடம் நரகத்தரையினின்று எழுந்தருளியது. அது ஓர் ஆலயத்துக்கொப்பாகக் கட்டப்பட்டு வெளிப்பிரகாரங்களையும் உயர்ந்ததும் உன்னதமுமான தூண்களையும் உடைத்தாயிருந்தது. முற்றிலும் பொன்னால் மூடப்பட்டதாயும் நானாவித சித்திர விசித்திர வேலைகளினால் அலங்காரஞ்செய்யப்பட்டதாயுமிருந்தது. செல்வப்பொருளிலும் கல்விப்பொருளிலும் கீர்த்திப்பிரதாபத்தையடைந்த எகிப்து அசூரியா தேசங்களில் வணங்கப்பட்ட தேவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மகத்துவமும் மேன்மையுமான ஆலயங்களும் இத்தன்மையுள்ளவைகளாயிருக்கவில்லை. இந்த மகத்தான கட்டிடம் மகமேருபர்வதம்போல் எழுந்தருளின தட்சணமே அதின் கதவுகள் விரிவாய்த் திறக்கப்பட்டன. அதின் உட்பக்கம் விஸ்தீரணமாயும் தளவரிசை எங்கும் ஒரேமட்டமாயும் அதின் கூரை மந்திரவல்லமையினால் நிற்கிறதுபோலவும் நட்சத்திரங்களைப்போல் எண்ணிறந்த சுடர்களுடன் பிரகாசிக்கும் தீபங்களும் ஜெகஜோதியான சரக்குளோப்புகளும் இருந்தன. தூதர்களில் அநேகர் துரிதமாய் அதனுள் பிரவேசித்து சிலர் கட்டிடத்தையும் சிலர் அதைச் சமைத்த சிற்ப சாஸ்திரிகளையும்பற்றி வியந்து பேசினர். கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமான கடவுள் தூதர்களை அதிபதிகளாக்கி அவர்களுக்குப் பிரத்தியேகமான ஸ்தானங்களை வானுலகத்தில் கட்டளையிட்டபோது, மேற்சொல்லிய சிற்ப சாஸ்திரியே அவர்களுக்காக பலத்ததும் சிங்காரமுமான இருப்பிடங்களைச் செய்தான். பிற்பாடு இவன் கிரேக்கைதேசத்திலே அமலசீபர் என்ற பேரினால் அழைக்கப்பட்டவனுமிருந்தான். இவன் யூப்பித்தர் என்னும் தேவனால் வானத்தின் அலங்கங்களுக்கப்பாலே எறிந்துவிடப்பட்டதாகவும் அவன் பாதாளத்தில் விழுவதற்கு ஒருநாள் முழுவதும் சென்றதாகவும், அவன் விழுகையில் ஓர் நட்சத்திரத்தைப் போல் காணப்பட்டானென்றும் பூர்வீகத்தார் கட்டிச் சொன்னார்கள். ஆயினும் அவனும் அவனுடைய நிர்ப்பந்தமான கூட்டாளிகளும் அநேக காலத்துக்கு முன் பாதாளத்திற்குத் துரத்திவிடப்பட்டது வாஸ்தவமான காரியந்தான். மேலும் வானத்தில் அவ்வளவு விசித்திர விநோதமாய்க் கட்டிடங்களைச் சமர்ப்பித்ததினால் அவனுக்கு யாதொரு பயனுமில்லை. இப்போது நரகத்தில் கட்டிடத்தை எழுப்பும்படியாகவே அவன் துரத்தப்பட்டிருக்கிறான்.

13. பிரசித்தப் படலம்.

இதற்குள்ளாக வேதாளத்தின் கட்டளை பிறக்க ரெக்கைகளை யுடைத்தான தூதர்கள் மிகுந்த ஆசாரவணக்கத்துடனேயும் எக்காள சப்தத்துடனேயும் பாண்டிமோனியம் அல்லது பேய்ச்சாலை என்னும் ராஜ ஸ்தானத்தில் ஓர் ஆலோசனைச்சங்கம் கூடப்படுமென்பதாக சேனாசமுத்திரம் எங்கும் அக்கட்டளையை விளம்பரம்பண்ணினார்கள். விளம்பரம்பண்ணினவுடன் ஒவ்வொரு கூட்டத்திலும் சதுரங்கச்சேனையிலுமிருந்து அந்தஸ்திலும் பராக்கிரமத்திலும் சிறந்தவர்கள் புறப்பட்டு வந்தனர். இந்த அதிபதிகளை நூறு அல்லது ஆயிரம்பேர் புடைசூழ்ந்து வந்தனர். வாசல்களில் எவ்வளவும் இடமில்லாமற்போயின. நடுவிலிருந்த சபாமண்டபம் நிறைந்த ஓர் யுத்தகளம்போலவும், மேலும் கீழும் பக்கங்களிலும் ரெக்கைகளையுடைய தூதர் நெருங்கிக்கொண்டிருந்தனர். உஷ்ணகாலத்தில் தேனீக்கள் திரள் திரளாய் புஷ்பாதிகளிலிருந்து தேனை உறிஞ்சும்படி பறந்தோடுவதுபோல் அங்குமிங்குமாய் ஓடிக்கொண்டிருந்தனர். ஆனால் கட்டளை பிறந்தமாத்திரம் மிகுந்த அதிசயமான காட்சியுண்டாயிற்று. சற்று நேரத்துக்குமுன் பூமியின் ராட்சதர்களிலும் பெரியவர்களாய்க் காணப்பட்டவர்கள் இப்போது தங்களின் உருவங்களைச் சுருக்கிக்கொண்டு எண்ணிறந்த தூதர்களாயிருந்தும் ஓர் சிறிய மண்டபச்சாலையில் அடங்கினர். அவர்களைப் பார்க்கும்போது இமயகிரிக்கப்பால் வசிக்கும்குள்ளஜாதியாரைப்போலவும், சந்திரவெளிச்சத்தில் காட்டிலும் அல்லது நீர்த்தடாகங்களின் ஓரங்களிலும் ராச்சாமத்தில் கும்மாளம்போடும் ஆவிகளுக்கொப்பாகவும் இருந்தன. அவர்கள் தங்கள் கெம்பீரமான இராகங்களினாலும் இனிய தொனிகளினாலும் வேதாளமாகிய தங்கள் தலைப்பசாசைச் சந்தோஷிப்பித்தனர். அவன் இருதயமோ சந்தோஷத்தினால் நிறைந்ததுபோல திகிலினாலும் நிறைந்திருந்தது.

இவ்வாறு ஸ்தூலதேக சம்பந்தமில்லாத ஆவிகளின் கூட்டங்கள் தங்கள் வடிவங்களைச் சுருக்கிக்கொண்டு எண்ணிறந்த தூதர்களாயிருந்தும் அப்பாதாளலோகத்தில் கட்டப்பட்ட அரண்மனையின் சபாமண்டபத்தில் கூடிவந்தனர். அச்சாலையின் மத்தியஸ்தானத்தில் சேராபீன்களில் பிரபுக்களானவர்கள் மந்திராலோசனைச் சங்கத்திற்கு முக்கிய அவயவங்களாயிருந்தனர். ஆயிரம் பதினாயிரம் பிரபுக்கள் பொன்னாசனங்களில் வீற்றிருந்தனர். கொஞ்சநேரத்தில் எங்கும் மகா ஆச்சரியமான அமைதலுண்டாயிற்று. அத்தூதப்பிரபுக்களின் பெயர்கள் கிரமமாக வாசிக்கப்பட்டதின் பின்பு மந்திராலோசனைச்சங்கம் நடந்தேறினது.

பாதாளகாண்டம் முற்றிற்று.

ஆலோசனைக்காண்டம்.

பொருளடக்கம்.

மந்திராலோசனைச்சங்கம் ஆரம்பித்ததும், வானுலகத்தைக் கைவசப்படுத்த ஓர் யுத்தம்புரிவது அவசியமென்று வேதாளஞ்சொன்னதைச் சிலர் அங்கிகரித்ததும், சிலர் ஆட்சேபித்ததும், வேறு சிலர் நவலோகமும் நவசிருட்டியும் உண்டாக்கப்படுமென்னும் பிரஸ்தாபத்தின் உண்மையை அறியவேண்டுமென்று சாதித்ததும், இதற்கு யாரை அனுப்புவிக்கலாமென்று யோசித்ததும், வேதாளம் தானே இந்த யாத்திரையைத் தொடங்கி முடிப்பேனென்றதும், எல்லோரும் அவனைப் புகழ்ந்துகொண்டதும், ஆலோசனைச்சங்கம் முடிந்ததின்பின்பு தூதப்படைகள் பற்பல இடங்களுக்குச் சென்று வேதாளம் திரும்பி வருமட்டுங் காலத்தைப் போக்கிக்கொண்டிருந்ததும், நரகவாயிலண்டைக்கு வேதாளம் பிரயாணஞ்செய்ததும், அவ்வாயில் கெட்டியாய்ப் பூட்டப்பட்டிருந்ததும், அதைக் காத்திருந்த பேய்க்கணங்கள் அதிசீக்கிரத்தில் அதைத் திறந்த வானத்துக்கும் நரகத்துக்கும் நடுவிலிருந்த கருங்குடாக்கடலைக் காண்பித்ததும், அக்குடாக்கடலை வேதாளம் அதிக பிரயாசத்துடன் கடந்ததும், அவன் வாஞ்சித்த இந்த நவலோகத்தைக் கண்குளிரக் கண்டதும் அடங்கியிருக்கின்றன.

1. ஆரம்ப உபங்கியாசப் படலம்.

செல்வம்பொழிந்த ஆர்மஸ் இந்தியாமுதலிய இடங்களிலும் தங்கமாரிபெய்கின்ற கீழ்த்தேசங்களிலும் கிடைப்பதற்கரிதான முத்துசரங்கள் பொன்சரங்கள் நவரத்தினங்கள் முதலியவைகளால் சிங்காரிக்கப்பட்ட சொர்ணமயமான ஓர் மகத்வ சிங்காசனத்தில் வேதாளம் ஏக சக்கிராதிபதியாய் வீற்றிருந்தனன். யாதேனும் ஓர் நம்பிக்கையின்றியும் வீண் எண்ணங்களினாலும் விடாய்ப்பினாலும் நிறைந்தவனாயிருந்தான். உன்னதமான அச்சிங்காசனத்திலிருந்து வானத்துக்கு விரோதமாய்ப் போர்புரிந்து ஜெயங்கொள்ளலாமென்று எண்ணமுற்று அடியில் வரும்வண்ணம் பேசத்தொடங்கினன்.

வல்லமைகளே, அதிகாரங்களே, வானத்தின் தேவர்களே, நீங்கள் வீழ்ந்ததினால் ஒடுக்கப்பட்டவர்களானீர்கள்; ஆயினும் அழியாத ஆவிகளாயிருப்ப

திலும் பாதாளம் தன்னுடைய அதிகாரத்துக்குள் உங்களை அடக்கிவைத்திருக்கக் கூடாது. நான் வானத்தை இழந்துவிட்டதாக எண்ணமுற்றிருக்கிறேனென்று ஓர்போதிலும் நினையாதிருங்கள். வானவாசிகளாகிய நாம் எவ்வளவுக்கு தாழ்மையான ஸ்திதியிலிருந்து எழும்புகிறோமோ, அவ்வளவுக்கு மகிமையை யடைவோம். யாவருக்கும் பயங்கரத்தையும் உண்டுபண்ணுவோம். இதுவுமன்றி, இனி இழிவிடக் கேடான நிலைமையில் வீழ்வோமென்கிற நினைவும் நமக்குள் இராமற்போகும். உங்கள் தலைக்கர்த்தனுகிய நானோ நீதியும் நேர்மையும், மாறுதலுமான பிரமாணத்தினால் சிருட்டிக்கப்பட்டவனுயிருக்கிறேன். ஆலோசனையிலும் சண்டைபுரிவதிலும் சிறந்தவனுயுஞ் சுயாதீனனும் மேல்விசாரணைக் கர்த்தனுயுமிருக்கிறேன். நான் வீற்றிருக்கும் இச் சிங்காசனம் உங்கள் பூரண சம்மதத்தினால் எனக்குக் கொடுக்கப்பட்டதாயிருக்கிறது; இதற்குப் பகைவர் ஒருவருமில்லை. வானுலகத்தில் சிறப்புற்றிருப்பவர்களை அவர்களுக்குத் தாழ்ந்தவர்கள் பகைப்பதற்கிடமுண்டு; ஆனால் இங்கேயோ உங்கள் அரணுங் கோட்டையுமாகிய நான் எவ்வளவுக்கு உங்களிலுஞ் சிறந்திருக்கிறேனோ அவ்வளவுக்கு இடிகளினால் நாசஞ்செய்பவருக்குச் சமீபத்திலிருக்கிறேன். மேலும் உங்களிலும் அதிகச் சங்கடங்களை அனுபவிக்க விதிக்கப்பட்டவனுயுமிருக்கிறேன். அப்படியிருப்பதால் யார் என்னுடைய நிலைமையை யாசித்து எனக்குப் பகைவராவார்கள். பயன் எங்கனமில்லையோ அங்கனம் கட்சியும் விவாதமும் இல்லை. நரகத்தில் முதன்மையானவிடத்தை யாசிப்பவனும் இருப்பானோ? எவனாயினும் தனக்கிருக்கும் துன்பம் போதாதென்று அதிகமான துன்பத்தை விழைவானோ? ஆகையால் விண்ணுலகத்திலும் நமக்கிராத அன்னியோன்னிய ஐக்கமும் உறுதியான கட்டுப்பாடும் மாறாத சம்பந்தமும் இவ்விடத்தில் இருக்கின்றமையால், அவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு நம்முடைய புராதனமும் நியாயமுமான சுதந்தரத்தைத் தேடப்போவோமாக. இதுவே நாம் அனுபவிக்கவேண்டிய சிறந்த வாழ்வு. ஆதலால் மேற்சொல்லிய காரியம் சித்திபெறுவதற்கு, பகிரங்கமாய்ச் சண்டை புரிவதோ அல்லது தந்திரவுபாயமோ, இவ்விரண்டில் எது அனுகூலமானதென்று இம்மந்திராலோசனைச் சபையில் தீர்மானிக்கவேண்டியது. எவர்கள் யுக்தியான ஆலோசனை சொல்லக்கூடுமோ அவர்கள் தாராளமாய்ப் பேசட்டுமென்றான்.

2. மோளோகுப் பிரசங்கப் படலம்.

இவ்வாறு வேதாளம் அச்சங்கத்தின் நோக்கத்தை வெளியிட்டான். செங்கோல் பிடித்து அரசகோலமாய் நின்ற மோளோகு என்பவன் முதன்மையாக பேசத்தொடங்கினான். இவன் வானுலகத்தில் போர்செய்த ஆவிகளில் கடூரக்கனும் முரட்டாட்டக்காரனுமாயிருந்தவன். அவநம்பிக்கையினால் அதிக பயங்கரமுள்ளவனுயினன். பராக்கிரமத்தில் நித்தியமானவருக்குச் சமமாக எண்ணப்பட விரும்பினதோடு, அவருக்கெள்ளளவேனும் குறைந்திருப்பது மகா இழிவென்றெண்ணினவன். கடவுளையாவது நரகத்தையாவது வேறெந்த காரியத்தையாவது ஓர்பொருட்டாக எண்ணுதவனாய் அடியில் வரும்விதமாகப் பேசினன்.

பகிரங்கமாய்ப் போர்செய்வதே எனது அபிப்பிராயம்; தந்திரோபாயங்களைக்குறித்து நான் தைரியமாய்ப் பேசமாட்டேன். எவர்களுக்கு அவைகள் அவசியமாய்க் காணப்படுகின்றனவோ, அவைகளை அவர்கள் அவசியமாயிருக்கும்போது கையாடட்டும். இச்சமயத்தில் அவைகள் உதவமாட்டா; ஏனென்றால் நாம் ஆலோசனைச் சங்கத்தில் உட்கார்ந்திருக்கும் இவ்வேளையில் எண்ணிறந்த தூதர்கள் ஆயுதந் தரித்தவர்களாய் நம்முடைய தீர்மானத்துக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். புறக்கணிக்கப்பட்டவர்களைப்போல அவர்களைக் காத்திருக்கச்செய்வது யுக்தமோ? இருளும் லச்சையும் நிறைந்த இக்குகையை இருப்பிடமாகக்கொண்டு அதில் வசிப்பது நன்மையோ? நாம் தாமதஞ் செய்வதினாலல்லவோ விண்ணின் அரசர் கொடுங்கோன்மையாய் அரசாளுகிறார். தந்திரோபாயம் உதவாது; நரகத்தின் அக்கினித்தழல்களையும் அதின் உக்கிரவாதனைகளையுமே ஆயுதங்களாக அணிந்துகொண்டு வானுலகத்திற்கு எல்லோரும் அதிசீக்கிரத்திற்சென்று அதின் மாடமாளிகைகளையுங் கூடகோபுரங்களையும் இடித்து நம்மை வாதனை செய்கிறவனை எதிர்ப்போமாக. அப்போது சர்வசக்தியுடைய அவருடைய யுத்த உபகரணங்களை எதிர்க்கப் பாதாள இடிகளும், அவருடைய மின்னலை அணைக்க நரகத்தின் கரிய அக்கினியும் அவருடைய தூதர் மேலும் அவருடைய சிம்மாசனத்தைச் சுற்றியும் எறிய கந்தகத்தழல்களும் நம்முடைய வசத்திலிருப்பதைப் பார்ப்பார். நம்மை வாதிக்கும்பொருட்டு சமைக்கப்பட்ட கருவிகளையே நாம் அவருக்கு எதிராகப் பிரயோகிக்கலாம். ஓர்வேளை இக்காரியம் நடந்தேறும்படி செய்வது மிகப் பிரயாசமான காரியமென்றும், நம்மிலும் பலத்த எதிரிக்கு விரோதமாக விரித்த செக்கைகளுடன் படையெடுத்துப்போவது அசாத்தியமான காரியமென்றும் உங்களில் சிலர் ஆட்சேபிக்கலாம். மறதியின் ஏரியில் வசிப்பவர்களே! இந்நரகத்தில் அடைப்பட்டும் இன்னும் சொஸ்தபுத்தியுடனிருப்பவர்களே! நாம் படையெடுத்துப்போவது நம்முடைய சுயார்ச்சித ஸ்தலத்தைக் கைவசப்படுத்தப் போகிறோமேயல்லாது வேறல்ல. மேலும் வானுலகத்திலிருந்து பாதாளத்தில் வீழ்ந்தது செக்கைகளையுடைய நமக்கு முற்றிலும் அன்னியமான காரியமாயிருக்கிறதேயன்றி பாதாளத்திலிருந்து வானுலகத்துக்குப் பறந்துபோவது அன்னியமான காரியமல்ல, அது இயற்கையான காரியமென்று உணர்ந்துகொள்ளுங்கள். நம்முடைய கொடிய சத்துரு நம்மை விடேன் தொடேனென்று துரத்தினபோது நாம் கட்டாயத்தோடும் வருத்தத்தோடும் இப்பாதாளலோகத்திற்குப் பறந்தோடி வரவில்லையோ? அப்படியிருக்க இப்போது மேலுலகத்துக்கு எறிப்போவது அசாத்தியமென் றெண்ணவேண்டுவதென்ன? நாம் இவ்விடத்தில் பயந்துகொண்டிருப்பதை எதிராளியானவர் பார்த்து நமக்கு இன்னம் இடையூறு செய்ய ஏற்பட்டால் எப்படி? இவ்விடத்தில் இருப்பதைவிடக் கேடானகாரியம் ஒன்றுண்டோ? பாக்கியத்தை இழந்ததுமன்றி அவியாத அக்கினிக்கடலில் அழிந்து கெட்டுப்போகும்படி நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இத்துன்பங்களுக்கு யாதேனும் ஓர் முடிவுண்டாகுமென்கிற நம்பிக்கையுமில்லை. அவருடைய கோபாக்கினியின் ஆட்களானதும், சகிக்க முடியாத அவருடைய சவுக்கினால் அடிபடுவதும் உக்கிரதண்டனைகளை அனுபவிப்பதும் நாம் அவருக்கு விரோதமாய்ச் செய்த குற்றங்களை உணருவதுபோல இருக்கிறதே. இப்படி அழிந்து கெட்டு வெந்து நொந்து போவதைவிட சர்வநாசமடையலாமே; ஆதலின் ஏன் பயப்படுகிறீர்கள்? அவருடைய சாங்கோபாங்கத்தை மூட்டிவிட அஞ்சவேண்டுவதென்ன? அவருடைய கோபம் எவ்வளவு கடுமையானபோதிலும் ஒன்று நமக்கு அதிக துன்பங்களை விளைவிக்கும், இல்லாவிட்டால் நம்மை வேரற்றுப்போகச் செய்யும். இதற்கு மிஞ்சி ஒன்றுமில்லையே, ஆதலால் நித்திய ஆவிகளாகிய நாம் இவ்வித நிர்ப்பந்தஸ்திதியி லிருப்பதைவிட இல்லாமற்போவதே மகா உத்தமம். அப்படிப் போகக் கூடாதபட்சத்தில், நம்மைவிடக் கேடான நிலைமையிலிருப்பவர்கள் ஒருவருமில்லை. வானுலகத்தை அலங்கோலப்படுத்த நமக்குப் போர்த சக்தியுண்டென்பதற்கு அனுபோகமே சாட்சி. நாம் அடிக்கடி அவருடைய சிங்காசனத்துக்கு இடையூறு செய்து ஜெயங்கொள்ளாவிடினும் அப்படிச் செய்வது நன்றாய்ப் பழிவாங்குகிறதற்குச் சரியன்றோ; இப்படி மகா உக்கிரத்துடன் பேசினன். அவனுடைய முகதேஜசில் சர்வாங்கப்பழியின் எண்ணம் வெளிப்பட்டதுந்தவிர கொடிய யுத்தத்துக்குத் தூதர்களை எழுப்பிவிடுகிறதாயுமிருந்தது.

3. பேலியாள் பிரசங்கப் படலம்.

தட்சணமே அருகாமையிலிருந்த பேலியாள் என்பவன் எழுந்திருந்தான். இவன் சுகுணமான நடத்தையும் தயாளச்சிந்தையு முள்ளவனாகவுங் காணப்பட்டான். பாதாளத்தில் வீழ்ந்தவர்களில் இவனைவிட சவுந்தரியமும் இலட்சணமுமான புருஷர்கள் இல்லை. அதிக மரியாதைக்கு யோக்கியனாகவும் சமர்த்தான காரியங்களை நடப்பிக்க வல்லவனைப்போலவும் காணப்பட்டான் ஆயினும் இவனுக்குள் சகலவிதமான வஞ்சனைகளும் இரண்டகங்களுங் குடிகொண்டிருந்தன. அவன் வாயின் மொழிகள் மதுரமான மன்னாவுக்கொப்பாயும் ஆழ்ந்த ஆலோசனைகளைத் தாறுமாறாக்க உதவாத விஷயங்களை பலத்த நியாயங்களைப்போலப் புலப்படுத்திக் காட்டத்தக்க சாமர்த்தியவானுயுமிருந்தான். தீய காரியங்களில் மகா சுறுசுறுப்புள்ளவனும் நற்காரியங்களில் பயங்காலியும் சோம்பனுமாயிருந்தான். ஆயினும் அவன் தூதர்களின் செவிகளுக் கினிமையாயும், அவர்களுடைய உள்ளத்தை ஆதீனமாய் வசப்படுத்திக்கொள்ளத் தக்கவிதமாயும் பேசத்தொடங்கினன்.

ஓ பிரபுக்களே! பகை, பழிவாங்குதல் முதலிய லட்சணங்களில் நான் எவ்வளவேனும் உங்களுக்குத் தாழ்ந்தவனல்ல; ஆனதால் பகிரங்கமாய்ச் சண்டைசெய்வதே எனக்கும் மெத்தவும் பிரீதியாயிருக்கிறது. ஆயினும் விரைவில் யுத்தம்புரிய வேண்டுமென்று உங்களில் சிலர் சொல்லியிருக்கிற நியாயங்களை ஆராயுங்கால் என் மனம் பேதலிக்கிறது. காரியம் சித்தியாகுமோவென்றும் சந்தேகிக்கிறேன்.

(இன்னும் வரும்.)

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt,
Post Box 501, Madras.

Articles for insertion should be sent to the Editor,
The Rev. Dr. J. Lazarus, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட வருஷத்துக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிகளையும் அனுப்பலாம். 10 பிரதிகளுக்கு வருஷத்துக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் பிரயத்தைத் தபாற்கூலியுடனே சென்னை பிரசுரிப்பு நூறாதக்கடுத்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட் கனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

Registered No. M. 442.

सत्यमेव जयति

THE MESSENGER OF TRUTH

சத்திய தூதன்.

JULY, 1917. PRICE, 1 PIE.—விலை, க பை. ஜூலை, 1917.

THE REGISTRAR 7 - JUL 1917 MADRAS

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

அங்கிலேய மந்திரி. — இங்கிலாந்தின் முதல் மந்திரியாகிய லார்ட் ஜார்ஜ் அவர்கள் உயர்குலத்தில் பிறந்தவரல்ல; அவர் சிற்றப்பன் சக்கிலிவேலை செய்து அவரைப் பாதுகாத்து படிப்பித்தவர். இந்தப் பிறப்பையோ யாரும் எண்ணுகிறதேயில்லை. அவருடைய சாமர்த்தியத்தையும் சற்குணத்தையும் மாத்திரம் மதிக்கிறார்கள். இந்தியாவிலும் இனி இவ்வாறே நடக்கும்.

சிறைபோன்ற சிட்சை.—மிஸ்ஸிஸ் பெசெண்டம்மாளும் அவர்கள் தோழர் இருவரும் கவர்ன்மெண்டுக்கு விரோதமாக எழுதிவருகிறார்களென்ற காரணத்தால் சென்னையிலாவது செங்கல்பட்டு ஜில்லாவிலாவது இந்த முதல்தேதி தொடங்கி இருக்கப்படாதென்று கட்டளை பிறந்திருக்கிறது. வேறெங்கே இருந்தாலும், எதை ஒன்றும் எழுதவும் கூடாது, சபைகளிலே பேசவுங்கூடாதாம்.

பெண்கள் விவாகம்.—பெண்களை அதிபாலியத்திலே—அதாவது 13, 14 வயதிலே கலியாணஞ் செய்துவிடுகிறதினாலே சுகவீனம், பலவீனம், பாலியமரணம், பற்பல வியாதிகள், பிள்ளைகள் பலவீனம், மாணம் முதலிய அபாயங்கள் நேரிடுவதால், தக்க வயதிலேமாத்திரம் விவாகம் பண்ணவேண்டுமென்று மைசூரிலே ஜட்ஜ் சந்திரசேகர ஐயர் மனைவியார் பிரசங்கம் பண்ணியிருக்கிறார்கள்.

நமது கவர்னரவர்கள்.—சென்ற சென்னைச் சங்கத்திலே மெம்பர்களும் ஏனையவர்களும் சுயஅரசுக்கு அதிக ஆசைவைக்கலாகாதென்று புத்தி புகன்றது அனேக இந்தியருக்கு மனச்சங்கடம் உண்டு பண்ணியிருக்கிறது. நல்ல ஒரு ஏற்பாடு செய்து, சமாதானம் வருவிப்பதே சத்செயலாகும். கானடா, ஆஸ்திரேலியா முதலிய சுயராஜ்யங்கள் போலவே, இந்தியாவும் தன் சொந்த அரசை நடத்தவேண்டுமென்பது பெரும்பாலாரின் விருப்பம்.

ஜர்மன்களின் அவலட்சணம்.—சண்டையிற் கொல்லுண்ட தங்கள் போர்வீரர்ப்பிணங்களை ஜர்மன் வேலைக்காரர் ரெயிலில் கட்டுக்கட்டாக ஏற்றிக்கொண்டுபோய், பெரிய யந்திரங்களில் போட்டு, சதைத்து நொறுக்கி, எலும்புகளையெல்லாம் பொடிசெய்து எருவாக்கி, நிணத்தையும் கொழுப்பையும் எண்ணெயிறக்கி, அவற்றைக்கொண்டு சோப்பு முதலானவை செய்துவருகிறார்களாம். நாற்றமோ சகிக்கமாட்டாததாம். பேய்கள்கூட இப்படிப்பட்ட அசுசியான வேலைசெய்யா.

சுயராஜ்ய சங்கம்.—பிரிட்டிஷ் ராஜ்யத்திலே இங்கிலாந்து மாத்திரமல்ல, கானடா, ஆஸ்திரேலியா, நியுஸெலந்து, இந்தியா, தென்ஆப்பிரிக்கா முதலிய பல ராஜ்யங்கள் அடங்கியுள்ளன. தாய்ராஜ்யத்தின் பொதுவிஷய விருத்தியிலே இவைகளனைத்தும் கரிசனை யெடுக்கும்படி பொதுவான ஆலோசனைச்சங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்துக்கு இந்தியாவிலிருந்து மூன்றுபேர் அனுப்பப்பட்டார்கள். அவர்கள்: ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் (கவர்னர்), ஸர் சின்ஹா (ஜட்ஜ்), மஹாராஜா பிக்கனீர் இவர்கள் மூவரும் அங்குச் சென்றுதங்கள் கடமைகளை நிறைவேற்றித் திரும்பியிருக்கிறார்கள்.

யுத்தக்கடன்.—இந்திய கவர்ன்மெண்டார் யுத்தச்செலவுக்காக இங்கிலாந்துக்கு 150 கோடி ரூ. உதவியிருக்கிறார்கள். இது உதாரச்செயலாயினும் 14 நாள் யுத்தச்செலவுக்குமாத்திரம் உதவும். இந்தப் பெருங்கடனைத் தீர்க்கும்பொருட்டு, 50 கோடி கடனாகவும், 50 கோடி இந்தியவரியாகவும், 50 கோடி இத்தேசத்துக்கு இறக்குமதியான இங்கிலீஷ் துணிவரியாகவும் சேர்த்துவருகிறார்கள். கடன் தொகையிலே 32 கோடி சேர்ந்துவிட்டது. இதற்கு வட்டி நூற்றுக்கு 5½ ரூ. கடன் மீட்பது, 1929, 1940-ம் வருஷங்கள் தபாலாப்பீசிலே 7½ ரூ. போட்டால் 3 வருஷத்திலே அதை 10 ரூ. கொடுத்துத் தீர்ப்பார்கள்.

மதுபான விவரம்.—சென்னை ராஜதானியிலே சென்ற 15 வருஷத்திலே ஜனத்தொகை நூற்றுக்கு இரண்டுவீதம்மாத்திரம் அதிகரித்தும், மதுபானம் நூற்றுக்கு இருநூறுவீதமாக அதிகரித்திருப்பதைப் பற்றி கவர்ன்மெண்டார் வெகுவும் சிரமப்பட்டு, இதை விசாரித்துக் குறைக்கும்படி ஒரு கம்மிட்டி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த மதுபானவிர்த்தி வரி அதிகமாக்கப்பட்டும், நடந்தேறிவருகிறது. சாராய வரி 4-11-இலிருந்து 8-12 ஆகவும், கள்ளு வரி 3, 3-12 ஆகவும் உயர்த்தியும், ஜனங்கள் அதிகமாகக் குடிக்கிறார்கள். இது நிற்க, சென்னபட்டணத்திலே அனேக கடைகள் அடைபட்டன. முன்னே 48 சாராயக்கடைகளிருந்தன; இப்பொழுது 28 மாத்திரம்; 302 கள்ளுக்கடைகள் இருந்தன, இப்பொழுது 82 மாத்திரம். இவ்வாறு குறைந்தும், மதுபானம் இருமடங்கதிகரித்துவிட்டிருப்பது துக்கப்படத்தக்க காரியமே.

இந்தியர் சேனை. — கல்வி பயின்றவர்களைக் கொண்டொரு சேனை உண்டாக்கவேண்டுமென்று இந்திய கவர்ன்மெண்டார் ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வயது 18 முதல் 30 வரைக்குமுள்ளவர்கள் புறத்தேசச் சண்டைக்குப் போகவும், 50 வயதுக்குட்பட்டவர்கள் உள்நாட்டிற் போர்செய்யவும் ஏற்பாடாயிருக்கிறது. அங்கிலேயர் கட்டாயஞ் சேரவேண்டுமென்றும், இந்தியர் மனமுண்டானல் சேரலாமென்றும் சட்டம். ஏராளமான அங்கிலேயர் பல சாக்குச்சொல்லித் தப்பித்துக்கொண்டார்கள். ஆயிரம்பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். இந்தியரில் 600 சில்லறை கையொப்பம் செய்திருக்கிறார்கள். இந்தியர்களுக்கு 3 மாதக் கபாத்தும், மாதம் 11 ரூ. சம்பளமும் உடுப்பும் கொடுப்பார்கள். இது சுயேச்சைச் சேனை அல்லது வாலண்டியர் காரட்; சாமானிய சிப்பாய் ஊழியமன்று. குறைந்தபட்சம் ஆயிரம் இந்தியர் சேரவேண்டும்.

சர்வஜன கல்வி.—இந்தியாவானது கல்வி விஷயத்திலே உலகத்தின் சகல ராஜ்யங்களிலும் கடை

ஜூலை மாத பஞ்சாங்கம்.—

வாரம்	ஜூலை = ஆனி—ஆடி. ● அமாவாசை, 19உ. ⊙ பௌர்ணமி, 4உ.					ஆனி			ஆடி	
ஞாயி ...	1	8	15	22	29	18	25	32	7	14
திங்க ...	2	9	16	23	30	19	26	1	8	15
செவ் ...	3	10	17	24	31	20	27	2	9	16
புதன் ...	4	11	18	25	...	21	28	3	10	...
வியா ...	5	12	19	26	...	22	29	4	11	...
வெள் ...	6	13	20	27	...	23	30	5	12	...
சனி ...	7	14	21	28	...	24	31	6	13	...

சியனாது. இது நமக்குப் பெருத்த இகழ்ச்சி. கவர்ன்மெண்டார் இதைக் குறித்து அவ்வளவாய்க் கரிசனை யெடுத்துக்கொள்ளுகிறதில்லை. ஜனங்கள் கல்விபயிலுவது அவர்களுக்கு வெறுப்பல்ல; ஆனல் அதிகப் பணச்செலவும் வேறுதடைகளும் சேரிடுமென் றஞ்சுகிறார்கள். இந்தியாவின் ஒரு சுதேச ராஜ்யமான பரோடாவிலே அரசனது முயற்சியினாலே கல்விப்பயிற்சி சாதாரணமாகிவிட்டது. ஏழு வயதுமுதல் பன்னிரண்டு வயதுள்ளமட்டும் ஆண்கள் பெண்கள் யாவரும் தவருமல் பள்ளிக்கூடம் போகவேண்டுமென்று ஒரு சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இது தொடங்கி சிலகாலமானதால், இப்பொழுது நூறு ஆண்பிள்ளைகளில் நூறுபேரும், நூறு பெண்பிள்ளைகளில் 90 பேரும் மாணக்கராயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராஜ்யத்திலோ, நூறு பேரில் ஒருவன்மட்டும் பாடசாலைக்குப் போய்வருகிறன். ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள திண்ணைப்பள்ளிகளுக்குச் சர்க்கார் தக்க உதவி புரிந்துவந்தால் கல்வி விரைவிலே இந்தியா முழுவதும் பரவிவிடுமென்பதற்கு ஐயமில்லை. மிஷன் ஸ்தானங்களிலும் காலேஜ் ஹைஸ்கூல்களுக்கு ஏராளமான பணஞ் செலவிடுகிறதைக் குறைத்து, ஏழைப் பிள்ளைகளுக்குச் சொற்பக் கல்விகற்பிக்க அதிகம் முயலவேண்டும்.

THE WAR

யுத்த வரலாறு

சென்ற மாதத்திலே நட்பரசருக்கு அனேக யுத்தஜெயங்கள் உண்டாயின. ஜர்மன்கள் இன்னு பதினைந்து தோல்வியுற்று இரண்டு இரண்டரை வருஷமாகக் கட்டியிருந்த கோட்டை கொத்தளங்கள் பலவும் தவிடு பொடியாக இங்கிலீஷ் குண்டுகளாலே அழிக்கப்பெற்று, புது இடங்களிலே சொற்ப சேனைகளுடன் விக்கத்தடனும் திகிலுடனும் காத்துக்கிடக்கிறார்கள். கடைசியாய் அவர்கள் அடைந்த அடிஜெயம் மகா அபாயகரமானது. இது பெல்ஜியத்திலுள்ள மேட்டுப்பூமி. இதை உடைத் தந்தாக்க ஆங்கிலேயருக்கு பத்துலட்சம் பவுன் செலவாயிற்றும். பதினயிரக் கணக்கான ஜர்மன்கள் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். இப்பேர்ப்பட்ட அபஜெயங்களினலும், இன்னும் வரவிருக்கும் தோல்விகளினலும் ஜர்மன்கள் பயந்து சமாதானத்துக்கு வேண்டி அனேக ரகசிய தந்திரோபாயங்கள் செய்துவருகிறார்கள். "தங்கள் சொந்த சோஷலிஸ்டுகளைக்கொண்டும் (இவர்கள் ஒவ்வொரு தேசத்திலும் ராஜாங்கத்துக்கு விரோதமாகக் கட்சிசெய்து வருகிறவர்கள்) மற்றவர்களைக் கொண்டும் ரஷியாவைச் சமாதானப்படுத்திக்கொள்ள முயலுகிறார்கள். ஆயினும் யாதொரு பயனுங்காணும். சப்மெரின் சச்சரவும் ஒழிந்துவிட்டதுபோலிருக்கிறது. வாரந்தோறும் இரண்டு மூன்று வர்த்தகக்கப்பல்கள் மூழ்குவிக்கப்பட்டாலும், ஆயிரமான மரக்கலங்கள் சமுத்திரத்தின்மீது சுகமாய் யாத்திரைசெய்து வருகின்றன. அனேக சப்மெரின்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனல் ஜர்மன்களுக்கிருந்த கடைசிக் கொம்பும் முறிந்துவிட்டது. இனி அவர்கள் ருஷெங்களை லண்டை போகமுடியாது. அனேக புது ரெயில் பாதைகள் போட்டுவருகிறார்கள். பலஸ்தீனவையும் கைப்பற்றிவருகிறார்கள். துருக்கியின் பலமும் கிலமும் முக்கால்வாசிக் குறைந்துவிட்டது. இனி இவர்கள் யூதர்களையும் கிரிஸ்தவர்களையும் கொடுமை செய்யக்கூடாது. அமெரிக்கா அளவற்ற உதவிபுரியத் தொடங்கலாயிற்று. பிரான்சுக்கு ஒரு சேனை யனுப்பியிருக்கிறார்கள். ஒரு லட்சம் ஆகாயக்கப்பல் கட்டப்போகிறார்கள். இதையெல்லாம் கவனிக்கும்பொழுது யுத்தம் இவ்வருஷம் முடிவுபெருதுபோலும். ஆகிலும் அக்கரையில்லை. நித்திய சமாதானமும், அக்கிரம அரசின் முடிவும் வந்தால் போதும். இனி ஒருக்காலும் சண்டையுண்டாகாதவண்ணம் தேசங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். சமாதானஞ் செய்கையிலே, ஜர்மனி இனி யொருக்காலும் யுத்தசன்னதஞ் செய்யாதென்று சபதம் வாங்கிக்கொள்வார்கள். இப்பொழுது பெல்ஜியம் தேசத்திலே 600 சதுரமைல் நட்பரசர்கையிலகப்பட்டுக்கொண்டது.

SAMUEL HEBICH OF MANGALORE

சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்.

நீர்வளம் நிலவளம் பொருந்தி, குடித்தனர் பயிர்ஜீவனம் செய்யக்கூடிய ஓர் கிராமமுண்டு. அதன் பெயர் கெலின்ஜன். இக்கிராமம் ஜெர்மனியாதேசம் வற்டம்பர்க்கிலுள்ள அல்ம் பட்டணத்திற் கருகாமையிலுள்ளது. இதில் 1803-ம் ஞு ஏப்ரல்மீ 29-ம்டயில் சாமுவேல் ஹெபிக் என்றவர் பிறந்தார். இவருடைய தகப்பனர் பெயர் பிறெடரிக் கார்ல் ஹெபிக். இவர் அல்ம் பட்டணத்துவாசி. ஒரேமாதிரியான திர்ணய குணமுடையவர், இருபத்தெட்டு வருஷகாலமாக கெலின்ஜன் கிராமத்து சபைபோதகராக உழைத்தனர். ஆவியின் பட்டயத்தை வீசுவதைவிட ராஜ்யசபையின் பட்டயத்தை வீசுவதில் தீரன். 1805-ம் வருஷத்தில் அல்ம் பட்டணத்தில் பிரான்சுக்காரருக்கும், ஆஸ்திரியருக்கும் ஒரு யுத்தம் நடந்தது. அப்படிப் பட்ட கலகம் உண்டான காலத்தில் ஏதாகிலும் தொந்திரவு உண்டாகிற வேளைகளில், தம் கையில் ஒப்புவிக்கப்பட்ட ஜனங்களைக் காப்பாற்ற தம் உறையிலுள்ள பட்டயத்தை எப்போதும் இழுக்க ஆயத்தமாய் இருப்பார். இது நிற்க, அக்காலத்து மனுஷர் காரணவாத பிரியரானபடியால் இருவருக்கும் அதேமாதிரியான கொள்கை படிந்துவிட்டது. அதனல் அவர் ஆத்துமாக்களை ஆதாயப் படுத்திக்கொள்ள அவ்வளவு ஆசையுள்ளவரல்ல. வேத புத்தகத்தை படிக்கிறதைவிட இலக்கிய கல்வி நூல்களை வாசிப்பதே முக்கியமென்று நினைப்பார். இவருக்கு ஏழு குமாரர்களிருந்தார்கள். இவர்கள் எல்லாரும் தகப்பனைவிட உயரமுடையவர்கள். இந்த போதகர் வீட்டில் தரித்திரம் குடிகொண்டதால் இவருடைய பெரிய மக்களெல்லாம் வெகு சீக்கிரம் வியாபாரத்திலும் சேனையிலும் உத்தியோகம் பெற்றார்கள். இவருடைய நான்காம் புத்திரன் தான் சாமுவேல் ஹெபிக் என்றவர். இவர் குணத்தில் சிறந்தவர், ஒழுக்கமும் சாந்தமுமுடையவர்.

எரிபல் எரிமலை.

ஆதலால் இவருடைய பெற்றோர் இவரை போதக ஊழியத்திலிட நிர்மானித்தனர். இவரையோ ர்ன்விசாலைக்கனுப்பி பயிற்றுவிக்க பெற்றோரால் கூடாமையாய் இருந்தபடியால் இவருடைய தமப்பனரே இவருக்கு கல்வியை கற்பிக்கத் தொடங்கினர். ஆனால் இந்த சிறுவனுடைய மனதின், பிரஞ்சு பாஷைகளையும், ஞான உபதேசத்தையும் கற்றுக்கொடுத்தார். இதனல் சாமுவேல் ஹெபிக் அநேகப் பிரசங்கங்களை மனப்பாடமாய் படிக்கவேண்டியதாயிருந்தது. அவருடைய கல்வி, படிப்படியாய் விர்த்தியடைய ஒரு ஒழுங்கானவழியில் சொல்லிக்கொடுக்கப்படவில்லை.

அநேக இலக்கிய கல்விநூல்களிலிருந்து கற்றிருந்தாலும் இவர் அதிகமாய் அறிந்துகொண்டது கொஞ்சமே. அக்காலத்து ஜனங்கள் ரசனையான தேட்டமுடையவர்கள், இதன் நிமித்தியம் இவருடைய தகப்பனர் இவருக்கு வேதத்தில் சங்கீத புஸ்தகத்தையும், தீர்க்கதரிசன புஸ்தகங்களின் சில விசேஷித்த பாகங்களையும் கற்றுக்கொடுத்திருந்தார். சில வருஷங்கள் சென்றபிறகு சாமுவேல் ஹெபிக் தம் தகப்பனருடன் புதிய ஏற்பாட்டை வாசித்தாரோ என்பதைப்பற்றி அவருக்கு ஞாபகமில்லை. ஆனல் ஒரு காரியம்மாத்திரம் அவருக்கு அடிக்கடி ஞாபகம்வரும், அதாவது, தம் தகப்பனர் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை உச்சரிக்கும்போது அதிக மரியாதையைக் காட்ட தம் தலைமேலுள்ள குல்லாவை கழட்டிவிடுவாராம். இந்த சம்பவம் சாமுவேலின் மனதில் ஆழமாய்ப் பதிந்திருந்தது. ஆனல் இன்னொரு சமயத்தில் தம் தகப்பனருக்கும் தமையனுக்கும் கடந்த ஒரு சம்பாஷணையில், "வேத புஸ்தகத்திலுள்ளவைகள் எல்லாம் நம்பப்படத் தக்கதல்ல, ஆனபோதிலும் சாதாரண ஜனங்களின் நிமித்தியம் பழையகாலத்து விசுவாசத்தை தொக்கியே கற்பிப்பது சரி என்று தம் தகப்பனர் சொன்னதை இவர் கேட்டிருந்தார். இந்தவிதமான விபரீதச்சொல் சாமுவேலுக்கு ஒரு பிரமிப்பை உண்டாக்கினது. ஆனபோதிலும் நாளடைவில் தம் தகப்பனரின் வார்த்தையைப்பற்றி ஒருவேளை தப்பிதமாய் நினைத் திருப்பேனேவென்று யோசித்தார். சாமுவேலின் இளம்பிராயம்முழுதும், தம் தகப்பனரின் பக்தியான செய்கையையும், அவமரியாதையான வார்த்தையையும் தொடர்ந்தே யோசித்துவந்தும் இவ்வித ஒவ்வாமையான விஷயத்தை அறிந்துகொள்ளக் கூடாதவராய் இருந்தார். இவர் இளைஞய் இருக்கும்போது அநேகமுறை பிரமிப்புடையவராகவும் சொர்ப்பனம் காண்கிறவராகவும், மெய் மறந்தவராகவும்காணப்பட்டார். அப்படிப்பட்டக் காலங்களில் அவருடைய உணர்ச்சி எப்படி இருந்ததென்பதைப் பற்றி அவர் எழுதின ஒரு கடிதத்தின் மூலமாய்த் தெரிகிறது.

"என் தலைக்குமேலே சிறப்பும் அழகும், நீலவர்ணமுடைய ஆகாயத்தை நான் பார்க்கும்பொழுது எனக்குண்டான யோசனைகள் கொஞ்சமல்ல. ஆனலும் என்ன; என் ஆத்துமா தேறுதலடைவதை நான் காணவில்லை, எனக்குள்ளே ஒருவித துக்கமும் குழப்பமும் பெருகி இருந்தது. சாத்தான் என்னை ஜெயித்து, இச்சையானது என் நிஷ்கபடத்தை அழித்தாலும் என் கவலையோ என்னை விட்டு நீங்கவில்லை. என் இருதயமோ அமைதியில்லாமல் ஏதோ ஒரு மேலான விஷயத்தை ஆவலாய்த் தேடினது. நான் பதின்மூன்று வயதாயிருக்கும்போது என் தமையன் மாக்ஸ் என்பவர் எனக்கு மேலே பதிநான்கு வருஷம் மூத்தவராய் இருந்தார். அவர் லூபேக் என்ற ஊரில் மதுரமான தின்பண்டக்கடை ஒன்று வைத்திருந்தார். அவருடைய முதல் மனைவி மரித்துப்போனபடியால் இரண்டாம் முறை விவாகம் செய்துகொண்டார். அவருடைய கடையில் பதின்மூன்றுபேர் வேலை செய்துக்கொண்டிருந்தார்கள் ஆனலும் உண்மையான ஆட்களாய் இல்லை. அதனல் அவருடைய கடைக்கு ஒரு பொருப்பான சொந்த ஆள் அவசியம் தன்னேடிருக்கவேண்டுமென்றும், என் பெற்றோருக்கும் எனக்கும் சம்மதமானல் என்னை அவரிடம் அனுப்பும்படி என் பெற்றோரைக் கேட்டுக்கொண்டார். அதன்படியே என் தமையன் வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது. கஷ்டமான படிப்பைவிட்டு விலகுவதற்கு காத்துக்கொண்டிருந்த நான், கெலின்ஜனைவிட்டு எப்போ லூபேக் போவேனேவென்று மூடத்தனமாய் ஆவல்கொண்டேன். கடைசியாய் என் பெற்றோர் உத்திரவுப்படி நான் கெலின்ஜனை விட்டு லூபேக் சேர்ந்தபோது என் தமையன் மனைவி என்னை பக்ஷமாய் ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு 1817-ம் வருஷம் மேமீ 4-ம் தேதியில் என் தமையன் மதுரமான தின்பண்டக் கடையில் தொழிலை பயிலும் வேலையில் அமர்ந்து வெகு முயற்சியோடு வேலைசெய்தேன்.

ஆனல் இப்படிப்பட்ட சமையத்தில் நான் என்னை பிரதிஷ்டை செய்வதிலாகிலும், ஆவிக்குரிய விஷயங்களைத் தேடுவதிலாகிலும் அதிகக் குறைவாகக் காணப்பட்டேன், நான் கடைசியாக செய்த பிரயாணத்தைப்பற்றியும் என் முன்னுனை ஜீவியத்தில் சேர்த்து வைக்கப்போகிற உலக ஆஸ்தியைப்பற்றியும் அதிகமாய் சிந்தித்து பெரும் நோக்கமுடையவனுய் இருந்தேன். நான் என் தமையனிடம் போனவுடன் என் படிப்பிலுள்ள குறைவை நிவர்த்திக்கும்பொருட்டு ஒரு பிரத்தியேகமான உபாத்தியாயனா வீட்டிற்குவரும்படி அமர்த்தி அவரிடம் படிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். இவ்வித ஏற்பாட்டினல் நான் ஒவ்வொரு சாயந்திரங்களையும் என் பாடங்களைப் படிப்பதினல் கழித்தேன். இந்த சமயங்களில் தான் விசேஷமாய் என் அறியாமை இன்னதென்றுக் கற்றுக்கொண்டேன். வியாபாரத்தொழிலைப் பயிலும் மூலாதாரப் பாடங்களை நான் கடையில் கற்றுக்கொள்ள சுமார் மூன்று வருஷம் சென்றது. அதுவலையிலும் உபாத்தியாயர் வீட்டில் கற்றுக்கொடுக்கிற பாடங்களையும் படித்துவந்தேன். அதன்பிறகு என் தமையன், நான் ஒரு வியாபாரத்தொழிலை நடத்தும்படி தீர்மானித்து அப்பட்டணத்திலுள்ள ஒரு பெரிய வியாபார தொழிற்சாலையில் எனக்கோர் வேலையை அமர்த்தினர். நானும் சந்தோஷமாய் 1820-ம் வருஷம் ஈஸ்டர் தினத்தில் இந்த புதிய வேலையை ஒப்புக்கொண்டு அந்த இடத்தில் நான்கு வருஷம் வேலைசெய்தேன்."

டி. யல். ராஸ்,
சங்கிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

மேலும், ஆயுதபரிட்சையிற் றேர்ந்தவனும் ஆலோசனைச்சங்கத்திற்கு அக்கிராசனதிபதியாயுமிருக்கிற வேதாளமும் தன்னுடைய சாமர்த்தியத்தை நம்பக்கூடாமல் அவநம்பிக்கையாய்ப் பேசினதையும், அர்த்தநாசம் நேரிடுமோவென்று அஞ்சுவதையும் பார்த்தீர்களே! அப்படியிருக்க, பழிவாங்கும் விதம் இன்னதென்று உங்களைக் கேட்கிறேன். வானத்தின் கொத்தளங்களில் எண்ணிறந்த சேனைகள் ஆயுதந்தரித்தவர்களாய் காவல்காத்துக்கொண்டிருக்கிறதுமன்றி, அதின் கடைகோடிகளிலும் வேகியோன் இராணுவங்கள் பாளையமிறங்கி இருளின் ராஜ்யத்திலிருந்து யாதேனும் ஓர் வில்லங்கமுமுண்டாகாதபடிக்கு விழிப்புடன் எப்பக்கத்திலும் உளவிக்கொண்டிருப்பதை அறியீர்களோ? அப்படியிருக்கும்போது எவ்வாறு வானுலகத்திற்குள்ளே செல்லலாமென்று நினைக்கிறீர்கள்? நரகத்தின் வல்லமையெல்லாம் ஒன்றுதிரண்டெழும்பி நமக்கொத்தாசைசெய்து, வானத்தின் சுத்தாங்க ஒளிச்சத்தை மாசுபடுத்தச் செய்யக்கூடுமோ? புயபலபராக்கிரமத்தால் யுத்தப்பிரசண்டமாய்ப் போர்செய்தினும், அழியாத தன்மையுடைய நம்முடைய பெரிய சத்துருவின் ஆசனத்தை அசைக்கக் கூடுமோ? வானுலகத்தின் களிம்பற்றதும் களங்கமில்லாததுமான வஸ்துக்கள் நரக உலைத்தின களிம்புற்றதும் களங்கமுள்ளதுமான வஸ்துக்களை உதறிவிடக்கூடாதோ? இப்படி ஜெயிக்கப்பட்டு தாழ்த்தப்பட்டால் நமக்குக் கிடைக்கும் பயன் என்ன? நம்பிக்கையின்மையல்லவோ? சர்வவல்லவர் தம்முடைய கோபத்தையெல்லாம் நமதுமேல் செலுத்த நாம் அவரைக் கோபமூட்டுவது யுக்தியோ? நம்முடைய முடிவு அவ்விதமாயிருக்கவேண்டுமோ? நாம் சுத்த சூனியமாய்ப் போகிறதா? இதுவா நமக்குளமே கொடுக்கும் அவிழ்தம்? மெத்தவும் சேத்தியான அவிழ்தந்தான். நித்திய தன்மையுடைய இந்தத் தத்துவத்தைக் கொஞ்சம் வருத்தத்தினிமித்தம் இழந்துவிடுகிறதா? இருண்ட பாதாளத்தில் உணர்ச்சியும் அசைவுமற்ற பிணங்களுக்கொப்பாக என்றும் அமிழ்ந்திக்கிடக்கிறது நன்மையென்று எண்ணுகிறீர்களோ? நல்லது, ஒருவேளை நம்முடைய பெரிய சத்துருவானவர் நமக்குச் சகாயஞ்செய்வாரென்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு செய்யக்கூடுமென்பதைப்பற்றி எனக்குச் சந்தேகமிருப்பினும், செய்யமாட்டாரென்பதைப்பற்றி நிச்சயமுள்ளவனயிருக்கிறேன். மேலும் அவர் ஆழ்ந்த ஞானமுள்ளவரானதால் கோபத்தை விரைவில் வெளிப்படுத்தாமல் சத்துருக்களைக் கொஞ்சக்காலம் செழிக்கவிட்டு பிற்பாடு தமதிஷ்டத்தின்படி அவர்களை அழித்துவிடவேண்டுமென்று தீர்மானித்திருப்பார். இப்படியிருப்பதால் அசமந்தமாயிருக்க வேண்டியதென்ன? யுத்தம்புரிவதுதகுதியென்று அபிப்பிராயப்பட்டவர்களில் சிலர் காலங்கள் நித்தியமாய் வேதனையை அனுபவிக்க விதிக்கப்பட்டிருக்கிறேமே; இன்னமும் என்ன துன்பங்களுக்கு ஆட்களாவோமோ, இன்னமும் என்ன கேடானகாரியங்கள் எங்களுக்குச் சம்பவிக்குமோ என்று சொல்லுகிறீர்கள். நல்லது, இப்போது ஆயுதபாணிகளாய் உட்கார்ந்து ஆலோசிக்கிறது மெத்த கேடானகாரியமா? வானத்தின் அகோர இடிகள் சண்டமாருதம்போல் சின்னபின்னப்படுத்துகையில், நாம் வாயுவேக மனேவேகமாய்ப் பறந்தோடி இப்பாதாளத்தை நமக்குத் தஞ்சமாகக் கெஞ்சவில்லையோ? சங்கிலிகளினல் கட்டப்பட்டு எரியில் அமிழ்ந்திக்கிடந்தது நமக்குக் கொஞ்சம் ஆற்றலாயிருக்கவில்லையோ? மேலும் இதுவே செறிவென்றல் அக்காரக்கினியை எழுமடங்கதிகரித்து அதற்கு நம்மை பக்ஷமாக்கினல் எப்படி? தண்டனைகளைச் சற்றே நிறுத்தியிருக்கிற அவர் தமது சிவந்த கரத்தை நீட்டி நம்மை வாதித்தால் எப்படி? நரகத்தின் வாதனைகளெல்லாம் ஏகோபித்தெழும்பி அக்கினிப்பிரளயமாகி நம்மை அர்த்தநாசஞ் செய்தால் எப்படி? நமது சிரசின்மீது தொங்கிக்கொண்டிருக்கும் வாதனைகள் நம்மைப் பிடிக்க எவ்வளவு நேரஞ்செல்லும்? நாம் இவ்வாறு உட்கார்ந்து மந்திரமான யுத்தஞ்செய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கும்போதே அக்கினிப் புசலெழும்பி நம்மில் ஒவ்வொருவனையும் பிரத்தியேகமாய் வாரிக்கொண்டுபோய்க் கற்பாறையில் மோதி சங்கிலிகளினல் கட்டப்பட்டவர்களாய் பொங்கும் கடலில் அமிழ்த்தி இரக்கமும் விடுதலையுமின்றி என்றும் பெருமூச்சுடனேயும் அலறுதலுடனேயும் இருக்கும்படி வைத்துவிட்டால் எப்படி? என் சிநேகிதரே! இது மகா பயங்கரமான காரியம்.

(இன்னும் வரும்.)

சத்திய தூதன்

MELLIN'S FOOD

மெல்லின்ஸ் ஆகாரம்
பிறந்தது முதல்
குழந்தைகளுக்கும்
பலஈனர்களுக்கும்
உபயோகப்படும்படி
கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 1 anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor.

THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட அரைக்கு 4 அணு; அரை அணு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு அரைக்கு ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் விலைத்தொகையுடன் சென்னை மிஷனரியல் ஹாஸ்பிடலுக்கு C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி வைக்கவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

REGISTERED
13 AUG

சத்திய தூதன்.

AUGUST, 1917. PRICE, 1 PIE.—விலை, 1 பை. ஆகஸ்ற்றுமீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

கவர்னரவர்கள்.—நமது கவர்னரவர்களும், பம்பாய்க் கவர்னரவர்களும் வருகிற வருஷாரம்பத்திலே வழக்கப்படி போய்விடாமல், சண்டையின் நிமித்தமாக இன்னுஞ் சிறிதுகாலம் இருக்கும்படி உத்தரவு பெற்றிருக்கிறார்கள்.

இந்தியா கௌன்சில்.—இவ்விலாக்திலுள்ள இந்திய கௌன்சிலுக்கு பூப்பேந்திராதன் என்னும் ஒரு பெரிய லாயரை இன்னொரு மெம்பராக நியமித்திருக்கிறது. சென்னைக் கவுன்சிலுக்கு, லர். வி. வெசாமி ஐயர் நீங்கியபின்பு, மலையாளத்திவானுயிருந்த பூ. ராஜகோபாலாசாரியரை மெம்பராக அமர்த்தியிருக்கிறது. கவர்னருட்பட, மற்ற இருவரும் ஆங்கிலேயரானதால், ஒரே இந்தியர் முக்கியமாய் ஒன்றும் செய்துமுடிக்க வொாது. குறைந்தது இரண்டு இந்திய மெம்பர்கள் அவசியம்.

இந்திய மந்திரி. — மிஸ்டர் சேம்பர்லேய்ன் என்கிற நமது இந்திய மந்திரி ராஜிகாமா செய்துவிட்டார். அதன் காரணம், சென்ற வருஷம் இந்தியாவிலிருந்து மெசொப்பொத்தாமியாவுக்கு அனுப்பப்பட்ட சேனை (ஏறக்குறைய 23,000 போர் வீரர்) குட் என்னுமூரிலே உணவு முதலானதுகளில்லாமல் பட்டினியிடந்து எதிரி கையில் அகப்பட்டதே. லார்ட் ஹார்டிங்கு, சேம்பர்லேய்ன் முதலிய ஐக்தபேரை இதற்குக் காரணமாக விசாரணைக்கர்த்தர் கூறினர்கள். நியோர்மட்டமென்ற, பெரியோர்க்கும் தத்தம் செயல்களிலே தோஷமுடையவர்களாகத் தீர்க்கப்பட்டால் தண்டனைக்குத் தப்பார்கள். இப்பொழுது மான்டேடு என் பவர் மந்திரியாக நியமிக்கப்பட்டார்.

தென் இந்திய கிரிஸ்தவர்கள்.—தென்னிந்தியாவிலே புரோட்டெஸ்டாண்ட் கிரிஸ்தவர்கள் மாத்திரம் ஏறக்குறைய 10 லட்சம்பேர் இருக்கிறதாகத் தெரியவருகிறது. சென்ற வருஷத்தில் உண்டான விர்த்தி 39,000 பேர். சோமன் கிரிஸ்தவர்களையும் சேர்த்தால் 25 லட்சமாகும். இவர்களும் பிராமணர்களும் ஏகதேசம் சமத்தொகை பெற்றவர்கள். ஆனும், ஆண்கள் கல்வித்திறமையிலே பிராமணரே சிரேஷ்டமானவர்கள். கிரிஸ்தவர்கள் இவ்விஷயத்திலே, ஏனைய இந்தியருக்கும், மகமதியருக்கும், பூரேஷியருக்கும் மேம்பட்டவர்களாயினும், ஆரியருக்குத் தாழ்ந்தவர்களே. ஆயினும் பெண்கல்வியிலே அவர்களுக்குச் நெருக்கவர்களா யிருக்கிறார்கள்.

இந்திய மஹாசபை.—இந்தச் சபை இவ்வருஷம் கல்கத்தாவிற் கூடும். ஒருவேளை ஸர் சுப்பிரமணியராவது, மிஸ்வில் பெசன்டம்மாளாவது சபாநாயகராகத் தெரிந்துகொள்ளப்படுவார்கள். ஹோம்ரூலைக்குறித்தும், மேற்படி அம்மாள் முதலானவர்களை அடக்கிப்போட்ட காரியத்தைக்குறித்தும் தீர்மானங்களும் மனுக்களும் செய்யப்படும். அனேக முக்கியமான சிர்திருத்தங்கள் கேட்கப்படும். கானடா, ஆஸ்திரேலியா, நியுலெக்து, தென் ஆப்பிரிக்கா ராஜ்யங்கள்போலவே இந்தியாவும் தனக்குள்ளே ஸ்வாதீன ராஜ்யமாக வேண்டுமென்கிறார்கள். ஆனுல் அனேய ராஜ்யங்களைப்போல, இந்தியா தங்கள் ராஜ்யத்தை வீரைக்கொண்டும், கப்பற் சேனையைக்கொண்டும் ஆபத்துகாலத்திலே பாதுகாக்க முடியுமாவென்று பலர் கேட்கிறார்கள். எல்லா விஷயத்தக்கும் சமவிர்த்தி யுண்டாவதுவியம்.

ஆகாயக் கப்பல்கள்.—தற்கால யுத்தத்திலே இந்த நூதனமான சாதனங்கள் முக்கியமானவை. பூர்வத்திலே சதுரங்கச்சேனை—அதாவது, ரத, கஜ, தூக, பதாதிகள் சேர்ந்து நால்வகை என்பார்கள். பிறகு ஐரோப்பாவிலே குண்டு மருந்து கூடி மேற்படி சைனியங்கள் ஐந்தாயின. ஆனுல் இப்பொழுது இந்த ஆகாயக்கப்பல்களோடு ஆனுல்சேனையாயிற்று. இந்தப் புதுச்சைனியத்திலுல் எதிரியின் சைனிய காரியங்களை உயரத்திலிருந்து பார்த்துப் பருந்தறிந்து, அக்கிருந்தபடியே குண்டு பாய்வித்துச் சேனையையும், கோட்டை கொத்தளங்களையும் அழித்துவிடவும், கப்பல்கள்மீது குண்டு பாய்விக்கவும், பட்டணங்களின்மேல் ஆயிரம் பதினுயிரமான குண்டுவெடி பாம்வெடிகள் திடீரென வெடிப்பிக்கவும் கூடியதாயிற்று. தளச் சண்டை, கடற்சண்டைகளைவிட ஆகாயச்சண்டையே பிரதம சண்டையாய் நடக்கிறது. அமெரிக்கர் இதுகாரணத்தால் 2,300 ஆகாயக் கப்பல்களை உண்பெண்ணி வருகிறார்கள்.

யுத்தச்செலவு லாட்டரி.—லட்சாதிலட்சமான பேர்கள் ஆளுக்குப் பத்தரூபாய் டிக்கட்கென் வாங்கிச் சேர்ந்த இந்த மஹா லாட்டரி சென்றமாதக் கடைசியிலே எடுக்கப்பட்டது. ஒரு பீப்பாயிலே நம்பர்களும், இன்னொரு பீப்பாயிலே பரிசுகளும் போட்டு, காவலாளர்கள் அதனைச் சுழற்றிக்கொண்டிருக்க, ஏகசமயத்தில் ஒரு குருட்டுப்பையன் ஒரு பீப்பாவிலிருந்து ஒரு நம்பர் டிக்கட்டும், இன்னொரு குருடன் மற்றபிலிருந்து ஒரு பரிசு அல்லது பூச்சிய டிக்கட்டும் எடுக்க, இந்தவிதமாய் டிக்கட்காாலுக்குப் பரிசாவது பூச்சியமாவது கிடைத்தது. கெல்கப்பூரிலிருந்துவந்தகிம் என்னும்ஒரு பூனதகம் பருக்கு முதல் பரிசு கிடைத்தது. அந்தத் தொகை எழுலட்சத்து 23 ஆயிரம். அவன் மெத்த அதிர்ஷ்டசாலி. ஒருவனுக்கு 3 லட்சம் கில்லரை அகப்பட்டது. இந்தவிதமாய் ஆயிரக்கணக்கான குறைந்த தொகையுள்ள பலப்பல பரிசுகள் கிடைத்தன. பூச்சியங்கள்தான் பெரும்பாலருக்கு வந்தன. ஆனுலும் இவர்கள் இழந்தது ஆளுக்குப் பத்து ரூபாயே. அதுவும் யுத்தச்செலவுக்கு உதவியது. பரிசுகளும் யுத்தக்கடனைச் சேர்ந்தவை. தற்காலம் வட்டியும், சில வருஷங்கள் கழிந்தபின்பு முதலும் கிடைத்துவிடும். சில் இந்த லாட்டரி அதர்மம். பிரயாசையில்லாமல் வருகிற பணமென்கிறார்கள். அவ்வாறுயின், தகப்பன், பாட்டன், மாமன் முதலியவர்களின் சொத்து யாதொரு பிரயாசையும் படாமல் அதை வீண்செலவிலே அழித்துவிடுகிற அற்பருக்குக் கிடைக்கிறதும் அதர்மந்தானே என்று பலர் கேட்கிறார்கள்.

ஆகஸ்ற்றுமீ பஞ்சாங்கம்—

வாரம்	ஆகஸ்றுமீ = ஆடி—ஆவணி. அமாவாசை, 17உ ⊙ பௌர்ணமி, 3உ.						ஆடி—ஆவணி.			
ஞாயி...	...	5	12	19	26	...	21	28	4	11
திங்க...	...	6	13	20	27	...	22	29	5	12
செவ்...	...	7	14	21	28	...	23	30	6	13
புதன்...	1	8	15	22	29	17	24	31	7	14
லியா...	2	9	16	23	30	18	25	1	8	15
வெள்...	3	10	17	24	31	19	26	2	9	16
சனி ...	4	11	18	25	...	20	27	3	10	...

Vol. XXX. No. 10.

புஸ்தகம் கூ.o. தெ. கo.

THE WAR

யுத்த வரலாறு

அங்கிலேயரும் பிரான்சியரும் வெகுதூரம் ஜெயித்து, ஜர்மன்களைப் பின்னுக்குத் தூரத்தியிருக்கிறார்கள். கடற்கரையிலுள்ள ஆஸ்டன்ட் பட்டணத்திலிருந்து வெனிஸ் பட்டணம்வரையும் பெல்ஜியம் தேசத்திலிருந்து மீட்டாயிற்று. நவம்பர் மாதத்திற்குள்ளே பார்லினைத் தீண்டிவிடுவார்கள் என்று அனேக யுக்திசாலிகள் நினைக்கிறார்கள். ரஷியாவிலெழும்பிய சொற்ப ஒரு கலகம் அமர்ந்து இப்பொழுது ரஷியர்கள், ஜர்மன்கள் ஆஸ்திரியர்கள்பேரில் தினந்தோறும் ஜெயங்கொண்டே வருகிறார்கள். அவ்வாறே இத்தாலியரும். இதுநிற்க, ஜர்மனியிலே கலகம் உண்டாகிவருகிறது. தற்கால மந்திரியை நீக்கிவிட்டு, கைசரின் அதிகாரத்தைக் குறைத்து, பார்லிமெந்து சபைக்கோ வேண்டிய அதிகாரமளித்து, யுத்தத்தை நிறுத்திச் சமாதானஞ் செய்துகொள்ளும்பொருட்டு, முக்கியமான சில கௌன்சிலர்களால் தக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அம்மந்திரி இப்பொழுது நீங்கலானார். சப்மெரின் வேட்டை விருதாவாய்ப் போய்விட்டது. அதைக்கொண்டு இங்கிலாந்தைப் பட்டினிபோட எத்தனித்த ஜர்மன்கள் இப்பொழுது இஞ்சிதின்ற குரங்குபோல் இளிக்கிறார்கள். அனேக சப்மெரின்கள் குண்டுபாய்ந்து கடலில் அமிழ்த்தலாயின. ஒவ்வொரு கப்பலிலும் இப்பொழுது பெரிய பீரங்கிகள் ஏற்றியிருக்கிறபடியால், கப்பற்காரர் தூரத்திலே சப்மெரின் கம்பத்தைக் கண்டவுடனே குறிப்பார்த்து அதைச் சுட்டுவிடுகிறார்கள். ஏதோ தப்பித்தவறி சில கப்பல்கள் அமிழ்த்தப்படினும், வாரந்தோறும் சராசரி 5,000 கப்பல்கள் புறப்படுகிறதும் கரை இறங்குகிறதுமாயிருக்கின்றன. இன்னுங் கொஞ்சநாள் சண்டையை நிறுத்தாமல் நடத்தினால், சமாதான நிபந்தனைகள் சலபமாயிருக்குமென்று ஜர்மன்கள் துணிந்திருக்கிறார்கள்; இருக்கட்டும் எத்தனை நீடித்த பிரயாணமும் முடிவுபெறவேண்டும். உலகமெல்லாம் ஜர்மன் அக்கிரமங்களுக்கும் அதர்மசெயல்களுக்கும் விரோதமாயெழும்பியிருக்கிறது. கைசரின் கதி மகாப் பரிதாபமாய்விட்டது. இன்னுங் கடவுளை நம்பியிருக்கிறார். ஆனால் கடவுள் அநீதிபரரல்லவே. ஜகத்தில் சத்தியமே ஜயிக்கும். அதர்மம் நிலையெடுக்காது. முற்கால ராஜ்யங்கள் அழிந்தனபோலவே, அதர்ம ராஜ்யமும் அதமாய்ப் போய்விடும்.

PRAYER FOR THOSE AT WAR

போர்வீரர்க்காக விண்ணப்பம்

1. ஓ சேனைகளின் கர்த்தாவே!
சர்வ ராஜ்யத்தின் துரையே!
சமாதானம், யுத்தங்களில்
உம் சித்தமுண்டவைகளில்
ராஜ்யங்கள் நின்று கெட்டாலும்,
உம் சித்தமே நிறைவேறும்.

2. யுத்தத்தில் சாவு வந்தாலும்
நீரங்கே தஞ்சமாயிரும்.
சாகிறவர்களுக்கு நீர்
சமாதானத்தை கொடுப்பீர்.
நீதிக்காக செய்யப்படும்
ஜெபத்தை நீர் கேட்டருளும்.

3. காயப்பட்ட ஜனத்தையும்
நீர் கிருபையாய் நோக்கிடும்
வைத்தியரான யேசுவே!
தொட்டு, சுகத்தை கொடுமே
அவர்களுக்காகச் செய்யும்
ஜெபத்திற்கு செவிகொடும்.

4. அன்பின் கரத்தைநீர் நீட்டும்,
மரித்தோரை சேர்த்துக்கொள்ளும்
போராட்டத்தை முடித்தார்கள்
உம் தயவைக் கேட்கிறார்கள்.
நீதிக்காக மரித்தார்கள்
இளைப்பாற லடைவார்கள்.

5. வைத்தியர்க்கும் நர்ஸ்களுக்கும்
நீரே சகாயத்தைக்கொடும்
அவர்களுக்கு விஸ்வாசம்
கொடுத்தவர்களைக் காரும்
ராஜ்யங்களில் சமாதானம்
நீரிப்போது தந்தருளும்.

J. P.

SAMUEL HEBICH OF MANGALORE

சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

"இவ்விதமாய் அந்த வியாபார தொழிற்சாலையில் தொழிலைப் பயலும் காலத்தில் என் உள்ளத்தில் ஏதோ ஒரு குறைவு காணப்பட்டது. அதை நிறைவுசெய்ய நான் ஆவலோடுத் தேடியும் என் உள்ளம் நொந்துபோயிற்று, என் கண் பூத்துபோயிற்று. நான் தேடினதையோ அடையவில்லை. ஏனென்றால் இருளிலே என் பாதையைத் தேடினேன். வாரம்முழுதும் இளைப்பாற கொஞ்ச நேரங்கூட கிடைக்கக்கூடாத விதமாக ஓய்வுநாளிலுங்கூட அதிக வேலையாய் இருந்தேன், ஆனாலும் என் இருதயத்திலுள்ள இந்த அழுத்தமான பெரிய ஆவலை வெளியிட்டுச் செல்ல எனக்கு ஒரு சிநேகிதர் அவசியமாயிருந்தது. என்னுடைய தமையன் என்னை அதிகமாய் நேசித்தாலும், எனக்கும் அவருக்குமிருந்த பெருத்த வித்தியாசமான வயதினால் இந்த இளைஞனுடைய நொந்த இருதயத்திற்கு யேற்ற ஒரு அநுதாபத்தை அவரிடமிருந்து பெறக்கூடாதவனாய் இருந்தேன். ஆ என்னோடு அநுதாபத்தைக் காட்டக்கூடிய ஒரு சிநேகிதனை எவ்வளவாய்த் தேடினேன். ஐயோ நான் தேடியும் காணேனே. இதுநிற்க எனக்கு துக்கத்தையும் சார்பையும் உண்டாக்கின பலவித சந்தர்ப்பங்கள் என்னை மூடிக்கொண்டது. ஒருமணிநேரம் எனக்கு சவகாசம் கிடைத்தபோது, அந்தநேரம் முழுதும் என் கண்ணீரே எனக்கு உணவும் பானமுமாயிருந்தது. என் ஆத்துமநேசர் எங்கே; அவரைத் தேடியும் காணேனே என்று புலம்பினேன். பட்டணத்தைச் சுற்றிப்போகிற சாமக்காரனும் அவரைப் பார்க்கவில்லை. என் ஆத்துமநேசரை நான் எங்கே காணக்கூடும் என்பதைப்பற்றியும் அவன் சொல்லவில்லை."

சாமுவேல் ஹெபிக் என்பவருடைய நாட்கள் பனியன் வர்ணிக்கிறஎன்கிறமோக்ஷப்பிரயாணியின் அநுபவத்தைப்போல் ஏதோ ஒரு பாரமூட்டை அவரை அழுத்தினதைப்போல் கண்டார். அவரைப் பார்த்து ஒருவன் எப்படி இருக்கிறாய் என்று கேட்டால், "ஐயோ நிர்ப்பாக்கியம் நிர்ப்பாக்கியம்" என்கிற மறுமொழியைவிட வேறொன்றும் சொல்லக்கூடாத நிலைமையிலிருந்தார். இதனால் அவருடைய சகோதரன் தன் தம்பியின் கடினமான படிப்பினால் இப்படிப்பட்ட தளர்ச்சி உண்டாயிருக்குமென்று நினைத்து சாமுவேலை ஒரு உல்லாசசங்கத்தில் சேர்த்து அதன்மூலமாய் அவருக்கு அந்த மனதளர்ச்சி போகுமென்று நினைத்தார். அதோடுகூட சாமுவேலின் மனதில் உற்சாகம்பிறக்க சில சமயங்களில் வேட்டைக்கும் அழைத்துப்போவார். ஆனாலும் என்ன; அவருடைய ஆத்துமாவோவென்றால் மானானது நீரோடையை வாஞ்சித்துக் கதறுகிறதுபோலிருந்தது. அவருடைய தகப்பனும் தமையனும் இந்த வாலிபனுக்கு புத்திமாருட்டம் உண்டாயிற்றென்று நினைத்தார்கள். ஒருவரும் அவருடைய சரியான ஸ்திதியை அறிந்துகொள்ளவில்லை. அதனால் அவருக்கு எந்தவிதத்திலும் உதவிசெய்யவும் கூடவில்லை. அந்த நிர்ப்பந்தமான நாட்களைப்பற்றி சாமுவேல் ஹெபிக் விபரிக்கிறதாவது. "ஐயோ அந்தச் சமயம் ஒரு கஷ்டமான சமயமாயிருந்தது. பாவத்தினால் நித்திய மரணத்தை சம்பாதித்தேன் என்றும் என் மனச்சாக்ஷி என்னைக் குற்றப்படுத்தி என் இருதயத்தில் இளைப்பாறுதலும் சமாதானமும் உண்டாகாமல் தடுத்தது. தேவப்பிரமாணமோ என்னை ஆக்கினைத்தீர்ப்புக் குட்படுத்தினது. இப்போ என் ஆத்துமா பயந்து நடுங்குகிறது. ஏனென்றால் இன்னும் நான் தப்பித்துக்கொள்ளும் வழியைக் காணவில்லை. என் இருதயம் சிருஷ்டிகராகிய ஆண்டவருடைய பரிசுத்தத்தையும் நீதியையும் அறிந்துகொண்டது. ஆனால் என் பாவமோ அவரைப் பார்க்கக்கூடாமல் என் கண்களை மூடிற்று. பரிசுத்த சந்நிதானத்திற்கு முன்பாக ஏறெடுக்க தைரியமற்றிருந்தேன், பயங்கரமான இருள் என்னை மூடினது. சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்களும் அதனதன் ஒளியை சுருக்கிக்கொண்டது. பயத்தினாலும் திகிலினாலும் சூழப்பட்டு, மலையைப்பார்த்து ஓ, மலையே, என்மேல் விழு, ஓ, பூமியே, உன் வாயைப் பிளந்து என்னை விழுங்கிவிடு. ஏனென்றால் என் அக்கிரமம் பரிசுத்த கடவுளுக்கு முன்பாக வெளிப்பட்டிருக்கிறது. அவருடைய பயங்கரமான சமூகத்திலிருந்து யார் என்னை மறைக்கக்கூடும்? அவருடைய அக்கினிசுவாலையைப்போன்ற கண்களிலிருந்து யார் என்னை காக்கக்கூடும்? என்று கதறினேன். இவ்விதமாய்ப் புலம்பலும் கருகலுமான எட்டு தினங்களைக் கழித்தேன். அப்போ, என் சிருஷ்டிகரும் இரக்ஷகருமானவருடைய மகத்துவ கரம் என்னைத் தாங்கிப் பிடித்திராவிட்டால், என் ஆத்துமத்தின் பயங்கரவேதனையைச் சகித்து ஜீவித்திருப்பேன் என்று சொல்ல என்னால் முடியாது "தற்கொலை செய்துகொள் அப்போ எல்லாம் முடிவடையும்" என்று சாத்தான் ஆலோசனைசொன்னான், நான் அவன் சத்தத்திற்குச் செவிகொடுத்திருப்பேனானால் என் ஆத்துமத்தின் கதி எப்படி முடிந்திருக்கும்? ஆண்டவருடைய பரிசுத்த சமுகத்து முன்னிருந்து நான் எங்கே ஓடுவேன் என்கிற சத்தம் என் ஆத்துமாவிலே திரும்பவும், திரும்பவும் எதிர் ஒலித்துக்கொண்டே யிருந்தது. என் பரம தகப்பனின் அன்போ என்னை தேடிப்பிடித்து அவருடைய இரக்கமான மெல்லிய ஓசை என் கலக்கத்தைப் போக்கடித்தது. பெரும்பாவியாகிய எனக்குத் தம்மை வெளிப்படுத்த அவர் நாண மடையவில்லை. என் இருளில் தம் வெளிச்சத்தை உதிக்கச்செய்து ஒப்பற்ற அவருடைய அன்பு என்னை கவர்ந்து பாழான என் உள்ளத்தில் இறங்கி என்னை ஆளும்படி சித்தங்கொண்டார்."

பட்டணத்துக்கு வெளியே உள்ள ஒரு கீரைத் தோட்டத்திலே இந்த வாலிபனாகிய சாமுவேல் ஹெபிக் என்றவரை இயேசு சந்தித்து அந்த வாலிபனுடைய பாவங்களின் மன்னிப்பின் உறுதியை அவருக்கு அளித்தார். இப்போ, சாமுவேல் தன் ஆபத்துக்காலத்தில் உதவிசெய்யக்கூடிய ஒரு உண்மையான சிநேகிதனைக் கண்டுகொண்டதினால் அவருக்கிருந்த சந்தோஷத்தைச் சொல்லிமுடியாது. அவர் இவ்விதமாய் சந்தோஷத்தினால் நிரப்பப்பட்டு சொன்னதாவது—"மாசற்றவரும் பரிசுத்தருமானவருடைய சந்நிதானத்திற்கு முன்பாக என் முழங்கால்களை முடக்கித் தரைமட்டும் குனிந்து தைரியத்தோடு நான் அவரை ஏறெடுத்து ஜெபிக்கையில், ஹா, இதோ அவருடைய ஆவி என் உள்ளத்தில் இறங்கினதையும், என் பாவமெல்லாம் என்னைவிட்டு அகன்றதையும் நான் உணர்ந்தேன், ஹா, ஹா என் விசுவாசக்கண்ணினால் என் தேவனுடைய இரக்ஷகரைத் தைரியத்தோடே பார்க்க சிலாக்கியம் பெற்றேன். உலக சிநேகிதரை அடைய நான் தேடினேன், ஆனால் நான் தேடாத என் ஆண்டவரும் தேவனுமாகிய நித்திய பரம சிநேகிதரைக் கண்டடைந்தேன். 1821-ம் வருஷம் ஜுன்மீ 13-ம் தேதி இயேசுகிறிஸ்து இவருடைய பாவத்தைக் கழுவி சுத்திகரித்த நாள், அந்த நாள் சந்தோஷ நாளாயிருந்தது. இந்த சம்பவம் நடந்து 26-வருஷம் சென்றபிறகு அவர் இந்தியாவிலே தம்முடைய ஹிந்து சிநேகிதர்களோடும், ஐரோப்பிய சிநேகிதர்களோடும் இந்த விசேஷித்த நாளை தம்முடைய ஆத்தும பிறப்பின் நாளாகக் கொண்டாடினார். அவருடைய ஜீவியகாலத்தில் இந்த நாள் ஒரு விசேஷித்த நாளாய் இருந்தது.

டி. எல். ராஸ்.
சங்ககிரி துருகம், சேலம்.

(இன்னும் வரும்.)

A GOOD LIFE

சத் ஜீவியம்.

சத்கீர்த்தி ப்ரதாபமடைய நன்னடக்கையே ப்ரதானமான மூலகுணங்களில் ஒன்றாயிருக்கிறது. அவரவருக்குரிய உத்தியோகங்களில் தேர்ச்சியடைந்து உயர்தரப் பட்டங்களைப் பெற்றுக்கொண்டவர்களனேகர் உளர். அவர்களுள் வித்தியிலும் நாகரீகத்திலும் மனிதரை முன்னுக்குக் கொண்டுவந்த மகத்ஜனரிருக்கின்றனர். அன்பும் நன்றியறிதலும் வளர்ந்தோங்கும்படியான எண்ணத்தையுடைய மஹாத்மரிருக்கின்றனர். அனேக தர்மகுணசீலசம்பன்னரிருக்கின்றனர். சூட்சும புத்திசாலிகளிருக்கின்றனர், பரோபகாரார்த்த க்ருத்தியரிருக்கின்றனர். இவ்வாறு ஜகத்ப்ரஸித்தியடைந்த மகான்களின் டாப்பை நாம் எழுதி கவனிப்போமானால், இவர்களுள் பெரும்பான்மையோர் தங்காரியத்தில் சித்திபெற நன்னடக்கையே உசிதகுணமென்பதை நன்றாயறிந்திருந்தனர் என்பதை அறியலாம். அந்நன்னடக்கை என்ன? அது ஒருவேளை உண்மை என்னுங் குணமாகவோ அல்லது நாணயம் என்னுங் குணமாகவோ அல்லது நேர்மை என்னுங் குணமாகவோ அல்லது நம்பிக்கை என்னுங் குணமாகவோ அல்லது தாளாண்மை என்னுங் குணமாகவோ அல்லது வீரதீரமென்னுங் குணமாகவோ அல்லது பரோபகாரமென்னுங் குணமாகவோ அல்லது வேறெந்த நற்குணமாகவோ இருக்கலாம். இவ்வித குணசீலங்களாலல்லாது சத்கீர்த்திப்ரதாபமடைய முடியாது. இக்குணவிசேஷம் ஒரு ஒற்றை ஆளுக்குமாத்திரமல்ல ஒரு ஜாதியாருக்கு மிருக்கக்கூடும். ஒரு ஜாதியாருக்கு இவ்வித சிறந்த இலக்ஷணங்களிருக்குமட்டும் எப்படிப்பட்டவர்களும் அவர்களை ஜெயிக்க முடியாது. இவ்வித சிறந்த குணங்களினுதவியால்மட்டுமே அவர்கள் அதிகாரஸ்தர்களாகவும்கூடும். இக்குணங்களை துர்நடக்கையால் இழந்துபோனால் சகல கீர்த்திகளையும் இழந்ததுபோலாம். வித்தையோ, சீர்திருத்தமோ, நாகரீகமோ, சாமர்த்தியமோ அவர்களை எந்த நாசமோசங்களிலிருந்தும் இரக்ஷிக்காது. நமது நன்னடக்கையே நம்மை உயர்ந்த பதவிகளுக்குப் பாத்திரவான்களாக்குகிறது. ஒருவனைச் சரியாய் நிதானித்தறிந்து மதித்து ஏற்றவேண்டுமானால் அவனுக்குள்ள செல்வத்திரட்சியினால் அல்ல, அவனுக்குள்ள நன்னடக்கையினாலேதான். இவ்வுலகத்தில் நமது ஜீவ ஓட்டம் முடிவடைந்தபின்னர் நமது நற்குண துற்குண சீலங்களின்படிதான் நமது ஜாதி ஜனங்களால் புகழ்ச்சியையோ அல்லது இகழ்ச்சியையோ அடைவோம். மேலோக நீதிபதிபருடைய உன்னதமான நீதிஸ்தலத்திற்கு முன்பாக நாம் நமது கணக்கை ஒப்புவிக்க நிற்கும்போது, உலகமேன்மை, செல்வம், ஸ்தானம் முதலியவைகளின்படியல்ல, நமது நடக்கையின்படியே நிற்கவோ அல்லது விழவோ கூடியவர்களாயிருப்போம் என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்." 2 கொரி. 5. 10. ஆகையால் பூலோகத்திலும் மேலோகத்திலும் நன்னடக்கைதான் நமது உத்தம சிநேகிதனெனச் சொல்லலாம்.

நன்னடக்கைமாத்திரமே நமக்கு மெய்யான சந்தோஷத்தை அளிக்கக்கூடும். நன்னடக்கைதான் நிலையற்ற செல்வத்தை ஆசிக்கும் வீணாசையிலிருந்து நம்மை விடுதலைசெய்து, தனக்குச் சொந்தமானதும் விலைமதிக்கப்படக் கூடாததுமான நிதியை நமக்குச் சம்பாதித்துக் கொடுக்கும். நன்னடக்கைதான் நமக்கு மனசமாதானத்தையும், மனத்திருப்தியையும் அளிக்கும். ஆகையால் பரி. பவுல் "மனரம்யமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்" என்றார். மேற்கண்ட இரண்டு இலக்ஷணங்களும் இருந்தால் தான் மெய்யான சந்தோஷம் உற்பத்தியாகும். நன்னடக்கையுள்ளவனே ஸித்தஸ்வாதீனனும், ஆத்மபோதமுள்ளவனும், அஹம்மான முள்ளவனுமாயிருப்பான். அவன் மனம் அவனுக்கு ராஜ்ஜியம்; கடவுள் நியமித்த கதிக்கு அவன் தன்னைச் சந்தோஷமாய் ஒப்புவிக்கிறான்; அவன் தன் ஊழியத்தை நம்பிக்கையோடே செய்து முடிப்பான். அற்ப அபமானத்துக்கும் அபகீர்த்திக்கும் காரணமான எதையும் கண்டு அவன் தன்னை விலக்கிக்கொள்ளுகிறான். நன்னடக்கை உறுதிப்பட்டால் தேகாத்ம சுகத்துக்கு ஏதுவாகிறது. வாலிபர் நன்னடக்கையுள்ளவர்களாயிருந்தால் வயோதிபத்தில் சந்தோஷம், யௌவனம், முகமலர்ச்சி, தீர்க்காயுள் என்னும் பரிசுபெறுவார்கள்.

காரியங்களின் முடிவு சந்தோஷமாகவேண்டுமானால் நன்னடக்கை அவஸியம். நடக்கைகளை நம்மில் உறுதிப்படுத்தும் ஆதாரம் எங்கே? நமது பெற்றோர் முதலிய முன்னோரே ஆதாரம். நமது ஜீவகாலமெல்லாம் நம்மை ஒட்டிக்கொண்டிருக்கும்படியான துன்மார்க்க சன்மார்க்க வழக்கங்களைப் பெற்றோர்தான் நமக்குள் பாய்ச்சுகிறார்கள். முகச்சாயலையும் முகவருணத்தையுமட்டுமேல்ல, காடு, பூமி, செல்வங்களையுமட்டுமல்ல, பாவபுண்ணியங்களையுங்கூட பெற்றோர் நமக்குப் பின்வைத்துப்போகிறார்கள். பெற்றோர் அனுபவித்த சரீர வியாதியையே மக்கள் அனுபவிக்கிறதை எப்போதும் நம்மைச் சுற்றிலும் பார்க்கிறோம். அப்படியே அவர்களுடைய ஆத்மீக வியாதிகளிலும் நாம் பங்குபெறுவோம். நமது நடக்கை துர்க்கீர்த்தியுள்ளதாயிருந்தாலும் சரி, நற்கீர்த்தியுள்ளதாயிருந்தாலும் சரி. அது நமது முன்னோராலேயே என்பதை மறவாதிருப்போமாக. பெற்றோரே! விழித்துக்கொள்ளுங்கள். ஒரு காரியம் மனதில் நன்றாய்ப் பதியவேண்டும். "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது." மத். 5. 16-ல் வேதம் உங்களுக்குச் சொல்லுகிறதைக் கவனித்து "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்." 1 தெச. 5. 22. இதெப்படி சாத்தியப்படும்? கிறிஸ்து உங்களுக்குள் பிழைத்திருப்பதால்தான் உங்கள் நடக்கை நன்னடக்கையாகும் என்கிறேன்.

S. DAVIES.

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்.

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

ஆகையால் பகிரங்கமாயாவது அந்தரங்கமாயாவது சண்டைசெய்வது எனது அபிப்பிராயமேயல்ல. சராசரமனைத்தையும் ஓர் நொடிப்பொழுதில் பார்வையிடத்தக்கவரை, புஜபலபராக்கிரமம் அல்லது தந்திரவுபாயம் என்னசெய்யக்கூடும்? அவரை யார் வஞ்சிக்கக்கூடும்? வானத்தின் உன்னத ஆசனத்தில் வீற்றிருக்கிறவர் நாம் யோசனைசெய்வது வீணென்றறிந்து ஆகடியம் பண்ணுகிறார். நம்முடைய தந்திரவுபாயத்தைக் குலைத்துவிட எவ்வாறு சக்தியுள்ளவராயிருக்கிறாரோ அவ்வாறே நமது புஜபலத்தையும் எதிர்க்க சக்தியுள்ளவராயிருக்கிறார். வானவாசிகளாகிய நாம் இப்படித் தாழ்த்தப்பட்டு மிதியுண்டுகிடக்கிறது போதாதோ? இன்னமும் அதிகமாய் வேண்டியதோ? சர்வவல்லவரின் கட்டளையோடு மாறாத விதியும் சேர்ந்து நம்மை இப்பாழ் நிலைமையில் தள்ளியிருக்கிறதால் இந்நிலைமையிலிருப்பதே உத்தமமாக எனக்குக் காணப்படுகிறது. பலத்த காரியங்களைச் செய்யவும் கொடிய உபத்திரவங்களை அனுபவிக்கவும் நமக்குப் போதுமான சக்தியுண்டு. நம்மை இவ்வாறு உண்டுபண்ணின பிரமாணம் தவறுள்ளதல்ல. ஆதியில் இதுவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. நாம் இதுகாரியத்தை அறியாமல் நம்முடைய பெரிய சீத்துருவுடன் போராட ஏற்பட்டோம். இப்போது இக்கெதியில் வந்திருக்கிறவர்களாகிய நாம் ஈட்டியைப் பிடித்துக்கொண்டு துணிகரமாய் நிற்பதைப் பார்க்கும்போது எனக்குத்தானே நகைப்புண்டாகிறது. ஏனென்றால், இவர்கள் யுத்தத்தில் அபஜெயப்பட்டால் மறுபடியும் தூரத்தப்பட்டு சங்கிலிகளோடு முடியாத வேதனையை அனுபவிக்க ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். வெட்கத்தையும் வியாகுலத்தையும் அடைவார்கள். இவ்வித கேவலமான நிலைமையில் நாம் இப்போது இருக்கிறோம். இதை நாம் பொறுமையுடன் சகித்தால் கொஞ்சக்காலஞ் சென்றபின்பாவது நம்முடைய ராஜசத்துரு ஓர்வேளை தம்முடைய கோபத்தைத் தணிக்கமாட்டாரோ? அல்லது நாம் இவ்வளவு தூரத்திலிருந்தும் யாதொரு கேடுஞ் செய்யாமலிருப்பதைப் பார்த்து, நம்முடைய தண்டனையை அதிகரியாமல் அக்கினியும் கந்தகமும் நிறைந்த தழல்களை அணைத்துவிடமாட்டாரோ? நம்முடைய பரிசுத்ததன்மை இந்நரகத்திலிருக்கும் துர்க்கந்தத்தை மேற்கொள்ளாதோ? அப்படிக்கில்லாவிடினும் நாம் இந்நரகத்தின் வாதனைகளுக்கு வழக்கப்பட்டு உணர்ச்சியற்றவர்களா யிருக்கலாமே. அபரிமிதமான உஷ்ணம் நிறைந்த அக்கினியும் நமக்கு வருத்தத்தை உண்டாக்காமல் சுகுணமானதாய் விடுமே. நமக்கு இப்போது உண்டாயிருக்கும் பயங்காமும் அப்போது நீங்கிவிடும். இக்காரிருளே வெளிச்சமாகத் தோன்றும். நாம் வானுலகத்தை நோக்கிப்போவது அனுகூலமாய்முடியுமோ அல்லது பிரதிகூலமாய் முடியுமோ? யார் சொல்லக்கூடும்? நமது தற்காலநிலைமை கேடுள்ளதாயினும் ஓர்வகையில் நன்னிலைமையாயுமிருக்கிறது. இதைவிடக் கேடான நிலைமைக்குள் வாராதபடிக்கு எச்சரிக்கையாயிருப்போமாக.

இவ்வாறு பேலியாள் காரணகாரியச் சம்பந்தத்தை விளக்கிக்காட்டி எல்லோரும் அசமந்தமாயும் சமாதானமாயும் இருக்கும்படி ஆலோசனை சொன்னான். ஆனால் அவன் கோரின சமாதானம் மெய்யான சமாதானமல்ல. இவனுக்குப் பிற்பாடு மம்மோன் பேசத்தொடங்கினான்.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for ½ anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்.

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒத்தருக்கு 4 அணு; அல அணு தபாதருக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒத்தருக்கு ரு. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலியன வேண்டுவோர் செலத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஸனரியர் நாதக்கேந்த C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

சத்திய தூதன்.

SEPTEMBER, 1917. PRIGE, 1 PIE.—விலை, க பை. செப்டெம்பர்மீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

சுதேச பாஷை. — சுதேச பாஷையிலேயே உயர்தரக் கல்வியனைத்தும் கற்பிக்கப்படவேண்டுமென்று சில இந்தியர்கள் பிரயாசப்படுகிறார்கள். இந்தியாவாகிய ஒரு காட்டில்மட்டும் ஆங்கில பாஷையிலே கல்வி கற்பிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தில் வீட்டுக்குறை. — தற்காலம் இங்கிலாந்தில் பற்பல தொழில்கள் செய்துவரும் ஆட்களுக்கு இருக்க வீட்டில்லாமையால், உடனே பத்துலட்சம் வீடுகள் கட்டவேண்டுமென உத்தரவு பிறந்திருக்கிறது. இங்கிலாந்திலே போதுமான கிரசவுக்கிய மில்லாமற்போனது புதுமையாயிருக்கிறது.

இந்திய காங்கிரஸ் கமை. — இந்த மஹாசபை இவ்வருஷம் கிரிஸ்மில் வாரத்தில் கல்கத்தாவிலே கூடும். அதற்கு பெசண்ட் அம்மாள் அக்கிராசனஞ்செய்பவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குமுன்பு விடுதலையானதால் அங்ஙமப்படி நடக்கக்கூடும். இப்பொழுது அவர்கள் கோயம்புத்தூரில் வசிக்கிறார்கள்.

இங்கிலிஷ் ராணுவம்.—இப்பொழுது சுமார் 70 லட்சம் அங்கிலேய போர்வீரர் யுத்தகளத்திலும், மற்றும் யுத்தவேலைகளிலும் அமர்ந்திருக்கிறார்கள். யுத்த ஆரம்பத்திலே ஸைசர் இங்கிலிஷ் சேனையை ஒன்றுக்குமுதவாத அற்ப சைனியம் என்றிகழ்ந்தவர், இப்பொழுது அதன் பெருமையையும் வலிமையையும் கண்டு கலங்குகிறார்.

சிறு நோட்டுகள். — தற்காலம் எல்லாத்திலும் சிறிய நோட்டு 5 ரூ. இனி 2½ ரூ. யும், 1 ரூபாய்க்கும் கவர்ன்மெண்டார் நோட்டுக்காகிதங்கள் அச்சடிக்கப்போகிறார்கள். தற்காலம் வழங்கிவருகிற அவலட்சணமும் பெருத்ததுமான அனா அணு காணயத்தை நிறுத்தி, ஒரு சின்ன நிக்கல் அணாயணு அடித்து வழங்கினால் மெத்த அனுகூலமாயிருக்கும்.

விவசாயத்தொழில். — இந்தியாவில் உபயோகப்படுத்தாத எத்தனையோ கோடி ஏக்கராப்பூமி பயனற்றுக்கிடக்கிறது. அவ்வாறே இங்கிலாந்திலும் கொஞ்சமிருக்கிறது. இப்பொழுது யுத்த கிர்ப்பந்தத்தினலே அதனைப் பயிர்செய்து தங்கள் தானியத்தைத் தாங்களே சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். ஆகிலும், ஒரு கொட்டி 9 அணவுக்கு விற்கிறது.

விஷபேதி. — சென்னையிலும் இன்னுஞ் சில ஊர்களிலும் விஷபேதி தொடங்கி யிருக்கிறதாகப் பிரஸ்தாபம். அதன் கிருமிகள் காற்றுலும், நீரிலும், பிரயாணிகளாலும் பரவுகிறபடியால், ஜனங்கள் ஜலத்தைக் கொதிக்கவைத்துச் சாப்பிடவேண்டும். தண்ணீர் கொஞ்சம் சூடாயிருப்பது கொதித்தலல்ல; தளதளவென்ற கொதித்தால்தான் விஷக்கிருமிகள் சாகும்.

சரக்குகள் விலை. — விசேஷமாக, இறக்குமதி சரக்குகள் யாவும் விலை தூக்காய்விட்டன. கப்பற்காரர் தினையத்தினைக்குப் பினையத்தினையாய் லாபஞ் சம்பாதிக்கிறார்களேதவிர, நமக்கொரு லாபமும் காண்கிறதில்லை. சில கப்பற் கம்பெனிகள் நூற்றுக்கு இருநூற்று நாற்பது விழுக்காடு, லாபம் அபகரித்துக்கொள்ளுகிறார்கள். யுத்தத்துக்கு முன்பு பாரம் 300 ரூபாய்க்கு விற்றது இப்பொழுது அதேயெடை 1,600 ரூபாய்க்கும் கிடைப்பதமரிதாம்.

தாதாபாய நவ்ரோஜி. — இந்தப் பேர்போன இந்திய வயோதிபன் 92-ம் பிராயத்திலே பம்பாயிலே தேகவியோகமானர். நவ்ரோஜ் பார்யென்றாலும், சாவ இந்தியருக்கும் இனமானவர். இவர் ஒருவர்தான் பிரிட்டிஷ் பார்லிமென்டில் சிலகாலம் மெம்பராயிருந்து, இந்தியாவுக்காகப் பாடுபட்டவர். அவருடைய மரணத்தைக்குறித்த இந்திய பத்திரிகைகள் அனைத்தும் விவரங்கள் எழுதி, அவருடைய சிறந்த குணங்களைப் புகழ்ந்து பாடின.

பூப்பேந்திராதபரு. — இப்பெயர்கொண்ட பெரிய லாயர் தற்காலம் இங்கிலாந்தில் இந்திய கவுன்சில் மெம்பராகப் போகவிருக்கும் தருணத்திலே, இவர்பேரிலும் இவரது இரண்டொரு இனத்தார்பேரிலும் ஒரு பிரமாண்டமான பாங்குக் கேஸ் தொடுத்திருக்கிறது. இவர் மகன் 56 லட்சம் செலவு செய்துவிட்டதாக பாங்குக்காரர் வழக்குத் தொடங்கியிருக்கிறார்கள். எப்படிமுடியுமோ தெரியாது. பெரியோர் கிஷ்கரிசனையாய் நடந்து கொள்ளவேண்டும்.

இந்திய பாதுகாப்புச் சேனை. — இப்போ கொண்ட இந்திய வாலண்டியர் கார்ட்வில்லே இப்பொழுது மூவாயிரம் வாலிபர் சேர்ந்திருக்கிறார்கள். இதிலே கிரிஸ்தவர்கள் தொகைதான் அதிகமானது. எல்லா வீரரும் மும்மூன்றுமாதம் அப்பியாசம் அடையவேண்டும். இத்தேசத்துக்கு வெளியே அனுப்பப்பட மாட்டார்கள். மூவாயிரத்திற்குப் பதில், மும்பதினாயிரம்பேர் சேர்ந்தாலும் சொற்பந்தான். தம் சுயநாட்டைக் காவாதவர், சுய அரசு செலுத்துகிறது எவ்வாறு?

பெண் வைத்தியசாலை. — ஆண்களும் பெண்களும் கூடி, விசேஷமாய் ஒரே வைத்தியக் காலே ஜிலே வாழ்ப்பது உசிதமன்று. அதனல் சென்னையிலே பெண்களுக்கென்று பிரத்தியேகமான ஒரு வைத்திய சலசாலை கட்டப்போகிறார்கள். இதனல் அனேக பெண்கள் வைத்திய நிபுணர்களாகி, தங்கள் சகோதரிகளுக்கு உதவி புரிவார்கள். பெண்களுக்கு வைத்தியசாலைகளிலே, ஆண்களைப்போல பீஸ் (சம்பளம்) கிடையாது. புஸ்தகங்கள் மாத்திரம் வாங்கவேண்டும். அனேகமாய் உபகாரச் சம்பளமும் பல உண்டு.

ஆகாயப் பிரயாணம்.—யுத்தம் முடிந்தபின்பு உண்டாகும் அனேக அற்புத நூதனங்களில், ஆகாயப்பிரயாணம் ஒன்று அவியம் கடக்குமென்று வார்ட் மாண்டெரு அறிவித்திருக்கிறார். அப்பொழுது ஆகாயக் கப்பல்கள் ஒழுங்காக தினந்தோறும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கும், இவ்விருந்து அங்கும் பிரயாணிகளோடு யாத்தினைசெய்து வரு

செப்டெம்பர்மீ பத்தாங்கம்.—

வாரம்.	செப்டெம்பர்மீ = ஆவணி—புரட்டாசி. ● அமாவாசை, 16உ ⊙ பௌர்ணமி, 1உ.						ஆவணி—புரட்டாசி.					
ஞாயி...	...	2	9	16	23	30	...	18	25	32	7	14
திங்க...	...	3	10	17	24	...	...	19	26	1	8	...
செவ்...	...	4	11	18	25	...	...	20	27	2	9	...
புதன்...	...	5	12	19	26	...	...	21	28	3	10	...
லீயா...	...	6	13	20	27	...	...	22	29	4	11	...
வெள்...	...	7	14	21	28	...	...	23	30	5	12	...
சனி...	1	8	15	22	29	...	17	24	31	6	13	...

Vol. XXX. No. 11.

ம்ம். காலை 7 மணிமுதல் மாலை 6 மணிமட்டுமாத்திரம் பிரயாணம் நடக்கும். இராக்காலத்தில் அது நடவாது. இது மெத்த நல்லது. பிரயாணம் முழுதும் நாலுதினத்திலே முடிந்துவிடுவோம். இது ரெயிலிலும் விரைந்தது. இனிப் போடவிருக்கும் ரெயில் பாக்டாட், பஸ்ரா மார்க்கமாய் இராப்பகலாய்ச் செல்லக் குறைந்தது இரண்டுநாள் செல்லும். இந்த ஆகாயப்பிரயாணம் யுத்தமென்னும் பெருந்தீமையாற் பிறக்கும் சிறு நன்மைகளி லொன்று.

யுத்த வரலாறு.— சப்மெரின்களிலே ஜர்மன்கள் இன்னும் நம்பிக்கை வைத்திருந்தாலும், நட்பரசரின் கப்பல்களை அழிக்க முடியவில்லை; சில கடலிலே அமிழ்த்தப்பட்டாலும் ஆயிரக்கணக்கானவை உலகமெங்கும் சென்று, நல்ல வியாபாரஞ் செய்துகொண்டிருக்கின்றன. ஆனால், மேற்கிலே, அதாவது வட பிரான்சு, பெல்ஜியத்திலே, ஜர்மன் பலம் வெகுவும் ஒடுங்கிவிட்டது. தினந் அவர்கள் தோற்றுவந்து, கணக்கற்ற வீரர்களை இழந்துவருகிறார்கள். ஒரேதினத்தில், ஒருதரம், மூன்று [illegible]ரில் பெருத்த தோல்வி யடைந்தார்கள்.



ஆல்பர்ட் சங்கீதக் கூடம், லண்டன்.

இதனால் போப்பைக்கொண்டு தங்களுக்கு அனுகூலமான சமாதான ஏற்பாடு செய்விக்க முயன்றும், கிஞ்சித்தும் பயன்படவில்லை. இது நான்காம் வருஷம்; இவ்வருஷம் முடியுமுன் யுத்தமும் முடிந்துவிடும்போலத் தோற்றுகிறது. யுத்தத்தின் பல கெடுதிகளைப்பற்றி நிருபநேசர் ஒருவர் இந்தப் பக்கத்தி லெழுதியதை வாசித்துப்பார்க்கவும். எவ்வளவு நீட்சியான பிரயாணமும் முடிவுபெறுவ தவசியம்.

THE 3rd ANNIVERSARY OF THE WAR

ஐரோப்பாவில் நடக்கும் பெரிய யுத்தத்தின் மூன்றும் வருஷத்து விசேஷித்த நாள்

நமது அருமை பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் இக்கொடிய யுத்தத்தில் பிரவேசித்துச் சென்ற ஆகஸ்ட் மீ 4-ம் உ யோடு சரியாய் மூன்று வருஷம் முடிவடைகிறது. அன்றையதினம் ஒரு விசேஷ நாளாக எண்ணப்பட்டு இக்கொடிய யுத்தத்தை நினைத்தவர்களாய்ப் பற்பல இடங்களில் கூடிவந்து, அவரவர்களுடைய கொள்கையும் மார்க்க ஆசாரத்துக்கும் தக்கவாறு அவரவர்கள் வழிப்படும் தெய்வத்தை நினைக்கவோ ஜெபிக்கவோ செய்தார்கள். நமதருமை பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இக்கொடிய யுத்தத்தில் ஏன் பிரவேசித்தார்கள் என்றதைப்பற்றியும் பேசப்பட்டது, அவர்கள் இந்த யுத்தத்தில் ஏன் பிரவேசித்தார்கள் என்பதைப்பற்றி நாம் அறிந்துகொள்வது நமக்கு அதிகப் பிரயோஜனம்.

முதலாவது யுத்தம் ஆரம்பித்தவுடனே நமதருமை ராஜாங்கத்தார் தங்களால் ஆனமட்டும் சமாதானத்தை உண்டுபண்ண முயற்சி செய்தார்கள். அதற்குத் தக்கவராய் ஜர்மன் சக்கரவர்த்தி உடன்படாமல் யுத்தத்திற்கே கங்கணங்கட்டினர். முற்றப்படி நமதருமை ராஜாங்கத்தார் போர் புரியவேண்டுமென்கிற ஆசையோடாவது, அல்லது சுயலாபத்தைக் கருதியாவது, அல்லது தங்கள் ராஜ்யத்தை விஸ்தீரணஞ் செய்துகொள்ள விருப்பப்பட்டாவது யுத்தத்தில் பிரவேசிக்கவில்லை. ஆனால் ஜாதி ஜாதி செலுத்தவேண்டிய நீதி நியாயத்தை நிலைநிறுத்தவும், பலஹீனஜாதியை பலமுள்ள ஜாதிகள் நிர்மூலமாக்காமல் அவர்களைத் தற்காக்கவும் உலகமெங்கும் ஆங்காங்குப் பரவியிருக்கும் தம் பிள்ளைகளான குடிகளை பாதுகாக்கவுமே இவ் யுத்தத்தில் பிரவேசித்தனர்.

இவ்விதமாய்ப் பிரவேசித்த இந்த யுத்தமானது அதன் தன் கொடூர சுவாலையை இருபக்கமும் காட்ட அதன் பயனுகக் கணக்கற்ற வீரர் வன்கொலையடைவதும் லக்ஷாதிலக்ஷப் பவுண் அழிவதும், ஆயிரம் ஆயிரம் கணக்கான வீடுகளில் துயரமும், கண்ணீரும், வறுமையையும் உண்டாக்கச் செய்தது. நமதருமை பிரிட்டிஷ் ராஜ்யத்தின் நஷ்டம் இந்தியாவிற்கும் நஷ்டமென்றே சொல்லவேண்டும். அதற்கு துக்கமும், நஷ்டமும் உண்டாகும்போது அதன் கொடூரம் இந்தியாவாகிய நம்மையும் தாக்காமற் போகாது. அதன் கொடூர சுவாலை இந்தியாவைக் கவர்ந்து எரிக்க ஆரம்பித்ததினால் இந்தியாவிற்கும் புலம்புங்காலம் வந்தது.

யுத்தத்தின் காரணமாய் இந்தியாவிலிருந்து ஏராளமான பணம் அனுப்பப்பட்டுச் செலவழிந்துவருவது இந்தியாவின் செழிப்பை அழித்து அதற்கும் நஷ்டம் ஏற்படுகிறதல்லவா?

இதுநிற்க, அநேக ஆஸ்பத்திரிகளில், சீமைமருந்துகள் சரியானபிரகாரம் சப்ளை ஆகாததினால் டாக்டர்மார் சரியான அவிழ்தம் கொடுத்துச் சிகிச்சை செய்யக்கூடிய சக்தியற்றவர்களாய் இருப்பதும், அதனால் நம் தேசத்தின் சில பாகங்களில் வீடுகளிலுள்ள நோயாளிகளின் நோய் தீராமல் புலம்புவதும் பெரும் பரிதாபமல்லவா?

சீமைச் சரக்குகளின் விலை உயர்வினால் ஏழைஜனங்களின் தத்தளிப்பு எவ்வளவென்று சொல்லக்கூடும், $1\frac{1}{2}$ அணாவுக்கு விற்பனையான ஒரு புட்டி கிரசின் ஆயிலின் விலை தற்சமயம் $2\frac{1}{2}$ அணாவாக விற்கப்படுகிறது.

சாயம், நூல் முதலியவைகள் அரியாய் வாராததினாலும் விலையுயர்வாலும், அநேகப் பட்டுநூல்காரர், கைகோளர், சேடர், சாலியர் தங்கள் தொழிலையும் விட்டு தேசாந்திரிகளாய் புறப்பட்டதும் யுத்தத்தின் கொடுமையல்லவா?

துணிகளின் விலையேற்றத்தால் ஏழைஜனங்கள் துணிவாங்கச் சக்தியற்றுக் குடும்பங்களில் கவலையுற்றிருப்பதும், இன்னும் கொஞ்சகாலத்திற்குள் இந்தியா துணிகிடைக்காமல் தன் நிர்வாணத்தை இலைகளால் மூடவருமோ என்கிற நிலையும் உண்டாக்கினது யுத்தத்தின் கொடுமையல்லவா?

ஐரோப்பாக் கிறிஸ்தவர்களால், இந்தியாவிலுள்ள அநேக மிஷன் பள்ளிக்கூடங்களும், சன்மார்க்க ஊழியங்களும், சபைகளும் ஆதரிக்கப்பட்டுவருகிறது. இந்த யுத்தத்தின் கொடூரத்தால் ஐரோப்பா கிறிஸ்தவர்களிடமிருந்து பணம் நிறுத்தப்பட்டுப் போகும், அக்காலங்களில், இலவசமாய்ப் படிக்கிற ஆயிரம் கணக்கு ஹிந்து, கிறிஸ்தவ மாணுக்கர்கள் தங்கள் சிலாக்கியத்தை இழந்து அவஸ்தைப்பட நேரிடும், இதுநிற்க, மிஷன் ஊழியத்திற்கே தங்களை ஒப்புக்கொடுத்து வேலைசெய்துவரும் அநேக ஆசாமிகளுடைய நிலைமையும் பரிதாபமாய் முடியும், இவைகளையெல்லாம் யோசிக்கும்போது ஐரோப்பா யுத்தத்தின் கொடூரம் இந்தியாவையும் பிடித்தது என்று யார் சொல்லக்கூடாம லிருக்கக்கூடும். ஆகையால் இந்தச் சமயங்களில் நாம் [illegible]ளாயிராமல் ஆஸ்தியைத் தேடுவதிலும், உல்லாசம், லௌகீகம், சுயசயம் இவைகளில் காலத்தைக் கழிக்காமல், நாம் நம்முடைய கடவுளுக்குமுன்பாக தாழ்த்தி, நம்முடைய [illegible]யும், நம்முடைய ராஜ்யத்தின் பாவங்களையும் மன்னித்து, இந்த கொடூர யுத்தத்தின் கண்ணீரையும், துக்கத்தையும் நீக்கி, ஜனங்களுக்குள் நிலையான சமாதானம் உண்டாகும்படி கடவுளைநோக்கி பிரார்த்தனை செய்யவேண்டும். யுத்தத்தில் படுகாயப்பட்டிருக்கும் வீரர்களுக்காகவும் அவர்கள் மரணத்தினால் திக்கற்று தவிக்கும் விதவைகள், பிள்ளைகளுக்காகவும், யுத்தத்தினால் நேரிட்டிருக்கிற வறுமையையும் தரித்திரத்தையும் நீங்கிப்போகும்படியாக பிரார்த்தனை செய்யவேண்டும். யுத்தத்தை நடத்துகிறவர்களின் சுயபெருமை போய், தங்கள் சுயபெலத்தில் நம்பிக்கைவைக்காமல் கடவுளை நம்பவும். நமது மாட்சிமைதங்கிய சக்கராவர்த்தி, சக்கராவர்த்தினி இளவரசர், மந்திரி பிரதானி அரண்மனை ஆலோசனைக் கர்த்தாக்கள் சேனைகள் எல்லாரும் தெய்வபயத்தால் நிரப்பப்படவும் கடவுளுடைய ஆசீர்வாதம் ஊற்றப்படவும் நாம் ஜெபம்பண்ணவேண்டும்.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

SAMUEL HEBICH OF MANGALORE

சாமுவேல் ஹெபிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

ஹெபிக் புதுப்பிறப்பை அடைந்தபிறகு ஆவிக்குரிய சிற்சில வியாதிகளைக் கடக்கவேண்டியதாயிருந்தது. குணப்பட்ட ஒவ்வொரு மனுஷனையும் பிடிக்கக்கூடிய அவநம்பிக்கையும், சந்தேகமுமென்கிற பலஹீன சுரமும், அகந்தை என்கிற வைசூரியும், இன்னும் பற்பல ஆவிக்குரிய பலஹீன நோய்களும், வலிகளும் உண்டாயின. ஆனபோதிலும், இவ்வித நோய்களையும், அதற்குரிய பரிகாரங்களையும் அறிந்த கடவுள் அவாருகாமையில் இருந்து, ஊபெக்கில் சீர்திருத்தம்பெற்ற ஆலயத்தில் போதகராயிருந்த கீபேல் ஐயர் மூலமாய் உதவிசெய்தார். இளைஞனாகிய ஹெபிக், லூத்தர் சபை போதகரின் மகனாயிருந்தபடியால் சீர்திருத்த சபையின் விசுவாசத்தை அநுசரிக்க முதலிலே பயப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி ஹெபிக் சொன்னதாவது, முதலாவது நான் கீபேல் ஐயருடைய நிலைவரமான விசுவாசத்தையும் தேவபத்தியையும் கண்ணுற்றபோது எனக்கு அவர்பேரில் கோபமும் எரிச்சலும் உண்டானது, ஆனால் என் தகப்பன், இயேசு என்கிற பெயரைக் கேட்டவுடன் தம்முடைய தொப்பியைக் கழற்றி மரியாதை செய்வாரே அது என் ஞாபகத்திற்கு வந்தது, அதோடுகூட "உனக்குப் பாவமன்னிப்பை அருளின இயேசுகிறிஸ்துவைப் பற்றித்தான் கீபேல் ஐயர் பேசுகிறார் என்கிற ஒரு உணர்ச்சி என் உள்ளத்திற்கு வந்தது.

சீர்திருத்த சபையைப்பற்றி தப்பெண்ணம் இருந்ததினால்தான் இந்த தெய்வ பக்தியுள்ள போதகரின் பிரசங்கத்தைக் கேட்க 1822-ம் வருஷம் ஆரம்பம் ஆகிறவரையிலும் அவ்வித ஆலயத்திற்குப் போகாமலிருந்தார். கீபேல் ஐயருடைய பிரசங்கங்களைக் கேட்டபிறகும் விசேஷமாய் அவர் இயேசுநாதருக்குமுன் ஏறெடுக்கிற ஜெபங்களினாலும் ஹெபிக் அதிக தெளிவை அடைந்தார். இவர் இவ்விதமாய் சீர்திருத்த சபையின் போதகத்தைக் கேட்க ஆலயத்துக்குப் போவதையும் தனக்குக் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு நிமிஷத்தையும் வேதத்தை வாசிப்பதில் செலவிடுவதையும் அறிந்த இவருடைய தகப்பனும் மூத்தசகோதரனும் இவரைப்பற்றி விபரீதமான அதிருப்திக் கொண்டார்கள். அதனால் இவருக்கு இவருடைய தகப்பனார் ஒரு பயங்கரமான கடிதத்தை எழுதினார். அதிலே அவர் சொன்னதாவது—"ஓ மகனே நீ வழிதப்பிப்போனாய்" என்பதே. இதை இவர் வாசித்தவுடனே இவருடைய ஹிருதயத்தில் இருள் மூடிக்கொண்டது, அதனால் தனக்குத்தானே யோசிக்க ஆரம்பித்ததாவது—ஓ, மூடப்பயலே; உன் தகப்பன் கற்றறிந்தவரும் லூத்தர் சபையில் கெட்டிக்கார போதகராய் எழுபத்தைந்து வருஷத்திற்கு மேலாக ஜீவித்திருக்க, நீ இன்னும் இருபது வயதிற்குத்தானும் வரவில்லையே, இதுநிற்க உன் தமயன் அநேக ஜனங்களால் மதிப்புப்பெற்றவர், அப்படியிருக்க, குறைந்த அறிவுடைய நீமாத்திரம் அவர்களைப்பார்க்கிலும் மேலான அறிவை அடைந்து அவர்கள் தப்பிதத்தில் இருப்பது கூடிய காரியமா? அப்படியிருப்பது அசாத்தியம். உன் சுய அகந்தையே உன் கண்களை மூடச்செய்திருக்கிறது." என்று பலவாறாய் இவ்வித எண்ணங்களெல்லாம் இவரைக் கலங்கச்செய்தது.

"புசல்காற்று அடித்த ஒரு தினம் கடைத்தெருவைக் கடந்து வீட்டுக்குப் போகும்போது இந்த எண்ணங்களெல்லாம் என்னை மூடிக்கொண்டது, அதே சமயத்தில் ஒரு சத்தம் என்னோடு பேசுகிறதைப்போல் உணர்ந்தேன். அதாவது, என்னைப் பார்க்கிலும் உன் தகப்பனையா? உன் தாயையா? யாரை நேசிக்கிறாய்? என்னைப்பார்க்கிலும் அவர்களை நேசிப்பாயானால் நீ எனக்குப் பாத்திரன் அல்ல" என்பதே. இயேசுபெருமானைப் பின்பற்றுவதுதான் என் கடமை என்று நான் இப்பொழுது அறிந்துகொண்டதினால், என் தகப்பன் தமயனுடைய கடினமான வார்த்தைகள் என்னிடத்திலிருந்து மழைத்துளிகளைப்போல் கீழே விழுந்துவிட்டன.

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

4. மம்மோன் பிரசங்கப்படலம்.

வானுலகாதிபதியைச் சிங்காசனத்தினின்று அகற்றிவிடவும், நமது சுயார்ச்சித ஸ்தலத்தைக் கைப்பற்றிக்கொள்ளவுங் கூடுமாயின் சந்தேகமின்றி யுத்தஞ்செய்யவேண்டும். அப்போது நாம் செய்யும் பிரயத்தனங்கள் மாறாத விதியையும் மாறச்செய்யும். தேவலோகமுழுவதும் நம்முடையதாகிவிடும். இவ்விரண்டு காரியங்களை நாம் செய்யக்கூடாதபட்சத்தில் நம்முடைய பிரயாசங்கள் விருதாவாய் முடியுமென்பதற்கு எவ்வளவேனும் சந்தேகமில்லை. முதன்மையாக சிங்காசனத்தில் வீற்றிருப்பவரை இடம்பெயரச் செய்யாவிடின் வானுலகத்தில் ஓர் அங்குலவிடமும் நமக்காதீனமாகாது. இது வாஸ்தவமான காரியம். ஓர்வேளை நாம் அவருக்குக் கீழடங்குவோமென்று உறுதிசொல்ல அவர் மனதுருகி நமக்குக் கிருபையளிப்போமென்று பிரசித்தப்படுத்தினுரென்று வைத்துக்கொள்வோம்; அப்போதும் அவருடைய சன்னிதானத்தில் எவ்வித கண்களுடனே தாழ்மையாய் நிற்கக்கூடும்? அவருடைய ஆக்கினைச் சட்டத்திற்கு யார் வணங்கி நடக்கக்கூடும்? அவருடைய [illegible] மகிமை புண்டென்னும் பொருந்தி [illegible] அல்லேலூயாவென்னும் தோத்திரப்பாட்டை யார் பாடக்கூடும்? நாம் அடிமைகளைப்போல பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தும்போது நமக்கு எதிராளியானவர் ஆண்டவராக வீற்றிருப்பதையும், அவர் பீடத்தைச் சுற்றி நற்கந்தமும் பரிமளமுமான வாசனைகளும் புஷ்பங்களின் தேவாமிர்தக் காற்றும் வீசுவதை யார் சகிக்கக்கூடும்? இவ்வகையான வேலையையா நாம் வானத்திற் செய்யவேண்டும்? இதுவா நம்முடைய பேரின்ப வாழ்வு? நித்தியமான காலத்தை நமக்குப் பகையாளியாயிருப்பவருக்கா ஊழியஞ்செய்வதில் செலவிடுகிறது? அவ்வித பணிவிடைசெய்ய உத்தரவுகிடைத்தாலும் அல்லது யுத்தம் புரிவதினால் அதை அடைந்தாலும் அக்காரியம் நமக்கு வேண்டியதில்லை. நமக்கு நன்மையானவைகளை நாம் தேடிக்கொண்டு நமக்குண்டானவைகளைக்கொண்டு நாம் ஜீவிப்போமானால், அதுவே போதும்.

இந்த விஸ்தீரண பாதாளலோகத்தில் நாம் சுயசித்தர்களாய் யாதாமோர் உத்தரவாதமின்றி யிருக்கலாம். அடிமையாகி மகிமையை எளிதில் சம்பாதிப்பதிலும் கொர்வியாயிருந்து அரிதில் சுயாதீனத்தைச் சம்பாதிப்பதே வாசி. நமது மகிமை அப்போது துலாம்பரமாய் விளங்கும். எப்படியெனில், அற்ப சம்பவங்களைச் சிறந்த காரியங்களாக்கவும், தீமையை நன்மையாக்கவும், பிரதிகூலமான விஷயங்களை அனுகூலமாக்கவும், சங்கடங்களில் சந்தோஷிக்கவும், துன்பத்தை இன்பமாக்கிக்கொள்ளவுந் தக்க சக்தியுஞ் சமர்த்தும் நமக்குண்டென்று பிரத்தியட்சமாய் விளங்குவோம். இவ்விருண்ட பாதாளத்துக்குக்காகவா நாம் பயப்பட்டுக்கொண்டிருக்கிறது. சமஸ்தத்தையும் ஆளுகின்ற கர்த்தனும் எத்தனைவிசை கறுத்ததும் இருண்டதுமான மேகத்தின் மத்தியில் வாசம்பண்ணியிருக்கிறார். அவருடைய ஆசனத்தையே இருள் ஓர் விதானம்போல மூடிக்கொண்டிருக்கிறது. அதினின்று இடிமுழக்கங்கள் ஆரவாரத்துடன் கொர்ச்சனை செய்கின்றன. மோட்சமும் நரகத்துக்கு அடிக்கடி சமமாகிவிடுகிறது. அவர் இஷ்டப்பிரகாரம் நமதிருளை உபயோகப்படுத்துகிறதுபோல நாம் அவரின் வெளிச்சத்தை உபயோகப்படுத்தக்கூடாதோ? நாம் நிற்கும் இந்த ஸ்தலம் கட்டாந்தரையாய்க் காணப்படினும் ரத்தினக்கற்களும் பொற்பாளங்களும் இதில் புதைக்கப்பட்டிருக்கின்றனவல்லவோ? இவைகளைக்கொண்டு மகத்துவ சகிதமான ஓர் காரியத்தை நமது யுக்தியினாலும் வித்வ சாமர்த்தியத்தினாலும் உண்டுபண்ணக்கூடாதோ? இதைவிடச் சிறந்தகாரியம் ஒன்றுண்டோ? நமக்கு வாதனைகளாயிருப்பவைகள் சுகானுபவங்களாகவும், கசப்பானவைகள் அமிர்தங்களாகவும் மாறிவிடாவோ? காலஞ் செல்லச்செல்ல நரகத்துக்கு வழக்கப்பட்டுப்போவோமல்லவோ? அப்போது வேதனை இன்னதென்றுந் தெரியாமற்போகும். இக்காரியங்களை யோசிக்குமளவில் நாம் யுத்தஞ்செய்வதை முற்றிலும் விட்டுவிட்டு அமைதலுடன் தகுந்த ஆலோசனைசெய்து நமக்குண்டான தற்காலத் துன்பங்களை நிவிர்த்தி செய்வதே உத்தமமாயிருக்கும். இதுவே எனது அபிப்பிராயம்; உங்களுக்குத் திட்டமாய்ச் சொல்லிவிட்டேன் என்றனன்.

இவன் பேசி முடிந்தவுடன் ஓர் பெரிய இரைச்சலும் முழக்கமும் நரகத்திலுண்டாயின. புசற்காற்றனது இராமுழுவதும் சமுத்திரஜலத்தைக் கொந்தளிக்கப்பண்ணி, காலை வெளுக்கும் நேரத்தில் கோஷ்டத்தை அடக்கிக்கொண்டு மலைக்குடாவுகளிற்போய் உறுமிக்கொண்டிருக்கும் பாவனையாயிருந்தது.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஈனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.



மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அன்டு கோ, (லிமிட்டெட்)

மதராஸ்.

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depot, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்தானமே அனுப்பவேண்டும். பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுபட்ட அத்தனை 4 அணு; அவை அறு தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு அத்தனை ரூ. 1-0-0.

பத்திரிகை, புஸ்தகம் முதலிய வேண்டுவோர் செயலைத் தபாற்கடியுடன் சென்னை மிலாரியன் தூதைக்கேற்ற C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்குப் பிப் பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.

Registered No. M. 442.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 OCT 1917 MADRAS

சத்திய தூதன்.

OCTOBER, 1917. PRICE, 1 PIE.—விலை, 1 பை. அக்டோபர்மீ, 1917.

NEWS AND NOTES

வர்த்தமானக் குறிப்புகள்

மாண்டெகு மந்திரியும், ரஷியாவின் பிரதிநிதியும். — இவர்கள் இருவரும் பூதருவத்தைச் சேர்ந்தவர்களாம். வல்லவன் எங்கும் செல்வமடைவான்.

சத்தியதூதன் வயது. — இம்மாதச் சஞ்சிகையோடு இத்தப் பத்திரிகை 30 வயது முடித்து, 31-ம் வயதாரம்பிக்கிறது. இவ்விலாத்த போலிருந்த தெதிதாலிம்தவீர; இதினைக் காலமனவும், பத்திராதிபரே இதை நடத்திவந்தது கடவுள் கடாட்சமே.

தேங்காயெண்ணெய். — மலையாளத்திலே ராஜாம்மாய் வினைற தேங்காய் எண்ணெயிலிருந்து வெண்ணெய் உண்டாக்கும்பொருட்டு டாட்டா கம் பெனியார் கொச்சியிலிருக்கும் எனைக்குளத்தில் 23 லட்சம் ரூ. செலவுசெய்து ஒரு ஏதாழிற்சாலை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மலையாளத்தில் உபகாரச் சம்பவம். — மலையாளத்தராச் இங்கிலாந்துக்குப் போய் மூன்று வருஷங்களாக்கும் செய்தல் வண்ணர் தோய்த்தலும், சோப்புத் தொழிலும், தோல் பதனிடலும், பதார்த்த குண சான்றிரமும் கற்றுத் தேர்ச்சி யடையும்படி, நாண்டு உபகாரச் சம்பவ ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பீஷப் வைட்டேட்டின் உபந்நியாயர்களும்.— சகல இந்திய விஷயங்களையும் கூர்ந்து கவனிக்கிற பிஷப் வைட்டேட் டவர்கள் உபந்நியாயர்கள் சம்பளம் மூன்றிலொரு பாகம் உயர்த்தப்படவேண்டுமென்று சொல்லுகிறார். 20ம், 300 ரூ. சம்பளம் வாங்குற ஹெட்மாண்டர்கள் 270, 400 ரூ. வாங்க வேண்டுமென்கிறார். இது உண்மையும் நியாயமானது.

பூப்பேத்தீராதபாக. — இந்தப் பேர்போன லாயர் லண்டனில் இந்திய மந்திரியின் சபையிலோர் மெம்பராக நியமிக்கப்பட்டும், மாண்டெகு மந்திரி வந்த போகும்மட்டும் இங்கே இருக்க வேண்டுமென்று உத்தரவு பிறந்திருக்கிறது. இவர் தான் முன்பு இந்திய ஜாதிகளெல்லாம் ஒருவரோ டொருவர் கலியாணஞ் செய்துகொள்ளலாமென்று ஒரு சட்டம் உண்டுபண்ண முயன்றவர்.

பிராமண நல்லாதவர்ச் சங்கம். — தற்காலத்தில் இந்தியாவிலே அனேக சீர்திருத்தங்கள உண்டாகிற சமயத்திலே, பிராமணர் மட்டுமல்ல, வேறய அனத்தமான வகுப்பார்களும் ஒன்றுசேர்வது மேற்படி சீர்திருத்தங்களில் தக்கவாறு பங்கு பெறும் பொருட்டு பெருத்த ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இது பிராமணருக்கு எவ்வளவேனும் விரோதமாயிராமல், அவர்களோடு ஒன்றுசேர்ந்து இந்தியாவின் பொதுலத்தைக் கருதியதாகும்.

நிதன உழவு.—லப்பைகொண்டு வர் உழுகிறது வழக்கம். ஆனல் வெடிமருந்து கொண்டு பூமியைக் கிளப்பி உழுகிறது நூதனம். சேர்க்கோட்டிலே அங்கங்கே கொஞ்சம் டினமைட் என்கிற வெடிமருந்து வைத்து, தண்டனைக் கொஞ்சு தினவுடனே ஆழமாய் வர் உழுதபோலவே ஒரு நிமிஷத்துக்குள் பூமி வெடித்துப் புழுதி புழுதியாய் எழும்பிவிடுகிறதாம். இத்தேசத்திலும் இம்முறை இனி அநுசரிக்கப்படும்போலிருக்கிறது. தேனுக்கு நாட்டிலே ஒரு விவசாயக் காலேஜும், ஒரு எஞ்சினியரிங் காலேஜும் ஸ்தாபிக்கப் போகிறார்கள்.

பயங்கரமான யுத்தக் கருவிகள். — சமுசன் என்கிற பேர்போன தத்துவ சாஸ்திரி டெலிபோன், மோட்டர்கார், போலெஸிராப், முதலிய அனேக அருமையான யந்திரங்களே உண்டுபண்ணினவர். இப்போது எதிரிச் சேனையை ஒரு நிமிஷத்திலே, அல்லது எதிரிக் கப்பல்களை ஒரு நொடிப்பொழுதிலே தன்பொடியாக்கி அழித்துப்போடத்தக்க ஒரு யந்திரத்தை யுதித்திருக்கிறார். அந்த ரகசியம் எதிரிகாதில் விழாதபடி நமது ஆயிரம் வேலைக்காரனைப் பத்துமாதஞ் சிறையில் போட்டுவைத்தால் அதை முடித்துக் கொடுக்கிறேனென்கிறார். அதிகாரிகள் என்ன சொல்வார்களோ?

பேசண்டம்மாள். — நமது சாஸ்யத்திலே சுய அரச இந்தியாவுக்குக் கிடைக்கவேண்டுமென்று வெருவாய்ப் பிரயாசப்பட்ட பெசண்டம்மாள் மூன்றுமாதத்துக் கதிமாக வாயும், வயும், காலும் சுவாதீனமற்றுக் கிடப்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். வாய் அடைபட்டது பேசக்கூடாதென்பது; கை சுறுசியது எழுதக்கூடாதென்பது; கால் கடந்தது குறித்த இடங்களுக்கு வேடிஞ் செல்லக்கூடாதென்பது. இப்பொழுது கோயம்புத்தாரிலிருக்கிறார்கள். ஆகிலும் சுவான் ஜெனரலவர்கள், இந்தம்மாள் சுதாலிதமாய் கழிவேன் என்று வாக்குக் கொடுத்தால் விடுதலையடைவார்களென்று பிரசித்தஞ்செய்திருக்கிறார்கள். ஒருவேளை கமது சுவான்ரும், சுவான் ஜெனரலும் சுலத்துபேரி விடுதலைகென்ற எற்பாடு செய்வார்கள்போலும். வருகிற அக்டோபர் மாதத்திற்குள்ளே இது கடந்தாலும் கடக்கும். சென்றமீ 17உ விடுதலை பெற்றார்கள். இந்தம்மாளுடைய ஆதாஸ்காக அனல் லட்சத்துக் கதிகமான திரவியம் சேர்திருக்கிறது ஆச்சரியக்தான். சுவான்மெண்டாலாக் கொஞ்சம் சுகத்து பேசுவது பெசண்டம்மாளின் ஒரு குறைவு.

மாண்டெகு மந்திரி. — இந்திய மந்திரியாகிய மாண்டெகு அவர்கள் வருகிற மாதம் இத்தேசம் வருகிறார்; வந்து அதிகாரிகளோடு ஆலோசனை செய்து, அரசன்போல், இத்தேசத்துக்கு அனேக நன்மைகள் செய்வாரென்று சகலரும் கோரியிருக்கிறார்கள். கல்லிபலியும் அனேக இந்தியர்கள் ராஜலத்திற் சேர்க்கப்பட்டோர்கள்; அனேக இந்தியருக்கு இன்னும் அனேகமான உயர்ந்த உத்தியோகங்கள் அளிக்கப்படும்; தபசுவி, மிஸ்தல் முதலான ஆயுதங்களே லேசென்றில்லாமல் உபயோகிக்க உத்தரவாரும்; சட்டசிருபண சங்கங்களுக்கு இன்னும் விசேஷமான உரிமைகள் கிடைக்கும்; சாமக்கல்லியும் அதிகமாய் பரவிவிடும். ஆமி

அக்டோபர்மீ பத்சாங்கம்.—

வாரம்.	அக்டோபர்மீ = புஷ்டபதி—இப்பசி. ● அமாவாசை, 15உ. ○ பௌர்ணமி, 30உ.					புஷ்டபதி—இப்பசி.				
ஞாயி...	....	7	14	21	28	...	31	38	4	11
திங்க...	1	8	15	22	29	15	22	29	5	12
செவ்...	2	9	16	23	30	16	23	30	6	13
புதன்...	3	10	17	24	31	17	24	31	7	14
வியா...	4	11	18	25	...	18	25	1	8	...
வெள்...	5	12	19	26	...	19	26	2	9	...
சனி ...	6	13	20	27	...	20	27	3	10	...

Vol. XXX. No. 12. புஸ்தகம் ஈ.o. தெ. ஈ.

னும், இந்தியர் கப்பல்கட்டவும், பெருத்த சைனியங்களை உண்டுபண்ணி இத்தேசத்தைப் பாதுகாக்கவும், தங்களுக்கு வேண்டிய காகிதம், துணிமணிகள், நெருப்புக்குச்சிகள், கண்ணாடிச்சாமான்கள், தோல்பதார்த்தங்கள் முதலான நாகரீக வஸ்துக்களைத் தாங்களே செய்துகொள்ளத் திராணியடையும்வரையும் சுயவரசு வைத்தனுபவிப்பது அசாத்தியமாயிருக்குமென்று அனேக புத்திமான்கள் எண்ணுகிறார்கள்.

THE WAR

யுத்த வரலாறு

மழைகாலமும் கார்காலமும் ஆரம்பிக்கிறபடியால் நட்பரசரின் முயற்சிகள் கொஞ்சம் தடைபட்டுள்ளன. ஆயினும் சாதாரண சண்டைகளும் ஜெயாபஜயங்களும் நாள்தோறும் நடந்துவருகின்றன. ஜர்மன்கள் இன்னுமொருதரம் சமாதானஞ்

னும் சிறிதுகாலம் நடக்கும்போலிருக்கிறது. அமெரிக்கர் நட்பரசருக்கு வேண்டிய திரவிய உதவி செய்துவருகிறதோடு ஒரு பிரமாண்ட சேனையையும் தயார் செய்கிறார்கள். சப்மெரின் பிரயத்தனம் ஒழிந்துவிட்டது. இனி பயங்கரமான ஓர் கப்பற்சண்டை நடக்குமென்றெண்ணப்படுகிறது. ஸ்வீடின் தேசம் ஜர்மனியோடு இரகசிய சினேகஞ் செய்திருக்கிறதாக வெளிப்பட்டிருக்கிறது.

ACTION AND FRUIT

செய்கையும் பலனும்

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான், தினையை விதைத்தால் தினையை அறுப்பான், வினையை விதைத்தால் வினையை அறுப்பான், விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளையாது, வெள்ளைச் சோளத்தை விதைத்

டாக்தப்பதித்த [illegible] புஸ்தகங்களிலிருந்து சில குறிப்புகளை எடுத்துக் காட்டுகிறேன்.

லங்காபுரி அரசனாகிய இராவணன் சகல பாக்கியங்களையும் வரங்களையும் உடையவனாயிருந்தாலும், பிறர் தாரமாகிய சீதாபிராட்டியைக் கவர்ந்த இழிவான குணத்தினால், தன் ராஜ்யத்தை இழக்கவும் கடைசியாய் இராமன் கையில் சாகவும் நேரிட்டது. செய்கையும் பலனும் இணைபிரிவதே இல்லை.

தேவேந்திரன். கௌதமரிஷியின் மனைவியாகிய அகலிகையுடன் விபசாரம் செய்ததினால், அவளைக் கல்லாகவும், தேவேந்திரன் அவ்வித குறிப்புகளை உடைய தண்டனையை அடைந்ததுமல்லாமல், இராவணன் மகன் இந்திரஜித்தன் கையில் அகப்பட்டு அவமானமடைந்தான், செய்கையும் பலனும் இணைபிரியாது.

கீசகன். பிறர்தாரமாகிய திரௌபதியை இச்சித்ததால் அதற்குப் பலனும் வீமன்கையில் மாண்டான்.

தண்டன். சுக்கிராசாரியாருடைய புத்திரியைப் பலாத்காரமாய்க் கற்பழித்தான்; அதன் பயனாகக் கிடைத்த சாபத்தால் அவன் பட்டணம் மண்மேடானது.

திருக்கோணமலைத் துறைமுகம்.

செய்துகொள்ள யத்தனப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நாடும் சமாதானமோ, தோற்றவர்கள் ஒப்புக்கொள்வதாயிராமல், ஜெயித்தவர்கள் சாதிக்கிற சாமர்த்திய வீம்பாயிருக்கிறது. ஆதலால் சண்டை முடிவுவரைக்கும் நடந்துதான் தீரவேண்டும். சகல ராஜ்யங்களும் இந்தப் போராபத்தினால் பல கேடுகளும் குறைகளும் சகிக்க நேரிட்டிருக்கிறது. எதிரி நாடுகளின் நிர்ப்பந்தத்தை இன்னதெனப் புகல முடியாது. ஜர்மனி ஜனங்கள் உண்மையான சமாதானத்துக்காக இடைவிடாது பாடுபடுகிறார்கள். இத்தாலியர் தங்கள் முக்கிய லக்காயிருக்கிற டிரியஸ்ட் பட்டணத்தை அடுத்துவிட்டார்கள். அனேக நாடுகளை ஜெயித்தாயிற்று. சியம், பிழூஸ் ஏரிஸ் முதலான பல சிற்றரசர்களும் ஜர்மனிக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். தற்கால ஜர்மன் மந்திரியாகிய மிக்கேலிஸ் என்பவர் மதபக்தியுள்ளவராம். ஆனாலும் என்ன? தான் கொண்ட பிடியை விடான். ரஷியாவிலே மறுபடியும் கலகமுண்டாயிருக்கிறது. அந்தச் சாக்கினாலே, ஜர்மன்கள் ரஷியபட்டணமாகிய ரீகாவைப் பிடித்துக்கொண்டு, ராஜநகரமார்க்கமாகச் சென்றார்கள். ஆயினும், ரஷியரின் எதிர்ச்சையைக்கண்டு, முதுகுகாட்டித் திரும்பிவிட்டார்கள். யுத்தம் இன்

தால் வெள்ளையாகவே அறுப்பான், சிகப்பு சோளத்தை விதைத்தால் சிகப்பாகவே அறுப்பான், நம்முடைய செய்கைக்குத் தக்க பலன் இணைபிரியாமல் ஜோடியாகவே வருகிறது. ஊசியும் சரடும்போல் சேர்ந்துவரும், நன்மை செய்தால் நன்மையுண்டு, தீமை செய்தால் அதன் பலன் இணைபிரியாது. தற்காலத்தில் உலகமுழுவதும் நன்மை செய்கிறவர்கள் சொற்பம், ஆனால் தீமை செய்கிறவர்களுக்கோ கணக்கில்லை "எல்லாரும் வழிவிலகி கெட்டுப்போனார்கள்" என்பது சத்தியம். நன்மையை ஒழித்து, தீமையை விதைக்கிறவர்களுக்கோ அதன் பலன் தண்டனையை அநுபவியாமல் போகார்கள். கடவுள் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார், உனக்குக் கண்ணை உண்டாக்கின அவருக்கு கண்கள் உண்டு, காதை உண்டாக்கின அவருக்குக் காதுகள் உண்டு, நீ எவ்வளவு இரகசியமாய்ப் பூட்டப்பட்ட அறைகளுக்குள்ளே தீமையைச் செய்தாலும் அதை அவர் பார்க்கிறார். நீ பேசுகிற ரகசியமான தீயசொற்களை அவர் தம் காதால் கேட்கிறார்.

கடவுள் நீதியுள்ளவர், நீதியைச் சரிக்கட்டுகிறவர் சும்மா இருப்பாரோ அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக தண்டிப்பார். செய்கையும் பலனும் இணைபிரியவே பிரியாது. இதைத் திருஷ்

தசரதன். ஒரு மனைவியை விவாகம்செய்து அவளையே தனக்கு ஏற்றதுணையாகக்கொண்டு இல்லற இன்பத்தை அநுபவிக்கிறதற்குப் பதிலாய் மூன்று மனைவிகளை விவாகம்செய்து அதன் பயனாக அவர் இரண்டாம் மனைவி கைகேயி தன் சக்களத்தி மகனாகிய இராமர்பேரில் பொறாமைப்பட்டு அவரைக் காட்டிற்குத் துரத்தவும் தன் மகன் பட்டாபிஷேகம் பெறவும் ஆசைப்பட்டாள், இதனால் தசரதன் தன் சிரேஷ்டபுத்திரனைக் காட்டுக்கு அனுப்பித் துன்பப்பட்டுக் கடைசியில் துக்கத்தினாலேயே தம் உயிரையும் இழந்தார்.

கைகேயி. தன்னயத்தைக் கருதித் தன் மகனே அரசாளவேண்டுமென்று கோக்கம் கொண்டதால் அதன்பயனாக அவள் விதவையாகி மற்றவர்களால் நிஷ்டூரமடைந்தாள்.

மந்தரை. ராஜதுரோகம் செய்து இராமர்மேல் பொறாமைகொள்ள கைகேயியைத் தூண்டிவிட்டதின் பயனாக, பரதர் சத்துருக்னன் முதலியவர்களால் தண்டிக்கப்பட்டாள்.

துரியோதனன். தருமர்பேரில் பொறாமைகொண்டு பறபல மோசம் செய்யப் பிரயத்தனப்பட்டதால் அழிந்துபோனான்.

[illegible]

மேற்சொல்லிய திருஷ்டாந்தங்களெல்லாம செய்கைக்குப் பலன் காத்துக்கொண்டே இருக்கிறதென்பதைக் காட்டுகிறது, அதனால்தான் திருவள்ளுவர், "தீயவை தீய பயத்தலால், தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்றார். மனிதனுடைய நிலைமை விதைப்பும் அறுப்பும்தானா? அதோடு மாத்திரமல்ல, மனஸ்தாபம் பிறந்த இடத்தில் மன்னிப்பு உண்டாகிறது, இராவணன் சிறிய தாயாராகிய கும்பிநசி மதுஅரசனோடு ஓடிப்போனான், இராவணன் அவனையும் மதுவையும் கொன்றுபோடப் போனான். அப்போது கும்பிநசி மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக் கேட்டாள்; அப்போது இராவணன் மன்னித்தான். ஜரா வென்கிற வேடன் கிருஷ்ணபகவானை அம்பால் எய்து கொன்றான், தெரியாமல் செய்ததாக மன்னிப்பு கேட்டபோது அவனுக்கு மன்னிப்பு அருளப்பட்டது.

"துன்மார்க்கன் தன் வழிகளையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டுக் கடவுளிடத்தில் திரும்பக்கடவன், அவர் அவன்மேல் மனதுருகுவார். கடவுளிடத்திற்கே திரும்பக்கடவன். அவர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார்."

டி. யல். ராஸ்,
சங்ககிரி துருகம், சேலம்.

SAMUEL HEBICH OF MANGALORE

சாமுவேல் ஹெப்பிக் ஐயரின் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

(தொடர்ச்சி.)

"1823-ம் வருஷம் சாமுவேல் ஹெபிக் தன் தாய்தகப்பன் வீட்டிற்குத் திரும்பவும் போய் அங்கே அவர்களோடு சிலகாலம் கழிக்கச் சமயம் நேர்ந்தது. அதன்பிறகு தன் தகப்பன் வீட்டைவிட்டு பிரிகிற சமயத்தில் சாமுவேலின் தகப்பன் அவருடைய கையைப் பிடித்துக்கொண்டு சொன்னதாவது, "என் மகனே, உன் நடத்தைகளையும் உன் வார்த்தைகளையும் வெகு ஜாக்கிரதையாக நான் கவனித்திருந்தேன். உன்னுடைய ஹிருதயத்தில் சமாதானம் குடிகொண்டிருப்பதையும், உன் வார்த்தைகளுக்குத் தக்கவாறாய் நீ நடந்துக்கொள்ளுகிறதையும் நான் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். ஆதலால் என் மகனே, நீ உன் குணத்தில் தொடர்ச்சியாய் நிலைவரமாய் இப்படியே நடந்துகொள். இனி ஒரு போதிலும் நான் உன் புதிய ஜீவியத்திற்குத் தடையொன்றும் செய்யமாட்டேன்" என்றார். இளைஞனாகிய சாமுவேல் ஹெபிக் கடவுளுடைய உதவியினால் தன் முழு ஹிருதயத்தோடும் அப்படியே நடந்துகொள்ளத் தீர்மானம் செய்தார். அவர் வெளிவேஷத்தைத் தள்ளி, இயேசுபெருமான் அடியான் எப்படிப்பட்டவன் என்று எல்லாரும் அறிந்துகொள்ளத் தக்கதாக தன்னிடத்தில் நிலைவரமான ஜீவியம் உறுதிப்படவேண்டுமென்று கடவுளை நோக்கி அடிக்கடி விண்ணப்பஞ்செய்தார்.

இன்னொரு விசேஷம் அவரைப்பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது. அதாவது லூபெக் ஆலயத்திற்கு வந்துகொண்டிருந்த இளவயதும் அழகும்பொருந்திய ஒரு துரைசானியை மணம்புரிய விருப்பம் கொண்டார். அவள் ஆலயத்திற்கு வரும்போது அவருக்குள் எழும்பும் ஆராதனை வணக்கம் அவள் வாராதகாலத்தில் காணப்படுகிறதில்லை என்பதை சாமுவேல் கவனித்து இந்தவிதமான மனுஷிகக் கவர்ச்சியை ஹிருதயத்திலிருந்து தள்ளி இயேசுபெருமான் ஒருவரையே பார்க்கக் கிருபையின் வரத்தைத் தரும்படி கடவுளைநோக்கிப் பிரார்த்தித்தார். இவருடைய ஜெபத்திற்கு உத்தரவு உடனே அளிக்கப்பட்டது. ஆதலால் இனி அவர் விவாகம் செய்வதில்லை என்றும், தனிமையாயிருந்து ஏசுபெருமான் ஊழியத்திற்கே தன் ஜீவியத்தையும் பெலத்தையும் ஒப்படைப்பதாகவும், பவுலைப்போல், கிறிஸ்துவையும், அவருடைய சிலுவையையும் அல்லாமல் வேறொன்றையுங்குறித்து அறியாதிருக்கும்படித் தீர்மானம் செய்தார். இவ்விதமாய் ஹெபிக் தன் உலக ஆசையை விட்டு விட்டு, ஜெயத்தை அடைந்து, தன் ஜீவியம் முழுவதையும் இயேசுபெருமானுக்கே தத்தம் செய்தார்.

2. அதிகாரம்.

ஜீவனத்துக்குரிய வேலைக்காக ஆயத்தம் செய்தல்.

ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவர்களுக்கு சாதனைக்குரியதும் கோட்பாட்டிற்குரியதுமான இரண்டுவித பயிற்சி அவசியம், அதாவது ஒன்று பள்ளிக்கூடப்பயிற்சி, இன்னொன்று கல்லூரி அல்லது சர்வகலா சபையின் பயிற்சி. ஆத்துமாக்களை ஆதாயம்செய்த பெரிய மனுஷர்களுக்குள், ஸ்பர்ஜன், மூடி, என்றவர்களைப்போன்ற சிலர் கல்லூரிக்குரியவேதசாஸ்திரப்பயிற்சி அற்றவர்களாய் இருந்தாலும், பூரணப் பள்ளிக்கூடப் பயிற்சி உடையவர்களாய் இருந்தார்கள். ஆனதினால் அவர்கள் வேதசாஸ்திர அறிவின் குறைவைநிவர்த்திசெய்யும்பொருட்டு, தனித்து இராக்காலங்களில் அநேகமணி நேரங்களாக வாசித்து தங்கள் அறிவைப் பூர்த்திசெய்துகொண்டார்கள்.

டி. எல். ராஸ்.
சங்ககிரி துருகம், சேலம்.
(இன்னும் வரும்.)

MILTON'S PARADISE LOST

பரதீசு உத்தியான நாசம்

(தொடர்ச்சி.)

சா. யோவான் ஐயர் மொழிபெயர்த்தது.

ஆலோசனைக்காண்டம்.

தந்திரவுபாயமே தகுந்ததென்று மம்மோன் சொன்னது தங்களுக்கு மெத்தவும் பிரீதியென்று காட்டத்தக்கதாகத் தூதச்சபைகள் இப்படி சப்தித்து ஆரவாரித்தன. இன்னம் ஒருமுறை ரணக்களத்தில் செல்வது நரகவேதனையிலும் கொடிதென்று அவர்களுடைய புத்தியில் நன்றாய்ப் பட்டது. இடிகளினால் அடைந்த சங்கடங்களும், மீகாவேல் தூதனின் பட்டயமும் இப்பயங்கரத்தையும் திகிலையும் உண்டுபண்ணின. மேலும் அநேக நாட் சென்றிடினும் ஓர் ராஜ்யத்தைத் தங்கள் சொந்த யுக்தியைக்கொண்டே வானுலகத்துக்கு எதிரிடையாக ஸ்தாபிக்கவேண்டுமென்ற எண்ணம் பூரணமாயிருந்தது. இந்த உள்நோக்கத்தை வேதாளத்தின் காரியதரிசியும் மனோசொருபியும் உயர்ந்த வாசனத்தில் உட்கார்ந்திருந்தவனுமான பெயெல்செபூல் அறிந்து தட்சணமே எழுந்திருந்தனன். அவன் சமஸ்தானத்தைத் தாங்கும் ஓர் ஸ்தம்பத்தைப்போலவும் ராஜாங்கத்துக்கடுத்த ஆழ்ந்தயோசனைகள், கவலைகள் நிறைந்தவனாயும், அதன் பளுவைத் தாங்க மலைபோன்ற புஜங்களையுடையவனாகவும் காணப்பட்டனன். அவன் பேச ஆரம்பித்தபோது எல்லோரும் திரண்டு அவனை நெருக்கிக்கிட்டினர். மேலும் சப்தமில்லாத இராவைப்போலவும் வசந்தகாலத்தில் வீசும் அமர்ந்த காற்றைப்போலவும் அமரிக்கையாயிருந்தனர்.

5. பெயெல்செபூல் பிரசங்கப்படலம்.

சிங்காசனங்களே, ராஜரீக வல்லமைகளே, தேவாமிசங்களே, வானுலகப் புண்ணிய புருஷர்களே, கேளுங்கள்: நீங்கள் சூட்டியிருக்கும் இப்பட்டப்பெயர்களை மாற்றிக்கொண்டு நரகர் உலகவாசிகளென்றழைக்கப்பட விரும்புகிறீர்களோ? இவ்விடத்திற்றானே குடியிருந்து, ஓர் அரசாட்சியை ஸ்தாபித்து, அதை நாளடைவில் விர்த்தி செய்யலாமென்றெண்ணமுற்றிருக்கிறீர்கள். நிச்சயமாகவே நீங்கள் சொர்ப்பனங் காண்கிறவர்களுக்கொப்பாயிருக்கிறீர்கள். வானுலகாதிபதி இவ்விடத்தை நமக்குச் சிறைச்சாலையாக நியமித்திருக்கிறாரேயல்லாது வேறல்ல. நமக்கு இது அடைக்கல ஸ்தானமுமல்ல. அவருடைய ராஜரீக அதிகாரத்துக்கு எதிர்த்துக் கலகஞ்செய்யவும் இவ்விடத்தை நமக்களிக்கவில்லை. இது ஓர் அடிமைவீடு, அவருக்கும் நமக்கும் அநேக யோசனை தூரமிருந்தும், தமது கவினங்களினால் சிறைகளாகிய நம்மை இறுக்கிப் பிடித்திருக்கிறார். அக்கவினங்களை உதறிவிடவும் நம்மால் முடியாது. வானத்தில் ஆள்வதுபோல இப்பாதாளத்திலும் ஆதியோடந்தமாய் அரசாளுகிறார். ஏகசக்கராதிபதியாய் வீற்றிருக்கிறார். நாம் கலகஞ்செய்து மருள வீழ்ந்ததினால் அவருடைய அரசாட்சிக்கு யாதொரு நஷ்டமுமில்லை. சுவர்க்கவாசிகளை பொற்செங்கோலினால் ஆண்டுவருவதுபோல நரகவாசிகளாகிய நம்மை இருப்புச்செங்கோலினால் அரசாண்டுவருகிறார். இப்படியிருக்கும்போது சமாதானஞ் செய்வோமா? அல்லது யுத்தம்புரிவோமாவென்று என் யோசிக்கிறீர்கள்? யுத்தம் எத்தன்மையுள்ளதென்றும் அதினால் விளையும் பயன் தீராத கஷ்டமென்றும் அறியீர்களோ? சமாதான உடன்படிக்கை செய்வதற்கு அனுகூலமானதொன்றும் இதுவரையிலும் நமக்களிக்கப்படவுமில்லை. நாம் அதைக் கோரவுமில்லை. சிறைகளாயிருக்கிற நமக்கென்ன சமாதானம், பிராணனை யொடுக்குங் காவலையும், தேள்கொடுக்கினையுடைய வாரடியும், மட்டற்ற தண்டனைகளுமே நமக்குப் பலிக்குஞ் சமாதானம். நாம் அவருடன் எப்படி சமாதானமாகலாம்? நாம் பகை, பழிவாங்குதல், முரண்டுத்தனம் முதலியவைகளை மனதில் பேணிவைத்துக்கொண்டு எப்போதும் கலகஞ்செய்துகொண்டிருந்தால், நம்மை வதைக்கிறதில் அவருக்குத் திர்ப்திகரமுஞ் சந்தோஷமும் இராது. இதுவே நாம் சமாதானம் பண்ணும் வகை. மேலும் வானுலகத்திற்குப் படையெடுத்துப் போகத்தகுந்த தருணத்தையும் அவசியத்தையுங் காணோம். அதின் அரணை கொத்தளங்கள், பாதாளத்திலிருந்து உண்டாகும் எவ்வித யுத்தத்துக்கும், அகஸ்மாத்தாய் எழும்பும் சண்டப்பிரசண்டத்துக்கும் எவ்வளவேனும் அசையா. ஆதலின் போர் புரிவதை விட்டுவிட்டு அற்பசொற்பமான பிரயத்தனத்தைச் செய்தாலென்ன? புராதன சகிதமாயும் தீர்க்கதரிசனமாயும் வானத்தில் ஓர் பிரஸ்தாபமிருந்ததே; அதாவது, மனுஷன் என்னும் பெயரால் அழைக்கப்படும் ஓர் பிராணி உண்டாக்கப்படுவானென்றும், வல்லமையிலும் மகிமையிலும் அவன் நமக்குத் தாழ்ந்திருப்பானென்றும், விண்ணரசனால் அதிகமாய் நேசிக்கப்படுவானென்றும் சொல்லப்பட்டதல்லவோ? மேலும் அவன் உண்டாக்கப்படும் விதத்தையுங் கூறினபோது வானுலகம் அதிரத்தக்கதாய் ஓர் ஆணையைக்கொண்டு அக்காரியம் உறுதியாக்கப்பட்டதே. இதை நாம் அறிந்திருக்கிறோமே.

(இன்னும் வரும்.)

MELLIN'S FOOD

FOR INFANTS AND INVALIDS

மெல்லின்ஸ் ஆகாரம்

பிறந்தது முதல்

குழந்தைகளுக்கும்

பலஹீனர்களுக்கும்

உபயோகப்படும்படி

கையினல் தொடாமல் செய்யப்பட்டது.

மெல்லின்ஸ் ஆகார வகைகள் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய இடங்களிலுள்ள எல்லா வர்த்தகர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொத்த வியாபாரிகள்:—

மெஸர்ஸ் ஓக்ஸ் அண்டு கோ. (லிமிட்டெட்)

மதராஸ்.

161196

NOTICE

Subscription must be paid in advance for a year, at the following rates: One copy including postage, 4 annas a year. Ten copies can be sent for 3 anna Postage. Ten copies, Re. 1 a year.

All orders to be sent to the Manager, C. L. S. Depôt, Post Box 501, MADRAS.

Articles for insertion should be sent to the Editor, THE REV. DR. J. LAZARUS, Vepery, Madras.

விளம்பரம்

ஒருவருஷக் கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும் பிரதி ஒன்றுக்கு தபாற்செலவுட்பட ஒத்தைக்கு 4 அணா; அரை அணா தபாலுக்கு 10 பிரதிவரையும் அனுப்பப்படும். 10 பிரதிகளுக்கு ஒத்தைக்கு ரூ 1-0 0

பத்திரிகை, புஸ்தகம் முதலிய வேண்டுகோள் ரெயத்தைத் தபாற்கூலியுடன் சென்னை மிஷனரியல் ஸாஹித்யத்துக்கு C. L. S. டிப்போ மானேஜர் அவர்கட்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1917.